அதேபோது வரலாற்று நேர்ச்சியாலும், தாராளமய, உலகமய, புதுக்குடியேற்றத் தாக்கங்களாலும் இவ்வூடாட்டம் உலகில் ஆங்கில வழியே பெரிதும் நடக்கிறது. மேலை, சீன, சப்பானிய நாடுகளோ தம் மொழிவழியே உள்ளூறும உள்ளடக்கம், செயற்பாட்டைக் கொணர்ந்து தம் பொருளியலை உயர்த்துகின்றன; இவற்றுக்கு ஆங்கில ஆதிக்கம் தடையாவதில்லை. 22 தேசிய மொழிகளுடைய இந்தியாவில் இவ்வூடாட்டம் ஆங்கிலத்திலேயே நீள்கிறது. (வளரும் நாடுகள் தம் மொழிகளை ஊக்கிப் பொருளியல் உயரா நிலையில் ஆங்கிலம் பயனுறுத்தி, ஆதிக்க நாடுகளின் ஒட்டுண்ணி ஆகின்றன.) விடுதலையாகி 67 ஆண்டுகளின் பின், சொந்த நாட்டிற் பயனுறாது பொதினச் செலுத்த வெளியூற்றுப் (Business process outsourcing) பணிகளில் நாலுகாசு பார்ப்பதே நம் ஊழ் என ஆள்வோரும், அதிகாரிகளும் அமைந்துபோகிறார்; கணிசார் தொழிலுக்கே தமிழக, புதுவை அரசுகள் தம் உ.நு. பொள்ளிகைகளைப் பயன்படுத்துகின்றன.

பேச்சு வலு, எழுத்து வலு, அச்சு வலுப் பெற்ற இந்திய மொழிகள், மின்னி[2]வலுப் (electronically enabled) பெறாது தடுமாறுகின்றன. இந்த வலுக்கள் ஒவ்வொன்றும் நுட்பியல் எழுச்சியாகும். இவற்றை அவ்வக்காலத்திற் பெற்ற மொழிகளே இன்றும் முகல்ந்து (modernized), நிலைக்கின்றன; மின்னிவலுவுறா

மொழிகள் அழிகின்றன. 2500 ஆண்டுகள்முன் எழுத்துவலுவுற்ற தமிழ், குடியேற்ற (colonialism) ஆதிக்கத்தால் கிறித்துவ விடையூழியர் தூண்டலால் 450 ஆண்டுகளில் அச்சுவலுப் பெற்றபின், இன்றும் முழு மின்னிவலுப் பெறாதுள்ளது. இந்தியாவில், உ.நு. பயன்பாட்டில் நடுவணரசின் பெருநிதி ஊக்கத்தோடு இந்தி மட்டுமே மின்னிவலுப் பெற்றுவருகிறது. மற்ற மொழிகளோ, ஆட்சி, தொழில், கல்வி, வணிகம், பொதினம், நயன்மைத் (justice) துறைகளிற் சிறிதும் பயன்படாது நொடித்துக் கிடக்கின்றன.

அதேநேரத்தில், ஆங்கிலமும் மாநில மொழிகளும் கலந்து (தரங்கெட்டுப் பிணைந்த தமிங்கிலம் போல்) கிரியோல் மொழிகள் உருவாகின்றன. [மக்கள் வழக்கு இந்தியும் கிரியோல் மொழியாகவே இருக்கிறது. "சர்க்காரி இந்தி" சற்றுப் புறனடை.] அலுவலுக்கு ஆங்கிலம், மாநிலம் மீறிய பரம்பலுக்கு இந்தி, பழம்பெருமை பேசச் சங்கதம், ஊடும் கேளிக்கைக்கு மாநிலக் கிரியோல் என்று அறிவுய்திகள் ஆழ விதைக்கிறார். (இந்தியா ஒற்றைதேச நாடா, பல்தேச நாடா என்ற தெளிவின்மையும் இதற்குக் காரணமாகிறது.)

குடிமக்கள் இடையாட்டம் அரசு/தனியார் அலுவத்தில் அலுவர் முகம்பார்த்து நடப்பதில்லை. பிறப்புச் சான்றிதழ் பெறுகை, திருமணப் பதிவுகள், மனை/நில விற்பனைப் பதிவுகள், உரிமைமாற்றப் பதிவுகள், சுற்றுச்சூழல் வெம்மை அறிதல்கள், மழைப்பொழிவு, வெதண (climates) அறிவிப்புகள், வேளாண்மை அறிவுரைகள், பொதுமக்கள் வேண்டுகோள்கள், அரசுச் சேவைகள், பொதினங்களிடை (businesses) பரிமாற்றங்கள், பொதின-அரசுப் பரிமாற்றங்கள், பொதினம்-நுகர்வோர் பரிமாற்றங்கள் என எல்லாமே அந்தந்த மொழிகளில் மின்னிக்கருவிகள் வழி உலகில் நடைபெறுகின்றன. வளர்ந்த நாடுகளில் 99% கணிமயமெனில், இந்தியில் 10%ம், தமிழில் 1%ம் நடக்கிறது.

ஒருபக்கம் தமிழை உ.நு. கொண்டு வலுப்பெற விடாநிலையில், இன்னொரு பக்கம் மேலைப் பொருளியலை மேம்படுத்த இந்தியாவில் உ.நு.தொழில்களைச் சில நிறுவனங்கள் ஏற்படுத்துகின்றன. இவற்றை ஊக்குவிக்கத் தமிழக அரசும் 1997, 2002, 2005, 2008, 2014 ஆகிய ஆண்டுகளிற் உ.நு. (IT), உ.தொடர்பாடல் (ICT), உ.நு. வாய்ப்புற்ற சேவை (ITES)[3] ஆகியவற்றின் பொள்ளிகைகளை (policies)[4] வெளியிட்டது. {2014 இல் உ.நு.வா.சே. (ITeS) பொள்ளிகை வெளிவந்தது. இவை தவிர, 110 விதியின் கீழ் சட்டப் பேரவையில் அறிவிக்கும் உ.நு.திட்டங்களுமுண்டு.} இவற்றை வெளியிடுவது தேவையெனினும் இவை உ.நு.தொழிலுக்கு மாநில அரசு கொடுக்கும் ஆதரவைத் தெரிவிப்பன என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

தமிழக அரசைப் போலவே புதுச்சேரி அரசும் 2002, 2008 ஆம் ஆண்டுகளில் உ.நு. பொள்ளிகையை (காண்க http://dit.puducherry.gov.in/) வெளியிட்டிருக்கிறது.

ஆனால், இரு அரசுகளும் "தொழில்சார்ந்த உ.நு.கணிமை தனி, தமிழ்வளர்ச்சிக்கான கணிமை நுட்பியல் தனி" என்ற வேறுபாடு உணர்ந்ததாய்த் தெரியவில்லை. இதனால், ஏறத்தாழ 15 ஆண்டுகளாக, தமிழக, புதுவை அரசுகள் தொழில்சார் கணிமைப் பொள்ளிகைகளுக்குள் தமிழை நுழைத்து ஒதுக்குகின்ற நிதியாற் "போடும் முயற்சிகள் என்னவாகிறது?" என்று அறியாது இருளிலிருப்பது போலாகிறது. அரசுகள் நிலை இப்படியிருக்க, பொள்ளிகை வேறுபாடுணர்த்தும் அரசதிகாரிகளும், கணிஞரும் வாளாவிருக்கிறார்.

உ.நுட்பியலால் புத்தாக்கங்கள், தொழிற் செலுத்தங்கள், அலுவ இயக்கங்களைத் தமிழ்வழித் தானியக்கமாக்கவும், கட்டுறுத்தவும் (control)] தமிழர்க்கு, தமிழுக்குச் செய்யும் வண்ணம் மாநில அரசுகள் பொள்ளிகை அளிக்கவேண்டாமா? நம் மொழிவழியே ஆட்சி, தொழில், கல்வி, வணிகம், பொதினம், நயன்மை நடந்தால் நம் மாநில மக்கள் பயனுறுவரல்லவா? அரவணைப்புச் சனநாயகம் (inclusive democracy) அதுதானே?

நம்முடைய போகூழாய், இதுவரை தமிழ்க் கணிமைக்கான உ.நு.பொள்ளிகையைத் தமிழக, புதுவை அரசுகள் வெளியிட்டதேயில்லை. இவ்வரலாற்றுத் தடுமாறலால், தமிழக, புதுவை அரசுகள் தமிழ்க்கணிமையை அடிப்படையாகக் கொண்ட தமிழ்வளர்ச்சிக்கு நிறை பணியை ஆற்றமுடியாது இருக்கின்றன. ஆவலாகத் தமிழ்வளர்ச்சிக்குச் செய்யும் அரசு முயற்சிகளும், ஒதுக்கும் நிதியும் தொழிற்சார் பொள்ளிகைக்குள் சென்று அளிக்கவேண்டிய பலனை அளிக்காது முடங்கிவிடுகின்றன.

1997 இல் வெளியிட்ட தமிழக உள்ளுறும நுட்பியற் பொள்ளிகையில் தமிழ்பற்றி ஒன்றுமேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறியேற்றங்களிற் கோட்டைவிட்ட காலமது. C-DACஇன் ISCII குறியீட்டை நடுவணரசு ஒருங்குறிச் சேர்த்தியத்திற்கு அனுப்பியபோதே அனைத்தெழுத்துக் குறியேற்றத்தைப் (TACE) தமிழக அரசு பரிந்துரைத்திருப்பின் தேவையான குறியேற்ற இடங்கள் நமக்குக் கிடைத்திருக்கும். Level 1 ஆதரவோடு எல்லாச் செயலிகளும் உருவாகியிருக்கும். 2002 பொள்ளிகையில்,

> 10.1. Efforts already taken in the use of Tamil in information technology by the government will be strengthened / 10.1.1. The government will facilitate research in Tamil computing / 10.1.2. Tamil software development fund (TSDF) will be further strengthened for devising IT solutions in Tamil / 10.1.3. All websites will be converted into Bilingual

என்ற வரிகள் மட்டுந் தமிழ்க்கணிமை குறித்து உப்பிற்குச் சப்பாணியாய்ச் சேர்க்கப் பட்டன. சொல்வதை அளக்கும் மட்டிகை (metric) இலாப் பொள்ளிகையால் வெறும்

விருப்பம் தெரிவிக்கவே முடியும். 2005இல் உள்ளுறும நுட்பியல் வாய்ப்புற்ற சேவைத் தொழிலுக்கான பொள்ளிகை வெளிவந்தது. தமிழைப் பற்றிப் பேச இதில் வாய்ப்பில்லை. 2008 இல் வெளியிட்ட உள்ளுறுமத் தொடர்பாடற் பொள்ளிகையில் (ICT 2008)

> 17. The use of Tamil in information Technology / 1. The Government will promote and popularize Tamil Virtual University in India and abroad. Efforts will be taken to host Tamil Books and Publication in an e-library along with Technical Glossaries and cultural Video Gallery. / 2. The Government of Tamil Nadu will encourage efforts to improve standards for Tamil in computing and mobile applications. / 3. An international conference on development of Tamil Computing will be conducted.

என்றிருந்தது. இன்றோ, மெய்நிகர் பல்கலைக்கழகம் தமிழிணையக் கல்விக்கழகமாய்ச் சுருங்கிப் போனது. இந்நிறுவனம் ஆற்றிய பணிகளையும், அதற்கான செலவுகளையும் அளக்க மட்டிகைகளுண்டா? எதையும் அளக்க முடிந்தாற்றானே, "என்ன சாதித்தோம்?" என்று தெரியும். அளக்கவியலா நிலைக்கு தமிழ்க்கணிமை முயற்சிகள் முடிவதன் காரணம், தமிழ்க்கணிமைப் பொள்ளிகை இல்லாது, தொழில்சார் உ.நு.பொள்ளிகைக்குள் அதை முடக்கியதே காரணமாகும். பேசுவதே பெரிதாகும் நம்மூரில் ஆக்கங்கள் அரிதாயுள்ளன. தமிழ்க்கணிமை மேம்பாட்டிற்குப் பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்துவது, ஒரு சில உத்தமம் மாநாடுகளுக்கு நிதியுதவி தந்ததைக் குறித்தது போலும். குறிக்கும் வகையில் தமிழ்க்கணிமை ஆய்விற்கு தமிழக அரசு செலவிட்டதாயும், TSDF மூலம் தமிழ்ச் சொவ்வறை (software) வளர்ச்சிக்குச் செலவு செய்ததாயும் தெரியவில்லை.

இத்தனை ஆண்டுகளில், இப்பொள்ளிகைகளால் தமிழ்க்கணிமைக்கு நடந்ததைக் கணக்கிட்டால், ஆறா வருத்தமே அண்ணுகிறது. தமிழ்க்கணிமை வெற்றிடத்திலியங்குமா? மின்னிவலுவிற்கு ஒருங்கிணையும் சொவ்வறையர் (software specialists) எப்பொழுது இயல்பாக வேலைசெய்வார்? உருவாக்கும் நிரலிகளுக்குச் சந்தை ஏற்பட்டாற்றானே? எந்தத் தமிழ்ச் சொவ்வறை கணிசமாய் விற்றிருக்கிறது? ஒரு புள்ளி விவரமாவது தமிழக, புதுவை அரசுகளிடம் இருக்கிறதா அல்லது உத்தமம் போன்ற அமைப்பினர்தான் அதைச் செய்திருக்கிறாரா? அல்லது தனியார் யாராவது அவற்றைச் சேகரித்திருக்கிறாரா?

உதட்டளவில் மின்னாளுகை பேசிப் பலனென்ன? 97 இலிருந்து இன்றுவரை, கணித்தமிழ் முயற்சிகளில் பொருளியல் அளிப்பையும் (supply side economics) அதில்வரும் சிக்கல்களையுமே எல்லோரும் பேசுகிறோம். இவை கிடைத்தால் தமிழர்

தமிழுக்கு மாறுவரென்பது ஒருவகையிற் கானல்நீர்தான். நாம்யாரும் தேவைப் பக்கத்தைப் பார்க்கவேயில்லை. அதைச் சரிசெய்யவே தமிழ்க்கணிமை குறித்துப் பொள்ளிகை வேண்டுமென்கிறோம் இப்பொள்ளிகையின் உள்ளடக்கங்களும் அடிப்படைகளும் எப்படி இருக்க வேண்டுமென கீழ்க்கண்ட கருத்துகளைக் கட்டுரை முன்வைக்கிறது.

1. இப்பொள்ளிகையின் முதல் ஒப்புகை குறியேற்றம் பற்றியதாகும். இணையப் பரிமாற்றங்களுக்கு ஏதுவாக ஒருங்குறியையும். அச்சு நுட்பத்திற்குத் தேவையான வகையில் அனைத்தெழுத்துக் குறியேற்றத்தையும் 2009 இல் வரவேற்ற தமிழக அரசாணை, கடந்த ஐந்தாண்டுகளிற் செயல்வடிவம் பெறாது நிற்கிறது. வானவில் போன்ற 8 மடைத் (bit) தனியார் குறியேற்ற வார்ப்புக்களை (fonts) அரசுச் செயலகங்களில் இன்னும் புழங்குவது அடுத்த 6 மாதங்களுக்குள் நிறுத்தப்பட வேண்டும். (ஒருங்குறியிற் தமிழை உள்ளிட இலவயமாக TVA இன் உள்ளீட்டு நிரலி, Microsoft இன் PME எழுதி, NHM writer, இ-கலப்பை எனச் சொவ்வறைகள் கிடைக்கின்றன.) இது புதுவையரசிற்கும் பொதுவான பொள்ளிகைத் தொடக்கந்தான்.
2. தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கும் வலைத்தளங்கள் இற்றைப் படுத்தப்பட வேண்டும். இவ்வலைத்தளங்கள் பலவும் ஆங்கிலத்திலேயுள்ளன. தமிழிலிருப்பவை பல்வேறு தனியார் குறியேற்றங்களிலுள்ளன. புதுச்சேரி அரசிலும் வலைத்தளங்களின் நிலை சிறப்பாக இல்லை. http://dit.puducherry.gov.in/documents/GovtWebsite_guidelines.pdf என்ற புதுவை அரசின் இணையத்தளம், இந்திய நடுவணரசு உருவாக்கிய அரசாங்க வலைத்தளங்களுக்கான கையேட்டை, வழிகாட்டியை வெளியிட்டிருக்கிறது. ஆவணத்தின் பகுதி 5.7ல் கீழ்க்கண்டவாறு நடுவணரசு சொல்கிறது:

   At present, a majority of the content in Government websites is in english, except few which have content in Hindi or one of the Regional languages. Thus, even though Government websites are accessible, they are still not usable. ***Hence, there is a need to put the information in Regional languages.*** Depending on the nature of the content and its prospective usage, content should be translated in desired languages and should be a part of the same website with prominent links. Technology for publishing the content in Indian languages is already quite developed and a large number of tools are available to support this

   தன்முனைப்பாய்ச் செய்யவேண்டிய அடிப்படைக் கணிமை விதயங்களை நடுவணரசு வற்புறுத்தி வழிகாட்டிச் சொல்லியும் பல்வேறு மொழிசார் மாநில அரசுகள் அவ்விதயங்களை முழுமையாகச் செய்யாதுள்ளன. தமிழ்க் கணிமைப்

பொள்ளிகைகள் இல்லாமையும், உ.நு.பொள்ளிகைக்குள் தமிழைத் தள்ளிவிட்டதால் எழுந்த செயல் வடிவக் குழப்பங்களும் இதற்கு முதற்காரணமாகும்.

3. தமிழக அரசு, மக்களுக்காகப் பல்துறை விண்ணப்பங்கள்/படிவங்களை (500/1000 தேறுமா?), உருவாக்கியிருக்கிறது. இவற்றை இணையத்தில் அணுகும் படி ஒருங்குறி வார்ப்பில் எடுகோட்டு நிலையில் (on line) வைக்கவேண்டும். அரச கருமங்களில் பொதுமக்கள் நேரே வந்து அலுவரைப் பார்த்து விண்ணப்பிக்கும் நடைமுறை படிப்படியாகக் குறையவேண்டும். துறைவாரியாகத் தமிழ்வழி மின்னாளுமை இன்னின்ன மாதங்களில் இப்படி நிறைவு செய்யப்படுமென்ற கால அட்டவனை உருவாக வேண்டும். இது நீண்ட கால எல்லை கொண்டிராது, 6 மாதம் முதல் ஓராண்டு காலத்துள் நடைமுறையாகவேண்டும்.
4. உ.நு.பொள்ளிகைக்குள்ளேயே மின்னாளுகை வந்துகொண்டிருந்தது. இனிமேல், தமிழ்க்கணிமை சார்ந்த நுட்பியற் பொள்ளிகைக்குள் அது வரவேண்டும்.
5. தமிழக அரசின் அடிப்படை ஆவணங்கள் இன்று ஆங்கிலத்திலேயேயுள்ளன. அவை சட்டபூருவமென்றுஞ் சொல்கிறார். இதை மாற்றித் தமிழாவணமே அடிப்படையாக வேண்டும். எல்லா அரசாவணங்களும் தமிழிற் கிடைக்க வேண்டும்; மற்ற மொழிகளிலிருப்பின் அவற்றைப் பெயர்க்கவேண்டும். அரசின் துணையாய் இயந்திர மொழிபெயர்ப்புத் துறை வலுப்படவேண்டும். ஆட்சித் துறை, சட்டத்துறைத் தமிழ்ச்சொற்களைப் பொதுக்கொற்றத்திற் (public domain) கொணரவேண்டும்.
6. நாடாளுமன்றச் சட்டத் திருத்தம் மூலம், மாநில மொழிகள் ஆட்சிமொழி அதிகாரம் பெறவேண்டும். நடுவண் அரசிற்கு தமிழ்நாட்டிலிருந்து போகும் ஆவணங்கள் தமிழானாலும் ஏற்கப்படும் நுட்பியல் வாய்ப்பு அமையவேண்டும்.
7. தமிழ்நாடு, புதுவை அரசுகள், தத்தம் மாநிலத்தில் தமிழ்க் கணிமைச் சந்தையின் மதிப்பைக் கணக்கிட வேண்டும். கணிகளிற் தமிழ்ப்பயன்பாடு, நுட்பக் கணிமை, மொழியியற் கணிமை, அறிதியியற் கணிமை (informatics computing), வரைகலைக் கணிமை, தமிழ் மின்னாளுகை போன்ற பல்வேறு வகைப்பாடுகளில் இற்றைத் தமிழின் நிலையையும், ”இதில் உருவாகும் வருமானம் என்ன? இதற்கு அரசும் தனியார் நிறுவங்களும் செலவிடும் தொகை எவ்வளவு?” போன்ற சந்தை சார்ந்த ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு, அவற்றின் அடிப்படையில் வளர்ச்சிப்பணிகளைத் திட்டமிடவேண்டும். வெறுமே, ஓர் அரசு, நிதி ஒதுக்கீடு செய்வது மட்டும் போதாது. ஆற்றில் போட்டாலும் அளந்துபோடென்பாரே? அளந்தாற்றானே இதுவரை தொலைவும், போகும் தொலைவும் புலனாகும்? அப்படியான ஆய்வுகளையும், அளவைகளையும் தமிழ்க்கணிமை உ.நு.பொள்ளிகை கொண்டிருக்கவேண்டும்.

8. பல்லாயிரம் கோடி வருமானம் உருவாக்கும் உ.நு.நிறுவனங்கள் ஆண்டுதோறும் வளர்வதுபோல் தமிழ்க்கணிமை ஏன் வளரவில்லையென ஒப்பாய்வு செய்யவேண்டும். அப்படிச் செய்தால், உ.நு நிறுவனங்கள் வெறும் கட்டங்களுள் இயங்கவில்லை என்பதும், அவை உருவாக்கும் சொவ்வறைகளுக்குத் தரக்கட்டுப்பாடு, செலுத்தங்கள், இதனை இதனால் இவன் இப்படிச் செய்யும் எனும் முறைமைகள், செய்தவற்றைச் சரிபார்க்கும் நெறிகளென உலகளாவிய உயர்கணிமைக் கோட்பாட்டுள் இயங்குவதும் விளங்கும். அத்தகை உலகளாவிய கோட்பாடுகளை தமிழ்க்கணிமைக்கும் கொணர்ந்து நிறுவனமாக்க வேண்டும். இன்றைக்கு, தமிழ்க்கணிமைத் துறையில் இன்றியமையா அடிப்படை சிறிதுமில்லை. கணிவழி மின்னாளுமை, வெறும் வலைத்தளம் போட்டுத் திறப்புவிழா நடத்துவதல்ல. சொவ்வறைப் பொறியியல் (Software Engineering) என்றுதானே சொல்கிறோம்? தமிழ்க்கணிமையிற் "சொவ்வறை இருக்கிறது"; அதையுருவாக்கும் பொறியியல் பற்றி நாம் சிந்தித்தது கூடக் கிடையாது.
9. அடுத்தது சொற்திருத்தி, இலக்கணத் திருத்தி பற்றியது. எழுத்து, சொற்றொடர், வாக்கியம், நடை எனப் பிழைகள் மலிந்து தமிழாக்கங்கள் வருவதை இப்போது யாரும் கண்டுகொள்வதில்லை. ஆங்கில ஆக்கங்கள் இணையத்தில் அப்படியில்லை. அடுத்த இரண்டாண்டுகளுக்குள் 2, 3 சொவ்வறைச் செருகிகளாவது (software plug-ins) சந்தையிற் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இம்முயற்சி தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் / தமிழிணையக் கல்விக்கழகத்தின் நெறியாளுகையிற் செயற்படலாம். (அண்மையில் "மென்தமிழ்" சொல்லாளரை பேரா. தெய்வசுந்தரம் உருவாக்கினார். அது சொற்திருத்தியாகவும், இலக்கணத் திருத்தியாகவும் வேலை செய்கிறது.)
10. இப்பொழுது மாநிலமெங்கும் வணிகப் பெயர்ப்பலகைகள் தமிழாகின்றன. இது தொடக்கப் பணியே. அடிப்படைத் தேவை கடைகளுக்குள்ளேயே இருக்கிறது. எந்தக் கடையில், நிறுவனத்தில், பெறுதிச்சீட்டு (receipt) வாங்கினும் ஆங்கிலத்திலேயே இருக்கிறது. இது சரியில்லை. தமிழ்நாட்டு வணிகம் தமிழில் நடைபெறவேண்டும். தமிழில் பெறுதிச் சீட்டை ஊக்குவிக்க, மாநில அரசு விற்பனைவரியில் அடிப்படை மாற்றஞ் செய்ய வேண்டும். தமிழிற் பெறுதிச் சீட்டு கேட்டால் குறிப்பிட்ட % உம், ஆங்கிலத்திற் கேட்டால் 1% அதிக விற்பனைவரியும் விதிக்கவேண்டும். புதுச்சேரி அரசும் இதைச் செய்யலாம். இதனால் பொதினங்களில் தமிழ் புழங்குமொழியாக மாறித் தமிழ்ச் சொவ்வறைகளுக்குத் தேவையெழும். ஆயிரக்கணக்கில் படியாற்ற நிரல்கள் (application programmes)

எழும். அலுவற் சொவ்வறைகள் (Office softwares) தமிழில் வர, இத்தூண்டுதல் தேவையான ஒன்றாகும்.

11. தமிழகம், புதுவையில் விற்கும் மின்னிக் கருவிகளின் கையேடுகள் தமிழில் இருக்க வேண்டும். பிறமொழிகளிலிருந்தால் 1% அதிக விற்பனைவரி விதிக்கவேண்டும்.
12. மேல்நிலைப் பள்ளிமாணவர்களுக்குக் கொடுத்திருக்கும் மடிக்கணி தமிழ்வலுப் பெற்றதாகவேண்டும். தமிழகம், புதுவையில் விற்கும் கணிகள், மின்னிக்கருவிகள் தமிழ்வலுப் பெற்றிருக்கவேண்டும். அப்படி வலுப்பெறாத கருவிகளின் விற்பனை தமிழகம், புதுவையில் தடைசெய்யப் படவேண்டும். தமிழ்வலுக் கொள்ளாத நகர்பேசிச் சேவையர் தமிழ்நாட்டிலும், புதுவையிலும் தொழில் தொடராதவாறு செய்யவேண்டும்.
13. கணிமயமாகும் தமிழக பத்திரப் பதிவுத் துறையின் எல்லாப் படிவங்களும் தமிழில் எழுந்து, பெறுதிச் சீட்டுக்கள் தமிழிலேயே கொடுக்கப்படவேண்டும்.
14. தமிழக அரசு நடத்தும் கல்வி வாரியங்கள், பல்கலைக்கழகங்களின் அலுவல்கள் அனைத்தும் தமிழில் நடந்து தமிழ்வழி மின்கல்வி பெருகவேண்டும். முதுகலை, முது அறிவியல், இளம் பொறியியல், மருத்துவம், இளமுனைவர், முனைவர் பட்ட நேர்முகத் தேர்வுகளுக்கான புறத்திட்டு அறிக்கைகள் (project reports), ஆய்வேடுகள் (theses) 5 பக்கங்களில் தமிழ்ச்சுருக்கம் கொண்டிருக்கவேண்டும். நேர்முகத் தேர்வில் 15 நுணுத்தங்களாவது (minutes) தமிழில் கேள்விகள் கேட்டு, விடைவாங்கி, அதற்கப்புறமே பட்டமளிப்புத் தேர்ச்சி கொடுக்கவேண்டும். தமிழறியாது நம் பல்கலைக்கழகங்களிற் பட்டம் பெறுதல் தடுக்கப்படவேண்டும்.
15. தமிழை ஆட்சிமொழியாக்கி, தமிங்கிலப் பயன்பாட்டைக் குறைக்கும், நாளிதழ்கள், தாளிகைகள், ஊடகங்களுக்கே தமிழக அரசு விளம்பரங்களைக் கொடுக்கவேண்டும்.
16. தமிழகத்திலிருக்கும் நடுவண் அரசுத் துறைகள், நிறுவனங்களில் பொதுமக்களோடு நடக்கும் பரிமாற்றங்கள் தமிழிலேயே நடைபெற வேண்டும் அரசு வங்கிகளிலும் இந்த நடைமுறை நிலைபெறவேண்டும்.
17. உயர்நியதி மன்றம் வரை வழக்குமன்ற மொழியாகத் தமிழ் ஆகவேண்டும்
18. Excel, Powerpoint Presentation போன்ற சொவ்வறைகளைத் தமிழில் உருவாக்குவதிலும் புதுப் புது முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. சில இயங்கு கட்டகச் சொவ்வறை (operating system softwares) முயற்சிகளும் நடக்கின்றன. இவை பற்றாது. அடுத்த ஈராண்டுகளில் பேச்சிலிருந்து எழுத்து (speech to text), எழுத்திலிருந்து பேச்சு (text to speech), இயந்திர மொழிபெயர்ப்பு (machine translation), தமிழ் அறிதியியல் (tamil informatics) போன்ற துறைகளிற் தமிழ்ச் சொவ்வறைகள் வரும் படி திட்ட ஒதுக்கீடு செய்யவேண்டும்.

19. தமிழகத்துள் தமிழ், வெளித்தொடர்புக்கு ஆங்கிலம், இதற்கு அணைவாக உ.நு. என்பதே தமிழக மின்னாளுமையின் அடிநாதமாய் இருக்க வேண்டும்.

இக் கட்டுரைக் கருத்துக்களை அலசிக் கிடுக்கித் திருத்திப் வீயெது, மணியெது என்று தரம்பிரிக்க உதவிய நண்பர் நாக.இளங்கோவனுக்கு நன்றிகள். மாநாட்டிற் கூடியோரைத் தமிழ்க்கணிமை உ.நு.பொள்ளிகை பற்றிய உரையாடலுக்கு அழைக்கிறேன்.

------------------------------------------------------------------------------------------------------------------------

அடிக்குறிப்பு:

1. உள்ளூறும நுட்பியல் என்ற புத்தாக்கச் சொல்லைக் கண்டு சிலர் துணுக்குறலாம். ”தகவல் நுட்பத்தின்” போதாமை கண்டே இச்சொல்லைப் பரிந்துரைக்கிறேன். தகவல் போன்ற பெயர்களைக் கடன்வாங்கித் துணைவினை போட்டுச் சுற்றிவளைப்பதால் தமிழ்மொழிப் பயன்பாடு கடினமாகிறது. புதுக்கருத்தை வினைச்சொல்லிற் தொடங்கின், மொழியில் இயல்பாகப் பொருந்தும். பின்னாற் பல பெயர்ச் சொற்களையும், வழியுறு வினைச்சொற்களையும் வாய்ப்பாக அமைக்கலாம். ”உள்ளூறுத்தல்” ஒரு விதயத்தின்/செய்தியின் உள்ளடக்கத்தை இன்னொருவருக்கு உணர்த்துவதாகும். உணர்த்தலை உறுத்தலென்றுந் தமிழிற் சொல்லலாம். I informed him. = நான் அவரை உள்ளூறுத்தினேன்; Information = உள்ளூறுத்தம்; Information technology = உள்ளூறுத்த நுட்பியல். Information technology companies = உள்ளூறுத்த நுட்பியற் குழுமங்கள்.
2. மின்னி electron-யைக் குறிக்கும்; [இது 1960 களில் எழுந்த சொல்.] மின்னணு என்று நீட்டி முழக்கவேண்டாம். மின்னி, கணிக் (=computer) கருத்திலும் மேலானது; அகண்டது. கணிகளை (computers) மீறி மின்னிப் பொறிகளில் (electronic equipments) இன்று மொழிப்பயன்பாடிருக்கிறது. காட்டு: நகரும் போதே, ஒருவருக்கொருவர் பேசப் பயன்படும் நகர்பேசி (cell phone). இதுபோகத் தொலைக்காட்சி (television), இசையியக்கி (music player). உறையூட்டி (refrigerator), கட்டிட ஒளிமை கட்டுறுத்தும் (control) பெட்டிகள் என மின்னிக்கருவிகளை இயல்மொழிப் பேச்சாலும், எழுத்தாலும் இயக்குவிக்கும் பயன்பாடு வந்துவிட்டது.
3. மருத்துவ ஒலிபெயர்ப்பு (Medical transcription), சட்டத் தரவடிச் செலுத்தம் (Legal Database processing), தோயல் உள்ளடக்க மேலாக்கம் / அசைவூட்டம் (Digital content development/animation), தொலை பேணல் (Remote Maintenance), கணக்கு வழக்கு / நிதிச் சேவைகளுக்கான பின்னலுவ இயக்கங்கள் – (Back office

operations – Accounts/Financial Services), தரவுச் செலுத்தங்கள் (Data processing), அழைப்பு நடுவங்கள் (Call centres), பொறியியலும் அடவும் (Engineering and Design), புவிக்கிறுவ உள்ளூறுமச் சேவைகள் (Geographic Information Services), மாந்தவள ஊற்றுச் சேவைகள் (Human Resources Services), காப்புறுதி உரிமைகோரும் செலுத்தங்கள் (Insurance Claim Processing), சம்பளவரிசைச் செலுத்தங்கள் (Payroll processing), (வருமானக் கணக்கிடல்கள் (Revenue Accounting), ஆதரவு நடுவங்கள் (Support Centres), வலைத்தளச் சேவைகள் (Website Services), பொதினச் செலுத்த வெளியூற்றுகை (Business Process Outsourcing) - ஆகியவை தமிழக அரசினால் ITES துறையில் முகன்மையாய்க் கருதப்படுகிறது.

4. ”பொள்ளிகை” சிலருக்குப் புதிதாய்த் தெரியும். பலரும் ”கொள்கை”யையே policyக்கு இணையாகப் பயிலுவர். philosophy, doctrine, principle என்பவற்றைப் பின் எப்படிச் சொல்வது? தமிழ்க் கலைச்சொற்களின் சிக்கல்களில் ஒன்று துல்லியம் பற்றியதாகும். இருப்பதை வைத்துப் பூசிமெழுகுவது எனில் எந்தக் கலைச்சொல்லும் வரையறுக்காது. பொள்ளுதல், பொறித்தலுக்கு முந்தைய வினைச்சொல். இன்னின்னதை இந்த அரசு செய்யும் என்று கல்லிலும், செப்பேட்டிலும், ஓலையிலும் பொள்ளிக் காட்டுவது அக்கால அரசர் வழக்கம். பொள்ளப்பட்டது பொதுப்பார்வைக்கும் கவனத்திற்கும் வரும். பொள்ளப்பட்டது பொள்ளிகை.

## இணையமும் மொழிச்சிதைபாடுகளும்

முனைவர் **எஸ். கணேஷ்**
தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதி),
அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர், மதுரை மாவட்டம்.

மொழி ஓர் உயிர்ப்பொருள்; வளர்ச்சி அதன் இயங்கு ஆற்றல். மொழி வளர்ச்சி என்பது அது வழங்கப்படும் சமூகச்சூழலைப் பொறுத்தது. ஊடகங்கள் சமூகச்சூழலைப் பாதிப்பவை. எனவே ஊடகங்களில் பயன்படுத்தப்படும் மொழிநடை, அவற்றின் தொழில்நுட்பம் மற்றும் இயங்குதளம் ஆகியவை மொழியின் தன்மைகளை வெகுவாகப் பாதிப்பவை. இத்தகைய தாக்கங்களை உட்கிரகித்துக் கொண்டு இயங்கும் மொழியே மேலும் வளர்ச்சியடையும்.

**மொழியின் வளர்சிதை மாற்றங்கள்**

மொழியின் வளர்ச்சி என்பது அதன் அகவய மற்றும் புறவய மாற்றங்களால் நிகழ்வது. காலத்திற்கேற்ப இயல்பாக உண்டாகும் மாற்றங்களையும் சிதைபாடுகளையும் ஏற்கும் மொழியே வளர்ச்சியடையும். பல்லாண்டுகளாக இலக்கிய வளத்துடன் பண்பட்ட மொழிகள் அனைத்திலும் காணப்படும் பொதுவான வடிவப் பாகுபாடு, எழுத்து மொழி (வரி வடிவம்) மற்றும் பேச்சு மொழி (ஒலி வடிவம்) என்பவை. இவ்விரண்டு வடிவங்களும் எல்லா மொழிகளிலுமே போதிய இடைவெளியுடன் தனித்து இயங்குபவையாகவே இருந்து வருகின்றன.

இந்த இடைவெளி மற்றும் தனித்தன்மைகளுக்குக் காரணம் பேச்சு மற்றும் எழுத்து வழியிலான தகவல் பரிமாற்றத்தில் காணப்படும் வேறுபாடுகள்தான். பேச்சுப் பரிமாற்றத்தில் எதிர்வினை உடனடியாக நிகழும். எழுத்து மூலாமான பரிமாற்றத்தில் எதிர்வினையாற்றுதல் அல்லது எதிர்வினையைப் பெறுதல் சற்று காலம் தாழ்த்தி நிகழும். கடிதம் மூலமான தகவல் பரிமாற்றம், இலக்கியப் படைப்புகளுக்கான வரவேற்பு, மதிப்புரை போன்றவை அவ்வாறானவை.

பேச்சு மொழியில் நிகழும் தகவல் பரிமாற்றத்தில் எதிர்வினையாடல் உடனடியாக நிகழ்வது. எனவே ஒரு மொழியின் எழுத்து வடிவத்தை விடப் பேச்சு வடிவம் வேகமான இயக்கத்தை வேண்டுகிறது. எனவே எழுத்து வடிவத்தில் பயன்படுத்தப்படும் ஒலிகளும், சொற்களும், தொடர்களும் பேச்சுவடிவத்திற்கு உட்படுத்தப்படும்போது சுருக்கம் கொள்ளும். இந்தச் சுருக்க நிகழ்வு காலந்தோறும் தீவிரப்படும். இப்போக்கு மொழியின் அமைப்பில் சில சிதைவுகளை உண்டாக்கும். ஆங்கிலத்தில் என்பது என மாறுவது அவ்வாறானது. தமிழில் வருகிறான் எனும் சொல் உரையாடலின்போது வர்றான் என மாறுவதை அவ்வாறு கொள்ளலாம்.

பெரும்பாலும் எழுத்து மொழியானது அம்மொழியின் அடிப்படை அமைப்புடன் நெருக்கமானதாகவும் பேச்சுமொழி சற்று விலகியதாகவும் அமையும். இந்த விலகலின் அளவு அம்மொழியின் பயன்பாட்டைப் பொறுத்து அமையும்.

காலங்காலமாகப் பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையிலான உறவில் இணைய ஊடகம் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. மொழியின் இருவேறு அடிப்படை வடிவங்களான இவற்றுக்கு இடையிலான இடைவெளியை இணையம் கணிசமான அளவு குறைத்துள்ளது. இணையவழி உரையாடல் இதற்கு முக்கியக் காரணியாக அமைந்துள்ளது.

**இணையவழி உரையாடலும் மொழியும்**

தகவல் தொடர்பியலில் இணையம் உருவாக்கியுள்ள மாற்றங்களைக் குறிப்பதற்குப் புரட்சி என்கிற சொல்லைப் பயன்படுத்துவது மிகையானதல்ல. நேரடிப் பேச்சு மற்றும் தொலைபேசி மூலமான தொடர்பில் பேச்சு மொழி தகவல் பரிமாற்றக் கருவியாக அமைகிறது. கடிதம், இலக்கியப் படைப்புகள் போன்றவை எழுத்து மொழியிலான தகவல் பரிமாற்றச் செயல்பாடுகள். இணையத் தொழில்நுட்பத்தினால் மின்னஞ்சல், இணையவழி உரையாடல் (Chat) அதிவேகத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களின் பயன்பாடு இன்று பேரளவில் நடைபெறுகிறது. இவ்வதிநவீனத் தொழில்நுட்பங்கள் புகைப்படங்கள் (Photos), திரைக்காட்சிகள் (Videos) போன்ற காட்சித் தொடர்பியல் உத்திகளைப் பரிமாற்றுவதில் முக்கியப் பங்காற்றினாலும் அடிப்படையில் இவை மொழியுடன் தொடர்புடையவை. மின்னஞ்சல் மூலமான எழுத்து மொழித் தொடர்பு என்பது கடித வழித் தொடர்பின் நவீன வடிவம்தான். ஆனால் இணையவழி உரையாடல் மூலமான தகவல் தொடர்பு மாறுபட்டது. பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் ஒன்றாகக் கலப்பது.

பேச்சுத் தொடர்பில் தகவல் பரிமாற்றமும் அதன் எதிர்வினையும் உடனடியாக நடப்பதால் விரைவான உச்சரிப்பு அதில் அவசியமாகிறது. இணையவழி உரையாடலிலும் இது தேவையானதாகிறது. ஆனால் இந்த உச்சரிப்பைப் பயனாளர்கள் எழுத்து வடிவில் தருவதால் இத்தகவல் பரிமாற்றம் மொழியின் அமைப்பில் பெரியளவிலான மாற்றங்களை உண்டுபண்ணுகிறது. குறிப்பாகப் பேச்சு மொழியின் அடிப்படைப் பண்பான விரைவுத் தன்மையை எழுத்து மொழியில் உண்டாக்குகிறது. இவ்வுரையாடல்களில் எதிராளி தெரிவிக்க வேண்டிய தகவலைத் தட்டச்சு செய்து தர இரண்டு நொடிகளுக்கு மேல் தர யாரும் விரும்புவதில்லை. எனவே தெரிவிக்க வேண்டிய தகவல்களை மிகக் குறைவான நேரத்தில் விரைவாகத் தட்டச்சு செய்ய வேண்டியுள்ளதால் சொற்களும் தொடர்களும் அவற்றின் முடிந்த வரையிலான சுருக்க வடிவினைப் பெற வேண்டியது அவசியமாகிறது.

மின் அஞ்சல் (E-mail), இணையவழி உரையாடல் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் ஆங்கில மொழியானது அம்மொழியின் கட்டமைப்பிலிருந்து சற்று விலகியது. சான்றாக, why are you delay? என்பது y r u delay? என்றும்,

Tomorrow எனும் சொல் 2mrrow என்றும், enjoy the trip என்பது Njoy d trip என்றும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் உண்டாகும் மாற்றங்களை மேலும் புரிந்துகொள்ளக் கீழ்க்கண்ட சான்றைக் கவனிக்கவும்.

| 1. Chat Version | 2. Script Version |
|---|---|
| X1:hi gm | X1:Hello good morning |
| X2:gm. Hw r u | X2:good morning. How are you? |
| X1:f9. Asl? | X1:fine. What are your age, sex and location? |
| X2:m27. n u? | X2:I am male. 27 years. You? |
| X1:f23 | X1:I am female. 23 years. |
| X2:gud. Working/hw? | X2:that is good. Are you working or housewife? |
| X1:hw. Wt abt u? | X1:I am housewife. What about you? |
| X2:wrking in mnc | X2:I am working in a multinational company. |
| X1:k | X1:ok |
| X2:r u thr? | X2:are you there? |
| X1:ya tel | X1:yes. Tell. |
| X2:u tel frnd | X2:you tell friend. |
| X1:wt 2 tel | X1:what to tell? |
| X2:nothin | X2:nothing |
| X1:k c u | X1:ok see you. |
| X2:k.gn8 | X2:ok. Good night. |
| Total characters used (with spaces): 126 | Total characters used (with spaces): 335 |

மேற்கண்ட இருவகை உரையாடலும் எழுத்து வடிவில் பரிமாறப்படுபவை. எண்1 இணையவழி உரையாடல். எண்2 அதன் மரபுவழிப்பட்ட எழுத்து வடிவம். இதில் 335 எழுத்துகளின் மூலமாகப் பரிமாற்றப்பட்ட தகவல்கள் இணையவழி உரையாடலில் வெறும் 126 எழுத்துகளில் பரிமாற்றப்பட்டுள்ளது. எழுத்துகள் குறைந்தாலும் தகவல் பரிமாற்றத்தில் எந்தகக் குறையும் நிகழவில்லை. பயனாளர்களின் புரிதலில் எந்த இடர்ப்பாடும் ஏற்பட்டுவிடவில்லை.

காலங்களைத் தாண்டி மொழி வளர்ச்சியடையும்போது சுருக்கப் பண்பானது பெரிதும் வேண்டப்படுகிறது. மரபார்ந்த எழுத்து மொழியில் 335 எழுத்துகளில் பரிமாறப்படும் தகவல்களை இணையவழி உரையாடலில் வெறும் 126 எழுத்துகளில் பரிமாறிக் கொள்ள முடிகிறதெனில் இத்தொடர்பில் மீதமுள்ள 209 எழுத்துகளின் தேவை கேள்விக்குரியதாகிறது. அது மட்டுமின்றி உணர்வுகளை வெளிப்படுத்தப்

பயன்படும் முறுவலிகள் அல்லது முறுவல் குறிகள்(Smileys) எழுத்துகளின் தேவையை இன்னும் குறைக்கின்றன.

**சிதைவுறும் ஆங்கிலம்**

மொழியின் அடிப்படை அலகுகளான எழுத்து, சொல், தொடர் போன்றவை இணையப் பயன்பாட்டில் முக்கியமற்றுப் போகின்றன. ஒலியும், பொருளும் மட்டுமே அடிப்படையாகின்றன. எழுத்துப் பிழை, சொற்பிழை, தொடர்ப் பிழை போன்றவை மலிந்த இம்மொழியில் பரிமாறப்படும் தகவல் எதிராளியைச் சேர்வது மட்டுமே முக்கியமானதாகிறது. அத்தகவலின் வடிவம் இரண்டாம்பட்சமானதாகிவிடுகிறது. இவ்வகை மொழியை வளரும் குழந்தைகள் பயன்படுத்தும்போது, அவை இவற்றையே மொழியின் உண்மை வடிவமாகக் கொள்ளும். இதனால் மொழியின் அமைப்பில் சிதைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாமற் போகலாம்.

இணையப் பயன்பாட்டில் ஆங்கில மொழி முன்னிலை வகிப்பதால் அம்மொழி சிதைவுகளையும் மாறுபாடுகளையும் பெரிய அளவில் சந்திக்கிறது. பலதரப்பட்ட புவியியல் அமைப்பு, பண்பாடு, நாகரீகம், தட்பவெப்பம் போன்ற சூழமைவுகளை ஏற்றுக்கொண்டு தன்னைத்தானே அவற்றிற்கேற்ப தகவமைத்துக் கொண்டு பெரும் வளர்ச்சியைப் பெற்ற மொழி ஆங்கிலம். இத்தகவமைப்புகளுக்கேற்ற நெகிழ்வுத்தன்மை (Flexibility) அம்மொழிக்கு இயல்பிலேயே உண்டு. இன்றைய இணைய உலகின் தகவல் பரிமாற்றப் போக்குக்கும் அம்மொழி எளிதாக வளைந்து கொடுக்கிறது. மற்ற மொழிகளுடன் ஒப்பிட முடியாத அளவில் இணையப் பயன்பாட்டாளர்கள் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதற்கு இதுவே முக்கியக் காரணமாகும்.

இதனால் இணைய வெளியில் ஆங்கிலம் பெரிய மாற்றங்களைச் சந்தித்துள்ளது. இம்மாற்றங்களை அறியாத, இணையத்தையே பயன்படுத்தாத, மரபார்ந்த ஆங்கிலம் மட்டுமே அறிந்த ஒருவர் மேற்குறிப்பிட்ட இணையவழி உரையாடலை வாசிக்க நேர்ந்தால் அவருக்கு அதில் பரிமாற்றப்பட்ட தகவல்கள் புரிய வாய்ப்பில்லை. சேக்ஸ்பியரின் ஆங்கில மொழிநடையைப் புரிந்துகொள்வதில் இக்கால இளைஞர் ஒருவருக்கு ஏற்படும் சிரமத்தைக் காட்டிலும் இது அதிகமானது. ஆனால் இந்நிலை உண்டாக சில நூற்றாண்டுகள் கடக்கவில்லை. வெறும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் நிகழ்ந்துள்ள மாற்றம் இது.

இந்நிலை மேலும் தீவரமடையும்போது ஆங்கில மொழியின் அடிப்படையிலேயே சில சிதைபாடுகள் உண்டாகலாம். இணையத்தில் பயன்படுத்தப்படும் சுருங்கிய மொழிவடிவில் நாவல்களும், சிறுகதைகளும் இன்ன பிற இலக்கியங்களும் உருவாகக் கூடும். காலத்திற்கேற்ப மொழி மாற்றமடைவது இயல்பு. இம்மாற்றங்கள் பேச்சுமொழியில் விரைவாக நிகழும். எழுத்து மொழியில் மெதுவாக நிகழும். ஆனால் இணையத் தொழில் நுட்பத்தால் இம்மாற்றம் தலைகீழாக நிகழ்கிறது. பேச்சு மொழியை விட எழுத்து மொழி அதிவிரைவாக மாற்றம் கொள்கிறது. இதன்

தீவரம் எவ்வெந் நிலைகளை எட்டும் என்பது அடுத்தடுத்த சில ஆண்டுகளில் தெரியவரும்.

**இணைவெளியில் தமிழ்மொழி**

தமிழ் போன்ற மொழிகளின் வளர்ச்சியானது இலக்கிய மொழி என்ற நிலையிலிருந்து அறிவியல் மொழி, வணிக மொழி, சட்ட மொழி, அரசியல் மொழி, உயர்கல்வி மொழி முதலிய படிநிலைகளில் பரிணாமம் கொள்வதாகவே இருக்கும். இத்தகைய படிநிலைகளைக் கடந்து நவீன ஊடகங்களில் தமிழ்மொழி புதிய கட்டமைப்பைப் பெற்று வருகிறது. ஆனால் இந்தப் புதிய கட்டமைப்பை அடைவதில் சில சிக்கல்களும் இயல்பாகவே உருப்பெறுகின்றன. தமிழ் மொழியும் அவ்வாறான சிக்கல்களைச் சந்தித்து வருகிறது.

இன்று உலகம் முழுவதையும் ஒரு சிற்றூராகச் சுருங்கச் செய்துள்ள இணையத் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு தன்னைத் தகவமைத்துக்கொள்ள இயலாத எந்தவொரு மொழியும் வளர்ச்சியடைய இயலாது. அந்த வகையில் இணையப் பயன்பாட்டில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கும் மொழியாகத் தமிழ் மொழி விளங்கி வருகிறது.

இணையத்தைத் துய்ப்போரின் மனநிலைகளுக்கு ஏற்றவாறான சில வளர்ச்சி மாற்றங்களைத் தமிழ் மொழி பெற்று வருகிறது. அதேசமயம் இதன் இணைநிகழ்வாக சில மொழிச்சிதைபாடுகளும் தென்படுகின்றன. அவ்வாறான சிதைபாடுகள் புதிய தகவல் தொடர்பு முறைகளை உள்வாங்கும் எந்தவொரு மொழிக்கும் இயல்பாக நேர்வதுதான். பெரும்பாலான தமிழ் இணையதளங்களில் பயன்படுத்தப்படும் மொழிநடையானது சங்கேத மொழிகள்(Codes), மிகுதியான ஆங்கிலக்கலப்பு, முறுவலிகள்(Smileys), சுருக்கக் குறியீடுகள் போன்றவற்றால் ஆனதாக உள்ளது. சான்றுகள்: லவ்.காம், ஜொள் ஜொள் டைரி, :-), :-( (மகிழ்ச்சி மற்றும் துக்கத்தின் குறியீடுகள்), விவிசி (விழுந்து விழுந்து சிரிக்கிறேன் என்பதன் சுருக்கம்)

**இணையத்தில் தமிழ் மொழிச் சிதைபாடுகள்**

கணினித் துறையில் தமிழ் மொழி மிகப்பெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை. குறிப்பாக இணைய உலகில் தமிழ் மொழியின் பயன்பாடு இந்திய மொழிகள் பலவற்றிற்கும் முன்னோடியாக உள்ளது. தமிழ்க் கணினியியலில் ஏராளமான தனிநபர்களும் அமைப்புகளும் தன்னார்வத்துடன் இயங்கி வருகின்றனர். ஆனால் இன்றளவும் தமிழை உள்ளீடு செய்வதில் தொழில்நுட்பச் சிக்கல்கள் நீடிக்கின்றன. குறிப்பாகத் தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகை போன்றவை பரவலான மக்கள் பயன்பாட்டிற்கு வராமல் இருப்பதற்கு இத்தகு தொழில்நுட்பச் சிக்கல்கள் முக்கியக் காரணிகளாகின்றன. தமிழ் இணையதளங்களில் பக்க வடிவமைப்பிலும் எழுத்துருச் சிக்கல்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது போன்ற சிக்கல்கள் இணையத்தில் தமிழைப் பயன்படுத்துவதில் சோர்வையும் தயக்கத்தையும் உண்டாக்குகிறது. எனவே ஆங்கிலத்தை நாடுகின்றனர். ஆங்கிலம் அறியாதவர்களும் தமிழில் தகவல் பரிமாற ஆங்கிலத்தையே நாடுகின்றனர். தமிழின்

வரிவடிவத்தைப் புறக்கணித்துவிட்டு ஆங்கில வரிவடிவில் தமிழைப் பயன்படுத்துகின்றனர். வணக்கம் என்று எழுதுவதற்கு தமிழ் விசைப்பலகையை (Tamil keyboard) இயக்கி, எழுத்துருவைத் தேர்வு செய்து, எழுத்துரு மாற்றிகளைப் (Converters) பயன்படுத்தி பிறகு அதை நகல் செய்து (Copy) பயன்படுத்துவதை விட vanakkam என்று ஆங்கிலத்தில் தட்டச்சு செய்வது எளிமையானதாய் இருப்பதால் இப்போக்கு பரவுகிறது. தமிழைப் பயன்படுத்துவோரிலும் கூட ஆங்கில வரிவடிவத்தை ஒட்டிய(amma என்று தட்டச்சு செய்தால் அம்மா என்று வருவது) தமிழ் விசைப்பலகைகளை நாடுவோரே அதிகம்.

இந்நிலை நீடிக்கும்போது எதிர்காலத்தில் தமிழின் வரிவடிவம் பேராபத்தைச் சந்திக்கக் கூடும். ஏற்கனவே இணையதளத்தில் தமிழ் மொழியின் வரிவடிவத்தை ஒழித்துவிட்டு ஆங்கில வரிவடிவத்தையே முழுமையாகப் பயன்படுத்தலாம் என்கிற கருத்தை ஜெயமோகன் போன்ற எழுத்தாளர்கள் முன்வைக்கத் தொடங்கிவிட்டனர். இரண்டாயிம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட தமிழின் வரிவடிவம் இருபதாண்டு கால இணைய ஊடகத்தால் கேள்விக்குறியாகி நிற்கிறது. ஏற்கனவே தனியார் மய ஆங்கிலக் கல்வியினால் தமிழின் வரிவடிவம் பெரும்பாலான நகர்ப்புறக் குழந்தைகளிடமிருந்து விலகிப் போகும் சூழலில் இணையப் பயன்பாடு இப்போக்கை மேலும் தீவிரப்படுத்துகிறது.

இணைய உலகில் மொழியின் கட்டமைப்பில் உண்டாகும் சிதைபாடுகள் ஆங்கிலத்துடன் ஒப்பிட்டால் தமிழ் மொழிக்குக் குறைவு. இதற்கு முக்கியக் காரணம் தமிழின் பயன்பாடு குறைவு என்பதுதான். முன்னர்க் கூறப்பட்ட ஆங்கில உரையாடல் போன்று தமிழ் மொழியைச் சுருக்கி உரையாடுவது சிரமமானது. தமிழில் உரையாடும் மிகக் குறைவான சிலரும் மரபுவழிப்பட்ட எழுத்துத் தமிழிலியே உரையாடுகிறார்கள். ஆனால் மேற்சொன்ன தொழில்நுட்பச் சிக்கல்கள் ஒரு வேளை முழுவதுமாகக் களையப்பட்டு ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதைப் போன்றே தமிழைப் பயன்படுத்தக் கூடிய நிலை வந்தால் ஆங்கில மொழிக்கு உண்டான சிதைவுகள் தமிழுக்கும் உண்டாகலாம். இது ஒரு குழப்பமான சூழல்தான். ஒட்டுமொத்த உலகத்தையும் மாற்றியமைக்கும், ஆளப் போகும் ஓர் ஊடகத்துக்காக மொழிகள் தம்மைத் தகவமைக்கவோ அல்லது இழக்கவோ தயாராகும் சூழல்.

# தமிழ் எழுத்துருக் குறியாக்க மாற்றிகள்

**மு. சிவலிங்கம், சென்னை, இந்தியா.**

musivalingam@gmail.com

யுனிகோடின் வருகைக்கு முன்பு, தமிழில் ஆவணம் உருவாக்குபவர்கள் பல்வேறு தனியுரிமை(Proprietary) சொற்செயலிகளையும், பல்வேறுபட்ட எழுத்துருக் குறியாக்க(Font Encoding) முறைகளையும் பயன்படுத்தி வந்தனர். ஒருவர் உருவாக்கிய ஆவணத்தைப் பிறர் தம் கணினியில் படித்தறிவது சிக்கலான நடைமுறையாக இருந்தது. யுனிகோடு அறிமுகமான பிறகு அந்தச் சிக்கல் தீர்ந்தது என்றாலும், முன்னாளில் பிற குறியாக்கங்களில் உருவாக்கப்பட்ட ஆவணங்களைப் படித்தறிவதில் அதே சிக்கல் நீடிக்கவே செய்தது. அதுமட்டுமின்றி, இன்னும்கூடப் பலரும் தமக்கு மிகவும் பழகிப்போன பழைய குறியாக்க முறைகளைத் தொடர்வதும் நீடிக்கிறது. குறிப்பாக, எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளைக் கணினிப் பதிப்பாக்க மையங்களில் தொழில்முறைத் தட்டச்சாளர்களிடம் தந்து தட்டச்சிடச் செய்கின்றனர். அவர்களுள் பலரும் குறியாக்க முறைபற்றிய பிரச்சினைகளை அறியாதவர்களாக இருக்கின்றனர். பல்வேறு தனியார் அலுவலகங்களிலும், ஏன் அரசு அலுவலகங்களிலும்கூட இன்னும் யுனிகோடுக்கு முழுமையாக மாறவில்லை என்றே சொல்ல வேண்டும்.

## குறியாக்க மாற்றிகளின் தேவை

மேற்காண்ட தருணங்களில் ஆவணங்களை ஒரு குறியாக்க முறையிலிருந்து வேறொரு குறியாக்க முறைக்கு மாற்ற வேண்டிய தேவை எழுகிறது. குறிப்பாக, படைப்பளிகள் முந்தைய தனியுரிமைக் குறியாக்க முறையில் உருவாக்கப்பட்ட தம் படைப்புகளை இணையத்தில் வெளியிட எண்ணியபோது, அவற்றை யுனிகோடுக்கு மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதே வேளையில் யுனிகோடில் உருவாக்கப்பட்ட ஆவணங்களை அழகான எழுத்துருக்களில் அச்சிட்டு வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டபோது, அவற்றை TAM, TAB அல்லது பிற தனியுரிமை எழுத்துருக் குறியாக்கத்துக்கு மாற்ற வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இன்னும்கூட அரசு ஆவணங்கள் பலவும் குறியாக்க மாற்றத்துக்குக் காத்திருக்கின்றன.

அண்மைக் காலத்தில் இணையத்தில் செயல்படும் இளைஞர் குழுவொன்று, பல்வேறு எழுத்தாளர்கள் எழுதிய தமிழ் நூல்களைக் கிரியேட்டிவ் காமன்ஸ் உரிம அடிப்படையில் மின்னூல்களாக மாற்றி இணையத்தில் இலவசமாக வெளியிட்டு வருகின்றனர். சில மென்பொருள் கருவிகளைப் பயன்படுத்தி பேஜ்மேக்கர், வேர்டு

போன்றவற்றில் உருவாக்கப்பட்ட நூல்களை மின்னூல்களாக மாற்றுகின்றனர். அவ்வாறு மின்னூலாக மாற்ற, அந்த ஆவணம் யுனிகோடு எழுத்துருவில் இருக்க வேண்டிய தேவையுள்ளது. ஆனால், எழுத்தாளர்கள் தம் நூல்களை கணினிப் பதிப்பாக்க மையங்களில் டிஸ்க்கி, ஸ்ரீலிபி, வானவில், பாமினி, எல்டீ-டீஎம், செந்தமிழ் போன்ற பல்வேறு தனியுரிமை எழுத்துருக் குறியாக்க முறைகளில் உருவாக்கியுள்ளனர். அந்நூல்களில் ஆங்காங்கே படங்களும், ஆங்கில உரைப்பகுதிகளும் இடம்பெறுவதோடு, தமிழ் உரைப்பகுதிகள் பல்வகை வடிவமைப்புக் கூறுகளையும் தம்மகத்தே கொண்டுள்ளன. இந்த நூல்வடிவ ஆவணங்களை அப்படியே உள்ளது உள்ளபடி மூல வடிவம் சிதையாமல் யுனிகோடு எழுத்துருவுக்கு மாற்ற வேண்டிய தேவையுள்ளது.

## புழக்கத்தில் உள்ள மாற்றிகள்

மேற்கண்ட தேவைகளைக் கவனத்தில் கொண்டு, மென்பொருளாளர்களும், மென்பொருள் நிறுவனங்களும் தமிழ் எழுத்துருக் குறியாக்க மாற்றிகளை (Tamil Font Encoding Converters) உருவாக்கத் தொடங்கினர். அவை பெரும்பாலும் ஆவணங்களைப் பழைய குறியாக்க முறையிலிருந்து யுனிகோடுக்கு மாற்றும் வசதியைக் கொண்டவை. எந்தக் குறியாக்கத்திலிருந்தும் வேறெந்தக் குறியாக்கத்துக்கும் மாற்றும் தேவை அரிதெனினும், அத்தகைய மாற்றிகளும் உருவாக்கப்பட்டன. இத்தகைய குறியாக்க மாற்றிகளுள் சில, பதிவிறக்கித் தனிப்பட்ட கணினிகளில் நிறுவிப் பயன்படுத்திக் கொள்பவையாகவும், வேறுசில, இணையத்தில் நிகழ்நிலையில்(Online) பயன்படுத்திக் கொள்பவையாகவும் உள்ளன.

புழக்கத்தில் உள்ள இத்தகைய தமிழ் எழுத்துருக் குறியாக்க மாற்றிகளுள் சில: (1) பொங்குதமிழ் எழுத்துரு மாற்றி (2) கண்டுபிடி தமிழ் எழுத்துரு மாற்றி (3) என்.ஹெச்.எம் கன்வெர்ட்டர் (4) அதியமான் எழுத்துரு மாற்றி (5) இளங்கோ தமிழில் இணைக்கப்பட்டுள்ள எழுத்துரு மாற்றி (6) மென்தமிழ் சொல்செயலியில் இணைக்கப்பட்டுள்ள எழுத்துரு மாற்றி. இவற்றுள் பெரும்பாலானவை சாதாரண உரை (Plain Text) அடிப்படையிலேயே குறியாக்கத்தை மாற்றுபவை. அதாவது, மூல ஆவணத்தில், படங்கள், அட்டவணைகள், வடிவமைக்கப்பட்ட உரைப்பகுதிகள் (Formatted Texts) ஆகியவை இருப்பின், மாற்றப்பட்ட ஆவணத்தில் அவற்றை இழக்க நேரிடும்.

## சாதாரண உரை (Plain Text) அடிப்படையிலான மாற்றிகள்

சாதாரண உரை அடிப்படையிலான மாற்றிகளில் உள்ள குறிப்பிடத்தக்க போதாமை என்னவெனில், மூல ஆவணத்தில் ஆங்காங்கே ஆங்கிலச் சொற்கள் இடம்பெற்றிருப்பின் மாற்றப்பட்ட ஆவணத்தில் அவை தமிழ் எழுத்துருவில் புரியாத சொற்களாக மாறிவிடும். அவற்றை மீண்டும் ஆங்கில எழுத்துருவுக்கு மாற்ற வேண்டும். மேலும், முன்பு குறிப்பிட்டபடி, மூல ஆவணத்திலுள்ள படங்கள், அட்டவணைகள், கரைகள்(Borders) ஆகியவற்றையும் இழக்க நேரிடும். அதுமட்டுமின்றி, மாற்றப்பட்ட ஆவணத்தில் தடிமன், சாய்வு, அடிக்கோடு, இடது-வலது-மைய ஓரச்சீர்மைகள், கறுப்பு தவிர்த்த எழுத்தின் பிற நிறங்கள், இன்னும் இதுபோன்ற பல்வேறு வடிவமைப்புக் கூறுகளும் தக்க வைக்கப்படுவதில்லை.

பல்வேறு தனியுரிமைக் குறியாக்கங்களில் அமைந்த ஆவணங்களை யுனிகோடு எழுத்துருவில் இணையத்தில் வெளியிடச் சாதாரண உரை அடிப்படையிலான குறியாக்க மாற்றிகள் போதுமானவையே. என்றாலும், படங்கள், அட்டவணைகள், வடிவமைப்புகள், ஆங்கிலச் சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் இன்னும் பிற வடிவிலான ஆவணங்களை அப்படியே மூலத்தையொத்த வடிவமைப்பில் மாற்றச் சாதாரண உரை அடிப்படையிலான குறியாக்க மாற்றியால் இயலாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## முழுமையான மாற்றி

ஒரு முழுமையான தமிழ் எழுத்துருக் குறியாக்க மாற்றி என்பது, மூல ஆவணத்தை எவ்விதச் சிதைவுமின்றி உள்ளது உள்ளபடி அப்படியே மாற்றியமைக்கும் வல்லமை பெற்றதாக இருக்க வேண்டும். வடிவமைக்கப்பட்ட ஒரு தமிழ் ஆவணத்தில் சாதாரண உரைப்பகுதிக்கும் அப்பால் பல்வேறு வடிவமைப்புக் கூறுகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் முக்கியமானவை:

- இடையிடையே ஆங்கிலச் சொற்கள்.
- சொற்களில் தடிமன் (Bold), சாய்வு (Italics), அடிக்கோடு (Underline) போன்ற எழுத்துருப் பாணிகள் (Font Styles)
- மேலெழுத்து (Superscript), கீழெழுத்து (Subscript)
- எழுத்தின் நிறம் (Font Color)
- முனைப்புறுத்திய உரைப்பகுதி (Highlighted Text)
- அடித்த உரைப்பகுதி (Strikethrough Text)
- கரையிடப்பட்ட உரைப்பகுதிகள் (Bordered Texts)

- இட, வல, மைய ஓரச்சீர்மைகள் (Left, Right, Centre Justifications)
- பொட்டிட்ட / எண்ணிட்ட பட்டியல்கள் (Bulletted / Numbered Lists)
- உட்பொதிக்கப்பட்ட படங்கள் (Images), வடிவங்கள் (Shapes)
- அட்டவணைகள் (Tables)

இவையனைத்தும் குறியாக்கம் மாற்றப்பட்ட ஆவணத்திலும் மாற்றமின்றி அப்படியே இடம்பெறுவது சிறப்பாகும். இதுபோன்ற ஒரு தேவை எனக்கே நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. பலரிடம் கேட்டுப் பார்த்தும் என் தேவை நிறைவு பெறாமலே இருந்தது. என் வேண்டுகோளுக்கிணங்க லேர்ன்ஃபன் சிஸ்டம்ஸ் நிறுவனத்தினர் ஒரு மாற்றியை உருவாக்கிக் கொடுத்தனர். அதில் ஆங்கிலச் சொற்கள் தக்க வைக்கப்பட்டன. என்ற போதிலும், ஒரு முழுமையான குறியாக்க மாற்றி எனக்கு உடனடியாகத் தேவைப்பட்ட காரணத்தால், நானே அத்தகைய ஒரு மாற்றியை உருவாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தேவையே கண்டுபிடிப்பின் ஆசான் (Necessity is the Father of Invention) என்பது முற்றிலும் உண்மைதான். நான் உருவாக்கியுள்ள குறியாக்க மாற்றியில், மூல ஆவணத்தில் இடம்பெறும் மேற்கண்ட அனைத்து விவரங்களும் தக்கவைக்கப்படுகின்றன. லேர்ன்ஃபன் சிஸ்டம்ஸ் நிறுவனத்தினரும் அவர்களுடைய குறியாக்க மாற்றியை மேம்படுத்தியுள்ளனர் என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

## வரம்பெல்லைகள் (Limitations)

நான் உருவாக்கியுள்ள மாற்றிக்குச் சில வரம்பெல்லைகளும் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. நான் உருவாக்கியுள்ள மாற்றி, கீழ்க்காணும் உயர்நிலை வடிவமைப்புக் கூறுகளைத் தக்கவைத்துக் கொள்ளாது.

- படங்களைச் சுற்றிய உரைப்பகுதி (Text wrap around image)
- ஒன்றுக்கு மேற்பட்ட பத்தியமைப்பு (Multi-column text)
- தலைப்பி, முடிப்பி (Header, Footer)
- அடையாளக் குறிகள் (Book Marks)
- பக்க முறிப்பு (Page Break)
- முதல் பேரெழுத்து (Drop Cap)

மூல ஆவணத்திலுள்ள எழுத்துருவின் உருவளவுகள் (Font Sizes) மாற்றப்பட்ட ஆவணத்திலும் அப்படியேதான் இருக்கும். மூல ஆவணத்தின் தலைப்பு, அத்தியாயத்

தலைப்புகள், பத்தித் தலைப்புகள் போன்றவை ஒரே குறியாக்கத்தில் வெவ்வேறு எழுத்துருக்களில் அமைந்திருந்தாலும், மாற்றப்பட்ட ஆவணத்தில் அவையனைத்தும் ஒரே எழுத்துருவிலேயே அமைந்திருக்கும். அவற்றின் உருவளவுகளும், நிறம், பாணி போன்ற வடிவமைப்புக் கூறுகளும் தக்கவைக்கப்படும். மேலும், மாற்றப்பட்ட ஆவணத்தில் வரிகளுக்கு இடையிலான இடவெளி, மாற்றப்பட்ட எழுத்துருவுக்கு ஏற்பவே அமையும். எனவே, மாற்றப்பட்ட ஆவணத்தில் பக்க வடிவாக்கம் சற்றே மாற்றம் அடைய வாய்ப்புண்டு.

## மாற்றியின் உச்சநிலை வடிவம்

இன்றுள்ள பெரும்பாலான மாற்றிகளில் எம்எஸ்வேர்டு, பேஜ்மேக்கர், இன்டிசைன் போன்ற மென்பொருள்களில் உருவாக்கப்பட்ட ஆவணங்களின் உள்ளடக்கத்தை நகலெடுத்து, ஒட்டிக் குறியாக்கத்தை மாற்ற வேண்டியுள்ளது. அவ்வாறு நகலெடுத்து ஒட்டும்போது அந்தந்த மென்பொருளுக்கே உரிய பல்வேறு வடிவமைப்புக் கூறுகளை இழக்க நேரிடுகிறது. சொற்பிழை திருத்தி போன்ற கருவிகளை எந்தவொரு மென்பொருளுடனும் ஓர் உள்ளிணைப்பாக (Add-in) பயன்படுத்திக்கொள்ள முடிவதுபோல, குறியாக்க மாற்றியையும் அந்தந்த மென்பொருளின் உள்ளிணைப்பாகப் பயன்படுத்த முடியுமெனில் அதுவே எழுத்துருக் குறியாக்க மாற்றியின் உச்சநிலை வடிவமாக இருக்கும். முரசு நிறுவனம் தமது 'முரசு அஞ்சல் 10' பதிப்பில், விண்டோஸில் எம்எஸ்ஆபீஸ் ஆவணங்களில் செயல்படும் அத்தகைய மாற்றியை இணைத்துள்ளதாக அறிவித்துள்ளது. மேக், லினக்ஸ் முறைமைகளிலும், பேஜ்மேக்கர், இன்டிசைன் போன்ற பிற மென்பொருள்களிலும் உருவாக்கப்பட்ட ஆவணங்களுக்கும் அத்தகைய மாற்றியை உருவாக்குவது மிகுந்த பலன் தரும்.

*****

# எழுத்து உடற்கூறியியலும், வகைகளும் - தேவையும், சிக்கல்களும்
# (Type Anatomy and Categories – Necessity and issues)

பேரா.முனைவர்.வெ. இராமன் (Prof.Dr.V.Raman)
email: raman600@gmail.com, Prof.Dr.V.Raman@gmail.com

உலகின் தொன்மையான மொழியான செம்மொழித் தமிழானது உலகெங்கும் பரவி இருப்பினும் அதனை மேலும் செம்மைப்படுத்தவும் கணினி யுகத்தின் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவும் தமிழ் அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுனர்களும் இணைந்து செயலாற்றி வருகின்றனர். அதில் முக்கியமானது குறியாக்கமாகும். பல்வேறு குறியாக்கத்திலிருந்து ஒருங்குறிக்கு மாறிய தமிழை அடுத்த கட்டமாக TACE (தமிழ் அனைத்து எழுத்துருக் குறியேற்றம்) குறியாக்க முறைக்கு எடுத்துச் செல்வதன் அவசியத்தை அனைவரும் உணரத்துவங்கியுள்ளனர். இந்த சூழ்நிலையில் எழுத்து உடற்கூறியியலின் அவசியத்தை அனைவரும் உணர வேண்டிய தருணம் எழுந்துள்ளது. தமிழை அனைவரும் ஒரே மாதிரியாக புரிந்து கொள்ளவும், புதிதாக தமிழைக் கற்பவர்கள் குழப்பமின்றி உணர்ந்து கொள்ளவும் எழுத்து உடற்கூறியியல் மிகவும் இன்றியமையாததாகும்.

*தொல்காப்பியமும் எழுத்தும்*

உலகின் முழுமையான இலக்கண நூல்களில் மிகப்பழமையான நூலாகக் கருதப்படுவது தமிழ் மொழியின் இலக்கண நூலான தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் குறிப்பிடும் அகத்தியம் போன்றவை நமக்கு கிடைக்கவில்லையாதலால் அவற்றை கணக்கில் கொள்ளவில்லை. ஏறத்தாழ ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமையான நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு முழுமையான இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. எனினும் தொல்காப்பியமும் அதன் பின்னர் வந்த நன்னூலும் எழுத்து உடற்கூறியல் பற்றி தெளிவான இலக்கணத்தை வகுக்கவில்லை.

தொல்காப்பியத்தில், எழுத்ததிகாரமானது 1. நூல் மரபு, 2. மொழி மரபு, 3. பிறப்பியல், 4. புணரியல், 5. தொகை மரபு, 6. உருபியல், 7. உயிர் மயங்கியல், 8. புள்ளி மயங்கியல், 9. குற்றியலுகரப்புணரியல் என்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. எனினும் எழுத்தின் உடற்கூறியல் பற்றிய செய்திகள் இதில் அறுதியிட்டுக் கூறப்படவில்லை. இதனால் எழுதுபவரின் வசதிக்கேற்ப எழுத்தின் உடற்கூறியல் வேறுபட்டு உள்ளது.

*எழுத்து எனப்படுப*
*அகர முதல் னகர இறுவாய்*
*முப்பஃது என்ப*

என்று தொல்காப்பியம் தெரிவிப்பதன் வழி தொல்காப்பியர் காலத்தில் எழுத்துக்கள் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலையிலும், வரையறுக்கப்பட்ட நிலையிலும் இருந்ததாலேயே இவ்வாறு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளதை உணர முடிகிறது.

பதினெட்டு மெய்யும் அகரத்துடன் கூடி உயிர்மெய்யாக உருவம் கொள்ளும்பொழுது புள்ளியில்லாத தம் உருவத்துடன் ஒலிக்கப்படுவன. அவை ஏனைய பதினொரு உயிர்களுடன்கூடித் தம் உருவில் திரிபு பெற்று ஒலிக்கப்பெறுவன. திரிபு பெறுதலாவது, மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம் என்று முன்னைய உரைவழி நின்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். எழுத்துக்கள் வரிவடிவத்தில் பெற்று வந்துள்ள மாற்றங்களையும் தொல்காப்பியம் (17) சுட்டி நச்சினார்க்கினியர் விவரித்துள்ளார். எனவே தொல்காப்பியர் காலம் (கி.மு 500) முதலாகவே தமிழ் மொழிக்கென்று எழுத்துமுறை வரையறுக்கப்பட்டிருந்ததும், அம்முறை காலந்தோறும் திரிபு பெற்று வந்துள்ளதை உணரமுடிகிறது.

**பண்டைத்தமிழ் எழுத்து**

தமிழகத்தின் மிகப்பழமையான தமிழ் எழுத்தானது *பிராமி* எனவும், ***தென்னிந்தியப் பிராமி*** எனவும் ***பண்டைத் தமிழ் எழுத்து*** (Archaic Tamil Script) எனவும் வழங்கப்படுகிறது. இவ்வெழுத்துக்கள் கி.மு 3ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் வழங்கி வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. தமிழ்நாட்டு பண்டைக் கல்வெட்டுகளில் 10 உயிரெழுத்துக்கள் தான் எழுதப்பட்டுள்ளன. `ஐ`காரமும், `ஔ`காரமும் காணப்படவில்லை. கி.பி 3-4ஆம் நூற்றண்டளவில் இப்பண்டைத் தமிழ் எழுத்தின் வடிவம் மாற்றம் பெறத் துவங்குகிறது. கல்லில் உளியாலும், தூரிகை கொண்டு வண்ணத்திலும் எழுதி வந்த தமிழர்கள் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதத் தொடங்கிய காரணத்தால் இவ்வடிவ மாற்றம் தொடங்கி இருக்கலாம் என்பது அறிஞர்தம் கருத்து. முழு வட்ட வடிவம் பெற்ற தமிழ் எழுத்துக்களை கி.பி 8-9ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் காண முடிகிறது. இந்த வட்டெழுத்தே இன்றைய தமிழ் எழுத்துக்களுக்கு முன்னோடி எனலாம். இவ்வகையிலான எழுத்துருக்களின் வளர்ச்சியினை கீழ் காணும் படங்களின் வழி காணலாம்.




இவ்வகைத் தமிழ் எழுத்துக்கள் சோழர்கள் காலத்தில் பெரும் ஆதரவைப் பெற்று பிற்காலப் பாண்டியர்கள், விசயநகரப் பேரரசர்களும் பயன்படுத்தியமையால் இங்கு வலுப்பெற்றுவிட்டது. பின்னர் வந்த நாயக்க மன்னர்களும் இவ்வெழுத்தையே பயன்படுத்தியமையால் இப்புதிய எழுத்துக்களே பொலிவோடும், வலிவோடும் தமிழகத்தில் நிலைபெற்றுவிட்டது. அச்சுக்கலைக் காலத்திற்குப் பின்னர் இவ்வெழுத்து முறை அதிக வலுப்பெற்று ஆட்சிபுரியத் தொடங்கியது எனலாம். கடந்த 1980 ஆண்டு தற்போது வழக்கத்திலுள்ள எழுத்துச் சீர்முறையானது தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றத்திற்கான காரணம் எழுத்து உடற்கூறியியல் பற்றிய இலக்கணம் வகுக்கப்படாததுதான்.

***ஆங்கில மொழியில் எழுத்து உடற்கூறியல்***

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஆங்கில மொழியில் எழுத்து உடற்கூறியல் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எழுத்தின் அனைத்து உடல் பாகங்களும் குறிப்பிட்ட பெயரிட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.



Ascender, decenter, Counter, Crossbar, x-height, serif போன்று ஒவ்வொரு எழுத்துக்கும் உடற்கூறியலின் பாகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் எந்த ஒரு எழுத்தும் அதன்படியே எழுதப்படுதலும் வகைப்படுத்தப்படுதலும் அவசியமாகிறது.

**எழுத்துரு** (font) அல்லது **எழுத்துவகை** (typeface) என்பது ஒரு மொத்த எழுத்துக்கள், எண்கள், மற்றும் குறியீடுகளை ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் வடிவமைக்கப்பட்ட தொகுப்பாகும். **எழுத்து வகைகள்:** ஆங்கில மொழியில் எழுத்துக்கள் ஐந்து பெரும் வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. 1. Serif (Old Style, Transitional மற்றும் Modern Serifs ஆகியவை உட்பட), 2. Sans Serif, 3. Square Serif (Egyptian), 4. Script மற்றும் 5. Decorative.




ஒவ்வொரு வகை எழுத்தும் உருவான விதமும் உபயோக வகைகளும் ஆங்கில உடற்கூறியியலில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

எழுத்து உடற்கூறியியலில் அடுத்து எழுத்துருக்களின் அளவுகள், அதன் கணம், தனி எழுத்துகளின் இடைவெளி (Letterspacing), வரிகளுக்கிடையேயான இடைவெளி (Leading), மற்றும் வார்த்தைகளுக்கிடையேயான இடைவெளி (Word Spacing) ஆகியவையும் விவரிக்கப்படுகின்றன.

***தமிழ் எழுத்தின் வகைகளால் உண்டாகும் சிக்கல்கள்***

1. ஆங்கில எழுத்துருக்கள் போன்ற உடற்கூறியியல் பற்றிய தெளிவான கண்ணோட்டம் இன்மை காரணமாக பாட பேதங்கள், எழுத்துச் சிக்கல்கள், புரியாத தன்மை ஆகியவை ஏற்படுகின்றன.

**ஔவை - ஒளவை**

முதலாவது 'ஔ' - 'வை' எனவும்
அடுத்தது 'ஒ' - 'ள' - 'வை' எனவும்
தட்டச்சு செய்யப்பட்டது.

2. துணைக்கால் மற்றும் ரகரம், ஊகாரம் மற்றும் ளகரம், ஐகாரம் மற்றும் கிரந்த எழுத்து ஜ, ஔகாரம் மற்றும் ளகரம் மற்றும் இவைகளின் உயிர்மெய் எழுத்துக்களின் வரிசைகள் ஏற்படுத்தும் குழப்பங்கள் பலவாகும். இதனால் தமிழ் தவறாக எழுதப்படினும் புரிந்து கொள்ள இயலுவதில்லை.

உளவியல் படித்த கௌரி பௌர்ணமி அன்று
ஊர் விட்டு ஊர் வந்து ஐந்து ஜாடிகளுடன்
குமார் முன் நின்றாள்.

3. காலத்தினால் முந்தைய படிகளைப் படிப்பதிலும், புரிந்து கொள்வதிலும் சிக்கல் ஏற்படுகிறது. இதனால் வருங்கால சந்ததிகளுக்கு அச்செய்திகள் சென்று சேராமலேயே போய்விடலாம். உதாரணமாக பல கல்வெட்டுகள் புரியப்படாமலேயே உள்ள நிலையைக் கூறலாம்.



4. தமிழ் விளம்பரம் எழுதுபவர்கள் தங்கள் வசதிப்படி எழுதுவதால் அது படிப்பவர்களிடம் குழப்பத்தை ஏற்படுத்துவதுடன் ஓர் ஒழுங்கின்றி அமைகிறது.



விளம்பர உதாரணம்

5. புதிதாகக் கற்பவர்களுக்கு குழப்பத்தையும், புரியாத தன்மையையும் ஏற்படுத்துகிறது. குறிப்பாக வெளிநாட்டில் சுயமாகத் தமிழ் கற்பவர்களிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி அயற்சியை ஏற்படுத்துகிறது.

'ஏய் கௌவி' என கௌரி கூப்பிட்டாள்.

**சிக்கலுக்கு தீர்வுகள்:**

1. தமிழ் எழுத்துக்களை இரு வரி வடிவங்களுக்குள் எழுதுவதிலிருந்து நான்கு வரி வடிவத்துக்கு மாற்றி எழுத்து உடற்கூறியியல் அமைக்கப்படுதல் வேண்டும்.
2. உத்தமம் ஒரு பணிக்குழு அமைத்து அனைத்து எழுத்துக்களுக்கும் நான்கு வரிவடிவ உடற்கூறியியல் அமைக்க வேண்டும்.
3. பணிக்குழுவின் பரிந்துரையை தமிழக அரசு மற்றும் தமிழ் ஆர்வலர்களுடன் இணைந்து விவாதித்து இறுதி பரிந்துரையை ஏற்படுத்தலாம்.
4. இப்பரிந்துரையை தமிழக அரசின் அரசாணை மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.
5. புதிய தமிழ்ப் பாடங்களின் எழுத்துருக்கள் அனைத்தும் இதன்படி அமைக்கப்படின் வருங்கால சந்ததியினர் குழப்பமின்றி தமிழைக் கற்கவும், புரிந்து கொள்ளவும் இயலும்.
6. மேலும் புதிய எழுத்துருக்கள் அமைப்பவர்கள் இப்பரிந்துரையின்படியே அமைப்பார்கள். இதனால் தமிழ் படைப்புகள் அனைத்தும் வருங்காலத்தில் குழப்பமின்றி அமையும்.

முடிவுரை:

தொன்று தொட்டு வழங்கிவரும் தமிழானது இப்புவிக்கு வழங்கியிருக்கும் கொடையானது அளப்பரியது. இலக்கிய உலகைப் பொறுத்தவரை அள்ள அள்ளக்குறையாத செல்வத்தை வழங்கியுள்ள தமிழானது கணினி உலகில் மென்மேலும் வளர்ந்து செல்லவும், எதிர்கால சந்ததியினர் தமிழை அழியாது காக்கவும், தமிழை தமிழ் வரி வடிவிலேயே படிக்கவும் தமிழ் எழுத்து உடற்கூறியியல் அமைப்பது மிகவும் அவசியமாகும். இதை அரசுக்கு உணர்த்துவதும், பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதும் நம் கையில்தான் உள்ளது. கன்னித்தமிழை வளர்ப்பதன்மூலமே நம்

தமிழ்ச் சமுதாயம் வளரும் என்பதில் துளியளவும் ஐயமில்லை. எனவே தமிழ் வளம் பெறுவதற்காக தமிழ் எழுத்து உடற்கூறியியலை நிலைப்படுத்துவோம்.

**மேற்கோள்கள்:**


1. *தொல்காப்பியம் – கழக வெளியீடு, சென்னை, 1973*
2. *தமிழ் இலக்கிய வரலாறு – மு.வரதராசன், சாகித்திய அக்காதெமி – புது தில்லி, 1972*
3. *தமிழ் எழுத்துருக்களின் வளர்ச்சி – பேரா.முனைவர்.வெ.இராமன் – 11ம் உலகத் தமிழ் இணைய மாநாடு-2012, சிதம்பரம், இந்தியா.*
4. *Basics of Design – 2nd edition – Lisa Graham, Thomson – Delmar Lerning, Canada-2005*
5. *Notes on Tamil Orthography – puLLI, kAI, ai, ja etc. – Mani M Manivannan, 12th International Tamil Internet Conference-2013, Kuala Lumpur, Malaysia.*

## ATTITUDE OF TAMIL SPEAKERS TOWARDS TAMIL COMPUTING

**R S Vignesh Raj,**

Research scholar, Sheffield Hallam University, United Kingdom

**Abstract**

This paper deals with the 'Attitude of Tamil speakers towards Tamil Computing'. It introduces the status and position of Tamil and reiterates the importance of Tamil as a language to make Tamil Computing more relevant. It explains the research methodology and presents an analysis of the findings. Based on the findings, the paper makes suitable recommendations to ensure that Tamil Computing thrives at least within the Tamil community.

### 1.1 Introduction

Language is not just a tool to communicate, it is the identity of a society, repository of knowledge and forms the fundamental to succeed in any field. English language continues to dominate the internet with over 55% of the internet content being in English. It is interesting to note that native French speakers the number of whom is almost equal to that of Tamil speakers but Tamil accounts less than 0.1% of the contents in the internet while little of 4% of the internet content is available in French.[1] There has been sincere efforts to promote Computing in Tamil in the last few years but it is felt that understanding the 'attitude' of the end users and their interest so as to add value to the contribution was more important. This paper discusses the result of a research and makes a few recommendations based on the results in order to make Tamil Computing more popular.

### 1.2 Status of Tamil and position of Tamil speaker

Tamil is the only official language of Tamil Nadu, one of the official languages in Puducherry, Andaman Nicobar Islands and Singapore. It has Official and National status in Sri Lanka. It is a recognised minority language in Malaysia, Mauritius, Reunion Island and South Africa and it is possible for native Tamil speakers to learn and use the language in these countries to a great extent. It is to be understood that the 'Official Language Act 1976' of the Indian Union is not applicable to the state of Tamil Nadu.[2] It is therefore expected that Tamil should perhaps be the only medium of communication within the state. According to the 2001 census about 90% of Tamil Nadu speaks Tamil as first language.

### 2. Research Methodology

Since this research is about Tamils using the language on internet and technology, it was felt that the most appropriate method to get responses from the users whose first or second language is Tamil was via an online questionnaire. Since the objective was to evaluate the attitude of Tamil users towards Computing in Tamil, social networking sites like Facebook was chosen to observe the behaviour of certain groups and users. The first questionnaire was bilingual encouraging all Tamils to participate regardless of their ability to read Tamil. The second and third questionnaire was only in Tamil as it was felt that a participant must at least know to read the language in order to make it more meaningful. The three questionnaire were open to the same audience and it was

left to their choice. The participants were made aware of the DPA (Data Protection Act). A consent from the participant was sought in relation to contacting them via e-mail if there was a need to clarify or get to the next level to understand them. This research facilitated Tamils regardless of their geographic location to participate and was targeted over an estimated 100,000 Tamils via networking sites. It was ensured to the maximum extent possible that only credible responses were recorded and were taken into account for statistical analysis. A minimum of 30 response is required for statistical analysis and all the three questionnaires exceeded the threshold.[8]

**3. Result**

The 'தமிழ் மொழி கருத்து கணிப்பு' research survey was entirely in Tamil and 100% of the respondent had Tamil as their first language of which 82% were from Tamil Nadu and about 6% were from other Indian states. 80.73% of the respondents **claimed** they were extremely fluent in reading, writing and speaking while 12% of the respondents said they couldn't speak Tamil without using English words but were able to read Tamil. To a question: 'உங்களுக்கு தமிழில் எந்த அளவிற்கு புலமை இருக்கிறது?1 - ஒன்றும் தெரியாது 5- ஏதோ ஒரளவுக்கு தெரியும் 10 - எல்லாம் தெரியும்', about 5.36% said they didn't know anything in Tamil and about 50% of the respondents were either average or below average in using the language. 33.90% of the respondents said they wouldn't use Tamil in any of the technological devices while 7.63% said they would use in all devices such as Mobile phone, laptop, desktop etc. Mobile phone emerged as a most preferred device to use in Tamil. It is observed that a vast majority of the respondents are unable to speak a sentence in proper Tamil i.e. without using an English word in daily life. 95.89% of the respondent said they studied Tamil in their own interest while a little over 50% said they spoke in English mixed Tamil with their Tamil teacher. Close to 28% of the respondents use a foreign word to greet another Tamil friend or person. Despite Tamil numbering system being made available in Tamil keyboards, over 80% of the respondents had no knowledge.

'**Role of language in Technology**' to an extent helps in understanding the mind-set of the Tamil people. 75.86% of the respondents agree that 'proficiency' in language is extremely important in understanding technology. 80.65% agree that Tamils must have proficiency in Tamil in order to further in the field of Tamil Computing/ Technology. 90.91% of the respondents are of the opinion that if Tamil becomes the dominant language in business atleast in Tamil Nadu to begin with and if learning Tamil had a monetary value attached to it, it could help the language grow and sustain in other fields including Computing. 57.58% said they understand the technical term 'recycle bin' better than 'மறுசுழர்சிக்கூடை'. 93.94% agree that if a language is not encouraged and spoken within the community, it cannot find a place for itself in Technology- in this case- Tamil. 54.55% are of the opinion that Tamil Nadu people will refuse to accept monolingual (Tamil medium instruction with an option to choose a second language which may not necessarily be English) education as practised in most European and Western countries. 100% of the respondents welcomed a compulsory Tamil Computing subject from Grade I to XII.

100% of the respondents agreed that if Tamil did not grow in the field of Technology it could be an irreparable loss to the Tamil society.

**'Tamil Computing Research survey':** 96.5% of the respondents rated their computing skills to be average or above average and 36.48% of the 96.5% rated their Computing skill to be excellent. Close to 80% of the respondents admit that they don't bother to check if their device support Tamil before purchase. 77.39% agree that Tamil needs to catch up with technology. Little over 50% say Tamil is their most preferred language on social networking sites like 'Facebook' and 'Twitter'. 86.58% are 'waiting' for technology to support Tamil so they can use it. 52.88% of the respondents opined that any latest technology in Tamil would remain a distant dream. 40.06% of the respondents hold the 'attitude' of Tamils responsible for the slow growth of Tamil in technology, 34.29% hold the Government of Tamil Nadu responsible, 18.59% see English as a major block in Tamil's development, 13.78% feel Tamil language not being valued or respected in other countries as a reason. About 41.67% feel all the above equally contribute to the slow growth of Tamil in Technology. 87.50% were for a law that makes Tamil as a compulsory medium education which must open employment opportunities in Tamil speaking countries.

**3.1 Analysis and findings**

It is found that the majority of the respondents have unanimously agreed on two points:

a. Compulsory Tamil Computing module from Grade I to XII
b. They acknowledge that lack of growth in the field of Technology could have an impact on the Tamil society.

A vast majority do realise the importance of the role 'language' plays in understanding technology however, anecdotal references and observation suggests that a vast majority of the Tamils favour English or undermine the potential of their own mother tongue. Languages like English, French, German to name a few are seen more as 'technical' or a 'must know' languages to be perceived as a 'professional' but for some reason choose to overlook languages like Korean, Mandarin and Japanese that have managed to be largely monolingual societies and yet leads the world in some of the leading technologies. All the above mentioned societies are largely monolingual societies within their country. These languages are used almost everywhere in their respective countries and remains the sole medium of instruction when it comes to education. It must also be noted that most of these societies promote bilingualism and encourage learning a 'second' language of their choice. It is rather bizarre that in Tamil Nadu and Puducherry students 'cheer' when they don't have to study Tamil as a language which is not only the first language of most students but also forms a 'linguistic identity'. Interestingly, Tamil is the only Indian language that is more widespread (Official in three countries and officially recognised in four countries that makes it a total of seven countries) despite less number of speakers. On the contrary, 100% of the English students in England will know English and would have studied English as a 'language' regardless of their first language.

A few participants were found to 'alter' the results by taking the survey multiple times. It is worth noting their interest and eagerness to get the language to a certain standard but, it also

reflects a manipulative attitude to 'get to where it needs to be' when it actually isn't or doesn't deserve.

It was also observed that a vast majority of the respondents who chose 'Tamil' as the most preferred language on social networking sites actually used 'Roman' script to convey their thoughts. For instance: *Vanakkam, nalaikki pakalam.*[4] For the purpose of this research, they were rejected and were not classed as Tamil. Modern Tamil especially the spoken variety has quite a few English words which suggest that the Tamils although largely bilingual are actually not bilingual in strict sense. It is interesting to note that most Tamils use an English phrase or a word to explain a meaning of a Tamil word. Example: *Madikkanini* –Laptop. It was also observed that Tamils abroad (Strictly speaking United Kingdom) unite based on 'language' and not 'Nationality'. This anonymous randomly selected UK based Tamil group on a social networking site was observed over period of three months. The group was made aware that I have randomly selected the group for my research but the group was not informed of the elements that I will be observing. Out of about 83 posts/updates, only two posts/updates were in Tamil (2.3%). And both these posts were on a day that is culturally significant to the Tamils. This shows that clearly, English not Tamil is being used as a medium of communication within the Tamil community abroad at least on social networking sites.

### 3.2 Limitations and further scope

This paper recognises the limitations in this research. It recognises the need to an alternate approach like a face to face interview or an activity based research to verify the results of this research and they are scheduled around Christmas 2014 or early 2015. It is acknowledged that a strictly monitored and follow up on questionnaire is essential to get to the core of the issue however, keeping in mind the population of the Tamil society, only a limited random sample can be taken.

## 4. Conclusion and recommendations

The results of this research is more relevant to Tamil Nadu since over 82% of the respondents were from Tamil Nadu. The result of this research indicates that an overwhelming majority of the Tamil Community regardless of their geographic location have got average computing skills. It is found that proper Tamil is hardly used even as a language of communication within the Tamil community and a majority Tamils have an indifferent attitude towards using their mother tongue in various fields including Computing. The unavailability of Tamil keyboard is the main reason given by a majority of the Tamil users for not typing in Tamil but in reality it is found that an overwhelming majority do not have the 'will' to type in Tamil despite presenting them with alternatives. The research has to an extent exposed the 'double-standards' towards the language. This paper recognises the importance of basic knowledge in English language. The paper further highlights that Tamil is the only official language of Tamil Nadu and Indian Union being a federal entity, it is recommended that Tamil Nadu Government make Tamil as mandatory medium of instruction in all schools across Tamil Nadu with options of choosing a compulsory second and an optional third language to promote and preserve a multicultural identity. It is observed that medium of instruction plays a vital role in

understanding the technical terminologies. This will also increase the numbers of people who speak Tamil as a second language which could in turn help in gaining a prominent presence on the internet and related technologies. The compulsory second language could be offered from early years so a child can be expected to develop a 'reasonable' fluency in his 12 year schooling.[5] Since Tamil is a compulsory subject in Tamil Nadu, in the interest of largely Tech savvy Tamil society, Tamil Computing needs to be introduced as a compulsory module. In order to further appreciate the importance of language, a Tamil Proficiency Test needs to be introduced by enacting an appropriate law. This must be applicable across all sectors in Tamil Nadu especially for employment regardless of their chosen field or sector (Private/ Government). It is also recommended that the Tamil Nadu Government enact a law along with stringent penalties for violators to ensure only those devices that support Tamil fonts and keyboards are sold in Tamil Nadu. In order to passively motivate everyone to learn Tamil, it is further recommended that the Tamil Nadu Government make Tamil only signboards mandatory across all establishments and impose deterring penalties including revoking the license for violators. If these are implemented, it is believed that Tamil Computing will find takers within the Tamil community and there could be significant change in the 'attitude' of Tamils. The research further reveals that Tamil needs a more 'holistic' approach much more than the Tamils who usually perceive it to be just a mother tongue or a language for communication with fellow Tamils. A more vigorous approach towards the language is indeed required to promote Tamil Computing within the Tamil community.

**References:**


1. http://www.diplomatie.gouv.fr/en/french-foreign-policy-1/promoting-francophony/the-status-of-french-in-the-world/ (Last accessed: July 2014)
2. http://www.rajbhasha.nic.in/golpcontent.aspx?t=endolrules (Last accessed: August 2014)
3. EFA Global Monitoring Report Carol Benson, Stockholm University (2005) Centre for Research on bilingualism.
4. Colloquial Tamil by R E Asher and E Annamalai ROUTLEDGE, London 2002
5. Human Growth and Development by Chris Beckett SAGE, London 2003
6. Tamil language in Laptops, Selva Murali, Tamil Computing Conference 2013
7. Tamil Software and attitude of the people, Anuraj Shivaraja (Sri Lanka), Tamil Computing Conference 2013
8. National Centre for Research Centre Review paper – Expert voice and early career refection on sampling and cases in qualitative research- Sarah Elsie Baker University of Middlesex.

மொழிக் கல்வியில் தரவுமொழியியல் கருவிகளின் பங்கு
(The Role of Corpus Analysis Tools in Language Teaching)

Dr A Ra Sivakumaran
Associate Professor
Head- Tamil Language & Cultural Division
National Institute of Education (Singapore)

உலகமொழிகளில் செம்மொழியாகக் கருதப்படும் சில மொழிகளில் காலத்தால் முந்தைய மொழியாக விளங்குவது தமிழ்மொழி. அம்மொழி உலகில் பல பாகங்களிலும் கற்பிக்கப்படுகிறது -கற்கப்படுகிறது. மொழிக்கல்வியின் நோக்கம், கற்பவருக்குக் குறிப்பிட்ட மொழியைப் பயன்பாட்டு நோக்கில் கற்பிக்கவேண்டும் என்பதே ஆகும். மொழியின் இலக்கணத்தையும் சொற்களஞ்சியத்தையும் அவற்றின் இயல்பான கருத்துப் புலப்பாட்டுப் பயன்பாட்டிலிருந்து (communicative function) தனிமைப்படுத்திக் கற்றுக்கொடுப்பது மொழிக்கல்வி ( Language teaching) ஆகாது. அவ்வாறு கற்றுக்கொடுப்பது மொழியைப்பற்றிக் (Grammar teaching) கற்றுக்கொடுப்பதாகவே அமையும்.

பயன்பாட்டு நோக்கில் (Communicative approach) மொழியைக் கற்றுக்கொடுக்க முதல் தேவை அந்நோக்கத்தில் மொழிப்பாடங்களை அமைப்பதே ஆகும். மொழிப்பாடங்களில் இடம்பெறும் பனுவல் (lessons/texts) செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒன்றா (synthetic) அல்லது அம்மொழியைப் பயன்படுத்துவோர் இயல்பாக நேரடியான கருத்துப் புலப்பாட்டில் பயன்படுத்திய தொடர்களை உள்ளடக்கியதா (authentic) என்பது கவனத்தில்கொள்ளவேண்டிய ஒரு முக்கியக் கூறாகும்.

இயல்பான கருத்துப்புலப்படுத்தத்தில் பயன்படுத்திய தொடர்களைக் கொண்ட தரவுத்தளத்தை (Corpus) அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படுகிற மொழிப்பாடங்களே சிறந்தது என்ற கருத்து தற்போது மேலோங்கி வருகிறது. ஒரு மொழிக்கு உருவாக்கப்படுகிற தரவுத்தளங்கள் அத்தளங்களின் பயன்பாட்டிற்கேற்பத் தமது இயல்பில் மாறுபடும். இக்கட்டுரையானது தமிழ்மொழிக் கல்விக்குப் பயன்படுகிற மின்தரவுத்தளத்தை (electronic learning corpus) அடிப்படையாகக்கொண்டது.

இந்நோக்கில் அமைக்கப்பட்ட தமிழ்மொழி மின்தரவுதளத்தை எவ்வாறெல்லாம் பயன்படுத்தி, மாணவர்களுக்குத் தமிழைக் கற்றுக்கொடுக்கலாம் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ்மொழி மின்தரவுதளத்தை மொழிக்கல்வியில் இரண்டுவகைகளில் பயன்படுத்தலாம். ஒன்று, பாடங்களை உருவாக்குவதற்குப் (curriculum / syllabus design, text book preparation) பல வகைகளில் பயன்படுத்துவது. மற்றொன்று, மாணவர்களுக்குத் தமிழைப் பயன்பாட்டுநோக்கில் பயன்படுத்தப் பயிற்றுவிக்கும் நேரடி நடவடிக்கைகளுக்குப் (teaching / learning activities) பயன்படுத்துவது.

தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றால் முதலில் அம்மொழியில் வழங்கப்படும் சொற்களின் பொருளை அறிந்துகொள்ள வேண்டும். பொருளை அறிந்துகொள்வதற்கு அகராதி துணையாக இருக்கும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் மொழியில் இடம்பெறும் அத்தனைசொற்களும் பயன்பாட்டில் இருக்கும்போது அகராதிப்பொருளை மட்டுமே தருவதில்லை, மேலும் ஒருசொல் ஒரு பொருளில் மட்டுமே வருவதில்லை. பயன்படுத்துவோரின் ஆட்சிக்குட்பட்டு இடத்திற்கு ஏற்பப் பல பொருளில் (usage contexts) அச்சொல் வருவதுண்டு. இடத்திற்கேற்ப வரும் பொருளைக் கற்பவர் அறிந்துகொள்ளும்போதே மொழியைக் கைவரப்பெற இயலும். ஒரு சொல் எந்தெந்த இடத்தில் எந்தப்பொருளில் எல்லாம் ஒரு பனுவலில் வந்துள்ளது என்பதை நாம் ஒட்டுமொத்தமாகத் தெரிந்து கொள்வதற்கு இத்தரவுதளம் மிக உதவி புரிகிறது. இதில் நேரடியாக மாணவர்களை ஈடுபடுத்திப் பயிற்சியளிப்பதற்குச் சொற்சூழல் அடைவி (Concordancer ) மிகவும் பயன்படும். இச்செயலை மேற்கொள்வதற்குப் பயன்படும் சில தரவுதள மொழி ஆய்வுக்கருவிகள்பற்றி ( corpus analysis tools) இங்குப் பேசப்படுகிறது.
ஒரு சொல் பொதுவாக வேறு எந்தச் சொல்லுக்கு அருகில் வருகிறது அல்லது இணைந்து வருகிறது (collocation) என்பதைப் பொருத்து அதன் பொருள் மாறுபடுகிறது. எந்தச்சொல் எதன் அடிப்படையில் மாறுகிறது என்பதைப் பயன்பாட்டின் அடிப்படையிலேயே மாணவர்கள் எளிதில் தெரிந்துகொள்ள முடிகிறது. எடுத்துக்காட்டுக்குப் “பச்சை” என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். பச்சை என்பதற்குப் பச்சை நிறம், பசுமை, இளமை, வலுவற்றநிலை, ருசியற்றநிலை, அசிங்கம்-அநாகரிகம், வேகுதல் என்னும் பல பொருள்களில் வருகிறது. இப்பொருகள் எந்த இடத்தில் என்ன பொருளில் வருகிறது என்பதை அறிந்துகொண்டால்தான் கற்பவரால் மொழியைப் புரிந்துகொள்ள முடியும் இல்லை என்றால் அவர் கற்றமொழி பயன்பாட்டிற்கு உகந்ததாக அமையாது. கீழ்க்கண்ட எடுத்துக்கட்டுகளில் பச்சை என்ற சொல்லின் பல்வேறு பொருள் வேறுபாடுகளைப் பார்க்கலாம். பார்க்கலாம்.

மிளகாய் பச்சை நிறம்,

மழைக்குப் பிறகு வயல் பச்சை பசேல் என்று இருக்கிறது.
ஏன் அந்தப் பச்சை குழந்தையை இப்படி அடிக்கிறாய்
பச்சை உடம்புக்காரியை இந்தப் பாடு படுத்துவது கூடாது

நான் சாப்பிடவேண்டும் என்று சமைத்தால்தானே! எல்லாமே பச்சை நாயாட்டம் இருக்கிறது.
காதுகொடுத்துக் கேட்கமுடியவில்லை பச்சை பச்சையாகப் பேசுகிறான்

பச்சை போகும்வரை அதை நன்றாக வதக்கு, எனக்குப் பச்சரிசி (பச்சை+அரிசி) சோறுதான் வேண்டும்
வெயில் கடுமையாக இருக்கிறது பச்சைத் தண்ணீர் கொண்டு வா
அவள் வைத்தால் பச்சைப் பயறு பாயாசம் மிக நன்றாக இருக்கும்

இங்குப் 'பச்சை' என்ற சொல்லின் பொருளை அறிந்துகொள்வதற்கு அந்தச் சொல்லுக்கு முன்னாலும் பின்னாலும் அமைகிற சொற்கள் உதவுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. இதனை நமக்குக் காட்டவல்லது தரவுமொழியில் அமைந்துள்ள N-Gram என்ற மொழி ஆய்வுக்கருவியாகும். ஒரு சொல்லுக்குப் பல்வேறு பொருள்கள் (Word Senses) இருக்கின்றபோது அச்சொல் பயின்றுவருகிற சூழலைப் பொறுத்தும், அதற்கு முன்பு அல்லது பின்பு அமைகிற சொல்லைப் பொறுத்தும், அச்சொல் எந்தப் பொருளில் வந்துள்ளது என்பதை அறியச் செய்வதே N-Gram என்ற மொழி ஆய்வுக்கருவி ஆகும். (இதைக் கணினியில் பார்க்கின்றபோது மிக நன்றாகப் புரியும்)

தொடரில் வரும் சொற்கள் (பெயர், வினை போன்றவை) வேற்றுமை, காலம், முற்று, எச்சம் ஆகியவற்றைக் காட்டுவதற்கு விகுதிகளுடன் இணைந்தே ( inflected words / word forms) பெரும்பாலும் வருகின்றன. ஒரு சொல் இவ்வாறு பல வடிவங்களில் அமையும்போது, அதனுடைய வேர்ச்சொல்லை( root) - அகராதிச்சொல்லை (lexeme) - பகுத்துப் பார்க்கும் திறனை மாணவர்களிடம் வளர்ப்பதற்குச் சொற்பகுப்பி ( morphological parser), இலக்கணவகைச்சுட்டி (POS / Word Class Tagger) போன்ற கருவிகள் பெரிதும் பயன்படும். அதாவது ஒரு சொல்லின் அடிச்சொல்லோடு எத்தனை ஒட்டுகள் சேர்ந்து வந்தாலும் அந்த சொல்லின் அடிச்சொல் மட்டும் பிரித்தறியப்பட்டுக் கணக்கிடப்படும். எடுத்துக்காட்டுக்கு, பயன்படுத்துவோர், பயன்படுத்திய, பயன்படுத்தி, பயன்படுத்தலாம், பயன்படுத்துவது, பயன்படுத்த, பயன்படுத்தப்-படுகிறது, பயன்படுத்தினால், பயன்படுத்தியதை, பயன்படுத்தியதற்கு, பயன்படுத்தியதில் முதலிய சொற்கள் ஒரு பனுவலில் வருமேயானால் அச்சொல் எங்கெங்கு வந்திருக்கிறது என்பதைக் காட்டுவதோடு அச்சொல்லின் அடிச்சொல்லாகிய "பயன்படுத்து" என்பதையும் காட்டுகிறது. இதன்மூலம் மொழி கற்போர் ஒருசொல்லோடு என்னென்ன உறுப்புகள் சேர்ந்து எப்படியெல்லாம் வரும் என்பதை அறிய வாய்ப்பு இருக்கின்றது. மேலும் அச்சொல் பெயரா வினையா,

பெயரடையா, வினையடையா எச்சமா என்பதையும் அறிந்துகொள்ள வாய்ப்பு இருக்கின்றது. பெயரெச்சம் வினையெச்சம் என்றால் உடனடியாக மாணவர்களுக்கு அதை விளக்கவும் வசதி இருக்கிறது.

மேலும் மாணவர்களே தாங்கள் கற்கும் புதிய சொற்களைக் கொண்டு ஒரு அகராதியை அமைத்துக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கின்றது. தாங்கள் உருவாக்கும் அகராதியில் தாங்கள் கற்கும் புதிய சொற்களுக்கு என்னென்ன பொருள் என்பதை அவர்களே குறித்துக்கொண்டு ஒரு அகராதியை உருவாக்கிக் கொள்ளலாம்.

இத்தரவுதளத்தை வைத்துக்கொண்டு கற்பிக்கும்போதும் கற்கும்போதும் மொழியை எளிதாவும் தெளிவாகவும் கற்க, கற்பிக்க வாய்ப்பு மிக அதிகம். மேலும் பாடப் புத்தகங்கள் எழுதுவோர்க்கு இத்தரவுத்தளம் பல வகைகளிலும் பயனுள்ளதாக அமையும். இக்கட்டுரையில் அமைந்துள்ள செய்திகளைக் கணினியின் வழி அறிகின்றபோதே முழுமையாக அறிய முடியும்.

*** தரவுத்தளத்தின் பல்வேறு பயன்பாடுகளை இக்கட்டுரையில் விளக்குவதற்குப் பயன்பட்ட தமிழ் மென்பொருள் “என் டி எஸ் லிங்க்சாப்ட் சொலூஷன்ஸ் தயாரித்துள்ள மென்தமிழ் – ஆய்வுத்துணைவன்” என்பதாகும்.

## கல்வியுலகில் தற்கால இலத்திரனியல் செல்நெறி : அட்டைக் கணினிகளின் வழி தமிழ் மின்னூல் உருவாக்கல்

**வாசுதேவன் இலட்சுமணன்**
மலேசியா [vas_devan@hotmail.com]

### 1.0 முன்னுரை

தகவல் ஊடகத்துறையின் ஒருங்கிணைப்பால், அட்டைக் கணினி(tablets), திறன்பேசி(smart phone) போன்ற கையடக்கக் கருவிகளில் மின்னூல்களின் உருவாக்கமும் வாசிப்பும் அதிகரித்து வருகிறது. தமிழ் நூல்கள் இந்த இலத்திரனியல் (digital) மாற்றங்களினால் பின்தங்கிவிடலாகாது இருக்க, கல்வியாளர்கள், ஆசிரியர்கள் அதை மின்னூல்களாக உருவாக்கம் பெற முனைப்புக் காட்ட வேண்டும். விளைபயன்மிக்க மாற்றங்களுக்கு தொடர்ந்த வழிகாட்டல் பட்டறைகள் தமிழ் ஆசிரியர்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது.

### 2.0 மின்னூல் பதிப்பு என்னும் மென்வடிவப் பதிகை

மின்னூல் என்பது எளிய வகையில் தொடுதிரையில் மென்வடிவமாய் இருக்கும் பதிகையை விரல்நுனியில் இலகுவாய் புறட்டுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. காகித நூலின் கனமற்ற தன்மை மின்னூல் பதிப்பின் மற்றொருச் சிறப்பு. மின்னூல் வாசிப்புக்கெனத் தயாரிக்கப்பட்ட இயக்குதளக்கருவிகள் என்றில்லாமல் எல்லாக் கணினிகளிலும் மின்னூல்களைத் திறந்து வாசிக்க முடியும். அதற்கு, அக்கணினிகளில் உகந்த மின்னூல் வாசிப்பு மென்பொருளைத் தரவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அச்சுவடிவ நூல் உருவாக்கத்திற்கு அடிப்படையாய் இருப்பதே மின்வடிவம்தான். எனவே, மின்னூலை அச்சுவடிவத்திற்கான மின்பதிகை என்றாலும் மிகையில்லை. இருப்பினும் பல்வேறு வடிவமைப்பில் மின்னூலுக்கெனத் தரநிலை தற்போது உருவாகியுள்ளது. அவற்றில் இ-பப் (ePub) மற்றும் பிடிஎஃப் ( PDF) அடங்கும்.

### 2.1 தரநிலைக்குட்பட்ட பதிப்பு : இ-பப் (e-Pub)

இ-பப் (e-Pub) என்பது தரநிலைக்குட்பட்ட, உலக இலத்திறன் மின்பதிப்பு மன்றத்தால் (International Digital Publishing Forum@IDPF) அங்கீகரிக்கப்பட்ட கட்டற்ற இலவச மின்னூலுக்கான மென்பொருள் ஆகும். இம்மென்பொருள், ஜேபெக் (jpeg), பி.என்.ஜி(png), ஜி.ஐ.எப்(gif), எஸ்.வி.ஜி(svg) போன்ற மின்படங்களையும் ஃபிலாஷ் (Flash), ஒலி(audio), காணொளி (video) போன்றவற்றையும் ஏற்று தடையின்றி இயங்கச்செய்கிறது.

2.2 கட்டற்ற மின்னூல் பதிப்பு : அடோபி பி.டி.எஃப் (Adobe PDF)

அடோபி பி.டி.எஃப் மற்றொரு கட்டற்ற மின்னூல் பதிப்பாகும். இ-பஃப் மென்பொருளுக்கு மாற்று வடிவாக இது விளங்குகிறது. இம்மென்பொருள் பல்வேறு இயங்குதளங்களில் (cross platform) செயல்படக்கூடியதோடு மட்டுமல்லாமல் பல்லூடகங்களை எளிதில் உள்ளீடு செய்யவும் வல்லது.

3.0 தமிழ் மொழியில் மின்னூல் வாசிப்பு

கையடக்கக் கருவிகளிலும் கணினியிலும் மின்னூல்களை வாசிக்க, உகந்த மென்பொருள்கள் இருந்தாலே போதுமானது. அச்சு வடிவிலான நூல்களைப் போன்றே மின்னூல்களை விட்ட இடத்திலிருந்து படிக்க முடியும். விசேசமாக, ஆண்டிராய்டு கருவிகளில் தானியக்கமாக மின்னூல்களை ஒலித்துக்கேட்கவும் வசதியிருக்கிறது. மின்னூல்கள் வாசிக்க மின்னூல் வாசிப்புக் கருவி (e-Book reader) தேவைப்படுகிறது. மின்னூல் வாசிப்புக் கருவி நிறுவிய கணினி அல்லது கையடக்கக் கருவி அதற்குத் துணை செய்கிறது.

3.1 மின்னூல் வாசிப்புக்கான மென்பொருள்கள்

மின்னூல் வாசிப்புக்கெனெ சில பிரத்தியேகக் கருவிகளும் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்:

| கருவி (Reader) | உள்ளீட்டு முறைமை (Input formats) | வெளியீட்டு முறைமை ( Output formats) |
|---|---|---|
| 'கெலிபெர்' Calibre | CBZ, CBR, CBC, CHM, EPUB, FB2, HTML, LIT, LRF, MOBI, ODT, PDF, PRC, PDB,PML, RB, RTF, SNB, TCR, TXT | EPUB, FB2, OEB, LIT, LRF, MOBI, PDB, PML, RB, PDF, SNB, TCR, TXT |
| ஸ்தன்ஸா டெக்ஸ்டொப் Stanza Desktop | DRM-free Amazon Kindle, Mobipocket, Microsoft LIT, and PalmDoc, Microsoft Word, Rich Text Format, HTML, and PDF | Amazon Kindle, Mobipocket, PalmDoc, Rich Text Format, HTML, plain text, and others. |
| மொபி-பொக்கெட் Mobipocket reader Desktop | Mobipocket, palin text, PDB, Microsoft Office, EPUB, HTML | கோப்புகள் மட்டும் வாசிப்பவை ( only reads files ) |
| அடோபி ரீடர் Adobe reader | Adobe PDF | Adobe PDF, plain text, rich text, jpeg, PNG, TIFF, HTML, .doc, XML |

3.2 மின்னூல் வாசிப்புக்கருவி இயக்குதளம்

தரநிலைக்குட்பட்ட மின்னூல் மென்பொருளை கணினிகளிலும் கையடக்கக் கருவிகளிலும் நிறுவி மின்னூல் வாசிப்புக்குப் பயன்படுவதை அறிவோம். இவற்றைத்

தவிர்த்து பிரத்தியேக மின்னூல் வாசிப்புக்கருவி இயக்குதளம் (e-book readers) சந்தையில் கிடைக்கின்றன. இவை மின்னூல் வாசிப்புக்கென்றே சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட வாசிப்புக் கருவிகளாகும். பயனாளர் விருப்பத்திற்கேற்ப சந்தையில் அவற்றை வாங்கிக் கொள்ளலாம். அவற்றுள் சிலவற்றை அட்டவணையில் காணலாம்.

### 4.0 மின்னூலை உருவாக்க உதவும் செயலி

| இலவச மின்னூல் செயலி (Free eBook Software) | முன் குறிப்புகள் | நிறுவனம் |
|---|---|---|
| Book Creator  (நன்றி / Credit: Apple) | இது மிக எளிமையாக ஆப்பிள் அட்டையில் மின்னூல் உருவாக்க வகை செய்யும் இலவச மென்பொருள் –( Book Creator) ஐ-புக் கிடங்கில் (iBook Store) மின்னூலை அனுப்பலாம்; நண்பருக்கும் மின்னஞ்சல் வழி அனுப்பி ஐ-புக் வழி வாசிக்கலாம். சிறுவர்களுக்கான படநூல்கள், கதை நூல்கள், ஓவிய நூல்கள், சமையல் நூல்கள், விளக்க அறிக்கைகள், மின்னூல் பாடநூல் இப்படி இன்னும் பலவாறு உருவாக்க முடியும். | ஆப்பிள் Red Jumper Studio Download on the App Store ✦ஒரு மின்னூல் பதிப்பு மட்டுமே இலவசம் |
| iBooks Author  (நன்றி / Credit: Apple) | ஐ-புக் ஆப்பிளின் மெக்(MAC) கணினிகளுக்கான இலவச மென்பொருள். இம்மென்பொருள் பல்லூடீ மின்னூலை உருவாக்க வல்லது. பதிப்பித்த மின்னூல் ஐ-பெட்@அட்டை(iPad), ஐ-போன் (iPhone) மற்றும் ஐ-பொட் (iPod Touch) போன்றவற்றில் வாசிக்க ஏதுவானது. | ஆப்பிள்  |

### 4.1 ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு உதவும் புக் கிரியேட்டர் (Book Creator)

புக் கிரியேட்டர் (Book Creator), மிக எளிய வகையில் மின்னூல் உருவக்க வகைசெய்யும் அட்டைக் கணினிக்குரிய செயலியாகும். இச்செயலியைப் பயன்படுத்தி மாணவர்களும் ஆசிரியர்களும் மின்னூல் உருவாக்கும் இடுபணிகளில் ஈடுபட்டு ஆக்கத்திறனை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கிறது. அவ்வாறு மின்னூலாகத் தயாரிக்கப்பட்டவை ஐ-புக் (iBook) மென்பொருள் வழி வாசிக்கவும் ஐ-மின்னூற்கிடங்கில் (iBookstore) பதிப்பிக்கவும் முடியும்.

புக் கிரியேட்டர் (Book Creator) ஒரு அடிப்படை மின்னூல் உருவாக்கத்திற்கு உகந்த செயலியாகக் கருதப்படுகிறது. இதைப் பயன்படுத்தி பள்ளி அளவிளான கல்வி தொடர்பான இடுபணிகள் அல்லது மின்னூல் தயாரிப்புத் திட்டங்களை மேற்கொள்ளலாம். இச்செயலி நிர்ணயிக்கப்பட்ட மின்னூல் கட்டமைப்பையும் வடிவமைப்பயையும் கொண்டவை. மின்னூல் எழுத்தாளர் முழு சுதந்திரத்துடன் வடிவமைப்பைத் தேர்ந்தெடுக்கவும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவை எந்த இடத்தில் எழுத்துப்படிவம் இருக்கவேண்டும் அல்லது இலக்கப்படங்கள் நிலைநிறுத்தப் படவேண்டும் என்பதையும் முடிவு செய்வார்.

ஒருமுறை வடிவமைக்கப்பட்ட அளவையைப் பதிப்பிக்கப்பட்டப்பிறகு மாற்ற இயலாது. திரையில் காணப்படும் வெளியீடு ஒட்டுமொத்தமாகப் பெரிதாக்கவும் அல்லது சிறிதாக்கவும் மட்டுமே முடியும். வேறு எந்த வகையிலும் எழுத்துருவையோ அதன் அளவையையோ மாற்ற இயலாது.

ஆப்பிளின் அட்டைக்கணினி (iPad) பயன்படுத்தியே புக் கிரியேட்டர் மூலம் மின்னூல் வடிவிலும் பி.டி.எஃப் (PDF) வடிவிலும் சிறந்த பதிப்பை வெளிக்கொணர முடியும். இதற்கு மெக்-புக் (MacBook) மற்றும் ஐ-புக் எழுத்தர் (iBook Author) தேவையில்லை. இதில் காணப்படும் அத்தனை வசதிகளும் புக் கிரியேட்டர் செயலியில் இல்லாவிட்டாலும் ஒரு நல்ல மின்னூல் உருவாக்க, இச்செயலி போதுமானது.

## 4.2 புக்- கிரியேட்டர் ( Book Creator ) : ஐ-பெட் (iPad) அட்டை வழி ஐ-பெட் (iPad) அட்டைக்கென்றே உருவாக்கப்படும் மின்னூல் செயலி

சிறுவர் முதல் பெரியவர் வரை மிக அழகான வண்ணப்படங்களுடன் ‘குறும்-வாசகம்’ அடங்கிய மின்னூல் வடிவமைப்புக்கு ஐ-பெட் (iPad) கருவிகளில் தற்சமயம் முன்னிலை வகிப்பது ‘புக்-கிரியேட்டர்’ ஆகும். மின்னூல்கள் சில நிமிடங்களில் வடிவமைக்கப்படுகின்றன. பதிப்பிக்கப்பட்டவை ஐ-புக்(iBook) மூலம் வாசிக்கவும், நண்பர்களுக்கு அனுப்பவும், ஐ-மின்னூற்கிடங்கில் (iBookstore) சேமிக்கவும் முடிகிறது. இதன் அசல் (இலவசமற்ற) செயலியைக் கொண்டு நேர்த்தியான, உள்ளுணர்வு மிகுந்த, அழகான சின்னஞ்சிறு கதை மின்னூல்கள் தமிழில் உருவாக்க முடியும். குறும்வாசகங்கள், பொன்மொழிகளோடு அதனை மெருகூட்ட இலக்கப்படங்களுடன் அடங்கிய மின்னூல்கள் இனி பதிப்பிக்கப்படும்.

## 4.3 மின்னூல்கள் : விளைபயன்மிக்க மாற்றங்கள்

மின்னூல்கள் விளைபயன்மிக்க மாற்றங்களைக் கல்வியுலகில் ஏற்படுத்தியுள்ளன என்பதில் மாறுபட்ட கருத்திருக்க முடியாது. அவற்றைப் பரந்துபட்ட கோணங்களில் நோக்கும்போது கிடைக்கப்பெற்ற கூறுகளில் சிலவற்றைக் காண்போம்:

- ஆர்வமுள்ள ஆசிரியர்கள் தமிழ்மொழி மின்னூல்கள் உருவாக்க முடியும்.
- வகுப்பறையில் மின்னூல்கள் தகவல் கருவூலமாய்ச் செயல்பட வழிவகுக்கிறது.
- மின்னூல்கள் அச்சு நூல்களுக்கு மாற்று வடிவாகவும் மாணவர்களுக்கு வாசிப்பின் எல்லைகளைக் கடந்து செல்லவும் உதவுகிறது.
- எழுத்துருவின் அளவை மாற்றவும் தெளிவம்சத்தை நிர்ணயிக்கவும் வகைசெய்கிறது.

- பல்கலைக்கழக நூலகங்கள் தற்போது மின்னூல்கள் பெறவும் வகை செய்கின்றன; இனி தமிழ் மின்னூல்கள் அவற்றில் இடம்பெறும் காலம் வெகுதூரமில்லை எனலாம்.
- ஐப்பர்லிங்கிங் வழி (via hyperlinking) மின்னூல்கள் மிக எளிதாக தகவல் தரவுகளாகப் பத்திரப்படுத்த ஏதுவாகிறது.
- மின்னூல்கள் கணினிகளின் வழி செயல்பட வல்லன; குறிப்பிட்டுக் கூறுகையில் அவை திறன்பேசி, அட்டைக் கணினி போன்ற கையடக்கக் கருவிகளில் புலங்குவற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளன, எ.கா: கின்டல் மின்னூல் வாசிப்புக் கருவி.
- மின்னூல் பயன்பாடு 'பசுமை தகவல் தொழில்நுட்ப' முயற்சிக்கு உதவுகிறது.
- மின்னூல்களின் கனமின்மை- அனைத்து மின்னூல்களையும் ஒரே கருவியில் சேமிப்புக் கிடங்கில் வைத்து எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம்.






5.0 முடிவுரை

இந்தத் தகவல் தொழில்நுட்ப மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மின்னூல் உருவாக்கத்திற்கும் பெரும் பங்களிப்பு செய்கின்றன. கையடக்கக் கருவியான ஐ-பெட்(அட்டை) வழி மட்டுமே வாசிக்கப்பட்ட தமிழ் மின்னூல்கள் தற்போது ஆண்டிராய்டு கருவிகளிலும் தமிழ் எழுத்துருக்கள் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ் மின்னூல்களின் வாசிப்பும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தலுக்கு உகந்த தமிழ் மின்னூல்கள் மிகக் குறைவு என்கிற நிலையில் தமிழாசிரியர்களை துறை சார்ந்தா மின்னூல்கள் உருவாக்கும் ஆர்வத்தைக் கூட்டும் என எதிர்பார்க்கலாம். இந்த மாற்றங்களில் தமிழ் மின்னூல்களின் உருவாக்கமும் பங்களிப்பும் போதிய ஊக்கத்தைக் கொணரவில்லை. இந்நிலை மாற தன்னார்வளர்கள் தமிழ் மின்னூல் உருவாக்கும் திட்டத்தில் ஈடுபாடுகாட்ட வேண்டும். தகவல் தொழிநுட்பம் செறிந்த கணிஞர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் தமிழாசிரியர்கள் மின்னூல்கள் உருவாக்கும் திட்டத்தை மேற்கொள்ளலாம். உலகத் தரம் வாய்ந்த தமிழ் மின்னூல்கள் உருவாக்கும் வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளதால் தக்கமுறையில் ஆசிரியர்கள் பயன்படுத்திக்கொள்வர் என்பது கட்டுரையாளரின் எதிர்ப்பார்ப்பு. மொழி சார்ந்த துறைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் துணையுடன் இத்தகைய முயற்சிக்கு முனைப்புக் காட்ட வேண்டும். கற்றல் கற்பித்தலுக்கு உகந்த

தமிழ் மின்னூல்கள் மிகக் குறைவு என்கிற நிலைமை மாற்றம் காணவும் துறைசார்ந்த தமிழ் மின்னூல்கள் உருவாக்கம் பெறவும் ஆசிரியர்களின் இத்தகைய ‘தொழில்நுட்ப மெனக்கெடல்’ தகுந்த பலனளிக்க வேண்டும் என்பதற்குக் கட்டுரையாளர் விழைகின்றார்.

# செல்பேசிகள் வாயிலான பாடநூல்கள் ஆக்கமும் பயன்பாடும்
# (Text book creation through Mobile Phone and Internet media)

முனைவர் நா. ஜானகிராமன்# & முனைவர் பெ.தனலட்சுமி§

#தமிழ்த்துறைத்தலைவர் பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரி,

குரும்பலூர், பெரம்பலூர் - 621 107.

§உதவிப்பேராசிரியர், ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி, சேலம் - 636 016.

நாளுக்குநாள் அறிவியலும் கணினியும் வளர்ந்துவருகின்றது. கணினியுகம் என்ற நிலை மாற்றம்பெற்று நுண்கணினிகள், நுண்ணறிவு செல்பேசி சாதனங்கள் (Micro Computers, Smart Phones) தமிழின் வளத்தை வீறுபெற்று எழச்செய்து வருகின்றது. ஐ-போன், ஐ-பேட் என்ற வளர்ச்சி உலகளாவிய மக்களிடையேயான தொடர்பினை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மாபெரும் தாக்கத்தினையும் உருவாக்கிவருகின்றன. கிராமத்து மக்களிடையே கணினி படிப்படியாக செல்வாக்கு பெற்று வந்தாலும் அவை இன்று அரசு தருகின்ற மடிக்கணினி (laptop) சலுகையில் மாணவர்கள் அதனைப் பாடத்திற்கு, படிப்பதற்கு எந்த அளவில் பயன்படுத்துகின்றனர் என்னும் ஆய்வு எழுகின்றது. பொழுதுபோக்கு அம்சமாகவும் (entertainment) கருத்துப்பதிவிற்காகவும், (facebook, twitter) உடனடி செய்திப் பரிமாற்றத்திற்காகவும் பயன்பட்ட கணினியும் இணையமும் மேன்மேலும் வளர்ந்தாலும் இன்று மொபைல் போன் எனப்படும் செல்பேசிகள் செல்வாக்கு அதிகம் இடம்பெற்றுவருவதை உணர்கின்றோம்.

## உள்ளீடு செய்யப்பெற்ற பாடங்கள், (already input) இணையவழியிலான பாடங்கள் (internet)

மாணவர்களுக்கு அரசு சார்பில் தரப்படும் மடிக்கணினிகளில் (government laptop) பல்வேறு வகுப்புக்குரிய பாடங்கள் உள்ளீடு செய்யப்பெற்று வழங்கப்பெறுகின்றன. பெரும்பாலும் அனைத்துப் பாடங்களும் படக்கோப்பில் (PDF Format) அல்லது சாதாரண கோப்புக்களில் வழங்கப்பெறுகின்றன. மாணவர்களுக்கு அது புதிய எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துதில்லை. பாடங்களை ஏட்டில் படிப்பதுபோலவே உணர்வினை மாணவர்களிடத்து உணரமுடிகின்றது. படங்கள் (Pictures), இதர புள்ளிவிபரங்கள் (statistics) படவடிவிலேயே உள்ளன. செல்பேசிகள் வாயிலான பாடங்களில் நவீன கருவிப்பயன்பாடுகளின் மூலமாகவும், மென்பொருட்கள் (softwares) மூலமாகவும் தரமான பாடங்கள் உள்ளீடு செய்யப்பெற்றுத் தரப்படல் வேண்டும். ஆண்டிராய்டு (Android) மென்பொருள் உள்ள

செல்பேசிகளில் பாடங்கள் எளிதாகப்படிக்கப்படல் வேண்டும். அதற்கேற்ற பாடத்திட்டங்களை வல்லுநர்கள் திட்டமிட்டு உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இது செம்மையுற வேண்டும். சாதாரண ஏட்டுப்பாடங்களுக்கும் இணையவழியிலான பாடங்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. பாடப்பொருண்மைகள் (subject matter) , உட்தலைப்புகள் (sub titles), படங்கள் (pictures), வரைபடங்கள் (graphs), புள்ளிவிபரங்கள், அசைவுப்படங்கள் (animations) போன்றன இணையத்தில் இலகுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. தேடுதல் மூலம் எளிதான வகையில் பாடப்பொருளை அறியலாம். இணையவழிப்பாடங்கள் சில கட்டணத்துடனும் (payment), கட்டணமின்றியும் கிடைக்கின்றன.

### பொதுவான பாடத்திட்டமும் நூல்களும் (General syllabus settings and books)

பாடத்திட்டத்தில் இருவகை உண்டு. ஒன்று, பொதுமக்களுக்கானது. மற்றொன்று, மாணவர்களுக்கானது. பொதுவான பாடத்திட்டத்தில் செல்பேசிகளில் உருவாக்கப்பெறும் பாடமானது மனமகிழ்ச்சியுடன்(entertainment), புதியதொரு உத்வேகத்துடன் அமைவதாக இருத்தல் வேண்டும். பெரும்பாலும் இயக்கவியல் பாடங்கள் (animation) சிறப்பிடம் பெறுவதாகக் கொள்ளலாம். எழுத்துருப் பாடங்கள், பேச்சுப்பாடங்கள், போன்றன இதன் கூறுகளாகும்.

### கணினிவழி பாடத்திட்டங்களும் உருவாக்க முறைகளும் (Designing methods)

கணினிவழிப் பாடத்திட்டங்களைத் தற்பொழுது அரசுநிறுவனங்கள் அரசுசாரா நிறுவனங்கள் (government - non government) என இரண்டும் போட்டிபோட்டுச் செய்துவருகின்றன. இவ்வாறு நடக்கும் போட்டிகளால் நிறைய பாடங்களும் பாடத்திட்ட வடிவமைப்புக்களும் பல்வேறு மொழியில் நடைபெற்று வருகின்றன. உலகஅளவில் சீனமொழி, இந்திய அளவில் இந்தி, மற்றும் மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் அளித்து கணினிவழியில் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பெற்று வருகின்றன. கணினிவழி பாடங்கள் பின்வரும் நிலைகளில் உருவாக்கம் பெறுகின்றன. அவை,

1. எழுத்துவடிவம் (word format எனப்படும் இவற்றில் அனைத்தும் சாதாரண எழுத்துவடிவில் கருத்துக்கள் எழுதப்பெறுகின்றன.)
2. அச்சு வடிவம் ( அச்சுவடிவம் pdf format என்று அழைக்கப்பெறுகின்றது)
3. உயிரோட்ட வடிவம் (animation mode – இதில் பாடங்கள் உயிரோட்டங்கள் பெறுகின்றன. மாணவர்களுக்கு இத்தகு வடிவில் ஆர்வம் மிகுதியாகின்றது.)

4. ஆய்வுக்கட்டுரை வடிவம் (பல இணைய தளங்கள் ஆய்வுக்கட்டுரையை வெவ்வேறு வடிவில் தரம்பிரிக்கப்பட்டு வெளியிடப்பெறுகின்றது.)

5. இணைப்பு தரும் வடிவம் (HTML - link mode text – என்று அழைக்கப்பெறுவதாகும். இதன்வழி தொடர்புடைய வேறொரு தளத்திற்குச் சென்று பாடங்களைப் பயிலும் வசதியைப் பயன்படுத்தலாம்.)

6. இதழ்களுக்குரிய வடிவம் (E-journal என்ற இந்த வடிவில் பலஇதழ் நிறுவனங்கள் பல நிலைகளில் கட்டுரைகளை வெளியிடுகின்றன.)

7. நூல்களுக்குரிய வடிவம் (E-books- என்ற வடிவில் அச்சு வடிவக்கோப்புக்களும், அதற்குள் செல்கையில் தொடர்புடைய பல தளங்களும் காண்பிக்கப்பெறுகின்றன.)

8. கூடுதல் தகவல் தரும் வடிவம் (Additional message site- என்று அழைக்கப்பெறும் இவை பல தகவல்களைக் கண்முன் கொண்டுவந்து கொட்டுகின்றன.

**பாடத்திட்ட வடிவமைப்பில் செல்பேசிகளின் சிறப்பு ( cellphone : Structure based framing)**

கணினிக்குரிய பாடவடிவமைப்புகள் மாற்றம் பெற்று செல்பேசிகளுக்கான பாடத்திட்டமாய் வடிவமைப்பாய் உருவமாறல் வேண்டும். பழைய செல்பேசிகளில் சில வசதிகள் இல்லை. இருப்பினும் ஒவ்வொரு வகையான செல்பேசிகளுக்குரிய பாடத்திட்ட வடிவமைப்புக்களும் மாற்றம் பெற வேண்டும்.

**பல்வேறு விதமான பாடங்களை உருவாக்குதல் (இயல்பானது, உயிரோட்டமானது (animation)**

இயல்பான பாடத்திட்ட வடிவமைப்பில் பெரிதாக ஒன்றும் செய்யமுடியாது என்றாலும் உயிரோட்ட நிகழ்வில் கார்ட்டூன் மற்றும் பிற நவீன வசதிகள் கொண்டு வரும் செல்பேசிகளில் உயிரோட்டத்தையும் புதுவித வழிகளில் சொல்ல கணினி வல்லுனர்கள் முயற்சிக்கவேண்டும். செல்பேசிவழி பாடத்திட்டங்களில் இது நடத்தல் வேண்டும்.

**தலைப்பு, வடிவமைப்பு, நூலாக்கத்தில் செல்பேசிகளில் பின்பற்றக் கூடியவை (sub titles and other things)**

தலைப்புகள் கவர்ச்சிகரமாகவும், பொருள் பொருத்தத்தோடும் இருத்தல் அவசியமாகும். ஒரு தலைப்பின் வழியாகவும், உட்தலைப்பின் வாயிலாகவும் பாடக்கருத்துகள் உள்நுழைக்கப்பெறுகின்றன. இதற்கு மொழி அறிஞர்களின் பங்களிப்பும், பாட அறிஞர்களின் கவனமும் அவசியமாகின்றது.

**மாணவர்களின் பயன்பாட்டு நோக்கிலான பாடநூல்கள் (user friendly)**

அரசு இன்று பல வகுப்புகளுக்குரிய பாடத்திட்டத்தை மடிக்கணினியில் உள்ளீடு செய்து தந்துள்ளது.

**வகுப்பு சார்ந்த பாடங்களும், பொதுப்பாடங்களும் (Text Books and general books)**

வகுப்புசார்ந்த பாடங்களில் திட்டமிட்ட பாடப்பகுப்பு உண்டு. ஆனால் பொதுப்பாடங்களில் வாசகர்கள் பலவாறு படித்தறிந்து கொள்ளும் பலவிதக்கருத்துக்கள் பொதிந்துள்ளன.

**செல்பேசிகளில் கலை மற்றும் அறிவியல் பாடநூல்கள் (Arts and Science text books)**

முன்பே சொன்னது போல கலை மற்றும் அறிவியல் பாடநூல்கள் செல்பேசிகளில் தரவிறக்கம் செய்து பயில்வதற்கான வசதிகள் வேண்டும். மடிக்கணினியையும், மேசைக்கணினியையும் எல்லோரும் பயன்படுத்தும் நிலையில் இன்றுவரை மக்கள் முழுமையடையவில்லை. ஆனால் செல்பேசிப் பயன்பாட்டாளர்களின் விழுக்காடு கூடியுள்ளது. இவற்றை மனதில் கொண்டு கலை அறிவியல் பாடநூல்கள் செல்பேசிகளில் உள்ளீடு செய்யப்பெற்று வழங்கப்பெறல் வேண்டும்.

**மருத்துவம் பொறியியல் பாடநூல்களுக்கான சிறப்பு வடிவமைப்புகள் (Engineering and medicine Books)**

கலை அறிவியல் பாடநூல்களைப்போலவே மருத்துவம் பொறியியல் பாடநூல்களும் செல்பேசிகளில் புழக்கத்திற்கு வந்தால் மேலும் சிறப்பாக இருக்கும்.

**கணினியில் பயில்வதற்கும் செல்பேசிகளின் பயன்பாட்டிற்குமுள்ள உள்ள வேறுபாடுகள் (Different to the two mode of influence)**

கணினி பெரிய வடிவம் கொண்டது (மடிக்கணினியாக இருந்தாலும்), மேசைக்கணினி (tablet PC) என எதுவாக இருந்தாலும் பயன்பாட்டுநிலையிலும் எடுத்துக் கையாள்வதிலும் சிரமம் உண்டு. ஆனால், செல்பேசிகளில் இது எளிதானது. ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் உடனே திறந்து பார்த்துத் தெளியும் வண்ணம் செல்பேசிகளின் பயன்பாடு எளிது. ஓரிடம் விட்டு மற்றோர் இடம் செல்வதென்றால்

செல்பேசியினை உடன் எடுத்துச்செல்லலாம். மடிக்கணினிகூட இதில் சிரமத்தை ஏற்படுத்தும்.

முடிவுரை

கணினியில் பாடம் படிப்பதை விட்டு இன்று பேருந்தில் செல்லும்போதே பல தகவல்களைப் பயிலவும், பகிரவும் செல்பேசிகளே பெரிதும் பயன்படுகின்றன. எனவே, இவற்றை மனதில் கொண்டு பாடங்களை எழுதவும், வடிவமைக்கவும் தொழில்நுட்பவியலாளர்களும், பாடமாக்க அறிஞர்களும் முயல வேண்டும். பாடங்களை உருவாக்கவும், மாணவர்களுக்குரிய பாடங்களை வடிவமைக்கவும், மின்னூல்களைப் புதியதொரு கோணத்தில் உருவாக்கவும், மின்- ஆய்விதழ்களை இன்னும் இலகுவாக மாற்றவும் முயற்சியெடுக்கவேண்டும். கணினியைப் பயன்படுத்திப் பாடம் கற்பதைவிடவும், செல்பேசிகளைக் கொண்டு பாடம் கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் உரிய குறுங்கணினியாக இன்று தகவல் தொழில்நுட்பம் மாற்றமடைந்துள்ளது. இது வரவேற்கக் கூடியதாகும். மீக்குறு தொழில்நுட்ப (nanotechnology) வளர்ச்சியை இதன் மூலமாக அறியமுடிகின்றது.

பயன்பட்ட நூல்கள்


1. Al-Amri, K. H. (2007). "Text-linguistics for students of translation". King Saud University. Retrieved 10 August 2012.
2. Roger Fowler. (1991) *Language in the News: Discourse and Ideology in the Press.*London/ New York: Routledge.
3. Halliday MAK and R Hasan. (1985) *Language, Context, and Text: Aspects of Language in a Social-Semiotic Perspective*. Geelong: Deakin University.
4. Kavcic, A. (2008) *Text linguistics*. Informally published manuscript, English and German Studies, Retrieved from www.englistika.info/podatki/3_letnik/besediloslovje-I-izpiski.doc
5. Powers, D.M.W. & Turk, C.C.R. (1989). *Machine Learning of Natural Language*. Springer-Verlag. ISBN 978-0-387-19557-5.
6. Och, F. J., & Ney, H. (2003). A Systematic Comparison of Various Statistical Alignment Models. Computational Linguistics,

# எடுபுண்டு வழி தொடக்கப்பள்ளிகளுக்கான தகவல் தொழில்நுட்பம் கற்றல் கற்பித்தல் – விண்டோஸ் உடன் ஒப்பீடு.

**மேகவர்ணன் ஜெகதீசன்**

சுல்தான் இட்ரிசு கல்வியல் பல்கலைக்கழகம், மலேசியா

தகவல் தொழில்நுட்பம் பாடம் மலேசிய தொடக்கப்பள்ளிகளில் 2014-ஆம் ஆண்டு முதல் நான்காம் வகுப்பு மாணவர்களுக்கு கட்டாய பாடமாக்கப்பட்ட ஒன்று. எடுபுண்டு இயங்குதளம் மற்றும் மைக்ரோசாப்ட் விண்டோவைப் பயன்படுத்தி நடத்தப்படும் வகுப்புகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. இந்த ஆய்வு மலேசிய தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களையும் நான்காம் வகுப்பு மாணவர்களையும் மையமாக வைத்து நடத்தப்பட்டது. ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் நேர்காணலும் ஆய்வையொட்டிய வினாத்தாளும் வழங்கப்பட்டது. ஆய்வின் முடிவு அட்டவணை மற்றும் குறிவரைவைப் பயன்படுத்தி காட்டப்படும்.

## முன்னுரை

தகவல் தொழில்நுட்பம் எனும் பாடம் 2013-ஆம் ஆண்டு தர ஆவணம் தயாரிக்கப்பட்டு 2014-ஆம் அண்டு முதல் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு போதிக்கப்பட்டு வருகிறது. இந்த பாடத்திற்கான பாடப்புத்தகம் பெரும்பாலும் மைக்ராசாப்ட் இயங்குதளத்தையே அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. இந்த பாடத்தின் வாயிலாக ஆரம்பக் கல்வியிலேயே மாணவர்கள் கணினி அடிப்படை அறிவை பெற்று விடுகின்றனர். மைக்ராசாப்ட் இயங்குதளத்தை மையமாக வைத்து இந்த பாடப்புத்தகம் எழுதப்பட்டதால், மாணவர்களும் ஆசிரியர்களும் மைக்ராசாப்ட் கணினிகளைப் பயன்படுத்தியே பாடத்தைப் போதிக்கின்றனர். இந்த எடுபுண்டு இயங்குதளத்தையும் மைக்ராசாப்ட் இயங்குதளத்தையும் வைத்து ஒப்பீடு செய்யப்பட்ட்து.

**பயன்படுத்தப்படும் செயலிகள்**

இந்த பாடப்புத்தகத்தில் பெரும்பாலும் கட்டற்ற மென்பொருள்களும் மைக்ராசாப்ட் மென்பொருள்களையும் வைத்தே கற்றல் நடவடிக்கைகள் நடத்தப்படுகிறது. மாணவர்கள் ஒலித்தொகுப்பு, வரைகலைத் தொகுப்பு காணொலளித் தொகுப்பு, பல்லூடகம் தயாரிப்பு மற்றும் சொற்செயலிகள் பற்றியும் கற்பிக்கப்படுகிறது. இந்த பாடத்திற்காக பயன்படுத்தப்படும் அனைத்து செயலிகளும் பயனர்கள் தனியாக வாங்கியோ அல்லது பதிவிறக்கம் செய்தோ பயன்படுத்த வேண்டும். எடுபுண்டு இயங்குதளத்தில் இந்த சிக்கல் பயனர்களுக்கு இல்லை. இந்த பாட்த்திற்குத் தேவையான அனைத்து மென்பொருளக்ளும் அதில் தானியங்கியாக இருக்கின்றன. அப்படி கூடுதலாக தேவைப்பட்டாலும் உபுண்டு கிடங்கிலிருந்து நிறுவிக்கொள்ளலாம். இந்த பாடத்திற்காக இரு இயங்குதளத்திலும் பயன்படுத்தப்படும் மென்பொருள்களின் ஒப்பீட்டு அட்டவணை கீழ்வருமாறு :-

| திறன் | மைக்ராசாப்ட் | எடுபுண்டு |
|---|---|---|
| சொற்செயலி | மைக்ராசாப்ட் வோர்ட் | லிப்ரா ஆபிஸ் ரைட்டர் ஆவணம் |
| வரைகலைத் தொகுப்பு | கிம்ப் | கிம்ப் |
| நச்சு நிரல்கள் | மைக்ராசாப்ட் செக்குரிடி எசண்சியல் | - |
| ஒலித் தொகுப்பு | அவுடாசிடி | அவுடாசிடி |
| காணொளித் தொகுப்பு | வீடியோ பேட் | ஒபன் சோட் |
| பல்லூடகம் | மைக்ரோசாப்ட் பவர் பாயிண்ட் | லிப்ரா ஆபிஸ் இம்பிரெஸ் வழங்கல் (தொலைக்கோடியுடன்) |

எடுபுண்டு மாணவர்கள் தங்களின் தகவல் தொழில்நுட்பக் கல்வியைத் தங்களது தாய்மொழியான தமிழ் மொழியில் கற்க வழி செய்கிறது. விண்டோஸில் காட்சி மொழி முழுமையாக தமிழ் மொழியில் இல்லை. அதுமட்டுமின்றி அதில் உள்ள மென்பொருள்களும் தமிழ் மொழியை காட்சி மொழியாக வைத்திருப்பது குறைவு.

ஆங்கில பாடத்தில் பின் தங்கிய மாணவரால் இந்த மென்பொருளை சரியாக பயன்படுத்த முடிவதில்லை. எடுபுண்டு இயங்குதளத்தில் இந்த பிரச்சணைகள் இல்லை. இதனால் அவர்கள் இப்பாடத்தை இன்னும் எளிதாக புரிந்துக்கொள்ளவும் வழி செய்கிறது. ஆசிரியரின் பாட நோக்கமும் எளிதில் நிறைவேறிவிடுகிறது.

# தமிழ்க் கற்றல் கற்பித்தலில் வலையொலியின் பயன்பாடு

**செ. மதிவாணன்**

தமிழாசிரியர், விக்டோரியா பள்ளி, சிங்கப்பூர்.

## முன்னுரை

‘முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமைத்தாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய்’ நம் தமிழ்மொழி விளங்குகிறது. இக்கூற்றுக்குத் தகுந்தவாறு பழமைவாய்ந்த செம்மொழியான நம் தமிழ்மொழி நவீன காலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வல்லமையுடையதாக உள்ளது. தமிழ்மொழி கற்பித்தல், கற்றல்முறைகளில் ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்திய அன்று முதல், கணினி - இணையத்தைப் பயன்படுத்தும் இன்றுவரை தமிழ்மொழியைக் கற்பிக்க எத்தனையோ முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொழி வளர்ச்சியில், ‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல’என்பது முன்னோர் கருத்து. எனவே, காலமாறுதலுக்கேற்ப புதிய நவீன முறைகளைக் கண்டுபிடித்துக் கற்றுக்கொண்டு, அம்முறைகளைக் கற்றல், கற்பித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் பயன்படுத்தி மாணவர்களின் தமிழ்மொழி கற்கும் ஆர்வத்தை வளர்க்க வேண்டியது தமிழ்மொழி ஆசிரியர்களின் தலையாயக் கடமையாகிறது.

## சிங்கப்பூரில் தமிழ் மாணவர்கள்

வீடுகளிலும் வெளியிடங்களிலும் தாய்மொழியைப் பயன்படுத்தாமல் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் சூழலில் சிங்கப்பூர் இளைய தலைமுறையினர் இருக்கின்றனர். அவர்கள் ஆங்கிலக் கல்விமுறையில் கல்வி கற்பதோடு தாய்மொழியான தமிழை இரண்டாம் மொழியாகக்(Second Language) கற்று வருகின்றனர்.

பொருளீட்ட தமிழ்க்கல்வி பயன்படாது என்ற எண்ணம் இவர்களிடம் உள்ளது. இதனால்தான், தமிழ் வகுப்புகளில் மாணவர்கள், “தமிழை நான் ஏன் கற்க வேண்டும்?”, “தமிழைக் கற்பதால் பொருளியல் பயன்கள் (economic value) உண்டா?” “பண்பாடு – கலாச்சாரம் பற்றியெல்லாம் தெரிந்துகொள்வதால் விளையும் பயன் என்ன?” என்பன போன்ற கேள்விகளைக் கேட்பவர்களாக உள்ளனர். இத்தகையவர்களுக்கு மொழியைக் கற்பிக்க வேண்டும்; அப்படிக் கற்பிக்கும்போது அதில் பண்பாடு – கலாச்சாரம் தொடர்பான செய்திகளையும் தகுந்தவாறு புகுத்த வேண்டும்; இவற்றை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்க வேண்டுமெனில், முதலில் அவர்கள் தமிழ்மொழி வகுப்புக்கு ஆர்வத்துடன் வர விரும்ப வேண்டும். இங்குதான் தமிழாசிரியரின் பணி மிகவும் சவாலுக்குரியதாகிறது; கால மாற்றத்திற்கு ஏற்பக் கற்றல் கற்பித்தலில் பல்வேறு நவீன உத்திமுறைகளைக் கற்று அவற்றை வகுப்பறைகளில் பயன்படுத்த வேண்டிய கட்டாயநிலை சிங்கப்பூரில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது.

எனவே, மாணவர்களிடம் தமிழ்மொழியின்பால் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்த தொழில்நுட்பம் சார்ந்த கூறுகளைத் தமிழ்க் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

**வகுப்பறையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள்**

- மாணவர்கள் தமிழ் வகுப்புக்கு வருவதைச் சுமையாக நினைக்காமல் மகிழ்ச்சியாகக் கருதச்செய்தல்,
- மாணவர்களை மொழி கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஆர்வமுடன் ஈடுபடுத்தல்,
- 'தமிழ்' இணையத்தில் எங்கெல்லாம், எவ்வாறெல்லாம் உலா வருகிறது என்பதை அறியச் செய்தல்,
- தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த கருவிகளை இலகுவாகப் பயன்படுத்துவதற்கானத் திறன்களை வளர்த்தல்.

ஆகிய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இந்நோக்கங்கள் நிறைவேற Video editing tools (e.g. Windows Movie Maker/ VCD Cutter), Audio Editing tools (e.g. Nero Wave editor / Audacity), Effective PPT presentations போன்றவை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

**தமிழ் வகுப்றையில் வலையொலி**

இனி வலையொலி (Pod-Casting) என்றால் என்ன என்பது பற்றியும், அதை வகுப்பறைகளில் பயன்படுத்தத் தொடங்கிய விதம் பற்றியும், அதைத் தயாரிக்க மாணவர்களுக்கு எவ்வாறு பயிற்சியளிக்கப்பட்டது என்பது பற்றியும், ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்திறன்களைக் (Integrated Language Skills) கற்றுக்கொடுப்பதில் வலையொலியின் பங்கு எத்தகையது என்பது பற்றியும், வகுப்பறை கற்றல் கற்பித்தலுக்கு இதைப் பயன்படுத்த விரும்புபவர்களுக்கான பரிந்துரை முதலானவை பற்றியும் விரிவாகப் பார்க்கலாம்.

**வலையொலி பற்றிய சில விவரங்கள்**

இணையத்தளங்களில் ஒலிக்கோப்புகளாக வலையொலிகள் உள்ளன. இவற்றைப் பெற விரும்புபவர்கள் ஊட்டுகள் (feeds) மூலம் தங்கள் கணினியில் இவற்றைக் தரவிறக்கம் செய்து கணினியிலோ கையில் எடுத்துச்செல்லக்கூடிய தகவல் சாதனங்களைப் பயன்படுத்தியோ கேட்கலாம். தேவையானதைத் தேர்ந்தெடுத்தல், தேவையான தகவல்களைப் பெற பதிவுசெய்து (subscribe) நம் கணினிமூலம் அவற்றைப் பெற்றுத் தேவைப்படும்போது கேட்கும் வசதி முதலான சுதந்திரங்களை

இவ்வலையொலி வழங்குகிறது. இதற்கெனத் தனிப்பட்ட அமைப்புமுறை (format) எதுவுமில்லை. ஒருவரே தனது எண்ணங்கள், அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுதல் (monologues), இருவரோ அதற்கு மேற்பட்டவர்களோ ஏதேனும் ஒரு கருத்து தொடர்பாகப் பேசிக்கொள்ளுதல் (dialogue), எழுத்து வடிவிலுள்ளதை வாசிக்காமல் நேரடியாகப் பேசச் செய்தல் (interview) போன்ற அமைப்புமுறைகளில் வலையொலியைத் தயாரிக்கலாம்.

வகுப்பறைகளில் வலையொலியைப் பயன்படுத்த விரும்புபவர்கள் ஒலிக்கோப்புகளைத் (Sound file) தயாரித்தல், வலையொலிகளைக் தரவிறக்கம் (Download) செய்தல் போன்ற சில அடிப்படை வழிமுறைகள் பற்றி அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**வகுப்பறையில் வலையொலியைப் பயன்படுத்திக் கற்பிக்க ஆரம்பித்தவிதம்**

சிங்கையின் ஒலி 96.8, லண்டன் பிபிசி-யின் தமிழோசை ஆகியவற்றிலுள்ள வலையொலிகளைக் கேட்டபோது அவை, தமிழ்மொழி கற்றல், கற்பித்தலுக்குப் பொருத்தமாக இருப்பதைக் கண்டு, அவற்றை வகுப்பறைகளில் பயன்படுத்தத் தொடங்கினோம். இவ்வாறு ஏற்பட்ட ஆர்வத்தில் இணையப்பக்கங்களில் இடம்பெற்றுள்ள வலையொலி பற்றிய செய்திகளைத் திரட்டி வலையொலியைச் சொந்தமாகத் தயாரிக்கும் முயற்சிகளை மேற்கொண்டோம்.

தமிழ்மொழி கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தை வளர்த்தல், அவர்களுடைய பல்வேறு மொழித்திறன்களை மேம்படுத்துதல், சிந்தித்தல் மற்றும் படைப்புகளை உருவாக்குதல், ஒலிக்கோப்புகளை (Sound file) உருவாக்கத் துணைபுரிதல் முதலானவற்றை மனதில் கொண்டு கணினி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வலையொலி சார்ந்த தமிழ்க் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**எங்கள் பள்ளியில் நாங்கள் மேற்கொண்ட சில வலையொலிப் பயிற்சிகள்**

(அ) சிங்கப்பூர் தமிழ் வானொலியான ஒலி 96.8 இல் வெளிச்சம் என்ற பகுதியில் இடம்பெற்ற உலக பூமி தினம் - உலக வெப்பமாதல் (Global Warming) என்னும் பகுதியையும் இதுதொடர்பான youtube காணொளிக் காட்சிகளையும் மாணவர்களுக்குப் போட்டுக்காட்டி, அவர்களின் கருத்துக்களைக் கூறுமாறு பதிவுசெய்து, அதை வலையொலிப் பாடமாகத் தயாரித்துப் பள்ளியின் இணையத்தளத்தில் ஏற்றி, மற்ற மாணவர்களையும் கேட்டுக் கருத்துரைக்குமாறு கூறினோம்.

(ஆ) சிங்கப்பூர் முழுமைத் தற்காப்புத் தினம் (Singapore Total Defence Day) தொடர்பிலான பாடநூல், பயிற்சி நூல்களில் இடம்பெற்ற செய்திகளையும் இணையப் பக்கங்களில் திரட்டிய தகவல்களையும் கொண்டு செய்தியறிக்கை, உரையாடல் என அமைத்து மாணவர்களைக்கொண்டு அதை ஒரு வலையொலிப் பாடமாகத் தயாரித்தோம்.

**எதிர்நோக்கிய பிரச்சினைகளும் அவற்றைச் சமாளித்த விதமும்:**

1. வீட்டுப்பாடமாக வலையொலியைத் தயாரிப்பதில் சிரமமிருப்பதாக மாணவர்கள் பலர் கூறினர். தமிழ் வகுப்பு நேரத்திலேயே தயாரிப்புப் பணிகளில் ஈடுபடுவதையே பெரும்பாலான மாணவர்கள் விரும்பினர். ஆனாலும், பலரால் வகுப்பு நேரத்திற்குள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியைத் தயாரித்து முடிக்கவியலவில்லை. அவ்வாறு முடிக்க முடியாமல் சிரமப்பட்ட மாணவர்களுக்கு உதவ வாரத்தில் இரண்டுநாட்கள் பள்ளி நூலகத்திலுள்ள மடிக்கணினிகளை இரவல் பெற்று பயன்படுத்த ஏற்பாடு செய்து கொடுத்தோம்.

2. கருத்துகளைத் தாங்களே தயாரிக்கும்போது போதுமான கருத்துவளம் உடைய படைப்புகளை உருவாக்க மாணவர்கள் சிரமப்பட்டனர். அவ்வாறு சிரமப்படும் மாணவர்களுக்கு ஆசிரியர்களின் கூடுதல் வழிகாட்டுதல் தேவைப்பட்டது.

3. மாணவர்களுடைய நேரம், ஆர்வத்தை ஊட்டும் தலைப்புகள், முதலானவற்றை மனதில்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை மாணவர்களின் கருத்துகளைக் கேட்டபோது தெரிந்துகொண்டோம். மாணவர்களின் நிலைக்கு (மீத்திறம்/சராசரி/கடைநிலை) ஏற்றவாறு ஆர்வத்தை ஊட்டும் தலைப்புகள் ஆசிரியர்களால் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டன.

**பரிந்துரைகள்**

- வலையொலி தயாரிக்கும்பணியில் முக்கியமான படிநிலையான ஒலிக்கோப்பு தயாரித்தலைக் (Creating Sound File) கற்பித்தலுக்கு மட்டுமன்றி மாணவர்களின் பேச்சைப் பதிவுசெய்து அவர்களிடம் போட்டுக்காட்டி, அவர்கள் செய்யும் உச்சரிப்புப் பிழைகளைத் திருத்தி, மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தவும் பயன்படுத்தலாம்.

- வலையொலிகளைத் தயாரிக்க அதிகமான நேரம் செலவாகும் என நினைத்தால், ஏற்கனவே, இணையத்தளங்களில் உள்ள வலையொலிகளைப் பயன்படுத்தி வகுப்பறைகளில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்ளலாம்.

- வீடுகளில் தமிழ் இணைய வானொலி மற்றும் வலையொலிகளைப் பயன்படுத்த மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் ஆசிரியர்கள் மொழி தொடர்புடைய கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை வடிவமைத்துக் கொடுக்கலாம்.

முடிவுரை

தகவல் தொடர்பு தொழில்நுட்பம் நாளும் வளர்ந்துவரும் ஒரு துறையாகும். தமிழாசிரியர்கள் அனைவரும் வளர்ந்துவரும் அத்துறையில் வகுப்பறை கற்றல் கற்பித்தலுக்கு இந்த வலையொலியைப் போன்ற இன்னும் பல பொருத்தமானக் கருவிகளை அடையாளம் கண்டு, அவற்றைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வதோடு மாணவர்களிடத்திலும் அவற்றைக் கொண்டு சேர்க்கவேண்டும். இதன்வழி மாணவர்களது ஆர்வ நிலையைத் தக்க வைப்பதோடு தமிழ்மொழியின்பால் அவர்களுக்கு ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம்.

***

# வகுப்பறையில் டேப்லட்வழி தமிழ் கற்றல்-கற்பித்தல்

முனைவர் பி.ஆர் லட்சுமி,
தமிழ்த்துறைவல்லுநர்., சென்னை

புத்தகங்களே சமர்த்தாயிருங்கள்!
குழந்தைகளைக் கிழித்து விடாதீர்கள்!
-கவிக்கோ அப்துல் ரகுமான்

மொழி நாம் நினைக்கும் எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்தும் முக்கியக் காரணி. வீட்டில் தாய்மொழி அறிவைக் குழந்தைகள் பெறினும், பள்ளியில் அக்கல்வி பயிலும்போதுதான் முழுமை பெறுகின்றனர்.இயந்திர உலகில் அறிவியல் வளர்ச்சியைத் தடுக்க இயலாது. அறிவியல் உலகின்வழி தமிழ்மொழியினை எடுத்துச்செல்ல வேண்டிய காலகட்டத்தில் இருப்பதால், டேப்லட் வழி தமிழ் கற்றல்,கற்பித்தல் முறையினை வெளிப்படுத்துதல் இவ்ஆய்வின் நோக்கமாகிறது.

*தமிழ்மொழி கற்றல்நிலை*

தமிழ்மொழியின்பழமை ஏடுகளிலும், கல்வெட்டுகளிலும் காணப்பட்டாலும் வெளிநாடுகளில் பயிலும் மாணவர்கள் பல நூல்களைத் தேடிக் கற்றல் மிகவும் குறைந்த அளவில் காணப்படுகிறது. கற்றல் திறன்களான

❖ கேட்டல், பேசுதல்,படித்தல்,எழுதுதல் முறைகளை டேப்லட் வழி கல்விமுறை எளிதாக்குகிறது.ஒவ்வொரு மாணவனும் தம் மொழித்திறன் குறித்த படிமத்தை வளர்த்துக் கொள்வதற்கும், தன்னை உணர்ந்து வாழ்க்கையின் நிலைப்பாட்டினை அறிந்து வாழ்வதற்கும் டேப்லட் வழி தமிழ்கற்றல் உதவுகிறது.

வகுப்பறையில் மாணவர்கள் எழுத்து வடிவம் அறிதல்,மொழித்திறன் பெறுதல், படைப்பாற்றல் திறன் வெளிப்படுத்துதல்

போன்றவற்றை வெளிப்படுத்த டேப்லட் அரிய கற்பித்தல் கருவியாகும். இதன்வழி செயல்திறன்கற்றல்நிலை மிகுந்து மாணவர்களின் அறிவாற்றல் தூண்டப்பெறுகிறது.
வகுப்பறையில்

- மீத்திறன் மிகுந்தவர்
- நடுத்தரக் கற்றல்திறன்
- மீத்திறன் குறைந்தவர்

என்ற நிலைகளில் மாணவர்கள் இருப்பினும் கற்றல்நிலை மேம்பாடு பெறுவதற்கு டேப்லட் உதவும்.

***டேப்லட்டின் பயன்கள்***

டேப்லட் பயன்பாட்டின்போது

- உற்றுநோக்குதல்
- பயிற்சி செய்தல்

❖ ஆழ்ந்த நுண்ணறிவுச் செய்திகளை வெளிக்கொணர்தல்

போன்ற நிலைகள் ஏற்படுகின்றன.

ஒரு சிக்கலைப் பல கோணங்களில் தீர்க்கக்கூடியது படைப்பாற்றல்திறன். படைப்பாற்றல்திறனை வெளிக்கொணரப் பல தடைகள் ஏற்படுகின்றன.

❖ கவனமின்மை
❖ உடல்நலமின்மை
❖ கருத்து பற்றிய தெளிவான புரிதலின்மை
❖ செய்திகளைப் பல கோணங்களில் ஆராய்ந்து படிக்கும் திறனின்மை

போன்றவை காரணங்களாக அமைகின்றன.

படைப்புத்திறனை எளிதில் வெளிக்கொணர அணுகுமுறை மாற்றங்கள் செய்தல் அவசியம். அத்தகைய அணுகுமுறைத்திறனை டேப்லட்வழிகல்விமுறை அளிக்கிறது.

ஒரு நாட்டின் எதிர்காலமே வகுப்பறையில்தான் தீர்மானிக்கப்படுகிறது.

காமினியஸ் வெளியிட்ட கல்வி நோக்கங்கள்

1. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குரிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல்
2. அறம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த மேம்பாடுகளுக்குரிய அறிவை வழங்குதல்
3. மனிதர்களிடையே தெய்வீக ஈடுபாட்டை ஏற்படுத்துதல்

போன்றவையாகும்.

மேற்கூறப்பட்ட நோக்கங்கள் அனைத்தும் தாய்மொழிக்கல்விவழி ஏற்படக்கூடியவையாகும்.மொழியினை மூன்று நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாகக் கூறுவர்.

1. கருத்துகளைக் கூறுதல்
2. மகிழ்வித்தல்
3. பிறரை நம் பக்கம் திருப்புதல்

இம்முறைகளை டேப்லட்வழி கற்றல் தெளிவாக்குகிறது.

மொழித்திறன் குறைவதற்கான காரணங்கள்

❖ மொழி கற்றுக்கொள்வதில் ஆர்வமின்மை
❖ விடாமுயற்சியின்மை

போன்றவையாகும். காரணம் இன்றைய கல்விநிலையில் தமிழ்மொழிகற்றலினால் கிடைக்கும் பணிவாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளன. இதனால் மாணவர்களிடையே தமிழ் கற்றல் மிகவும் குறைந்து வருகிறது.

ஒரு மொழி வளர பின்பாட்டுப் பணிப்புலம் அவசியமாகிறது. இத்தகைய நிலையினை டேப்லட்வழி கல்விநிலை அளிக்கிறது.வேற்றுமொழித்தாக்கத்தினால் வலுவிழந்து கொண்டிருக்கும் தமிழ்மொழி தழைத்தோங்க வகுப்பறையில் புதுமைகளைப் புகுத்த டேப்லட் சிறந்த கற்பித்தல் கருவியாகிறது. தெரிந்தவற்றிலிருந்து தெரியாத நிலைக்குச் செல்லுதல்முறை மொழித்திறனை வளர்க்கும். தமிழ்மொழியில் எழுத்துகள் கற்பித்தல்,எழுதுதல் நிலையில் ஏற்படும் சிக்கல்களை எழுத்து.காம் தெளிவாக அசைவூட்டம் வழி விளக்கியுள்ளது. MS-OFFICE-இன்வழியாக பாடப்பொருள் தொடர்புள்ளவற்றைத் தயாரிக்கலாம்.













இதற்குத் தேவையான பாடங்களைத் தயாரிக்க Tamil virtual academy.com, Tamil unltd.com,Californian academy.com.,balamithra.com போன்ற இணையத்தளங்களில் பார்வையிடலாம்.

vdraw, kidspainter, pencil, photoshop போன்ற மென்பொருட்களின் வழி தமிழ்பாடப்பொருள் தொடர்பான செயல்முறைப்பயிற்சிகள்,பயிற்சித்தாள் போன்றவற்றை மாணவர்கள் உருவாக்கும் நிலை வளரவேண்டும்.










மேற்காணப்படும் வரைகலை நிலையில் படைப்புத்திறன் வளரும்போது மாணவர்களின் கற்றல்திறன் வளர்கிறது. அனுபவபூர்வமான செயல்முறைகளினாலும், ஆய்ந்து கற்பதினாலும் மொழியின் சிறப்பினைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலும்.









இவ்வரைபடங்களின்வழி பாடத்துடன்கூடிய இலக்கணப்பயிற்சி கிடைப்பதால் எளிமையான கற்றல் பயிற்சியுடன் மொழித்திறனையும் அடைகின்றனர்.

*தொலைநோக்குச் சிந்தனை*

புலன்கள் வழியாகத்தான் கற்பித்தல் நிகழவேண்டும் என்றும், குழந்தைகளை மையமாகக்கொண்டும் கற்பிக்கவேண்டும் என்றும் ரூசோ கூறியதற்கேற்ப தமிழ்க்கல்வி கல்விமுறை உலகெங்கும் அமையவேண்டும். கல்வியின் இறுதி சிறந்த

மாணவர்களை உருவாக்குவதே என்ற விவேகானந்தர் வாக்கின்படி இன்னமும் தமிழ்மொழி கற்பித்தல் புதுமையாக்கப்படவேண்டும்.

குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசி ரியன்னே.

நன்னூல்-பவணந்தி முனிவர்

இத்தகைய சிறப்புமிக்க பெருமை பெற்ற ஆசிரியர் சமுதாயம் அறிவியல் உலகிற்கேற்ப தமிழ்மொழியில் புதுமைகளைப் புகுத்திக் கற்பிக்க முன்வரவேண்டும். எளிமையாக டேப்லட்வழி தமிழ்மொழி கற்றல்-கற்பித்தல் முறை இவ்ஆய்வுக்கட்டுரையின்வழி தெளிவாக்கப்பட்டுள்ளது.

# 10’T சிகரம், தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறையைப் பயன்படுத்தித் தொடக்கநிலை இரண்டாம் வகுப்புத் தமிழ் மாணவர்களின் வாய்விட்டு வாசித்தல் திறனை மேம்படுத்துதல்.

திருவாட்டி **அல்லி அழகு**
கல்வித் தொழில்நுட்பப் பிரிவு
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்.

**பின்னணி**

## <u>10’CMT தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறை</u>

10’CMT(Chinese, Malay & Tamil) அணுகுமுறை தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின்வழி தாய்மொழி கற்றல் கற்பித்தலில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்துவதோடு மொழித்திறன்களில் மாணவர்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்பது இதன் முக்கிய நோக்கமாகும். சீனாவைச் சார்ந்த கல்வியாளர் ஹெ கி கங் பரிந்துரைத்த கற்பித்தல் முறை இதுவாகும். இந்தக் கற்பித்தல் முறை சிங்கை நாட்டின் சூழலுக்கேற்ப மாற்றங்கள் செய்யப்பட்டு அமலாக்கம் கண்டது. இந்த அணுகுமுறை உயிரோட்டமுள்ள ஓர் இணையச் சூழலில் நடத்தப்பட்டு(interactive environment) சுய கற்றலையும் உடனிணைந்து கற்றலையும் வலியுறுத்துகிறது.







<u>10’T பணிச்சட்டம்</u> <u>10’T இணையப்பக்கம்</u> <u>அகன்ற வாசிப்புப் பகுதி</u>

இந்த 10’T தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறையில் ஆசிரியர் வழிநடத்தும் கற்றல் நடவடிக்கை 50 விழுக்காடாகவும் இணையம்வழி(www.10tsigaram.com) அகன்ற வாசிப்பில் மாணவர்கள் ஈடுபடுவது 50 விழுக்காடாகவும் பகுக்கப்பட்டுள்ளன. இந்த 10’T தொழில்நுட்ப அணுகுமுறை வாரத்துக்கு மூன்று முறை நடைபெறும். ஒவ்வொரு வாசிப்புப் பாடமும் 3 பாடவேளைகளுக்கு நடத்தப்படும் (90நிமிடங்கள்).

**ஆசிரியர் வழிநடத்தும் கற்றல் நடவடிக்கை( முதல் பகுதி- 50%)**

இந்த 10'T தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அணுகுமுறையை ஆசிரியர் தமிழோசை பாடநூலோடும் பெரிய புத்தகம் மற்றும் சிறுவர் கதை நூலோடும் இணைத்து வாசிப்புப் பாடம் கற்பிப்பர். வாய்விட்டு வாசிப்பில் முக்கியக் கூறுகளான எழுத்துக்கூட்டல் பயிற்சி அவசியம். ஆதலால் எழுத்து அறிமுகத்தில் ஆசிரியர்கள் ஒவ்வொரு சொல்லிலுள்ள எழுத்தையும் எழுத்துக்கூட்டி வாசிக்கக் கற்றுக்கொடுப்பது மிக மிக அவசியமாகும். ஆசிரியரின் முன்மாதிரி வாசித்தல்(Model Reading) இன்றியமையாமை. ஆசிரியரைப் பின்பற்றி மாணவர்கள் வாசிப்பர்(Chorus Reading), பிறகு இணை வாசிப்பு; இறுதியாகத் தனி வாசிப்பு. முறைசாரா மதிப்பீட்டையும் ஆசிரியர் மாணவரோடு நடத்துவார்.

**10'T சிகர இணையம்வழி நடவடிக்கை(50%)**

ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு கணினி வழங்கப்படும். மாணவர்கள் இணையத்தில் அவர்களுக்கென வழங்கப்பட்ட அகன்ற வாசிப்புப் பகுதிகளைக் 'காரௌக்கை' (Karaoke) ஒலிப்புவழி முழுமையாகக் கேட்டு, வாய்விட்டு உச்சரித்துப் பயிற்சி செய்து ஒலிப்பதிவு செய்வர். இவ்வாறு மாணவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவர். சில வேளைகளில் இணையாகவும் ஈடுபடுவர். இறுதியில் மதிப்பிடுதல் நடைபெறும். முறைசாரா மதிப்பீடு இங்கே வலியுறுத்தப்படுகிறது.

**ஆய்வு வினாக்கள்**

1. '*10'T சிகரம், தகவல் தொழில்நுட்ப அணுகுமுறை*' எவ்வாறு தொடக்கநிலை இரண்டாம் வகுப்புத் தமிழ் மாணவர்களின் வாய்விட்டு வாசித்தல் திறனை மேம்படுத்தும்?
2. 10'T சிகரம், தகவல் தொழில்நுட்ப அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் வாசிப்புப் பாடத்தில் தொடக்கநிலை இரண்டாம் வகுப்புத் தமிழ் மாணவர்களின் ஈடுபாடு(Engagement) எவ்வாறு வெளிப்படுகிறது?

**ஆய்வு நெறிமுறை**
**ஆய்வின் வடிவமைப்பு**

ஆய்வாளர் அளவு நோக்கிய ஆய்வு, தரம் நோக்கிய ஆய்வு(Mixed method research design) ஆகியவற்றின்வழித் தரவுகள் திரட்டினார். இந்த வடிவமைப்பு 'Explanatory Sequential Mixed Method Design' என்று அழைக்கப்படும். ஆய்வு வினா ஒன்றுக்கு விடை காண ஆய்வாளர் அளவு நோக்கிய தரவுகளும்(Quantitative) ஆய்வு வினா இரண்டுக்கு விடை காண தரம் நோக்கிய தரவுகளும்(Qualitative) திரட்டப்பட்டன. இம்முறையில் ஆய்வு செய்வதால் ஒருதலை சார்பின்றிப் பகுப்பாய்வு செய்யலாம்(Creswell,2003). இவ்வாய்வு ஐந்து வாரங்களுக்கு நடைபெற்றது. முதல் வாரம் மாணவர்களிடம் கருத்துக்கணிப்பும் முன்னிலைத் தேர்வும் ஐந்தாவது வாரம்

பின்னிலைத் தேர்வு, ஆசிரியரின் வினாநிரல், மாணவர்களின் நேர்காணல் நடத்தப்பட்டன. இடைப்பட்ட மூன்று வாரங்களுக்கு 10'Tசிகரம், தகவல் தொழில்நுட்ப அணுகுமுறையை ஆசிரியர் பயன்படுத்தி வாசிப்புப் பாடங்களை வாரத்திற்கு இருமுறை நடத்தி வந்தார். மொத்தம் ஐந்து பாடங்களை ஆய்வாளர் உற்றுநோக்கல் செய்தார்.

**ஆய்வுக்குட்படுவோர்**

10'T சிகர தகவல் தொழில்நுட்ப அணுகுமுறையைப் பின்பற்றும் ஓர் அரசாங்கத் தொடக்கப்பள்ளியும் அந்தத் தொடக்கப்பள்ளியைச் சார்ந்த 21 இரண்டாம் வகுப்புப் பயிலும் தமிழ் மாணவர்களும் அந்த வகுப்புத் தமிழாசிரியரும் இச்செயலாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

**தரவுகளின் பகுப்பாய்வு – முடிவுகள்**

**அளவு நோக்கிய தரவுகளின் பகுப்பாய்வு**

ஆய்வாளர் வாய்விட்டு வாசித்தலுக்கான ***முக்கியக் கூறுகளான உச்சரிப்பு மற்றும் சரளத்தைப்*** பகுப்பாய்வு செய்வதோடு ***படித்த சொற்களை*** மாணவர்கள் நினைவு வைத்துள்ளார்களா என்றும் ***படிக்காத சொற்களை அடையாளங் கண்டுள்ளனரா*** என்று அறிய அவா கொண்டார். பின்வரும் நான்கு கூறுகள் வழியாகத் தரவுகள் திரட்டப்பட்டன. முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

**அட்டவணை 1.**

**மாணவர்களின் வாய்விட்டு வாசித்தலின் முன்னிலை, பின்னிலைத் தேர்வு விவரங்கள்**

( Pre-test and Post –test results of the Reading Aloud Test )

| | வாய்விட்டு வாசித்தல் | *சராசரி* (Mean) | | *திட்ட விலக்கல்* Standard Deviation | |
|---|---|---|---|---|---|
| | | Pre | Post | Pre | Post |
| 1. | படித்த எழுத்துகள் கொண்ட சொற்கள் | 17.19 | 19.33 | 6.13 | 6.76 |
| 2. | படிக்காத எழுத்துகள் கொண்ட சொற்கள் | 9.67 | 9.24 | 6.08 | 5.25 |
| 3. | உச்சரிப்பு | 3.33 | 3.38 | 1.35 | 1.28 |
| 4 | சரளம் | 3.10 | 3.52 | 1.41 | 1.54 |
| 5 | மொத்த மதிப்பெண்(3&4) | 6.43 | 6.90 | 2.71 | 2.76 |

<u>படித்த எழுத்துகள் கொண்ட சொற்கள்</u>

40 சொற்கள் கொண்ட வாசிப்புப் பகுதியில் முன்னிலைத்தேர்வு செய்யும்போது, மாணவர்கள் எகர உயிரெழுத்து வரை படித்திருந்தனர். அப்போது அவர்கள் படித்த எழுத்துகள் கொண்ட சொற்கள், 23-ஆக இருந்தன. பின்னிலைத் தேர்வு செய்யும்போது மாணவர்கள் எகர உயிர்மெய்யெழுத்துகள் வரை படித்து முடித்திருந்தனர். ஆதலால் அவர்கள் படித்த எழுத்துகள் கொண்ட சொற்கள் 25- ஆகக் கூடின.

இந்தக் கூறைப் பகுப்பாய்வு செய்யும்போது மாணவர்கள் முன்னிலைத் தேர்வைவிட பின்னிலைத் தேர்வில் சிறப்பாகச் செய்துள்ளனர். மாணவர்கள் பெற்ற +2.14 சராசரி மதிப்பெண்ணை இதற்குச் சான்றாகும். இது மாணவர்களின் இந்தக் கூறில் அடைந்த முன்னேற்றத்தைக் காட்டுகிறது. இதனால் 10T அணுகுமுறை விரும்பத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம். இருப்பினும் *SD 0.63*-ஐ பார்க்கும்போது மீத்திறன் மற்றும் சராசரி மாணவர்களிடையே இந்தத் தாக்கம் அதிகம் காணப்படுகிறது என்றும் பையப் பயிலும் மாணவர்களிடையே அந்த முன்னேற்றம் சற்றுக் குறைவாகக் காணப்படுகிறது என்றும் குறிப்பிடுகிறது.

<u>படிக்காத எழுத்துகள் கொண்ட சொற்கள்</u>

40 சொற்கள் கொண்ட வாசிப்புப் பகுதியில் முன்னிலைத்தேர்வில் அவர்கள் படிக்காத எழுத்துகள் கொண்ட சொற்கள் மொத்தம் 17-ஆக இருந்தன. பின்னிலைத் தேர்வில் படிக்காத எழுத்துகள் கொண்ட சொற்கள் மொத்தம் 15-ஆகக் குறைந்தன. மாணவர்கள் இந்தச் சொற்களை இயல்பாகப் பெரிய புத்தகம், சிறுவர் கதை நூல் மற்றும் 10*'T* அகன்ற வாசிப்புப் பனுவல்கள்வழி படிக்கின்றனர். 10*'T* அகன்ற வாசிப்புப் பகுதியில் படிக்காத எழுத்துகள் கொண்ட சொற்களைப் படிப்பதற்கு ஒலிப்பு முறை வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அச்சொற்களை மௌஸ்*'(mouse)* செய்து அச்சொல்லின் உச்சரிப்புமுறையை அறிந்துகொள்வர்.

சராசரி மற்றும் *SD*-யைப் பார்க்கும்போது பெரும்பாலான மாணவர்கள் சிறப்பாகச் செய்யவில்லை எனலாம். இருப்பினும் பெறப்பட்ட மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போதும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்யும்போதும் மீத்திறன் மாணவர்கள் சிறப்பாகச் செய்துள்ளனர் என்று அறியமுடிகிறது. கிட்டத்தட்ட எல்லா மீத்திறன் மாணவர்களும் எல்லாச் சொற்களையும் படிக்கக்கூடிய திறனைப் பெற்றிருந்தனர். பாலர் பள்ளியில் தமிழ் படித்தேன் என்று 43% மாணவர்கள் கருத்துக்கணிப்பில் கூறினாலும் இருவர் மட்டுமே எல்லாத் தமிழ் எழுத்துகளும் அறிந்துள்ளார்கள் என்று கூறியுள்ளனர். ஆதலால் இந்த நன்மை 10*'T* அணுகுமுறையால் இவர்களிடம் விரும்பத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம். ஆனாலும் சராசரி மற்றும் பையப் பயிலும் மாணவர்களிடையே அவ்வளவாக ஒரு முன்னேற்றத்தைக் காண முடியவில்லை.

**உச்சரிப்பு**

மாணவர்கள் உச்சரிப்பில் முன்னேற்றம் கண்டுள்ளனர் என்று உச்சரிப்பில் அவர்கள் பெற்ற முன்னிலை பின்னிலை சராசரி மதிப்பெண்கள் சான்றாக விளங்குகின்றன. அதே வேளையில் பெரும்பாலான மாணவர்கள் இந்தக் கூறில் சிறப்பாகச் செய்துள்ளனர் என்று திட்ட விலக்கல் *SD*யின் முன்னிலை பின்னிலை மதிப்பெண்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**சரளம்**

சரளத்தில் மாணவர்களிடையே முன்னேற்றம் காணப்படுகின்றன. முன்னிலைத் தேர்வைவிடப் பின்னிலைத்தேர்வில் மாணவர்கள் சிறப்பாகச் தேர்ச்சியடைந்துள்ளனர் என்று தரவுகள் காட்டுகின்றன. இருப்பினும் திட்ட விலக்கல் *SD* பார்க்கும்போது அந்த விலக்கல் சற்று ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. இங்கேயும் மீத்திறன் மாணவர்கள் சிறப்பாகச் செய்துள்ளனர். சராசரி மாணவர்களில் இரு மாணவர்கள் முன்னிலை பின்னிலைத்தேர்வுகளில் அதே மதிப்பெண்களைப் பெற்று எந்தவித மாற்றமுமின்றி உள்ளனர். பையப்பயிலும் மாணவர்களில் ஐவரிடம் முன்னேற்றம் தென்படுகிறது.

**மொத்த மதிப்பெண்கள்**

முன்னிலை, பின்னிலை மொத்த மதிப்பெண்களை ஒப்புநோக்கும்போது மாணவர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். இருப்பினும் திட்ட விலக்கல் *SD* பார்க்கும்போது அந்த விலக்கல் 0.05 விதம் விலகியுள்ளது எனலாம். மீண்டும் மீத்திறன் மாணவர்களில் நால்வர் உச்ச மதிப்பெண்ணான 10க்குப் 10 மதிப்பெண்கள் முன்னிலை, பின்னிலைத் தேர்வுகளில் பெற்றுள்ளனர். பையப்பயிலும் மாணவர்களில் ஐவர் வாய்விட்டு வாசிப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதில் ஒரு மாணவர் மிகச் சிறப்பாகச் செய்துள்ளார். அவர் உச்ச மதிப்பெண்ணாக முன்னிலை பின்னிலைத் தேர்வில் 8 மதிப்பெண்கள் வாங்கியுள்ளார். மற்ற நால்வரும் மொத்த மதிப்பெண்களில் தோல்வியைத் தழுவினர்.

**தரம் நோக்கிய தரவுகள்- முடிவுகள்**

ஆய்வாளர் மீத்திறன், சராசரி, பையப் பயிலும் மாணவர்கள் மூவரைக் குறிப்பான நோக்கம் ஏதுமற்ற(*Random selection)* வகையில் தேர்ந்தெடுத்தார். அவர்களிடம் இந்த அணுகுமுறையில் நடத்தப்படும் பாடங்கள் அவர்களிடையே ஆர்வமும் ஈடுபாடும் ஏற்படுத்தினவா என்று கண்டறிய விரும்பினார்.

நேர்காணல் பேட்டி கண்ட மூன்று மாணவர்களும் ஆசிரியரின் பங்கு மிகவும் முக்கியம் என்பதை எடுத்துரைத்தனர். தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டுக்கு எப்போதுமே ஓர் எல்லை உண்டு. அது ஆசிரியர்போல் முழுமையாகத் தன் ஆதிக்கத்தைச் செலுத்தமுடியாது(Seetha,2006) என்பதை மாணவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தனர். வகுப்பின் முதல் 50% பாடத்தில் ஆசிரியருடன் இடை

விளையாடல், கலந்துரையாடல், பாத்திரமேற்று நடித்தல், பாடல்வழி அல்லது காணொளிவழி பாடம் நடைபெறுதல் முதலியவை மாணாக்கரின் ஈடுபாடு நிலையைக் காட்டுகிறது.

அதோடு அடுத்த 50% பாடம் கணினியில் நடைபெறும்போது அங்கேயும் மாணவர்கள் அகன்ற வாசிப்புப் பகுதிகளை அவரவர் நிலைகளுக்கு ஏற்ப ஆர்வத்தோடு வாசிக்கின்றனர் என்று கூறினர். சுய கற்றலில் ஈடுபடும்போது சுய மதிப்பீட்டு மூலமும் தங்களுடைய கற்றலை மேம்படுத்தலாம் என்றனர். இணையோடு செய்யும்போதும் அவ்வாறுதான் என்றனர்.

முடிவுரை

'இன்றைய மாணவர்களுக்குப் பாரம்பரிய முறையில் கற்பித்தால், அவர்களுடைய எதிர்காலத்தை நாம் அவர்களிடமிருந்து பறித்துவிடுகிறோம்' (*John Dewey,1944).* பாரம்பரிய முறையில் கற்பித்தல், மனனம் செய்தல், சொன்னதைத் திரும்பிச் சொல்வது, ஆசிரியர் கற்றுக்கொடுத்ததை அப்படியே சொல்லுவது போன்றவை அன்றைய காலகட்டத்துக்குச் சிறப்பானதாக அமைந்திருக்கும். ஆனால் இம்மாதிரியான கற்பித்தல் முறைகள் 21-ஆம் நூற்றாண்டில் பிறந்த மாணவர்களுக்குப் பொருத்தமானதாக அமையாது. ஆசிரியர்கள் தொடர்ந்து பாரம்பரிய முறையில் கற்பித்தால் மாணவர்கள் கற்றலில் சுதி இழந்து, கற்றல் தடைப்பட்டு, இறுதியில் கற்றலில் ஆர்வமும் ஈடுபாடும் குன்றி காணப்படுவர். ஆதலால் ஆசிரியர்களாகிய நமக்கு ஒரு தனித்தன்மை வாய்ந்த பொறுப்புள்ளது. ஒவ்வொரு கற்பித்தலையும் புத்தாக்கத்தோடு வடிவமைத்துக் கற்பிப்பது நமது தலையாய கடமையாகும். அதற்குத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் நிச்சயம் துணைபுரியும் என்று மொழிந்தால் அது மிகையாகாது.

# இணையவழிக் கற்றல் கற்பித்தலில் தொல்காப்பியக் காணொளிப் பிரதியாக்கம்

முனைவர் மோ. செந்தில்குமார்

உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ் உயராய்வுத்துறை,

அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 641 018.

visumbutamil@gmail.com., http://visumbu.wordpress.com

தனிமனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் இன்றைய தகவல் தொழில்நுட்ப ஊடகப் பண்பாடு, அறிவைப் பெறுவதற்கான வாசிப்புத் தளத்திலும் பெருத்த மாறுதல்களை உண்டாக்கிவருகின்றது. புத்தக வாசிப்பின் மூலமாக மட்டுமே அறிவையும் இன்பத்தையும் சிந்தனைத் தூண்டுதலையும் பெறமுடியும் என்ற மரபுவழிப்பட்ட வழிமுறையைக் கடந்து சென்றுகொண்டிருக்கிறது உலகம். குறிப்பாக, தொழில்நுட்பமயப்பட்ட சமூகம் (Techno Centric Society) ஒன்று உலகளாவிய பொதுமைத் தன்மையுடன் கட்டமைந்துகொண்டிருக்கிறது. இச்சமூகத்தில் ஒருவனாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் இன்றைய இளம் தலைமுறை மிகுந்த உத்வேகம் காட்டி வருகின்றது.

தமிழ் மொழி இலக்கியங்களைக் கற்பித்தல் செயல்பாடுகள் இன்னும் கரும்பலகையை மட்டுமே சார்ந்ததாகப் பாரம்பரியமான ஆசிரியர் - மாணவர் அமைப்புமுறையில் மாற்றமின்றித் தொடர்கின்றது. தற்போது தனியார் நிறுவனங்களின் தொழில்முறைச் செயல்பாடுகளால் பள்ளிப் பாடங்கள் காட்சிவடிவக் கற்பித்தல் முறைக்குள் நுழைந்திருப்பது வரவேற்புக்குரியது.

இன்று, மிக வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத்தோடு தன்னை இணைத்துக்கொள்ளாத எந்த ஒரு மொழியாலும், நிகழ்கால மற்றும் வருங்கால இளம் தலைமுறையினருக்கு ஏற்றதும், விருப்பமானதுமான ஒரு மொழியாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது. பெருகிவரும் உலகமயக் கலாச்சார வெள்ளத்தில் அது முற்றாக அடித்துச் செல்லப்பட்டுவிடக்கூடும். தன் தாய்மொழியைத் ‘தாய்மொழி’ என்ற தகுதியோடு ஒருவன் உலகமயச்சூழலில் தக்கவைத்துக்கொள்வதற்குத் தொழில்நுட்ப வாசிப்பு வாய்ப்புகளை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் நமது செயல்பாடுகளை மதிப்பீடு செய்வது அவசியம்.

### மின் புத்தகம் (e-book)

கணினி சார்ந்த, இணையம் சார்ந்த, சிலேட்டு மற்றும் அலைபேசி சார்ந்த வாசிப்புத் தொழில்நுட்பப் பெருக்கத்திற்குப் பேச்சு மாற்றியின் (text to speech - TTS) பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. தற்போது 40க்கும் மேற்பட்ட உலக மொழிகள் கருவி வாசிப்பு மொழிகளாக மாற்றம் பெற்றிருக்கின்றன. ஆனால்

தமிழ்ச்சூழலில் இயற்கைவழிப் பேச்சுமாற்றி (Natural TTS), பல்வகைக் கோப்பு வடிவங்களிலான(format) மின் புத்தகங்களை இணையத்தில் தேடுதல் நாளுக்கு நாள் பெருகிவருகின்றது. ஆனால், தமிழ் சார்ந்த மின்புத்தக உருவாக்கம் என்பது pdf வடிவிலானதாக மட்டுமே உள்ளது. வெகுமக்களின் எதிர்பார்ப்பாக இருக்கும் இத்தகைய வாசிப்பு வாய்ப்புகள் இன்மை தொழில்நுட்பம் சார்ந்த வாழ்வியல் சூழலில் தமிழைப் பின்னுக்குத் தள்ளி வைக்கின்றது.

## காணொளிப் பிரதி (Video Text)

மின்புத்தகப் பயன்பாட்டுப் பெருக்கத்தோடு தற்போது எதையும் காணொளிக் காட்சி வடிவமாகக் கற்றல் முறை மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகின்றது. www.youtube.com உலகளாவிய நிலையில் வாசிப்புத் தளத்தை, வாசிப்பு முறையை, வாசிப்புத் தன்மையை மாற்றியமைத்துள்ளது. எந்த ஒரு துறைசார்ந்த நுட்பமான அறிவையும், கருத்தியலையும் காணொளி வாயிலாக மிகத் தெளிவாகக் கற்றுக்கொள்வதற்கான இந்தத் தொழில்நுட்ப வாசிப்பை இளம் தலைமுறையினர் விரும்பி ஏற்றுள்ளனர்.

மொழி, இலக்கியம், தத்துவம் ஆகிய துறைசார் நூல்களில் மின்புத்தகங்களுக்கு அடுத்ததாகப் ஒலிப்புத்தகங்களாகப்(Audio Books) பல இலக்கிய நூல்களும், தத்துவ நூல்களும் கிடைக்கின்றன. ஆனால், காணொளிப் பிரதிகளாக உலகளாவிய நிலையில் எந்த ஒரு நூலும் ஆக்கப்பட்டதாகத் தெரியவில்லை. youtube.com தளத்தில் தனி நூல் ஒன்றைக் காணொளிப் பிரதியாக ஆக்கிய முயற்சி தேடியவரை கிடைக்கவில்லை.

## தமிழில் காணொளிப் பிரதியாக்கம்

இத்தொழில்நுட்பத் தளத்தில் தமிழர்களின் ஈடுபாடு குறிப்பிடத்தக்க அளவு உள்ளது. இருப்பினும் மொழி, இலக்கியம் சார்ந்த முன்னெடுப்புகளில் சொற்பொழிவுத்தன்மையே மேலோங்கியிருக்கின்றது. குறிப்பாக, இலக்கியச் சொற்பொழிவுகளே இந்த இடத்தை அதிகம் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன. நேரடியாக ஓர் இலக்கியத்தை, இலக்கண நூலைக் காணொளிப் பிரதி வடிவில் நுட்பமாகக் கற்பதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே உள்ளது. தமிழர்களின் பாரம்பரியமான உணர்ச்சிபூர்வமான சொற்பொழிவுத் தன்மையே இதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. இச்செயல்பாடுகளில், திருமதி புனிதா ஏகாம்பரத்தின் சங்கக் கவிதைகள் விளக்கங்கள், கலிபோர்னியா வளைகுடாப் பகுதி இலக்கியக் கூட்டப் பொழிவுகள், மலேசியாவைச் சேர்ந்த ஓம் தமிழ் டிவி வெளியிட்டுள்ள திருக்குறளுக்கான மூலத்துடன் கூடிய உரை ஆகியன குறிப்பிடத்தக்கன.

**தொல்காப்பியம் - காணொளிப் பிரதியாக்கம்**

தமிழரின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியம் குறித்த காணொளிகளும் யுடியூப்பில் கிடைக்கின்றன. கடந்த பத்து மாதங்களாக, தொல்காப்பியம் அறிமுகம், தொல்காப்பியத்தின் பெருமை, சிறப்புப் பாயிரம், எழுத்துவகை, மாத்திரை எனத் தொடர்ச்சியாக ஓம் தமிழ் டிவி காணொளிப் பதிவேற்றம் செய்து வருகின்றது. பாராட்டுக்குரிய இம்முயற்சியில் மலேசியத் தமிழர்கள் ஈடுபட்டுள்ளனர். கூடுதல் சொற்பொழிவுத் தன்மையும், பிரதிக்கு நெருக்கமாக வாசகனைக் கொண்டு செல்லாமையும், வெகுமக்களுக்குத் தம் மொழி சார்ந்த பெருமிதங்களைச் சொல்வதுமானதாக இம்முயற்சியைக் கருதலாம்.

ஒரு வாசகன் காணொளி வழியாக நேரடியாகத் தொல்காப்பிய நூற்பாவை, வாசிக்கவும், கேட்கவும், அதற்கான பொருளைப் பல உரையாசிரிகளின் உரைவேறுபாடுகளுடன் தெளிவாக அறியவும் முடியும்போதுதான் அவனால் பிரதியோடு உறவாடும் உணர்வைப் பெற முடிகின்றது. கற்றல் கற்பித்தலில் புதிய முறைமை இதனால் சாத்தியமாகின்றது. இணையத்தில் காட்சி வடிவமாக எப்போதும் இருக்கும் பிரதியும், பிரதியின்மீதான உரைவிவாதங்களும் கால, இடம் சார்ந்த தடையற்ற கற்றலுக்கு வழிகோலுகின்றது. அந்த வகையில், இக்கட்டுரையாளர் தொல்காப்பியத்தைத் தமிழ் அறிந்த ஒவ்வொருவரும் தாமாகவே வாசிக்கவும், புரிந்துகொள்ளவும் ஏற்ற வகையில் 2013 அக்டோபர் 19ஆம் நாளிலில் இருந்து தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தைக் காணொளிப் பிரதியாக்கம் செய்து யுடியூப் -ல் பதிவேற்றம் செய்து வருகின்றார். இக் காணொளிப் பிரதியாக்கம், உரையாசிரியர்களின் உரை வேறுபாடுகளுடன் தொல்காப்பியத்தை வாசிக்கவும், கேட்கவும், காணவும் கூடிய வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. ‘‘விசும்பு’’ என்ற தலைப்பிலான இத்திட்டச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக, கூடுதல் உரையாடலுக்குரிய களமாக http://visumbu.wordpress.com என்ற வலைப்பூ உருவாக்கப்பட்டுள்ளது.

தொன்மையான இலக்கண இலக்கியப் பிரதிகளோடு நெருங்கிச் செல்வதற்கான இவ்வாய்ப்பால் தன் மொழியின் அளப்பறிய வளத்தைத் தானே கற்கும் தன்மையை வாசகனால் பெற முடிகின்றது. இதனால், (1) காணொளிக் காட்சி வடிவமாக்கியவர் உருவாக்கித் தந்த ஒற்றை வாசிப்பையும் கடந்து சென்று வாசகன் தனக்கான ஒரு வாசிப்பை உருவாக்கிக்கொள்ள முடிகின்றது. (2) இது, தாய்மொழிப் பற்றை வளர்ப்பதோடு, தன் மொழி இலக்கியங்களிடத்தில் ஒருவனை மதிப்புக் கொள்ளச் செய்கின்றது. (3) இத்தகைய தொடர்ச்சியான மாற்றங்களை வாசகனுக்குள் நிகழ்த்திக்கொண்டே இருக்கும் தன்மையுடையது காணொளிப் பிரதி. இதனால், நூலை வாசித்துப் புரிந்துகொள்வதைவிடக் காட்சி வடிவில் அனைத்தையும் புரிந்துகொள்வதற்கான மனநிலையைப் பெற்றுள்ள புதிய தலைமுறையினரிடத்தில்

தம் தாய்மொழியோடும், பண்பாட்டோடும் நெருங்கிய உறவை உருவாக்கிவிடமுடியும். (4) உணர்வுப்பூர்வமான சொல்லாடல்களைக் கடந்து, காரண காரியத் தொடர்பிலான அறிவியல் தன்மையுடைய சொல்லாடல்கள் அறிவுத் தேடலில் ஆதிக்கம் செலுத்திவரும் நிலையில் காணொளிப் பிரதியாக்கம் காலத்தின் கட்டாயமாகிறது. (5) குறிப்பாக, நம் செவ்வியல் இலக்கண இலக்கியங்களைக் காணொளிப் பிரதியாக்கம் செய்து தருவதன் மூலம் தற்காலத் தன்மையுடைய ஒரு வாசிப்பை வழங்கி, வளர்ந்து வரும் புதிய தலைமுறைக்குத் தாய்மொழிப் பற்றையும், தம் இனத்தின் தொன்மை குறித்த பெருமிதத்தையும் உருவாக்கி வளர்த்திட முடியும். இணையம் உள்ளவரை நம் அறிவுச் செல்வம் உலகின் ஏதாவது ஒரு மூலையில் யாரோ ஒரு தமிழனால் வாசிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

**தொழில்நுட்பச் செயல்பாடுகள்**

இடைவெளியற்ற மரபுத்தொடர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு நாம் செயல்படுத்த வேண்டிய தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் முதன்மையானதாகக் காணொளிப் பிரதியாக்கம் உள்ளது. இவ்வாறு, பிரதியாக்கம் செய்வதற்குத் தேர்ந்தெடுக்கும் நூலைக் கற்பித்தலில் தேர்ச்சி பெற்ற அறிவும், எதையும் காட்சி வடிவமாக்கித் தருவதற்கான கணினித் தொழில்நுட்ப அறிவும் ஒன்றை ஒன்று புரிந்துகொண்டும், உள்வாங்கிக் கொண்டும் செயலாற்றும்போதுதான் சிறந்த செம்மைப்பட்ட காணொளிப் பிரதியை உருவாக்க முடியும். தமிழ்ச் சூழலில், அறிவுப் பகிர்வும், கடும் உழைப்பும், பெரும் பொருட்செலவும் காணொளிப் பிரதியாக்கத்திற்கான மிகப்பெரிய இடைவெளிகளாக உள்ளன.

காட்சி வடிவப் பிரதிக்கான தரவுகளைத் திரட்டுதலில் தொடங்கி, பத்துப் பதினைந்து நிமிடங்களில் தெளிவும், செறிவும் உடைய, மூலத்துக்கு மிக நெருக்கமான புரிதலைத் தரக்கூடிய ஒரு காணொளியை உருவாக்குவதில், Video Recording, Audio Recording, Video Editing, Audio Editing, Animation எனப் பல தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுவதன் வாயிலாக ஒரு நிறைவான Full HD தரத்திலான காணொளியை உருவாக்க முடியும். இக்கட்டுரையாளர் மேற்கண்ட அனைத்துத் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தித் தனது சொந்தச் செலவில் தொல்காப்பியத்தைக் காணொளி வடிவமாக்கி வருகின்றார்.

காட்சி வடிவப் பிரதி (Visual Text) வாசகனுக்கு மிகவும் நெருக்கமானதாக இருக்கின்ற இச்சூழலில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியன நூல் வடிவிலேயே முடங்கிப்போனால் அவை தமிழர்களின் பெயரளவிலான தொன்மங்களாக மட்டுமே எதிர்கால உலகத்தால் கருதப்படக்கூடிய நிலை உருவாகும். இத்தகைய நிலையிலேயே அவற்றைக் கைவிடுவோமானால் புதிதாகக் கட்டமைந்து வரும் இளம் தலைமுறையினரைத் தங்கள் மொழியோடும், பண்பாட்டோடும் வாழ்வதற்கான உணர்வைப் பெறவைக்கத் தவறியவர்களாகிவிடுவோம்.

# Game Based learning of Silapathykaram

**A.M.Ponraj**
Dept. of Computer Science.
Madurai Kamaraj University, Madurai-625 021, India
Email: ponrajcomputer@gamil.com

## Abstract

We introduce the games namely crossword puzzles, picture activity, zigzag puzzles to learn silapathykaram for the tenth standard students of samacheer kalvi and Malaysian school students. These students were interacted as individual at novice level with hand held devices and in collaborative groups using Android PC with projectors. At the end, an email will be sent to their parents as given during the registration. Most students consider these activities as enjoyable and useful for leaning.

## Introduction

Innovative games are essential to reach a deep level of learning and to become involved in learning tasks to pursue the goals of furthering their knowledge. Incorporating active learning helps to motivate the students and improve understanding and learning(Ref1-3). During the last decade a growing body of smart phones and tablets have introduced various types of games. In order to create a more positive feelings about silapathykaram and enhance the learning outcome, educational games such as crossword puzzles were introduced. Crossword puzzles have been shown to be learning tools in various discipline.(Ref 4-6) This paper describes the design and implementation of crossword puzzles etc. and provide the students an intrinsic motivation and learning of silapathykaram.



Figure 1 A sample of Picture activity with 24 pictures

## Game-Based Learning

It is known as a Game-Based Learning (GBL) the learning method of using games while teaching a subject. It means that the games that are used for this purpose have been designed with the idea of achieving learning outcomes.

**What is Game-Based Learning?**

It is known as a Game-Based Learning (GBL) the learning method of using games while teaching a subject. It means that the games that are used for this purpose have been designed with the idea of achieving learning outcomes.




A sample of 16 zig-zag puzzles

**Some benefits of using Game Based Learning**

- **Get students attention.** Students easily engaged to game activities due to their willingness in playing.

- **Students get a positive experience about learning.** The use of games encourages students to keep learning and to erase the idea that learning is boring.




- **Rememorize concepts or facts.** Activities such as solving a crossword or alphabet soup are activities more engaging than a regular test. Prepare some contests such as "Who wants to be a millionaire" or "The wheel of fortune". Encourage students to work in teams to achieve the goal where their **knowledge is the clue to succeed**.

- **Reinforce and consolidate knowledge in a friendly environment.** The most effective way to turn content in something **meaningful** is to find out where and when to use it. With games students can reinforce and consolidate their knowledge through practicing and getting reward for their achievements.

- **Understand the consequences of our choices.** Using games enables users to understand the consequences of their choices. In other words, the students **learn through experiences**, through trial and error. Games offer a safety environment to test and **learn through mistakes** so the information becomes meaningful when students understand its use.

**Silapathykaram**

Kovalan was the son of a wealthy merchant in Kaveripattinam, married Kannagi, a young woman of legendary beauty. They lived together happily in the city of Kaveripoompattinam, until Kovalan met the dancer Madhavi and fell in love with her. In his infatuation he forgot Kannagi and gradually spent all his wealth on the dancer. At last, penniless, Kovalan realised his mistake, and returned to Kannagi. Their only asset was a precious pair of anklets (chilambu—hence the name of the epic), filled with gems, which she gave to him willingly. With these as their capital they went to the great city of Madurai, where Kovalan hoped to recoup his fortunes by trade.




The city of Madurai was ruled by the Pandya king Nedunj Cheliyan I Kovalan's objective was to sell one of the anklets in this kingdom so that he and his wife would be able to start their lives over. Unfortunately, around the time he set out to sell the anklet, one anklet (out of a pair) was stolen from the queen, by a greedy court member. This anklet looked very similar to Kannagi's. The only difference was that Kannagi's were filled with rubies and the queen's filled with pearls, but this was not a visible fact. When Kovalan went to the market, he was accused of having stolen the anklet. He was immediately beheaded by the King's guards, without trial.




When Kannagi was informed of this, she became furious, and set out to prove her husband's innocence to the king.

Kannagi came to the king's court, broke open the anklet seized from Kovalan and showed that it contained rubies, as opposed to the queen's anklets which contained pearls. Realizing their fault, the King and the Queen died of shame. Unsatisfied, Kannagi tore out a breast and flung it on the city, uttering a curse that the entire city be burnt (the old, the children and the disabled were spared). Due to her utmost Chastity, her curse became a reality.

**Conclusion**

All students, at some point in their academic career, must review for an exam.. Because of the potential for crossword puzzles to impact student learning and exam outcomes, it is important that research is done to look at the effectiveness of these methods. Not only might they positively impact grades, but the ways in which students choose to study may negatively impact their grades as well. This approach has aided in retaining complicated words in silapathikaram. For sangam literature such as silapathikaram, multi-approach in vocabulary

was more effective than using a single approach like rewriting in a note book. It is best to have a variety of resources available to students to aid in the learning process. Not only can this accommodate a range of learning styles, but it can also minimize repetition and boredom in the classroom. The use of games in the classroom can be an effective tool, especially at the school level. Gifted and talented students, who are the most likely to attend schools, have been found to prefer games and other alternative teaching methods. For some teachers, implementing alternative methods of teaching may be difficult, as many teachers prefer to use the traditional methods they are comfortable with, but games can be used as a supplement to traditional methods, not as a replacement. This can add flexibility to the classroom, allowing students to adjust to the way in which they learn best. Our Games allow students to work in groups or alone, to be competitive or not, to be creative, and to have fun while learning as we recommend android PC with projectors in the class rooms. Games have been a widely utilized form of study by students and teachers alike, across all age groups and areas of study. These methods are a desirable learning method, as they can make studying more enjoyable.Thus we conclude that these games can relieve the tedium of lecture and traditional teaching methods, as well as create a more relaxed and friendly classroom atmosphere. This can increase the amount of attention students give to the material, thus increasing retention of the material. Another positive outcome of using games in the classroom is that participation in them makes learning a matter of direct experience.

**Bibliography**


1. Swan, R. H. (2010). Feedforward as an active principle of engagement in computer games. In R. Van Eck (Ed.), Gaming and cognition: Theories and perspectives from the learning sciences (pp. 108-136). Hershey, PA: IGI Global. 154-155
2. Van Eck, R. (2006). Building intelligent learning games. In D. Gibson, C. Aldrich, & M.Prensky (Eds.). Games and cognition: Theories and perspectives from the learning sciences (pp. 108-136).
3. Gee, J. P. (2003). What video games have to teach us about learning and literacy? New York: Palgrave MacMillan.
4. Lepper, M. R. & Malone, T. W. (1987). Intrinsic motivation and instructional effective in computerbased education. In R. E.Snow & M. J. Farr (Eds.). Aptitude, learning and instruction: III. Cognitive and effective process analysis (pp. 255-186). Hillsdale, NJ: Erlbaum.
5. Malone, T. W. & Lepper, M. R. (1987). Making learning fun: A taxonomy of intrinsic motivations for learning. In R. E. Snow & M. J Farr (Eds.), Aptitude, learning and instruction: III. Cognitive and effective process analysis (pp. 223-253).
6. Hillsdale, NJ: Erlbaum. Miller, C. S., Lehman, J. F., & Koedinger, K. R. (1999). Goals and learning in microworlds. Cognitive Science, 23(3), 305-336.
7. Rieber, L. P., Smith, L. & Noah, D. (1998). The value of serious play Educational Technology, 38(6), 29-37.

## Developing a Software of Crossword Puzzles as a Learning Tool for Tamil Vocabulary Development

Mr.M.Somathasan,
*Assistant Lecturer in English, SLIATE, Sri Lanka*
Dr.R.Saranya,
*Associate Professor, CAS in Linguistics, Annamalai University*

**Abstract**

It is not denied that Tamil language should speed up its journey through the channel of information technology; especially through the internet as mostly all the fields including language teaching and learning in the world are now being computerized because they will be stagnant without the gear of computer technology. As far as the educational domain is concerned, the virtual learning plays a dominant role to acquire the adequate knowledge in a language. There is no second talk of the statement that a language should not be alive unless it is spoken. To speak a language continuously its vocabulary should be flourished by a learner. Since vocabulary is a key basis on which reading achievement depends, various vocabulary acquisition techniques have become pivotal. Among the many teaching approaches, traditional or otherwise, the use of crossword puzzles seems to offer potential and a solution for the problem of learning vocabulary. If learning is to occur, learners or students must be motivated to learn (Calahoun, 1980).This paper attempts to develop a software which is a collection of crossword puzzles; and it can help the students improve the vocabulary or word power in Tamil language, meanwhile promoting the active learning and increasing their motivation for learning in the ICT set up.

**Key words:** information technology, internet, virtual learning, crossword puzzle, active learning, software

### Introduction:

The now-generation can be typically known as *Net-Generation* as the dominance or effect of internet and information communication technology has spread into every nook and corner of all domains, especially into the environment of language learning. Based on this, Ramaley and Zia (2005) stress the importance of learning environments that should be social, active, and learner-centered for all learners. As far as the active learning is concerned, this paper discusses the uses of a learning game, i.e. *Crossword Puzzle* as a learning tool of vocabulary and instructional method to engage the students in active learning of Tamil vocabulary. Some recent research has indicated that games "seem to comprise all elements for a learning environment in which students are stimulated to use deep learning strategies" (Vos et al., 2011). The crossword puzzle is a well-known game that can be easily handled by a learner or implemented in a classroom. As learning theories generally point out the need for immediate feedback and student involvement for ideal learning situations (Hequet, 1995; Foreman, 2003), learning games have been reported to provide just this type of situation. Cruickshank and Telfer (1980) point out those games provide a responsive environment where learners immediately know how they are doing. Further, Sugar and Takacs (1999) report that games create an interactive learning experience by transforming inactive learning material into learning episodes where the learners are active players and participants. Thus, there is no doubt that the learning game, crossword puzzle, is an effective learning tool to motivate the learners to increase their vocabulary or word power in the language.

**Objective:**
After doing numerous crossword puzzles a learner will become familiar with words of Tamil language he or she never knows before.

**Crossword puzzles:**
Crossword puzzles are a group of words that are arranged horizontally and vertically. They are designed this way, so that each of the words will cross at least one other word through a letter that is common to both. Today, most of the daily newspapers and many magazines include a crossword puzzle for the good side of those who like to develop their power of vocabulary in their language. Crossword puzzles are one of the best educational tools for learning new words, synonyms, antonyms, etc. as a part of enriching one's language. Not only the learners but are the teachers and professors in the field of education also getting more involved in solving crossword puzzles to boost their word power. There is no question that crossword puzzles have been in education for many years. The reason most people enjoy it, is because it is considered as a great exercise for the mind. Believe it or not, crossword puzzles give others a better impression of you. Anyone who notices you solving a crossword puzzle regularly, believe that you are brilliant.

**The history of crossword puzzles:**
Crossword puzzles originated in English. The first "word-cross" in the United States was published in a supplement to the *New York World* in 1913, although similar puzzles have been around in different forms since Egyptian times. In $19^{th}$ century England, they were aimed mostly at a juvenile audience, and did not become a craze for adults until Simon and Schuster printed the first book of them in the US in the 1920s, when they then took on the familiar name "crosswords". Most attention to crossword puzzles has always been paid in Britain, where a new variation of the crossword puzzle developed in the 1930s, bringing a completely new element into the game. The puzzle's popularity continued to build throughout the rest of the twentieth century.

**Educational value of crossword puzzles:**
From an educational point of view, it is clear that crossword puzzles are an effective way to help learners maintain and improve their vocabulary, spelling skills, word attack skills, and knowledge of many miscellaneous tidbits of information more quickly. This is because the tedium of memorization is removed and learning happens naturally with a relaxed mind set and in a pleasant environmental setting. Learning definitions can be especially boring with the repetition necessary for memorization. Fortunately, it is one of the easiest tasks to set to a game. That's why, crosswords puzzles are an excellent way to make learning with meaning more fun. Solving crossword puzzles tends to contribute to a learner's self esteem. For many people, their expertise in solving crossword puzzles plays a role in their social interaction with other people.

- **Crossword puzzles promote letter and word recognition.**
  Using crossword puzzle as a tool for learning vocabulary words helps learners or children first learn word definitions, and second, proper spelling of words, i.e. correctly deciphering a crossword requires exact spelling, which for students may mean practicing dictionary skills. This is because they spend quite a bit of time looking at the words and definitions while they are determining which word goes where. Thus, spelling is very important in the puzzle because if a word is misspelled, it will not fit with adjacent words. As a result, students playing crossword puzzles pay closer attention to spelling and become perfect spelling bees.

- **Crossword puzzles encourage thinking.**
  When students work on crossword puzzles as part of the learning process, they are actually memorizing words and meanings without realizing it. Due to the nature of a crossword puzzle, students often read the definitions several times while thinking of potential answers. As a result, when they finally choose the correct vocabulary word, it is repeated to ensure that the letters fit properly in the available blocks. Not only does this process encourage repetition in thinking, but also, it leads to memorization.

- **Crossword puzzles build confidence in learning.**
  Learners or students, who get frustrated easily while studying, often find that crossword puzzles help them build confidence and release them from the frustration. Because they are games, students do not build anxiety as in traditional learning. Additionally, when students succeed with word games, they feel more secure about learning in general and become more comfortable with reading, writing, and especially promoting vocabulary.

- **Crossword puzzles add variety in learning definitions.**
  Variety is the spice of life and learning vocabulary words is no exception. Repeating words can get boring and dull, but adding a little variety helps keep students interested and engaged in their learning process. Throwing or paying the light of concentration in word games like crossword puzzles is an excellent way to promote variety. However, it is highly better to introduce games only after students have been exposed to new and challenging words. Waiting until they are somewhat familiar with difficult words will increase the likelihood that they will solve the crossword puzzles with confidence easily.

**Crossword puzzles as a learning tool:**
Crosswords puzzles are a game which makes the learners a good adjunct to the repertoire of active learning. One major advantage is that most students associate crossword puzzles with game playing and recreation. Hence, incorporating crossword puzzles as a learning activity can help to make the subject more fun and to increase students' engagement with the vocabulary. For instance, look at the following simply created Tamil crossword puzzle:




**Across**
1. Kids play with this.
3. This is the opposite word for the word which starts with 1(down)
4. Song
5. One of the stars

**Down**
1. This is the similar word to (a) in the Tamil proverb, "களவும் (a)………. மற".
2. It is a place where games are played.
4. Sex

By solving the above crossword puzzle, the learners get encouraged and motivated to develop the Tamil vocabulary, and especially when they do it in a computer system the learners get the knowledge successfully through a new learning style of *teachnology*, i.e. the combination of *teach* from *teaching* and *nology* from *technology*, formed in the process of word formation, *Blending*. Further, creating a crossword puzzle involves other very useful skills for learning process such as imagination, creativity, reasoning, logical thinking, written communication, and researching. Students are able to benefit from creating their own crossword puzzles. By doing so their creativity increases in word power. As a result, they develop their vocabulary. Even if a computer system generates the words, allowing students to input definitions is a great way to get new information in front of them in a different format. Additionally, swapping puzzles with learning-mates creates an element of competition and fun in solving the puzzles, which adds interest to the learning process. Further, Puzzles are great for helping learners to internalize words instead of simply cramming for a test. As a result, learners can enjoy the learning process and are provided with opportunities to have a bit of fun.

**Ultimate benefits of crossword puzzles:**

1. Crossword puzzles draw upon one's general knowledge, recall of words defined or suggested by short definitions or pieces of information, and spelling ability. Through study and practice, a person learns some useful strategies and can make considerable gains in crossword puzzle solving expertise. Doing a crossword puzzle is like doing a certain type of brain exercise. In recent years, research has provided evidence that such brain exercises help to refrain from the dementia and Alzheimer's disease that are so common in old people.
2. Crosswords have been found to increase students' confidence in their ability and understanding. The satisfaction derived from successfully solving one clue encourages students to continue toward the completion of the puzzle.
கணினியின் செயற்களமாகப் பயன்படும் இடங்களே பயன்பாட்டியல் ஊடகம் ஆகும். கணினியைப் பயன்படுத்த முதலில் பயன்பாட்டியல் ஊடகங்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. இவை ஒவ்வொரு இயக்கு தளத்திற்கும்

(Operating System) தனித்தனியாகவும் பலவற்றில் பயன்படுத்தும் வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளன.

கணினியின் செயற்களமான இவற்றில் இக்கட்டுரை Microsoft எனும் நிறுவனத்தின் செயற்பாட்டியல் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை MS Word, MS excel, MS PowerPoint போன்ற MS office package –களே வாரியான பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் பயன்படுத்தப்படும் சுருக்கு வழிகளே எளிதில் பயனர்களுக்கான புரிதலுடையதாக(User friendly) கருதப்படுகிறது.

பல்லூடகம்(multimedia)

பல்லூடகம் என்பது கணினி பயன்படுத்துதலில் மற்றுமொரு திருப்புமுனை கொண்டதாகும். இது விளக்கக் காட்சி அமைப்பினை முதன்மைப்படுத்துகிறது. பண்டைய கல்வி கற்பித்தலுக்கான உபகரணங்களை இது அப்புறப்படுத்தியுள்ளது. பல்லூடகத்தின் வழியான கற்பித்தலில் ஒளி, ஒலி காட்சிகளும், அனிமேஷன்களும் கற்பவரைத் தன்வசப்படுத்த அமைக்கப்படுகின்றன. இவற்றைக் கற்பித்தலில் எளிய நிலை இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

பல்லூடகங்களில் எளிய முறைகளான ஒலி(Audio)யைப் பயன்படுத்துல் முதல்நிலையாகும். பல்லூடகங்களில் ஒலி மிகச்சிறப்பிடம் பெறுகிறது. மென்மங்களில் ஒலி அமைப்பினைக் கட்டுப்படுத்துதல் மிக எளிதானதாகவும் பல்வகையான ஒலி வடிவங்களை ஒன்றிணைத்தலும் adobe Audition எனும் மென்பொருள் சிறப்பாகச் செயல்படுகிறது. பல்வேறு ஒலிஅமைப்புக்களை ஒன்றிணைக்க Multi track எனும் பின்வரும் படம் எடுத்தாளப்படுகிறது.




ஒருவகையான ஒலி அமைப்பினைப் பயன்படுத்த Single Track எனும் பகுதி பயன்படுத்தப்படுகிறது.




ஒலிப்பயன்பாட்டில் திருத்தங்களை மேற்கொள்ள MS Word சுருக்கு வழிகள் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக Ctrl X –Cut, Ctrl V –Paste Ctrl C –copy, Ctrl Z –Undo என்பன போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம். எளிய key வடிவங்கள் நேரடியாக தெரிவதனால் பயன்படுத்துதலில் எளிமையாக அமைகிறது. play, pause, loop, continuous play, record, fast forward, rewind, zoom, zoomout, 100%zoom Key-கள் நேரடியாகத் தெரியும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒலிப்பயன்பாட்டின் எத்தகைய வடிவ கோப்புகளையும் திறந்து மாற்றியமைக்க இயலும்படியாக அமைக்கப்பட்டுள்ளது. புதிய கோப்புகளைத் திறக்க மாற்றியமைக்க வழக்கமான சுருக்கு வழிகளுடன் நேரடியான இடங்களும் காட்டப்படுகின்றன. ஒலி அமைப்பினை தேவைக்கேற்ப மாற்றவும் இதில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காட்சி ஊடகம் என்பது நேரடியாக ஒளியோடு தொடர்பு கொள்கிறது பல்வேறு காட்சியமைப்புக்களை ஒன்றிணைத்தல் ஒளி,ஒலிகளை ஒன்றிணைத்தல் பல்வேறு உருவங்களை ஏற்படுத்துதல் அவற்றின் வழியாக நமது கருத்துக்களை விளக்குதல் என்பவை கற்பித்தலில் மிக முக்கிய இடம் பெறுகின்றன. அவற்றிற்கான எளிய மென்மங்களாக MS Movie maker ஐக் குறிப்பிடலாம் இதில் ஒளி வடிவங்களைத் தனியாகவும் ஒலி வடிவங்களைத் தனியாகவும் பயன்படுத்தி Dubbing பணிகளை எளிமையாக மேற்கொள்ளலாம். வழக்கமாக நேரடிக்காட்சிகளாகக் கிடைக்கும் படங்களை அவை எந்த வகை கோப்பாக இருப்பினும் மாற்றங்களைச் சேர்க்கவும் படங்களை இடையிடை ஒட்டவும் சுருக்கவும் வேகமாக ஓடவைக்கவும் இம்மென்பொருள் பயன்படுகிறது. ஒலி வடிவங்களைப் பிரித்துக்காட்டுவதால் வேறு ஒலிகளை எளிமையாக மாற்ற இயலுகிறது. தெரிந்த படங்களைக் காட்டி பல்வேறு வகையான ஒலிகளைச் சேர்த்து வகுப்பறையை ஒளி ஒலிக் கூடமாக மாற்ற முடிகிறது.

ms word, ms excel, ms PowerPoint போன்ற பேக்கேஜ்களைப் படங்களாக மாற்றவும் அவற்றுடன் ஒலி வடிவங்களை சேர்த்தும் எளிய முறையிலான அனிமேஷன்களை உருவாக்கவும் தற்போது பல புதிய மென்மங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. I screen record போன்ற மென்மங்கள் கணினியில் உள்ளீடு செய்யப்படும் தகவல்களை வீடியோ வடிவில் படம் பிடித்துத்தருகின்றன. இவற்றை புகைப்படமாகவோ வீடியோ படமாகவோ மாற்றிக் கொள்ளலாம்.

பல்லூடகத்தின் மிகச்சிறந்த படைப்பாக இன்று கருதப்படுவது அனிமேஷன் ஆகும். தற்போதைய நிலையில் மாயா எனும் பிளாஷ் வகை அனிமேஷனில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது.

உருவங்களில் செய்யப்படும் மாற்றங்களும் அவற்றை இருபட்டை ,முப்பட்டை வடிவில் நோக்கும் முறைகளும் பெருகி வருகின்றன. இவற்றை அறிந்து கொள்ளலே இன்றைய தமிழ் கற்பித்தலுக்கான சவாலாக உள்ளன.

நிறைவாக

தமிழ் கற்பித்தலில் புதிய வகைகளான மென்பொருட்களைப் பயன்படுத்தி தமிழ் கற்பிக்கச் செய்தலில் பல்லூடகத்தின் பங்களிப்பு மிகுதியாக காணப்படுகிறது. பக்க வரையறை கருதி கற்பித்தலில் ஒலி வடிவங்களை எடிட் செய்யும் வகையில் அடொப் ஆடிஷன் எனும் மென்பொருளைப் பயன்படுத்தும் அறிமுகம் இக்கட்டுரையில் அமைகிறது. மேலும் ஒளி வடிவங்களில் பயனர் நட்பினதாக உள்ள மைக்ரோசாப்ட் மூவிமேக்கர் எனும் மென்பொருளும் இக்கட்டுரையில் பயன்படுத்துதலில் எளிய வடிவங்களைக் கையாளுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கணினி மற்றும் இணையவழி தமிழ்க்கல்வி கற்றல்,கற்பித்தல்.

வே. எட்வின் ராஜா,
தமிழ்த்துறைத் தலைவர் & துணை முதல்வர்,
ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு

### முன்னுரை

இன்றைய கல்வியில் கணினித் தொழில் நுட்பம் நாளும் வளர்ந்து வருகிறது; மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அனைத்துப் பாடப் பிரிவுகளிலும் இந்நுட்பம் பயன்படுகிறது. தமிழ் கற்றல் கற்பித்தலும் இந் நுட்பத்தின் பல்வேறு தளங்களைக் கண்டறிவது தமிழக் கல்வியாளர்களின் வேட்கையாகக் காணப்படுகிறது. கணினி நுட்பத்தோடு இணைந்த இணையவழி அணுகு முறையில் தமிழ் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் பயன்படுத்தப் படவேண்டிய சூழல்கள் உருவாகி வருகின்றன. அவை நிறுவனம் சார் (Formal) நிறுவனம் சாரா (Non formal), இயல்பு நிலை (Informal) ஆகியனவற்றில் காணப்படுகின்றன. இவற்றிற்குக்கருத்தூட்டம் வழங்குவது தமிழ்க் கல்வி வல்லுநர்களோடு இணைந்த கணினி வல்லுநர்களின் கடமையாகும்

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் மிக விரைவான வளர்ச்சி கல்வித் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கணினியையும் இணையத்தையும் பயன்படுத்தாத கல்வி நிறுவனங்களே இல்லை என்கின்ற அளவுக்குத் தொடக்கப் பள்ளி தொடங்கி உயர்க்கல்விக் கழகங்கள் வரையில் எல்லா இடங்களிலும் இதன் ஆதிக்கம் பெருகி வருகின்றது. இத்தகையச் சூழலில், கற்றல் கற்பித்தலில் இணையமும், இணைய ஏந்துகளும் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டன எனலாம். 1996 / 1997ஆம் ஆண்டுகளிலேயே கற்றல் கற்பித்தலில் இணையம் ஊடுருவி வளர்ந்துவிட்டது ஆகவேதான், இணையத்தைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலை வழிநடத்துவதற்கு உலகம் முழுவதிலும் உள்ள எல்லாக் கல்வி நிறுவனங்களும், தனியார், தன்னார்வ நிறுவனங்களும் முண்டியடித்துக்கொண்டு முயற்சிகளை முன்னெடுக்கின்றன.

நிறுவனங்கள் கற்பித்தல் முறைகளை வகுக்கவும் நடைமுறைப் படுத்தவும் பல அணுகு முறைகளை மேற்கொண்டு வருகின்றன. கணினி நுட்பத்தைப் பயன்படுத்தி மென்னுருக்களைத் (Software) தம் பாடப் பகுதிகளுக்கேற்ப ஆசிரியர்களே உருவாக்கி வருகின்றனர். உருவாக்கப்படும் மென்னுருக்களின் தன்மை அறிவியல் பாடங்களுக்கான மென்னுருக்களிலிருந்து தமிழ்ப்பாட மென்னுருக்கள் தன்மையாலும்,

தயாரிப்பு முறையாலும் வேறுபடுகின்றன. உயிரோட்டமுடைய தகவல்களைக் கொண்டு அமைவன தமிழ்ப் பாடங்கள். அதனைப் பவர் பாயிண்ட் (Power Point) முதலியவற்றில் வெளிப்படுத்தும்போது அவற்றுள் இயக்கமிகு காட்சிகளைப் பதிக்கவேண்டும். இவற்றிற்கான பயிற்சிகள் தமிழாசிரியர்களுக்கு - தமிழகத்திலுள்ள தமிழாசிரியர்களுக்குத் தேவைப் படுகின்றன. இன்றைய கல்வி, தொடக்கம், உயர்தொடக்கம், உயர்நிலை, மேனிலை, இளநிலைப்பட்டம், முதுநிலைப்பட்டம், ஆராய்ச்சி என 7 படி நிலைகளிலும் நிறுவனம் சாராது வளர்ந்து வருகிறது.

அச்சு ஊடகங்கள் சாதிக்கமுடியாத கற்றல் கற்பித்தல் முறைகளைக் கணினி இணைய நுட்பங்கள் சாதிக்கவியலும். ஆசுபெல் (Ausubul) பெஞ்சமின்புலும் (Benjamin Bloom) முதலானோர் எத்தகைய கடினமான கற்றல் பகுதியையும் கற்கவியலும் என்பதற்கு உளவியல் விளக்கங்களைத் தந்துள்ளனர்.

இணையத்தின் வழியாக அல்லது செயலிகள், மென்பொருள்கள், வலைத்தளங்கள், மின்னிதழ்கள், ஒலி ஒளி மின்னூடகங்கள், மடற்குழுக்கள், சமூக வலைத்தளங்கள் முதலான இணைய ஏந்துகள் வழியாகத் தமிழ்மொழியைக் கற்கவும் கற்பிக்கவும் வேண்டிய தேவைகள் அதிகரித்து வருகின்றன. ஆகவே, காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய அணுகுமுறையில் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும். அதற்குரிய விரிவான வாய்ப்புகள் இன்று உருவாகி இருப்பதை ஊக்கத்துடன் வரவேற்று விரிவாகப் பயன்கொள்ள வேண்டும்.

இணையம் வழிக் கற்றல் (e-learning) இரண்டு வகையில் செயல்படுகின்றது. ஒன்று இணையம் வழி கற்பித்தல் (web based instruction, WBI). மற்றொன்று, கல்வி வலைத்தளங்கள் வழி கற்றல் (educational web sites, EWS). இவ்விரண்டும் ஆங்கிலத்தில் மட்டுமே செயற்பட முடியும் என்ற நிலைமை மாறி, இன்று தமிழிலும் மிக இலகுவாகச் செயல்படுத்த முடிகின்றது.

இணையம் வழி கற்பித்தலில் (WBI), இணையம் ஒரு பயிற்றுத்துணைப் பொருளாக அல்லது கற்றல் ஊடகமாகப் பயன்படுகின்றது. அதாவது, ஆசிரியர் மாணவருக்குக் கற்பிக்க இணையத்தை ஓர் ஊடகமாகப் பயன்படுத்திக்கொள்வதாகும். இதன்வழி ஆசிரியர் மாணவருக்கு அல்லது ஒரு மாணவர் இன்னொரு மாணவருக்கு இணையம் வழியாக ஒன்றைப் பயிற்றுவிக்கவும், வழிகாட்டவும், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் முடிகின்றது. இதற்கு, மின்னஞ்சல் (email), இணைய உரையாடல் (chat), நிகழ்ப்பட கருத்தரங்கு (video conference), மடற்குழு (news group), கோப்பு பரிமாற்று நெறிமுறை (File Transfer Protocol, FTP), சமூக

வலைத்தளம் (social network) முதலான இணைய ஏந்துகள் மிகவும் உறுதுணையாக உள்ளன. மேலும் ஆயிரக்கணக்கிலான தமிழ் வலைத்தளங்களும் வலைப்பதிவுகளும் கற்பித்தலுக்கு உதவக்கூடிய தரவுகள், செய்திகள், தகவல்கள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எனப் பல்வேறு வகையான கற்றல் கற்பித்தல் மூலங்களை (Teaching and Learning Source) வழங்குகின்றன.

மொழி இலக்கியப் பாடங்களில் மேற்குறிப்பிட்ட ஏழு படி நிலைகளுக்குரிய கற்றல் பொருள் அமைந்துள்ளது. படிநிலைக்கேற்றவாறு எளிமையிலிருந்து கடினம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் கற்றல் பனுவல்களை வழங்க இணைத்தள நுட்பம் வழிசெய்கிறது. வணிகத் துறையில் நிறுவனங்களுடைய வலைத்தளங்கள் அவற்றினுடைய பல்வேறு பிரிவுகளையும் செயல்பாடுகளையும் 'அவற்றின் முகப்புப் பக்கத்தில் குறித்துக் காட்டி மிகச் சிறப்பான முறையில் முழுவிவரங்களைத் தருகின்றன.

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலுக்கு உதவும் இணைய ஏந்துகள் தற்போது பல்கிப் பெருகி வருகின்றன. மழலையர் கல்வி தொடங்கி முனைவர் படிப்பு வரையில் தமிழில் படிப்பதற்குரிய வாய்ப்புகளை இன்றைய இணைய உலகம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து முதலான அடிப்படைப் படிப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரையில் இணையத்தில் படிக்கக்கூடிய நிலைமை உருவாகிக்கொண்டு வருகின்றது. இலக்கணத்தையும் இலக்கியத்தையும் புதிய ஊடகத்தின் வழியாக புதிய அணுகுமுறைகளோடு கற்பதற்கும் கற்பிப்பதற்கும் வாய்ப்புகள் பெருகி வருகின்றன.

இன்றைய சமுதாயச் சூழலில் கணினி அறிவு இளைய தலைமுறை யினரிடத்துப் பெருகி வருகிறது. நாள்தோறும் கணினியின் முன்னமர்ந்து தகவல்களைத் திரட்டுதலில் இவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். அவர்கள் ஆர்வத்திற்கேற்றவாறு மொழி இலக்கிய வலைத்தளங்களைக் கற்பித்தல் நுட்பங்களோடு உருவாக்குவது தமிழ்க் கல்வியாளர்களின் பொறுப்பாகும். இவர்களின் கல்வி நுட்பத்தைக் கணினி வல்லுநர்கள் வலைத்தள நுட்பத்துள் இணைக்க வேண்டும்.

இந்தக் கட்டுரையானது, தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலுக்கு இணையத்தை எவ்வாறு பயன்கொள்ள முடியும் என்பதையும்; இணையம் தொடர்பான ஏந்துகளைத் (வசதிகள்) தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்கு எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியும் என்பதையும் ஆராய்கின்றது. மற்ற எல்லாத் துறைகளையும் போலவே, இணையம் கற்றல் கற்பித்தலிலும் மிகப்பெரிய உருமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மரபு

வழிசார்ந்த கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் குடியிருந்த வகுப்பறைகளில், தற்போது நவினமான அணுகுமுறைகள் இடம்பிடித்துள்ளன.

முடிவுரை

இணையம் வழியான கல்வி முறை ஆசிரியர்களின் கற்பித்தலிலும் மாணவர்களின் கற்றலிலும் புதிய வகைப் பரிணாமங்களை உண்டாக்கிக் கொடுத்திருக்கின்றன. எளிமை, கற்றல் கற்பித்தலுக்கு உதவும் வகையில் பலவகையான இணைய ஏந்துகள் (வசதிகள்), செயலிகள், மென்பொருள்கள், வலைத்தளங்கள் முதலியவை நிறைய வந்துவிட்டன. இணையத்தைப் பயன்படுத்தி தமிழ்மொழியைக் கற்கவும் கற்பிக்கவும்கூடிய வழிவகைகள் அறிந்து செயல்படுத்த வேண்டும். மொத்தத்தில், தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தையும் இணைய ஏந்துகளையும் முறைப்படுத்தித் திட்டமிட்டுச் சரியாகப் பயன்படுத்தினால் நன்மை விளையும் என்பதில் ஐயமில்லை.

## தமிழ் மொழிப் பாடத்திட்டத்தில் கேட்டல் திறனும் தகவல் தொழில்நுட்பத்தின்வழி அதை முன்னிலைப்படுத்தலும் - ஒரு பார்வை

**டாக்டர் சீதாலட்சுமி* & திருமதி சின்னம்மா தேவி****

*தேசியக் கல்விக் கழகம், சிங்கப்பூர்; **ஜூரோங் தொடக்கப்பள்ளி, சிங்கப்பூர்

சுருக்கம்:

மொழித்திறன்களைக் கற்றுத்தரும் வகையில் மொழிப்பாடத்திட்டம் அமைவது ஒரு புறமெனில் அதற்கு வலுவைச் சேர்க்கச் சில அடிப்படைக் கருப்பொருள்களும் ஆசிரியவியல் அணுகுமுறைகளும் அங்கு இடம்பெற்றிருக்கும். மொழித் திறன்கள் எனும்போது கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்ற முறையில் அத்திறன்கள் அமைந்திருக்கும். கேட்டல் என்பது முதலாவது திறன். எனினும் அத்திறன் எந்த அளவிற்கு இன்றியமையாதது என்றால் அதுதான் எல்லாத்திறன்களையும் பெற வழிவகுக்கும் முழுமூலத் திறனாக உள்ளது எனலாம். எந்த ஒரு மொழித் திறனையும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் ஊடகமாக உள்ள பாடத்திட்டத்துடன்(Wee, 1997) இணைத்துக்கற்பிக்கும்போது அங்கே, உள்ளடக்க அறிவும் ஆசிரியவியல் அறிவும் தொழில்நுட்ப அறிவும்(Technical Pedagogical Content Knowledge - TPCK) இணைந்திருக்கும் ஆசிரியரின் பாடம் தனித்தன்மையுடன் திகழும். அத்தகு தனித்தன்மையுடன் தமிழாசிரியர் எவ்வாறு கேட்டல் திறனை மாணவர்களிடையே வளர்க்கலாம் என்று நோக்குவது இன்றைய நிலையில் இன்றியமையாததாக இருக்கிறது. ஏனெனில் கிராஷென்(Krashen, 1981) கூறியதுபோல பொருள்பொதிந்த உள்ளீடு என்பதற்குக் கேட்டல் திறன் பெரிதும் வழிவகுக்கும். மேலும் சிங்கப்பூரில் கல்வி அமைச்சு(MOE, 2008), தகவல் தொழில்நுட்ப முதன்மைத் திட்டங்கள் 1, 2, 3 (ICT Master Plans 1: 1997 — 2002; 2: 2003 — 2008; & 3: 2009-2014) ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தகு திட்டங்கள், நாட்டின் தொலைநோக்குத் திட்டமான “சிந்திக்கும் பள்ளிகள் கற்கும் நாடு” என்ற தாரகமந்திரத்தைச் செயல்படுத்த அத்தியாவசியமானவை (கோபிநாதன், 2014). பாடத்திட்டத்தில் இடம்பெறும் இத்தகு முனைப்புகளையும் மாற்றங்களையும் உள்வாங்கி அவற்றுக்கு உயிர்கொடுப்பவர்கள் ஆசிரியர்கள்(ஸ்னைடர், போலின், ஸூம்வாட் 1992). இவர்கள் தாங்கள் மட்டுமின்றி மாணவர்களும் தகவல் தொழில்நுட்பத்தைத் தம் வாழ்வியல் அனுபவத்திற்கும் வயதிற்கும் வாழும் சூழலுக்கும் ஏற்பப் பயன்படுத்தித் தம் பாடங்களில் மேம்படவும் அம்மாணவர்கள் குவலயக் குடிமக்களாக உயரவும் வழிவகுக்க வேண்டும். அத்தகைய முயற்சிகள் குறித்துக்கட்டுரை பேசுகிறது. மேலும், பாடத்திட்டத்தில் கேட்டல் என்பது எந்த அளவிற்கு இடம் பெற்றுள்ளது? அது எத்தகு அணுகுமுறையில் கற்றுத் தரப்படுகிறது? கேட்டலைக் கற்றுத்தருவதில் செலவிடும் நேரம் எந்த அளவிற்கு இன்றியமையாதது? என்ற வினாக்கள் தொடர்பாக இடம்பெற்ற சிறு ஆய்வு

தெரிவிக்கும் செய்திகள் யாவை? தகவல் தொழில்நுட்பத்தின் உதவியோடு கேட்டலைத் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் மட்டுமின்றி மதிப்பீட்டிலும் எந்த அளவிற்கு முன்னிலைப்படுத்தலாம் என்பது குறித்த கருத்துகளை முன்வைக்கிறது, இக்கட்டுரை. கேட்டலை மாணவர்களிடையே எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான தலைப்பில் மேற்போக்கான நோக்கில் பரந்துபட்டவகையில் இடம்பெறும் கருத்துகளைக் கொண்டமைகிறது இக்கட்டுரை

**முக்கியச்சொற்கள்: கேட்டல், முன்னுரைத்தல், தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய கேட்டல், பேசுதல்**

**கேட்டல்**

கேட்டல் என்பது வாழ்வில் இன்றியமையாத ஒரு திறன் என்றால் அதைச் செய்திகளைக் கேட்பதற்கும் அறிவுப்பூர்வமாகச் சிந்தித்தபடி கேட்பதற்கும் ஒரு வினாவை அல்லது புதிரைப் புத்திசாலித்தனமாக விடைகாணக் கேட்பதற்கும் சாலையில் செல்லும் வாகனங்களின் சத்தம் விரும்பியும்விரும்பாமலும் காதில் கேட்பதற்கும் வேறுபாடுகள் பல உள்ளன. அந்நிலையில் கேட்டல் என்பது வகுப்பில் நிகழவேண்டுமாயின் ஆசிரியர் மிகவும் கவனமாகப் பாடத்தை நடத்தவேண்டும். கிராஷன் என்பார் கூறியதுபோல அதிகமான செய்திகளைக் கேட்கும்போது மாணவர்கள் புதிய சொற்களையும் வாழ்க்கை அனுபவங்களையும் வாக்கிய அமைப்புகளையும் மொழியின் தன்மையையும் பாடத்தின் உள்ளடக்கத்தையும் அறிந்துகொள்கின்றனர். இது அவர்கள் மூளையில் செலுத்திச் சிந்தித்துப்பதித்துப் பின் மீண்டும் தேவையானபோது பயன்படுத்த வழி கிடைக்கும். அவ்வகையில் கேட்டல் என்பது மிகவும் இன்றியமையாத முதல் திறன். ஆனால் அதை நேரடியாகக் கற்பிப்பதைவிட அத்திறனை வளர்க்கும் வகையில் கதை கூறுதல், பாடல் கேட்டல், பாடலை விளக்குதல், மாணவர்கள் வாழ்வியல் அனுபவங்களைப் பகிர்தல், செய்திக்கொத்தைக் கேட்டல் எனப்பல நிகழ்வுகளை வகுப்பறையில் நிகழ்த்திக் கேட்டலுடன் பேசுதலையும் இணைக்கலாம். டுங்கு மாணவர்கள் வகுப்பறையில் நேரடியாகப் பேசிக் கேட்டு மகிழ்வதுடன் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் வழியையேயும் கேட்டலைப் பயிற்சி செய்து மேம்படுவது அதிகப் பயன்தரும்.

தமிழ்மொழிப் பாடத்துக்கான 2008 பாடத்திட்டத்தில் கேட்டல் என்பது பேசுதல் இணைந்து வரும்வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலும் கூறப்படும் எளிய கட்டளைகளை, எளிய கதைகளை, எளிய பாடல்களை மாணவர்கள் கேட்டுப் புரிந்துணர்வை வெளிப்படுத்தும் வகையில் ஆரம்பிக்கும் கேட்டல் பயிற்சிகள் மெல்ல மெல்லக் கடினத்தன்மையைப் பெறுகின்றன. இங்கு மாணவர்களுக்கு கேட்டல் கருத்தறிதல் பயிற்சியுடன் கூடுதலாக ஆசிரியர்கள் கேட்டலை முன்னிலைப்படுத்திப் பாடங்களை நடத்துவது பயனுடையதாக இருக்கும். ஏனெனில் பொருத்தமான, பொருள் பொதிந்த மற்றும் அதிகமான உள்ளீடு இருந்தால்தான் அங்கே ஏற்புடைய வெளியீடும் அமையும்.

மேலும் மாணவர்களின் முன்னறிவை இயக்கும்வகையில் அமையும் கேட்டலும் அதற்கு உதவியாக அமையும் பேசுதலும் பெரும்பயன் தரும்.

**கற்றல் விளைவுகளும் அடைவுநிலைகளும்**

| கேட்டல் | | |
|---|---|---|
| **கற்றல் விளைவு:** மாணவர்கள் தங்கள் வயதிற்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பொருத்தமான பனுவல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர். | | |
| **தொடக்கநிலை 2-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை 4-ஆம் ஆண்டின் இறுதியில்** | **தொடக்கநிலை 6-ஆம் ஆண்டின் இறுதியில்** |
| **மாணவர்கள்**<br>• எளிய கட்டளைகளைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• எளிய பாடல்களையும் கதைகளையும் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• தமிழ் எழுத்துகள், எளிய சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br>• பல்வேறு கட்டளைகளையும் அறிவிப்புகளையும் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• பாடல், கதை, கதைப்பாடல், உரையாடல் முதலியவற்றைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• எளிய பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். | **மாணவர்கள்**<br>• பல்வேறு பேச்சுப் பனுவல்களையும் எழுத்துப் பனுவல்களையும் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>• பேச்சுத்தமிழையும் எழுத்துத்தமிழையும் வேறுபடுத்தியறிந்து தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள்.<br>* செய்தி நிகழ்ச்சிகள், சொற்போர், கலந்துரையாடல் முதலிய பல்வேறு தகவல் நிகழ்ச்சிகளைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் புலப்படுத்துவார்கள். |
| மாணவர்கள் தமது புரிந்துணர்வை வாய்மொழியாகவோ மெய்ப்பாடு வாயிலாகவோ அல்லது இரண்டு விதத்திலும் புலப்படுத்துவார்கள். வரிவடிவத்திலும் வெளிப்படுத்துவார்கள். | | |

* உயர்தமிழுக்கு மட்டும் உரியது.

(கல்வி அமைச்சு, 2008:10)

ஆழமான கருவுக்காகக் கேட்டல், ஒரு வேலைக்காகக் கேட்டல், முக்கியக்கருத்துக்காகக் கேட்டல், முன்னுரைப்பதற்காகக் கேட்டல், சிறப்பான ஒரு செயலுக்காகக் கேட்டல், ஒலிக்கூறு வேறுபாட்டுக்காகக் கேட்டல், குரல் ஏற்ற இறக்கத்துக்காகக் கேட்டல், பேசுபவரின் குணப்போக்கைக் கண்டறிவதற்காகக் கேட்டல்(David Nunan, 1999) எனப் பல காரணங்களுக்காகக் கேட்டல் இடம்பெறும். இந்தக் கேட்டல் எந்த அளவுக்கு முக்கியமானது, எந்த அளவுக்குப் பயனுடையது என்பதை அறியும் வகையில் தொடக்கப்பள்ளி ஒன்றில் ஆய்வு ஒன்றை இக்கட்டுரையின் இணை ஆசிரியர் மேற்கொண்டார். அவரது முதுகலைக் கல்வியியல் பட்டத்துக்கான ஒரு பாடத்திற்காக இந்தச் சிறிய புலனாய்வை அவர் மேற்கொண்டார். கட்டுரையின் அளவு கருதி, அது குறித்துச் சில தகவல்கள் இங்கு இடம்பெறுகின்றன.

**ஆய்வின் சுருக்கம்**

சிங்கப்பூர் தமிழ் மாணவர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் பேசும் பின்னணியிலிருந்து வருகிறார்கள். மாணவர்கள் தமிழில் பேச முயற்சி செய்யும் பொழுது முதலில் ஆங்கிலத்தில் யோசித்துப் பின் தமிழில் மொழிபெயர்ப்பார்கள். ஆங்கிலத்தில் அவர்கள் விரும்பிப் படிப்பதுபோல, விரும்பிக் கேட்பதுபோல தமிழில் அவர்கள் செய்வதில்லை. மொழி கற்றலில் இவை இரண்டும் மிகவும் முக்கியம். தற்போதைய தமிழ் வகுப்பறையில் மொழி திறன்களில் முதல் திறனான கேட்டல் திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. தமிழ் மாணவர்களுக்கு அதிகமான தமிழில் சொல்வளம் இல்லாததால் பேசும் போது சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்; தவறான சொல் பயன்பாடும் அதிகம் காணப்படுகிறது புரிந்துகொள்ளக்கூடிய உள்ளீட்டுக்கும்

கேட்டலுக்கும் நீடித்த பேசுதலுக்கும் தொடர்பு உள்ளது. மாணவர்களுக்கு வகுப்பறையில் அதிகம் பேசும் வாய்ப்புகளும் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே இடைவினையாடலும் அதிகம் இடம்பெற்றால் அவர்களின் மொழி கற்றலில் சாதகமான விளைவுகள் ஏற்படும் என்பதும் புலனாய்வாளரின் கருத்து.

**சிங்கப்பூரில் தமிழ்**

தற்போதைய நிலையில் தாய்மொழியின் புழக்கம் குறைந்துகொண்டுதான் வருகின்றது. அதுவும் குறிப்பாகத் தமிழ்க் குடும்பங்கள் பெரும்பாலும் ஆங்கிலம் பேசும் குடும்பங்களாக இருக்கின்றன. தாய்மொழிகள் மறு ஆய்வில் தொடக்கநிலை ஒன்றில் சேரும் மாணவர்களில் 58% ஆங்கிலம் பேசும் குடும்பங்களிலிருந்து வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (தாய்மொழிகளின் மறு ஆய்வுக்குழு அறிக்கை, 2010).

சிங்கப்பூரில் தமிழ் மொழிக் கல்வி சற்று சிக்கலானதே. முதல் மொழி போல் தரம் இருக்க வேண்டும் என்ற ஆசையினால், எதிர்பார்ப்பினால் தமிழ் மொழிக் கல்வி கடுமையானதாக விளங்கியது. தொடக்கநிலையிலேயே இலக்கணம் கற்பிக்கப்பட்டது; கருத்தறிதல் பகுதிகள் கடினத் தன்மை வாய்ந்தவையாக இருந்தன. மாணவர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சிங்கப்பூர் மாணவர்கள் இரண்டாம் மொழியாகவே தமிழைக் கற்கின்றனர். அவர்களிடமிருந்து எந்தளவுக்கு எதிர்பார்ப்பது? மாறி வரும் சூழலால், வாழ்க்கைத் தரத்தால், மாணவர்களின் தோற்றங்கள் மிகவும் மாறிவிட்டன. இரண்டாம் மொழிக் கற்றலும் இந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைய வேண்டும்.

**சிக்கலின் பின்னணி**

புலனாய்வாளர் இதுவரை கற்றுக்கொடுத்துள்ள தமிழ் மாணவர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் பேசும் பின்னணியிலிருந்து வருகிறார்கள். சிங்கப்பூரின் பொதுவான நிலையும் இதே. மாணவர்கள் தமிழில் பேச முயற்சி செய்யும் பொழுது முதலில் ஆங்கிலத்தில் யோசித்துப் பின் தமிழில் மொழிபெயர்ப்பார்கள். அவர்களுக்குத் தமிழில் அதிக சொற்கள் தெரியவில்லை. ஒன்று, அவர்கள் தமிழில் வாசிப்பதில்லை. இரண்டு, அவர்கள் தமிழை அதிகம் கேட்பதில்லை. மொழிக் கற்றலில் இவை இரண்டும் மிகவும் முக்கியம். தமிழ் வகுப்பிற்கு அப்பால் அவர்கள் தமிழைப் பயன்படுத்துவதும் இல்லை. சிங்கப்பூர்த் தமிழ் மாணவர்கள் பெரும்பாலும் இவ்வகையில் அடங்குவர். இந்தியாவிலிருந்து வரும் மாணவர்கள் முதல் மொழியாகத் தமிழைப் பயன்படுத்துபவர்கள். அவர்களுக்கு இச்சிக்கல் இல்லை. ஒரு நாளைக்கு சுமார் ஒரு மணி நேரம் மட்டுமே மாணவர்கள் தமிழைக் கேட்டுப் பேசுகிறார்கள். ஒரு மணி நேரத்தில் எவ்வளவுதான் செய்வது? அவர்கள் வாய்மொழித் தேர்வில் தட்டுத் தடுமாறிப் பேசுவதைக் கண் கூடாகப் பார்க்க முடிகின்றது. கட்டுரை எழுதும்போது, அடிக்கடி அவர்கள் ஆங்கிலத்தில் சொற்களைக் கூறி, தமிழில் எப்படிச் சொல்வது என்று கேட்கிறார்கள். இவர்களுக்குத் தமிழில் சொல்வளம் அதிகம் இல்லாததால் மிகவும் சிரமப்படுகின்றனர்.

**மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள்**

மாணவர்கள் எப்போதும் கட்டுரை எழுதவும் கருத்தறிதலில் பதில் எழுதவும் சிரமப்படுகின்றனர் என்பது பொதுவான ஒரு குற்றச்சாட்டு. அதனால் நாம் கற்பித்தல் உத்திகளைப் பற்றி ஆராய்ந்து புதுப்புது உத்திகளைக் கையாளுகின்றோம். ஆனால் என்னைப் பொறுத்தமட்டும் இதற்கான அடிப்படைக் காரணம் சொல்வளம் இன்மையே. ஆங்கிலத்தில் அவர்கள் விரும்பிப் படிப்பதுபோல, விரும்பிக் கேட்பதுபோல தமிழில் அவர்கள் செய்வதில்லை. அடித்தளம் வலுவாக இல்லாத நிலையையே புலனாய்வாளர் கண்டுள்ளார். இங்கு அடித்தளம் என்பது, மாணவர்களின் தமிழ் சொல்வள அறிவு. ஏன் இந்த நிலை? நாம் ஏன் சொல்வளத்தைப் பெறுக்க முயலவில்லை? சொல்வளம் ஒரு மொழிக்கு மிகவும் முக்கியம். அதனால் இப்பிரச்சினை ஆராயப்பட வேண்டிய ஒரு முக்கிய பிரச்சினை. மேலும் இரண்டாம் மொழி கற்றலில் கேட்டல் திறனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஆய்வுகள் கூறுகின்றன (செல்சி-மர்சியா, 2001 & சியொங், 2010). ஆனால் நமது வகுப்புகளில் அந்த நிலை இல்லை. மேலும் எழுதுதலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இரண்டாம் மொழிக் கற்றலில் கேட்டலுக்கும் பேசுதலுக்குமே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நன்கு கேட்டுப் பேசிய பின்னரே மாணவர்களால் நன்றாக எழுத முடியும். அதனாலேயே இப்பிரச்சினை எதிர்நோக்க வேண்டிய ஒன்று என்பது புலனாய்வாளரின் எண்ணம்.

**ஆய்வின் பின்னணி**

ஆசிரியரும் மாணவர்களும்தான் வகுப்பறையில் நடக்கும் உண்மை நிலவரத்தை விளக்க முடியும். அவர்களிடமிருந்து பெறும் தரவுகள் உண்மையானவையாக இருக்கும் என்று நம்புகிறேன். மாணவர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதால் அவர்கள் தற்போது எதிர்நோக்கும் சவால்கள் என்ன என்றும் அவற்றைக்கொண்டு எதிர்காலத்தில் எத்தகைய மாற்றங்கள் தேவை என்றும் பரிந்துரைக்க இயலும். ஆசிரியர்களிடமிருந்து பெறும் தரவுகளால் அவர்களின் பார்வையில் தமிழ் வகுப்பில் எவை முக்கியமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதைக் கண்டறிய முடியும். அவற்றைக்கொண்டு என்னென்ன மாற்றங்கள் தேவை என்றும் தமிழ் வகுப்பறையில் கேட்டல் திறனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையா என்பதையும் எழுதுதலுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் போல் சொல்வளத்தைப் பெருக்குவதற்குக் கொடுக்கப்படவில்லையா என்றும் கண்டறிய முடியும்.

**கேட்டலின் முக்கியத்துவம்**

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பதைப் பற்றியும் அதில் கேட்டல் கருத்தறிதலின் முக்கியத்துவத்தைப் பற்றியும் இக்கட்டுரை (சியொங், 2010) விளக்குகிறது. மேலும் கேட்டல் கருத்தறிதல் கற்பித்தல் அதிக முக்கியத்துவம் பெற வேண்டும் என்றும் இக்கட்டுரை வலியுறுத்துகிறது. மொழி கற்றல் நான்கு கூறுகளின் அடிப்படையில் இடம்பெறுகிறது. இக்கூறுகளில் கேட்டல் திறனே மற்ற கூறுகளைக் காட்டிலும் முதலில் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார் (சியொங், 2010). பேசுதல் திறனை வளர்க்க கேட்டல் திறனே அடித்தளமாகும் என்றும் ஆசிரியர்

விளக்கியுள்ளார். வேற்று மொழியை முதலில் கற்பிக்கும் போது, சிலவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

- கற்பித்தலின் தொடக்க காலத்தில் வாய்மொழிக்கான தேவையைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.
- கேட்டல் கருத்தறிதல் பயிற்சிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

இவ்வாறு செய்யும்பொழுது, மொழி ஆளுமை வளர வழி கிடைக்கும். அத்தோடு தீவிர வாய்மொழி பயிற்சி அளிப்பதன் மூலம் கிடைக்கும் முடிவுகளைக் காட்டிலும் மேற்கூறப்பட்டுள்ள வழிகளில் இடம்பெறும் மொழிக்க கற்றல் மூலம் மேம்பட்ட முடிவுகள் கிடைக்கும் என்பது இக்கட்டுரை ஆசிரியரின் கருத்து. செல்சி-மர்சியா கூறியுள்ளதோடு (2001), சியொங் இங்கு கூறியுள்ளது ஒத்துப் போகின்றது. செல்சி-மர்சியா இரண்டாம் மொழி கற்றலில் முதலில் அதிகமான கேட்டலே இடம்பெற வேண்டும் என்று கூறியுள்ளார் (2001). சியொங் (2010), ஆசிரியர்கள் பெரும்பாலும் மொழி கற்பித்தலில் செய்யும் தவறு என்று ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறார். இரண்டாம் மொழியைக் கற்பிக்கத் தொடங்கியவுடன் அவர்கள் உடனடியாக மாணவர்களைப் பேசுதலில் ஈடுபடுத்துகின்றனர். இதுவே அவரது குற்றச்சாட்டு. குழந்தைகள் தங்களது முதல் மொழியை மாதக் கணக்கில் கேட்ட பிறகே தங்களது முதல் சொல்லையே உச்சரிக்கின்றனர். இவ்வாறு இருப்பின், ஒருவர் வேற்று மொழியைக் கற்கும்போது மட்டும் அவர் முதல் நாளிலிருந்தே பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஏன் என்ற விவாதத்தை ஆசிரியர் முன்வைக்கின்றார்.

பேசப்படும் சொற்களைப் புரிந்துகொள்வதே பேசுதலுக்கும், படித்தலுக்கும், எழுதுதலுக்கும் முன் தேவைப்படுகின்ற ஒன்றாகும். கேட்டல் கருத்தறிதலுக்கும் மொழிக் கைவரப்பெறுதலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று ஆய்வுகள் காட்டுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார் (சியொங், 2010). மேலும் இரண்டாம் மொழி கைவரப்பெறுதலுக்குக் கேட்டல் திறன்கள் தாம் முதன்மையான திறன் என்பதும் இவரின் வாதம். மொழி ஆசிரியர்கள் கேட்டலை முதன்மையாகக் கொண்ட அணுகுமுறையை முழுமையாக ஏற்றுக் கொள்ளாததற்குச் சிலவற்றைக் காரணங்களாக முன் வைக்கின்றார்.

**வரையறை**

இந்த ஆய்வில் பங்கெடுத்த மாணவர்களின் எண்ணிக்கை 33 தான். இது மிகவும் சிறய மாதிரி அளவே. இந்த ஆய்வில் கண்ட முடிவுகள் சிங்கப்பூரின் தமிழ் மாணவர்களின் நிலை என்று கூற முடியாது. அதே போல 1 ஆசிரியர் மூலம் மட்டுமே கருத்துகள் திரட்டப்பட்டன. இதுவும் மிகச் சிறிய மாதிரி அளவே. இந்த ஆய்வு குறுகிய கால அளவில் மேற்கொள்ளப்பட்டது. நிர்வாகச் சிக்கல்களினால் முறையான அனுமதி பெற அதிக காலம் பிடித்தது. அதன் காரணமாக இடையீட்டுப் பாடங்கள் 3 மட்டுமே அமைந்தன.

**பரிந்துரையும் ஆலோசனையும்**

இரண்டாம் மொழி கற்றலில் கேட்டலின் பங்கு, முக்கியத்துவம், அதிகமாக ஆய்வு செய்யப்படாத ஒன்று. சிங்கப்பூர்ப் பின்னணியைக் கொண்ட மாணவர்கள் (கணிசமான அளவில்) இம்மாதிரியான ஆய்வில் பங்கெடுக்க வேண்டும். அதன் மூலம் பெறப்படும் தரவுகள் பாடத்திட்ட வரைவு பிரிவுக்குப் பேருதவியாக இருக்கும்.

இரண்டாம் மொழி கற்றலில் கேட்டலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். மாணவர்களின் புகு அளவு அதிகரிக்கும் போது அவர்களின் சொல்வளம் அதிகரித்து, பேச்சு மொழி சிறப்பாக இருக்கும் என்பது ஆய்வாளரின் நம்பிக்கை. இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளினால் புரிந்துகொள்ளக்கூடிய உள்ளீட்டுக்கும் கேட்டலுக்கும் நீடித்த பேசுதலுக்கும் உள்ள தொடர்பு தெளிவாக வெளிப்படும். எழுதுதலுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தால் வகுப்பறைகளில் அதற்கான பயிற்சிகளே அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாம் மொழி கற்றலில் எத்திறன்கள் வலியுறுத்தப்பட வேண்டும் என்பதில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழில், சிங்கப்பூர்ச் சூழலில், இத்துறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீட்டு முறைகள் மாற்றம் பெற வேண்டும். கேட்டல் திறனை மாணவர்களிடம் எவ்வாறு வளர்ப்பது என்று ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அப்போதுதான், கேட்டல் கருத்தறிதலோடு கேட்டல் பயிற்சிகள் நின்றுவிடா.

ஆசிரியர்கள் சொல்வளத்தை வளர்க்க பல்வேறு முயற்சிகளை எடுக்க வேண்டும். இராமையா (1998) குறிப்பிட்டுள்ளதுபோல, சொற்களையும், சொற்றொடர்களையும் கொண்டு சொந்தமாக வாக்கியங்கள் அமைத்தல், வாய்க்குள் படித்தல் போன்ற பயிற்சிகளை அளித்து சொற்கோவைப் பிழைகளைக் குறைத்து அதில் மாணவர்கள் தேர்ச்சி அடைய செய்யலாம்.

கேட்டலில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பாடல்கள், கதைகள், செய்தி அறிவிப்புகள், அரசியல் தலைவர்களின் பொருத்தமான செய்திகள், *பிபிசி, சிஎன்என்* போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இடம்பெறும் ஒலிச்சித்திரங்கள், *பாட்காஸ்ட்* எனப்படும் ஒலிததொகுப்புகள், பொது நிகழ்ச்சிகள், வினாடிவினா, புதிருக்குப் பதில் என்ன? என்பன போன்ற நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து அல்லது நேரடியாகப் போட்டுக் கேட்டலை மேம்படுத்தலாம். பொருத்தமான வினாக்கள், தெளிவுபடுத்துதல் குறிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு மகிழ்வையும் அறிவையும் ஊட்டலாம். இன்று கல்வி அமைச்சு தகவல் தொழில்நுட்ப முதன்மைத்திட்டங்கள் 1-3 (ICT Master Plans 1-3, MOE)வரை அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றின் படிநிலைகளுக்கு ஏற்ப மாணவர்கள் தாங்களாகக் கேட்டல் பகுதிகளை உருவாக்கவும் அவற்றுக்கு ஏற்ற பேசுதலைப் பதிவு செய்து பிறரிடம் போட்டுக்காட்டவும் சிறந்த பகுதிகளைத் தேடித் தெரிவு செய்து ஒளி, ஒலியுடன் தரவும் பயிற்சி கொடுக்கும்போது

அங்கே தகவல் தொழில் நுட்பம் திறம்பட்ட முறையில் இடைவினையாடலுடன் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யலாம்.

இன்றைய மாணவர்கள் ஒரு நாட்டுக் குடிமக்களாக மட்டுமின்றி உலகக்குடிமக்களாக உயரவேண்டும், இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உயிர்வாழ்வுத் திறன்களைக் கொண்டிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர். அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஆசிரியர்கள் மொழித்திறன்களில் மாணவர்களை மேம்படுத்தவேண்டும். குறிப்பாக முதல் மொழித்திறனான கேட்டலில் உயர்த்த வேண்டும். அதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் நல்ல செயலாகும்.

**உதவிய நூல்கள்**


சின்னம்மா தேவி, (2013). *கேட்டல்-பேசுதல் திறன்களின் மதிப்பீடு*, முதுகலைக் கல்வியியல் ஒப்படைப்பு, சிங்கப்பூர்.

கல்வி அமைச்சு. (2007). *தமிழ் மொழிப் பாடத்திட்டம் 2008 தொடக்கநிலை.* சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு, (2008-1). *தமிழ்மொழி தொடக்கநிலை 5 பாடத்திட்ட வழிகாட்டி.* சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு, (2008-2). *தமிழ்மொழி மதிப்பீட்டு வழிகாட்டி*. சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு, (2010). *தமிழ்மொழி மறு ஆய்வு அறிக்கை*. சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.

இராமையா, (1998). *தமிழில் மாணவர்கள் செய்யும் மொழிப் பிழைகள் : ஓர் ஆய்வு*, சிங்கப்பூர்: ஆசிரியர்.

Akbari, R. (2012). Vocabulary in L2 Teaching: Some Statistical Findings. *TESOL Arabia Perspectives, Vol 19*(2), pp7-11.

Allwright, D., Bailey, K.M. (1991). *Focus on the language classroom.* New York: Cambridge University Press.

Bowen, J.D., Madsen, H., & Hilferty A. (1985). *TESOL Techniques and Procedures.* Boston, MA: Heinle & Heinle Publishers.

Brown G. & Yule, G. (1983). *Teaching the Spoken Language*. New York, NY. Cambridge University Press

Celce-Murcia. M, ed. (2001). *Teaching English as a Second or Foreign Language*. Heinle Cengage Learning.

Cheung, Y.K. (2010). *The Importance of Teaching Listening in the EFL Classroom*. Guides-Classroom-Teacher.

Corder, S. (1978). *Error Analysis and Inter-Language*. London : Oxford University Press.

Grabe, W. (2009). *Reading in a second language: Moving from theory to practice*. New York: Cambridge University Press.

Huckin, T., Coady, J. (1999). *Incidental Vocabulary Acquisition in a Second Language* (pp. 193-193). Cambridge University Press.

Kalaimani, R. (1997). *Linguistic Difficulties faced by Secondary 4 Express Stream pupils in oral communication in Tamil*, Singapore.

Krashen, S. (1978). *Principles of second language learning*. New York: Academic Press.

Krashen, S.D. (1981). *Second Language Acquisition and Second Language Learning*. Oxford: Pergamon.

Manjula, R. (2005). *Strategies employed by Secondary 3 students in learning TL as a second language*, Singapore.

Ramiah, K. (1996). *An Investigation of teachers' questions & learners' responses during classroom interaction in TL Secondary classes in Singapore,* Singapore.

Rivers, W.M. (1981). *Teaching Foreign Language Skills*. (2nd ed.), Chicago, IL: University of Chicago Press

Rivers, W.M & Temperley, M.S. (1978). *A Practical Guide to the Teaching of English as a Second or Foreign Language*. New York, NY: Oxford University Press.

Rost, M. (1991). *Listening in action*. Englewood Cliffs, NJ: Prentice Hall.

Schmitt, N., Jiang, X., & Grabe, W. (2011). *The percentage of words known in a text and reading comprehension.* Modern Language Journal, 95, 26-43.

**நிறைமதி**
**தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் மின்நூல் வழி புதிய அணுகுமுறை**

**கோபிநாதன் சுப்ரமணியம்**
கல்வியல் தொழில்நுட்ப அதிகாரி
ஆசிரியர் நடவடிக்கை மையம், யொங் பெங், ஜோகூர், மலேசியா.

**முன்னுரை**

அறிவுடையவரே எல்லாம் உடையவர் என்பது திருவள்ளுவரின் அருள் வாக்காகும். இவ்வாக்கிற்கு ஏற்ற வண்ணம் அனைத்துத் தரப்பினரும் நிறையறிவினைப் பெறுவதற்கு இந்த நிறைமதி என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. பல்துறை சார்ந்த அறிவினைப் பெற, இது மாணவர்களுக்கு வழி வகுக்கும். பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் வாசகர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். வெறும் மூளைப்பதிவாக மட்டுமல்லாமல் இதயத்தின் ஆழ ஊடுருவி பாய்ந்து நிலைபெறும் தன்மையுடையதாக நிறைமதியின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

ஆசிரியர்கள் தங்களின் பாட போதனைக்கு நிறைமதி எனும் இக்களஞ்சியத்திலிருந்து தரவுகளை எடுத்து பயன்படுத்தி பலன் பெறலாம்.

கற்றாரே கண்ணுடையார், கற்றவனை அரசும் விரும்பும், கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற வைர வரிகள் கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இவற்றினை மெய்ப்பிக்க இந்த நிறைமதி நற்றுணையாக இருக்கும் என்பது உறுதி.

இருளில் உலகிற்குக் குளிர்ச்சியான ஒளியை ஈவது நிலவொளியாகும். அவ்வண்ணம் வாசகர்களின் அறிவுத் தேடலுக்கு ஓர் அற்புதக் களமாக இந்த நிறைமதி இணையத் தளம் திகழும் என்பது திண்ணம்.

நிறைமதியில் இருக்ககூடிய மின்நூல் கணினி மூலமாகவும், கையடக்க சாதனங்கள் மூலமாகவும் படிக்க/வாசிக்க இயன்ற மின்னனு வடிவிலான பதிப்பு ஆகும். இம்மின்னூலானது முப்பரிமான (3D) அமைப்பு முறையை கொண்டிருக்கும். ஆகையால், இம்மின்நூலைக் கொண்டு புத்தக வடிவில் கவரும் வண்ணம் தரமான ஆவணங்கள் நிரந்தரமான ஆவணக் கோப்பைப் (PDF) பயன்படுத்தித் தயாரிக்கலாம். மேலும், படங்கள், பல்லூடகக்காட்சி, இசை, நாடகம் மற்றும் திரை போன்றவைகளை இணைத்துக் கொள்ளலாம். பல்வேறு வர்ணங்களையும் வடிவங்களையும் உபயோகப்படுத்தி மின்நூல் செய்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் போது மாணவர்களின் கவனத்தையும் ஈர்க்க முடிகின்றது. இம்மின்நூல் மாணவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் சலிப்புத் தன்மையைப் போக்கப் பெரிதும்

துணைப்புரிகிறது. மேலும், சுயக்கற்றலுக்கு வழிவகுக்குவதோடு நேரத்தையும் சிக்கனப்படுத்த உதவுகிறது.

நிறைமதியில் உள்ளடங்கிய மின்நூல்கள் 6 பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன :

1) தேசிய பள்ளி

தேசிய பள்ளி கற்றல் கற்பித்தல் நடவடிக்கை உபயோகத்திற்கு இம்மின்நூல்கள் நிறைமதியில் உள்ளன. இதனை தேசிய பள்ளி போதிக்கும் ஆசிரியர்கள், பயிலும் மாணவர்கள், இம்மாணவர்களின் பெற்றோர்கள் எளிதில் கையாள முடியும். காரணம், இதில் உள்ள மின்நூல்கள் தேசிய பள்ளி பாடத்திட்டத்திற்கு உட்பட்டுள்ளது.

2) தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி கற்றல் கற்பித்தல் நடவடிக்கை உபயோகத்திற்கு இம்மின்நூல்கள் நிறைமதியில் உள்ளன. இதனை தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி போதிக்கும் ஆசிரியர்கள், பயிலும் மாணவர்கள், இம்மாணவர்களின் பெற்றோர்கள் எளிதில் கையாள முடியும். காரணம், இதில் உள்ள மின்நூல்கள் தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி பாடத்திட்டத்திற்கு உட்பட்டுள்ளது.

3) இடைநிலைப்பள்ளி

இடைநிலைப்பள்ளி கற்றல் கற்பித்தல் நடவடிக்கை உபயோகத்திற்கு இம்மின்நூல்கள் நிறைமதியில் உள்ளன. இதனை இடைநிலைப்பள்ளி போதிக்கும் ஆசிரியர்கள், பயிலும் மாணவர்கள், இம்மாணவர்களின் பெற்றோர்கள் எளிதில் கையாள முடியும். காரணம், இதில் உள்ள மின்நூல்கள் இடைநிலைப்பள்ளி பாடத்திட்டத்திற்கு உட்பட்டுள்ளது.

4) பாடல்கள்

அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வகையில் இம்மின்நூல் பாடல் வடிவில் அமைந்திருக்கும். பாடல்கள் அறிவை ஊட்டுவதோடு மனமகிழ்வைத் தரும். மேலும், வாசகர்களை மென்மேலும் இம்மின்நூலைப் பயன்படுத்த வழிவகுக்கும்.

5) சமயமும் நன்னெறியும்

சமயத்தையும் நன்னெறியையும் அனைத்துத் தரப்பினரும் அறிந்துக்கொள்ள இம்மின்நூல் அமைந்திருக்கிறது. இணையத்தில் சமயமும் நன்னெறியும் நவீன உலகிற்கு ஒரு புதிய சகாப்தமாக கருதப்படுவதால் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் கதையின் வாயிலாக போதிக்கும்போது இவை மாணவர்களை கவருவதோடு மனமகிழ்வைத் தருகிறது.

6) தெளிவுரை

அனைத்துத் தரப்பினருக்கும் பயன்மிக்கவை. இணையம், சமுதாயம், இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, ஆன்மீகம், பொழுதுபோக்கு, தகவல் தொழில் நுட்பம், கல்வி என விரல் நுனியில் விரியும் விவரக் களஞ்சியமாக இம்மின்நூல் அமைந்திருக்கும். நேரடி கனொலியாகவும் தொடர் நிகழ்வாக அமைந்திருக்கும். இணையம் தகவல் யுகத்திற்கு ஒரு காப்பியம்.

**சமூக வலைய இணையத்தளத்தில் நிறைமதி**

நிறைமதி இதோடு நின்றுவிடமால் சமூக வலைய இணைத்தளத்திலும் உலாவருகின்றது. அவற்றில் முகநூல் (Facebook), டிவிட்டர் (Twiter), வலைப்பூ (Blogger), கூகிள் ப்ளஸ் (Google Plus) மற்றும் தப்ளர் (Thumpler) போன்றவற்றிலும் ஒரே நேரத்தில் உலகம் முழுவதும் ஒரு தகவலை வெளிப்படுத்திவிடுவதற்கு ஒரு சிறந்த சாதனமாக விளங்குகிறது. நிறைமதிக்கு தேவையான நல்ல பல கருத்துக்கள், செய்திகள் போன்றவற்றை அறிவதற்கும், அறிவிப்பதற்கும் மிகவும் இலகுவான ஒரு பொறிமுறையாக இது கருதப்படுகின்றது.

**நிறைமதியின் எதிர்பார்ப்பு**

தொழில்நுட்பம் மூலம் உலகம் உங்களை இணைக்கின்றது என்ற பொன் வரிகளுக்கு ஏற்ப நிறைமதி மலேசியாவில் மட்டும் நின்றுவிடாமல் மற்ற நாடுகளுடன் இணையக் காத்திருக்கிறது. எனவே உலகெங்கும் இருக்கும் தமிழர்களையும், தமிழ்மொழி வழி இணையத்தையும் ஒன்றிணைப்பதே நிறைமதியின் நோக்கமாகும். ஒன்றிணைவோம் நிறைமதியின் வழி தமிழ்மொழியின் மாண்பை ஓங்கச் செய்வோம்.

“ நிறைமதி மனுகுலத்தின் அறிவுமதி ”

# இணையத்தில் தமிழ் பாடத்திட்டத்தின் வெற்றி

சுகந்தி நாடார்
Harrisburg University and SRM University

இன்று தமிழ் பாடத்திட்டங்கள் இணையத்தில் வெற்றி பெற்றுள்ளதா இல்லையா என்ற கேள்வி பிறந்தால் இல்லை என்று அழுத்தமாகக் கூறமுடியும். ஏனெனில் இணையம் என்ற ஒரு துணைக்கருவியைத் தமிழ் மொழி இன்னும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அடிப்படையான மழலைக் கல்வி இணையத்தில் வெற்றிகரமாக அமைந்தால்தான் நாம் மற்ற பாடத்திட்டங்களை வெற்றிகரமாக இணையத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்.

அதனால் இந்த ஆராய்ச்சிக்காக இணையத்தின்வழி கிடைக்கும் தமிழ் இணையக் கல்விக்கழக மழலைக் கல்வி பாடங்களையும், தொடக்க நிலை தமிழ் நாட்டு அரசு பாடநூல்களின் முதல் வகுப்புப் பாடங்களையும் மாதிரிக்கு எடுத்து அமெரிக்கத் தேசத்திலிருக்கும் The International association for K-12 Online Learning (iNACOL) என்ற நிறுவனத்தின் வரைமுறைகளை அளவு கோலாகக் கொண்டு பாடத்திட்டத்தில் வகுக்கப்பட்ட குறிக்கோள்கள் மாணவர்களைச் சென்று அடைந்ததா என்று ஆய்வதுடன் தமிழ் பாடத்திட்டங்கள் இணையத்தில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் எனத் தீர்வினையும் இந்தக் கட்டுரை கொடுக்க முயல்கிறது.

திரு இராமசாமி நினைவு பல்கலைக்கழகத்தின் அயலகத் தமிழாசிரியர் பட்டயப் படிப்பில் மழலைக் கல்விக்கு அடிப்படையான குறிக்கோள் குழந்தைகளின் கேட்டல் திறனையும் அடையாளப் படுத்தும் திறனையும் வளர்த்தல் என்று குறிப்பிடப்படுகிறது. இந்தக் குறிக்கோளைத் தமிழ் இணையக் கல்விக்கழக மழலைக் கல்வி பாடங்களும் தொடக்க நிலை தமிழ் நாட்டு அரசு பாடநூல்களின் முதல் வகுப்புப் பாடங்களும் அடைந்தனவா என்று ஆராயப்படும். மாணவர்களின் செயல்திறனைக் கணினி மூலம் வளர்க்கும் வழிகள் பாடத்திட்டத்தில் உள்ளதா என்றும் பார்க்கப்படும்

ஒரு பாடத்திட்டத்தின் குறிக்கோள் மிகத் துல்லியமாக இருந்தால் மட்டுமே அந்தப் பாடத்திட்டம் சரியான முறையில் மாணவர்களைச் சென்று அடையும். புத்தகத்தைப் படித்து ஆசிரியர் கூறியதை அப்படியே மனப்பாடம் செய்து அவர் கொடுக்கும் தேர்வில் மிகுதியான மதிப்பெண் பெறுவதில் ஒரு மாணவரின் உண்மையான வெற்றியை அளவிட முடியாது என்பதைத் தமிழ் மொழி கற்பிப்பவர்களும் கற்பவர்களும் உணர்ந்தே உள்ளனர்.

வகுப்பறையில் படிக்கும் மொழிக் கல்வி வகுப்பறைக்கு வெளியே ஒரு மாணவர்க்கு வெற்றி தேடித் தருவதாக இருந்தால் மட்டுமே கொடுக்கப்படும் மொழிக் கல்வி மதிக்கப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே, மாணவர்களின் தேவையைச் சுட்டிக்காட்டி. மாணவர்களுக்கு எந்த மாதிரியான அடிப்படை அறிவு

தேவை என்ற விளக்கமும் மாணவர்கள் குறிக்கோளை அடையப் படிப்படியான வழிகளையும் அவர்கள் தேர்ச்சியை நிஜ வாழ்க்கையில் அடுத்தவரின் உதவி இன்றி எப்படிச் செயல்படுத்துகின்றனர் என்ற முற்றாய்வையும் கொண்டதே ஒரு இணையப் பாடத்திட்டத்தின் சிறந்த குறிக்கோள் ஆக இருக்க வேண்டும்.

தொடக்க நிலை பாடத்திட்டம் என்று வரும்போது ஆசிரியரின் துணை இல்லாமல் குழந்தைகளால் கற்க முடியாது என்றாலும் இணையவழிப் பாடம் என்று வரும்போது மாணவர்கள் தன்னுரிமையாகச் செயல்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டே பாடத்திட்டங்கள் எழுதப்பட வேண்டும். தாங்கள் கற்றவற்றை எவ்வாறு வகுப்பறைக்கு வெளியே பயன்படுத்துகிறார்கள் என்பதில்தான் ஒரு பாடத்திட்டத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். மொழியை வாழ்க்கையில் பயன்படுத்தினால் மட்டுமே மாணவர்கள் தன்னார்வத்துடன் மொழியைக் கற்பர்.

மாணவர்கள் இணையத்தில் தன்னார்வத்துடன் கற்க அவர்களுக்கு விருப்பமான பல்லூடகங்களைக் காட்டி பயில்விப்பதோடு அவர்களையும் பல்லூடகங்களையும் தயாரிக்க வைக்க வேண்டும். பாடங்கள் செய்முறைப் பயிற்சி நிறைந்தவையாகவும் பயிற்சியின் மதிப்பீடு உடனடியாக அவர்களுக்குக் கிடைக்கும் படியும் ஒரு பாடத்திட்டம் அமைய வேண்டும். மாணவர்கள் தங்கள் அறிவைத் தானே பரிசோதித்துக் கொள்ளும் வழியும் இருக்க வேண்டும்.

மாணவர்களின் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் விதம் ஒவ்வோருவருக்கும் மாறுபட்டு இருக்கும் என்பதை இன்றைய தமிழ்க் கல்வி முறை உணர்ந்து செயல்படவில்லை. ஒரு தனி மாணவனை மனதில் கொண்டு அமைக்கப்படும் கல்வி முறையே இணையத்தில் வெற்றி பெறும். ஒவ்வொரு மாணவனும் கற்கும் விதம் வேறுபட்டிருக்கும் என்ற கருத்தை மனதில் கொண்டே பாடத்திட்டங்கள் அமைய வேண்டும்.

கற்கும் நடைகள் எட்டு விதமாக இருக்கும். 1. கண்ணால் பார்த்து கற்றல், 2. காதால் கேட்டுக் கற்றல், 3. செய்து கற்றல், 4. கருத்துகளைப் பேசிக் கற்றல், 5. செய்முறை கற்றல், 6. ஆராய்ந்து கற்றல், 7. பலருடன் பகிர்ந்து கற்றல், 8. தனிப் பயிற்சி முறை என்ற இந்த எட்டுவிதமான கற்றல் முறைகளையும் ஊக்குவிக்கும் விதமாக இணையப் பாட்த்திட்டங்கள் அமைந்தால் மட்டுமே ஒரு மாணவனால் இணையக் கல்வி வழியாக வெற்றி பெற முடியும்.

அமெரிக்காவில் இருக்கும் The International association for K-12 Online Learning என்ற நிறுவனம் இணையக் கல்விக்கான ஒரு பாடத்திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்று வரையறை செய்து உள்ளது. அந்நிறுவனத்தின் கருத்துப்படி இணையக் கல்வியின் நோக்கம் ஒரு தனிப்பட்ட மாணவனின் திறமையை வெளிப்படுத்தி வளர்க்கும் வண்ணம். மின்னியல் வளங்கள் பயன்படுத்தப்படவேண்டும்

| | செயல்திறனை வளர்க்கும் பாடத் த் திட்டம் | மறுசீராய்வில் கருத்தில் கொள்ள வேண்டியது |
|---|---|---|
| 1 | பாடத்திட்டம் எல்லா வகையான மாணவர்களின் தேவையையும் ஆராய்ந்து அமைக்கப்பட்டுள்ளது. | மாணவர்கள் தங்கள் தேர்ச்சியை உணர்த்தும் வகையில் பல வேறுபாடான முறையில் கணிப்பீடுகள் அமைக்கப்பட்டுள்ளது. |
| 2 | பாடங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக அறிவுப்பூர்வமாகப் பிரிக்கப்பட்டு அலகுகளின் குறிக்கோள்கள் பலவகையான பயிற்சிகள், வளங்கள் மதிப்பீடுகள் கொடுக்கப் பட்டுள்ளன. | ஒவ்வொரு அலகின் தொடக்கத்திலும் மாணவர்கள் எதை எப்படிக் கற்றுக்கொள்வார்கள் அவர்களின் தேர்ச்சிக்கான திறமை எவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் என்று தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. |
| 3 | குழந்தைகள் தங்கள் செயல்திறனை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் பல உள்ளன. | மாணவர்களே குழுக்களாகப் பிரிந்து தங்கள் திறமையை மதிப்பீடுகளைச் செய்ய உதவும் பயிற்சிகளும், விளையாட்டுகளும் காணொளிகளைக் கண்டு உரையாட வைப்பதும், பாடச் சாரத்தை வரைபடமாக மாணவர்களால் வரைய முடியும். (concept mapping) |
| 4 | மாணவர்களின் தேவையை அறிந்து பல்வேறு வழிகளிலும் வேறுபாடு முறைகளை ஆசிரியர்கள் பாடம் நடத்துகின்றனர். | பாடம் புரியாத மாணவர்களுக்கு உதவும் வகைவகையான பயிற்சிகள் ஆசிரியர்களால் கொடுக்கப் படுகின்றன. |
| 5 | மாணவர்கள் மேம்பட்ட வழியில் சிந்திக்கும் வழியில் காரண காரியங்களை ஆராய்ந்து செயல்படுத்தும் கற்பிக்கும் பயிற்சிகள் உள்ளன. | கொடுக்கப்படும் பாடங்களும் வீட்டுப் பாடங்களும் பயிற்சிகளும் மாணவர்களின் சிந்திக்கும் திறனை மேம்படுத்துவதாக அமைந்துள்ளதா என்று பார்க்க வேண்டும். |
| 7 | குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் பாடப் பயிற்சிகளை மேம்படுத்தும் வகையில் பயிற்சிகள் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். | மாணவர்களே படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் பாடங்கள் எழுதப் பட்டிருக்க வேண்டும். |
| 8 | மாணவர்களும் ஆசிரியரும் ஒருவருக்கு ஒருவர் கருத்து பரிமாறிக்கொள்ள வசதி உள்ளது. மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய கருத்து அவ்வப்போது மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். | கற்பிக்கும் செயல் வகைகள் ஆசிரியர் மாணவர் கருத்துப் பரிமாற்றம் செய்யும் வகையில் அமைந்து இருக்க வேண்டும். |
| 9 | பாடங்கள் தொடங்கின முதல் வாரங்களிலேயே மாணவர்களும் ஆசிரியர்களும் கருத்துகளைப் பரிமாறி மாணவர்களின் தேவைகளை ஆசிரியர் புரிந்துகொள்ளும் வசதி இருத்தல். | பாடத் தொடக்கத்தின்போதே ஒவ்வொரு மாணவருடனும் ஆசிரியர் கருத்துகளைப் பரிமாறி மாணவர்கள் பயிற்சிகளை ஈடுபாட்டுடன் செய்ய வழிவகுக்கப்பட்டு இருக்கிறது. |
| 10 | பாடங்களுக்குத் தேவையான பல வளங்கள் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். | பலவகையான குழு வகை கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற வகை இருக்க வேண்டும். |

என்பதுதான். மின்னியல் வளங்களை வகுப்பில் பயன்படுத்துவது மாணவர்களின் மொழித் திறன்களைப் பட்டறிவாக வளர்க்க உதவுகிறது. பின்வரும் பட்டியல் செயல்திறனை வளர்க்கக் கூடிய பாடத் திட்டம் எப்படி இருந்தால் மாணவர்களின் கற்றல் மேன்மையாக இருக்கும் என்று விளக்குகிறது.

தமிழ் நாடு பாடத்தின் முதல் மூன்று வகுப்புகளின் தமிழ் பாடநூல்களும், இணையக் கல்வி கழகத்தின் மழலைப் பாடங்களையும் குழந்தைகள் தன் முயற்சியால் மொழித்திறனை வளர்க்க ஊக்குவிக்கப்படுகிறார்களா என்று கவனித்துப் பட்டியலிடப்பட்டுள்ளது. மொழித்திறன் நான்கைப் பற்றியும் அலசி ஆராயப்பட்டது

<u>தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம்</u>

| | கேட்டல் திறன் | பேசுதல் திறன் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|---|
| ஆசிரியரின் பங்கு | மிக மிக முக்கியம் | மிக மிக முக்கியம் | மிக மிக முக்கியம் | மிக மிக முக்கியம் |
| மாணவர்களின் தன் முயற்சி | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| செயல் திறன் பயிற்சி | மிகக் குறைவு | மிகக் குறைவு | மிக மிகக் குறைவு | மிக மிகக் குறைவு |
| மாணவர்களின் தன் மதிப்பீடு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

<u>இணையக் கல்விக் கழகம்</u>

| | கேட்டல்திறன் | பேசுதல் திறன் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|---|
| ஆசிரியரின் பங்கு | முக்கியம் | முக்கியம் | முக்கியம் | முக்கியம் |
| மாணவர்களின் தன் முயற்சி | முக்கியம் | முக்கியம் | முக்கியம் | இல்லை |
| செயல் திறன் பயிற்சி | சராசரி | சராசரி | சராசரி | இல்லை |
| மாணவர்களின் தன் மதிப்பீடு | சராசரி | இல்லை | இல்லை | இல்லை |

இந்தப் பட்டியலை ஒட்டி நாம் தமிழ் மழலைப் பாடத்திட்டங்களைப் பார்க்கும்போதும் இவை இன்னும் இணையதளத்திற்குத் தயாராகவில்லை என்பது புரிகிறது. ஆனாலும் தற்போது வழக்கத்தில் இருந்து வரும் பாடத் திட்டங்களை உடனே மாற்றவும் முடியாது. இதனால் முதலீடும் மனித உழைப்பும் வீணாகும். இதைத் தமிழ் ஆசிரியர்களும் பல மின்னியல் வளங்களை மாணவர்களுக்குத் தங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். தமிழ் ஆசிரியர்கள் இதற்கு நழுவல் காட்சி வில்லைகளைப் பயன்படுத்தலாம். ஏற்கனவே பல ஆசிரியர்களுக்கு இவை பழக்கமாதலால் இதைக் கொண்டு பாடம் நடத்துவதும் மாணவர்களைத் தன்

ஆர்வத்துடன் தங்கள் செயல்திறனை வளர்த்துக்கொள்ளவும் தங்களைத் தாங்களே சுய முற்றாய்வு செய்துகொள்ளவும் இந்த மென்பொருட்கள் உதவுகின்றன.

இப்போது கிடைக்கும் காட்சி வில்லை மென்பொருள்களில் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் power point மென்பொருள் ஆசிரியர்களுக்கு ஏற்றபடி எல்லா வசதிகளையும் கொண்டுள்ளது காணொளி, ஒலிக் கோப்புகள் இணைக்கும் வசதி தவிர, Actions, Action button animations and triggers ஆகியவை கொண்டு சிறுசிறு விளையாட்டுகளை அமைக்கலாம். இந்த மென்பொருள் மூலம் தயாரிக்கப்படும் காட்சிவில்லைகலைக் காணொளியாக மாற்றலாம். எல்லா இயங்குதளங்களிலும் கையடக்கக் கணினிகளிலும் இவற்றை எளிதாக இணையம் மூலம் வழங்கலாம். இதனால் தற்போது இருக்கும் பாடத்திட்டங்களை ஆசிரியர்கள் எளிதில் இணையத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். குழந்தைகளையும் காட்சி வில்லைகளைக் காணொளிகளைத் தயாரிக்கச் சொல்லலாம்.

வகுப்பறையில் கற்பிக்கப்படும் தமிழ் மொழிப் பாடங்கள் ஒருவர் தமிழைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் வகையில் இன்று வரை அமையவில்லை என்பது வருந்தத் தக்கது. இந்த நிலை மாற வேண்டும் என்றால் ஒரு பாடத்திட்டத்தை எப்படி அமைக்க வேண்டும் என்பதை ஒரு புதுக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.

தற்போது இருக்கும் பாடதிட்டங்கள் இணையம்வழி கற்றுத்தரச் செய்யப்படும் இந்த எளிய முயற்சிகள் விரைவிலேயே இணையத்தைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பாடத்திட்டங்களை அமைக்க வழி வகுக்கும். அதற்குப் பாடத்திட்டம் மாணவரின் தேவையை ஆராய்ந்து அறிந்து அதைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைய வேண்டும். ஒரு பாடத்திட்டம் செவ்வனே செயல்படுகிறதா என்ற நோட்டத்தேர்வு ஒரு பாடத் திட்டத்தில் கேட்கப்படும் கேள்விகளைக் கொண்டு எளிதாக மதிப்பிட்டுவிடலாம்




Benjamin Bloom என்ற சிகாகோ பல்கலைக்கழகப் பேராசிரியர் 1950 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்குக் கற்பித்தல் சிறக்க எப்படிப்பட்ட கேள்விகள் கேட்க வேண்டும் என்று ஆராய்ந்தார். அவருடைய கொள்கை Bloom’s Taxonomy என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கேள்வி முறைகளைப் பின்பற்றினால் குழந்தைகளின் சிந்திக்கும் திறனும் கற்றதைப் பயன்பாட்டில் கொண்டுவரும் திறனும் மெருகேறும்.

அவரது கருத்துப்படி பாடங்களை நினைவு கூர்தல், புரிந்து கொள்ளுதல் படித்ததைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை ஆயும் கேள்விகள் கற்றலுக்கு அடிப்படை

திறன்கள்தான். கற்கும் பாடத்தின் பல பகுதிகளை ஆராய்ந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து கொள்ளுதல், ஆராய்ந்து அறிந்ததைக் கொண்டு ஒரு முடிவுக்கு வருதல், தங்களின் முடிவு சரி என்று விவாதித்தல் பயின்ற பாடத்தைக் கொண்டு புதிதாக ஒன்றை உருவாக்குதல் ஆகிய திறன்களை வளர்க்கும் கேள்விகள் மாணவர்களின் சிந்திக்கும் திறனை வளர்த்து அவர்கள் பயின்றதைப் பட்டறிவு அறிவாக மாற்றுகிறது. மொழியைப் பட்டறிவு அறிவாக இளம் வயதிலேயே பெறும் மாணவர்கள் வாழ்க்கையில் தமிழ் என்றும் நிலைக்கும் என்பதைப் பாடத்திட்டம் தயாரிப்பவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

இன்றைய தமிழ்க் கல்வி ஒரு மாணவனின் நினைவு கூறுதலை மட்டுமே ஆய்வதாக இருக்கிறது. அதனால் தமிழ்க் கல்வி ஏட்டுச்சுரைக்காயாகவே மாறிவிட்டது. மின்னியல் வளங்களைப் பயன்படுத்தி இந்த நிலையை மாற்ற ஆசிரியர்கள் முயற்சி செய்ய வேண்டும். தமிழை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லத் தமிழ் பாடத்திட்டங்கள் மாணவர்கள் படித்ததை அனுபவ அறிவாக மாற்ற வேண்டியது கட்டாயம். அப்படிச் செய்ய இணையவழி தமிழ்க் கல்வி கற்பிப்பவர்கள் முயற்சிக்க வேண்டும்.

## கணினி மற்றும் இணைய வழி தமிழ்க்கல்வி கற்றல் கற்பித்தல்

**கவிஞர் T. கிருஷ்ணன்**
கட்டுரையாளர் மற்றும் ஆராய்ச்சியாளர்
கிருஷ்ணாபவனம், 6 உலகநாதன் சேர்வை தெரு,
கோ.புதூர், மதுரை 625 007.

### முன்னுரை

இனி வரும் காலங்களில் அரசு மற்றும் தனியார் துறைகளில் கணினி ஓர் அத்தியாவசியக் கருவியாகத் திகழப்போகிறது என்பதைக் கணினியின் செயல் வளர்ச்சியின் வாயிலாகக் காண்கிறோம் மகிழ்கிறோம். கணினி மற்றும் இணைய வழி தரும் மகத்தான விஷயங்களில் தமிழ்மொழிக் கல்வி கற்றலும் கற்பித்தலும் முதன்மையான இடத்தில் இருக்கிறது. இன்றைய யுகம் கணினியுகமாக (Age of Computer) திகழ்கிறது. முயற்சியும் திறமையும் உடையவர்கள் முன்னின்று முதன்மையாக்கிய பொக்கிஷம்தான் தமிழ் இணையதளம்.

### கணினி வழங்கும் நிஜமான தமிழ் மொழிப்பயணம்

கணினித்திரைகளில் தமிழ் மற்றும் தமிழ் சார்ந்த கல்வியின் சிறப்புகள் அதிக அளவில் காண்பிக்கப்பட்டு வருகிறது. தமிழ்க்கல்வியை ஆரம்ப நிலையிலிருந்து கற்பதற்குள்ள முயற்சிகள் அனைத்தும் முழுமூச்சாகத் தமிழ் இணையதளம் ஈடுபட்டு, பாராட்டுக்களையும் பெற்று வருகிறது.

### தமிழ்க்கல்வி கற்றலும் கற்பித்தலும் (Learning Tamil Education & Teaching Through Computer & Internet)

Google.com போன்ற தேடுபொறிகளில், தொட்டால் ஏராளமான தளங்கள் தமிழைக் கற்றுத்தருகின்றன. கல்வி கற்றலையும் கற்பித்தலையும் ஒளி, ஒலி பல்லூடகக் காட்சிகளாக இணையதளம் வழங்கி வருவது. தமிழ்க் கல்விக்குக் கிடைத்துள்ள பெரிய அங்கீகாரம் தமிழ் மொழியில் பழமையான காலத்தில் இருந்த உயிரோட்டமான பாடல்கள் தற்போது இணையத்தின் வாயிலாகக் கற்போம் நிகழ்ச்சியில் தோன்றி வெளிநாட்டில் வசிக்கும் மழலையர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுகிறது.

மலேசியாவில் உள்ள பள்ளிகளில் தமிழ்கல்வி கற்பதில் பலவேறுபாடுகள் இருந்தன. ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவாறு ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. நகர்ப்புறத்தில் உள்ள பள்ளிகளில் கற்பிக்கும் முறை நன்றாகவும் கிராமப்புறங்களில் மோசமான நிலையும் நீடித்தது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண சர்வர் அடிப்படையிலான தமிழ்க்கல்வி அறிமுகம் செய்யப்பட்டது. இந்த முறையில் கல்வி கற்கும் முறையிலும், கற்பிக்கும் முறையிலும் பெரும் மாறுதல் ஏற்பட்டது.

மழலைக்கல்வி (Elementary Education) சான்று கல்வி (Diploma Education) பட்டயம், பட்டம் என்ற கலிவித்திட்டங்களைத் தெரிந்துகொண்டு பயன்பெறவும் இணையதளங்கள் பேருதவி புரிகின்றன. தமிழ்க்கல்வியை அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை வழங்கி வரும் தமிழ் இணையத்தின் மகத்தான செயல் பாராட்டுக்குரியது.

அமெரிக்காவில் வாழும் தமிழ் கற்கும் மழலையர்கள் இணையம் மூலமாக அ, ஆ முதல் இந்திய தேசியத் தலைவர்கள் வரை அறிந்துகொள்கிறார்கள். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இயங்கி வரும் கொலம்பஸ் தமிழ்ச்சங்கம் ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறுவர்களுக்கான தமிழ்ப் பாடங்கள் கற்றுத் தருகின்றனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டு வகுப்பில் பயிலும் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்குச் சான்றிதழ், பட்டயங்கள் வழங்கி வருகிறார்கள். இதனைப் பார்க்கும் பிற நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் நாடுகளிலும் சிறுவர்களுக்குக் கல்வி கற்றுத்தரும் நிகழ்ச்சியை இணையத்தின் மூலம் நடந்தத் தீவிர முயற்சிகள் செய்து வருகிறார்கள். பிற நாட்டில் வாழும் மாணவ, மாணவியர் தமிழ்க் கல்வியை இணையத்தின் மூலமாகக் கற்க ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இலங்கையில் வசிக்கும் 95 சதவீத தமிழர்கள் ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரை கற்பதற்கும் இணையம் பேருதவி புரிந்து வருகிறது. பாண்டிச்சேரியில் 7 சதவீத மாணவர்கள் தமிழை இணையதளம் மூலம் கற்று வருகிறார்கள். 1968ம் வருடம் பேராசிரியர் மு.ஊ. ஜானர்ட் என்பவர் ஜெர்மனியில் தமிழைக் கற்பிப்பதற்கு வழி வகுத்தார். பேராசிரியர் யு. தாமோதரன் ஹைட்டில்பர்க் பல்கலைக்கழகத்தில் தமிழைக் கற்பித்தார். ஜெர்மனி நாட்டில் இணையதளம் தந்த தமிழ் சொற்களை வைத்து, தமிழ் அகராதியையே உருவாக்கி அந்நாட்டிற்கு பெருமை தேடித்தந்துள்ளார். ஹங்கேரி நாட்டைச்சேர்ந்த டாக்டர் சார்லஸ் பேப்ரி 35 வருடங்களுக்கும் மேலாக இந்தியாவில் வசித்து வருகிறார். மகாபலிபுரம் சிற்பங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து, தமிழில் ஹங்கேரி மாணவர்களின் சிறப்புக் கல்வித்திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டாக்டர், நோபோடு ஹவாசிமகா என்பவர், டோக்கியோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றுபவர். தமிழை முறைப்படி கற்று சோழ சாம்ராஜ்யத்தைப் பற்றி தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வடிவமைத்துள்ளார். இணையத்தின் மூலம் தமிழ் கற்கும் தென்னிந்திய மாணவர்களை ஜப்பான் பல்கலைக்கழகம் ஆர்வத்துடன் வரவேற்றுக் கொண்டிருக்கிறது.

**தமிழ் இணையத்தின் தன்னகரில்லா சாதனை**

வீட்டிலிருந்தே தமிழில் கல்வி கற்கும் எண்ணம் கொண்டவர்ளுக்கு ஆசிரியர் துணையின்றி சுலபமான முறையில் கற்றுக்கொள்ளும் பாடங்களை அளித்து தமிழ் இணையதளம் பெருமை பெறுகிறது. தமிழில் ஆரம்ப நிலையிலிருந்து கற்பிப்பதற்கு எழுத்துப்பயிற்சி, மொழிப்பயிற்சி ஆகியவற்றை ஆங்கிலம் வழியாகப் பேராசிரியர் ஒருவர் கற்றுத்தருகிறார்

தமிழ் கற்கும் முயற்சியில் ஈடுபடுவோர் இரண்டு வகையானராவர். தமிழைப் பேச மட்டுமே தெரிந்து எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் ஒரு வகையினர். இவர்களுக்காக வாய்மொழிப்பயிற்சி எழுத்துப் பயிற்சிகளைப் பேராசிரியர் மா. நன்னன் வழங்கி வருகிறார். தமிழ் பேசவோ, எழுதவோ, தெரியாத தமிழ் கற்க விரும்பும் பிறநாட்டினரும் மற்றொரு வகையினர் இவர்களுக்கான எழுத்துப்பயிற்சி இலக்கணப்பயிற்சி, மொழிப்பயிச்சி ஆகியவற்றை ஆங்கிலம் வழியாகப் பேராசிரியர் வழங்கி வருகிறார்.

பேச்சு, எழுத்து, பத்திரிக்கை, இலக்கியம் என அனைத்திலும், தமிழை வளர்ப்பதில் தமிழ் இணையத்திற்குப் பெரும்பங்குண்டு. இந்தியாவிலும் அயல்நாட்டிலும், தமிழ்வழிக் கல்வியை பயிற்றுவிப்பதற்கும், கற்றுக்கொள்ளவும், தமிழ் இணையதளம் உறுதுணையாகக் கருவியாகச் செயல்படுகிறது.

“ஈன்று புறத்தருதல் என் தலைக்கடனே சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக்கடனே” என்று மக்களை வளர்த்தலும் கல்வி கற்கச் செய்வதும் பெற்றோர் கடமை என்பதைத் தெளிவுபடுத்தினார் சங்கப்புலவர் பொன்முடியார்.

அந்தக்கடமையை இன்று நம்முன்னே காட்சி தரும் தமிழ் இணையதளம் சற்றும் மாறாமல் தமிழ் கல்வி கற்றலும் கற்பித்தலும் மூலமாகச் செய்து பல நாட்டினர் முகங்களில் புன்னகை ஏற்படுத்தி மகிழ்வுறச் செய்கிறது. தமிழர்களை இணைப்பதோடு மட்டுமின்றி அவர்களின் இதயங்களில் தமிழின் மகிமையைச் செழுமையாக உணர வைக்கும் ஒப்பற்ற கருவியாகத் திகழ்வதுதான் தமிழ் இணையதளம்.

தற்போதுள்ள கணினிப் பயன்பாட்டில் அரசுத் துறைகளிளெல்லாம் தமிழைப் பயன்படுத்தி வருவது மகிழ்வுக்குரிய விஷயம். நம் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்துவிட்ட மொழிதான் தமிழ். தமிழ் நம்மை மறக்கவில்லை.

**செல்பேசிகளின் செயல்பாடுகள்**

- அனைத்துச் செல்பேசிகளிலும், தொடர்வண்டி வானூர்தி தொடர்பான கால அட்டவணை பதிவு விபரம் ஆகிய விபரங்களைத் தமிழிலும் பெற்று மகிழ்கிறோம்.

- செல்பேசிகளில் தமிழில் குறுந்தகவல்களை அளித்தல், பெயர்களைப் பதிவு செய்தல் முதலியவற்றை எளிதாகச் செய்து முடிக்கும் செல்பேசிகளின் செயல்பாடுகள் போற்றத் தகுந்தது.

**நிறைவுரை**

இணையதளம் உலகின் மகத்தான கலைக்களஞ்சியம். The Tamil Internet is also the world’s biggest encyclopedia offering access to a world for learning and teaching. Also over the world the computer and Tamil Internet are giving Educational activities

like speeches in the stages during the Annual days of their respective schools. The children's are giving also training Tamil Dreams like Ramayana & Mahabaratham.

The conference organized by Tamil Internet conference committee will be an opportunity for the participants researchers and common people particularly the younger generation from india and abroad to exchange ideas and thoughts on various aspects of Tamil Cultures.

இந்தத் தமிழ் இணைய மாநாடு உலகிலுள்ள தமிழின் முன்னேற்றத்தைப் பிரகாசிக்கும் வகையில் சீரோடும் சிறப்போடும் நடைபெறுகிறது. அறிஞர் பெருமக்களும், கவிஞர்களும், முனைவர்களும், புலவர்களும் தங்களது சிறப்புமிக்க கருத்துகளை மேற்கோள்களுடன் எடுத்துரைக்கிறார்கள்.

**ஆய்வுக் கட்டுரைக்குத் துணை நின்ற நூல்கள்**


1. Tamil Studies sin foreign Counties
2. கோலாம்பூரில் நடைபெற்ற முதல் இணைய முதல் மாநாட்டில் அறிஞர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள்
3. கணினி தமிழ் வளர்ச்சியும் கல்வி நிகழ்ச்சிகளும்
4. இன்பத்தமிழில் இணையத்தமிழ் வளர்ச்சி

**Natural language Processing based Visualization - A Survey**

**C.Vijayalakshmi* & Dr. R. Shriram****

* *Dept of Information Technology,* <vijayalakshmi@bsauniv.ac.in>

** *Dept of Computer Science and Engg,* <shriram@bsauniv.ac.in>

*B S Abdur Rahman University, Chennai.*

**Abstract-**

*Visualization is the graphical presentation of information, with the target of providing the* viewer *information, to monitor trends embedded in data, and to explore huge volumes of data from hypothesis generation. This study gives the review about visualization, its types, search engines, tools and its usage in Natural Language Processing. Visualization technologies help to categorize patterns and to mine insights from huge amounts of information. Visualization technology shows significant promise from raising the value of large-scales collections of information.*

*Keywords- Natural language processing, Visualization and Search Engine.*

## Introduction

### Visualization

Visualization with a qualitative understanding of the information contents. It is also the process of transforming concepts, objects, and numbers into a structure that is perceptible to the human eyes.[1]

### Visualization in Natural language Processing

The process of analyzing the input provided in a human language and transformation of this input into a helpful form of representation. The field of Natural language Processing is mainly concerned with getting computers to perform useful and interesting tasks with human languages. Natural language Processing (NLP) data is wide ranging in scope but has specific characteristics that mean the problems with visualizing large amounts of data are less significant. This is because either the information is visualized as coloured markup on the text, or the information is grouped over small segments of text, such as paragraphs or sentences.[2]

## Types of Visualization

### Data Visualization

Data visualization is a graphical representation of numerical data. It understands the patterns,

trends and relationships that exist in groups of numbers. It involves detection, measurement, and comparison, and is improved by means of interactive techniques and providing the information from various views and with multiple techniques. The precise data visualization tool can present a difficult data set in a way that is simple to understand. [1]




**Scientific Visualization**

Scientific visualization is concerned with use of computer graphics for the analysis and presentation of computed or measured scientific data. It exemplifies the skill of using computer graphics techniques to explore results from numerical analysis and extract meaning from complex multi-dimensional data sets. Few areas of scientific visualization are flow visualization, chemical visualization, astrophysical visualization and medical visualization. There are a number of different techniques to visualize scientific data, with reconstruction of isosurface and direct volume rendering being the more common.

**Information visualization**

Information visualization is a computer-aided process that aims to reveal insights into an abstract phenomenon by transforming conceptual data into visual-spatial forms. The information visualization optimizes the use of our perceptual and visual-thinking ability in dealing with phenomena that might not readily lead themselves to visual-spatial representations [3].

**Knowledge Visualization**

Knowledge visualization represents the data results of a computer-simulated cognitive

process, such as learning, perception, reasoning and association of some knowledge acquired by human beings [4]

**Visual Search Engines**

Interactive graphical and visualization techniques are recommended to increase the ability of the display to handle huge numbers of results while simultaneously presenting several attributes for each Web page. Query reformulation and reconstruction is usually controlled by the search engine leading to redundancy. Integrating the user in the progression of query reformulation is done by visualizing the process itself and it benefits the overall search relevance. An interactive Visual Search Engine visualizes both processes of query reformulation and results presentation [5].

WhatsOnWeb is a search engine which provides a new efficient clustering algorithm, which integrates new graph visualization algorithms and introduces a novel visual strategy for exploring clustered graphs. Experimental analysis is performed to evaluate the effectiveness of WhatsOnWeb+ as a search engine and performances is compared. It features three new illustrative interfaces, based on radial, layered, and treemap and measures the Efficiency of the clustering technique [6].

Yale Image Finder (YIF), a search engine that indexes text found inside biomedical images. YIF provides more comprehensive research results by searching over text that may not be present in the image description, and offers the ability to find related images and associated papers by directly comparing image content [7].

**Types of Graph**

Graphs represent structured and connected data. Graph visualization has several areas of application. A file hierarchy in a computer system is represented as a tree. It is necessary to navigate through the file hierarchy in order to find a particular file. The problem in viewing graph visualization is the size of the graph. Large graphs cause several complex problems. If the number of elements is huge, it can compromise performance or reach the limits of the viewing platform. This study presents a tree layout, H-tree layout., Balloon view, a cone tree, Hyperbolic view of a tree in 3D, the Klein model for the hyperbolic plane, Fisheye distortion and different schematic views of a tree namely ghosting, hiding, and grouping [8].

**Tools**

Visualization modules define graphical interfaces for viewing and manipulating data structures, and graphical tools for experimenting with Natural language Processing (NLP) tasks. This paper presents various modules for interfacing, building and displaying tree

structures. It also provides a graphical tool for displaying and simulating finite state automata and interactive graphical tool for experimenting with chart parsers. [9]

**Conclusion**

Complete human-level natural language understanding is still a distant goal, but there are practical and usable partial NLP systems applicable to many problems NLP methods have opened up new possibilities for high performance text understanding systems and visualization. This work presented a general survey of text visualization, natural language processing, visualization types, visual search engine, graphs and about visualization tools.

**References**


[1] Zhao Kaidi, Data Visualization, Matrix Number: HT00-6177E.

[2] Rodgers. P, Gaizauskas.R, Humphreys.K and Cunningham.H,(1997). Visual Execution and Data Visualisation in Natural Language Processing. *Proceedings of IEEE symposium on Visual Languages.*

[3] Alhenshiri.A, Brooks.S, Watters.C, Shepherd.M,(2010). Augmenting the Visual Presentation of Web Search Results. *Fifth International Conference on Digital Information Management (ICDIM).*

[4] Chen.M, Ebert.D, Hagen.H, S.Laramee.R, van Liere.R, Kwan-Liu Ma, Ribarsky.W, Scheuermann.G, Silver.D,(2009) Data, Information, and Knowledge in Visualization, Published by the IEEE Computer Society.

[5] Pao-Nan Chou & Ziyan Ma ( ).Trends in Information Visualization Research: A Content Analysis in a Referred Journal

[6] Di Giacomo .E, Didimo.W, Grilli.L, Liotta.G, Palladino.P,(2008). WhatsOnWeb: An Enhanced Visual Search Clustering Engine, *PacificVIS '08. IEEE Pacific Visualization Symposium*

[7] Songhua Xu, James McCusker and Michael Krauthammer,(2008). Yale Image Finder (YIF): A new search engine for retrieving biomedical images. *Bioinformatics Applications Note* Vol. 24 no. 17 pages 1968–1970

[6] Ivan Herman, Guy MelancËon, and M. Scott Marshall,(2000). Graph Visualization and Navigation in Information Visualization: A Survey. *IEEE Transactions on Visualization and Computer Graphics, vol. 6, no. 1.*

[8 Edward Loper and Steven Bird,(2004). NLTK: The Natural Language Toolkit,

[9] Okajima.S and Okada.Y,(2007). Treecube+3D-ViSOM: Combinational Visualization Tool for Browsing 3D Multimedia Data, *11th International Conference on Information Visualization*. IV '07.

[9] Morris.K.R and Mathew R. Schwaller,(2010). Data Visualization and Analysis Tools for the Global Precipitation Measurement (Gpm) Validation Network*, IEEE International Conference on Geoscience and Remote Sensing Symposium (IGARSS),*

[10] Ningning Dang, Fei Yang, Bingjia Xiao, and Yingfei Zhu,(2009). WebScope: A New Tool for Fusion Data Analysis and Visualization. *RT '09. 16th IEEE-NPSS Real Time Conference.*

# BILINGUAL DATABASE SOFTWARE FRAMEWORK FOR THIRUKKURAL

**Ravi Lourdusamy**[1] **and Merlin Florrence Joseph**[2]
Dept. of Computer Science, Sacred Heart College, Tirupattur, Tamilnadu, India
[1]raviatschc@yahoo.com [2] merlinflorrence@gmail.com

**Abstract:**

Tamil literature has a rich and long literary tradition spanning more than two thousand years. The oldest extant works show the signs of maturity indicating an even longer period of evolution. This article presents a software framework for developing bilingual applications for such Tamil literary. A desktop application is designed to validate the software framework using the Tamil literature Thirukkural. Further the application for thirukkural is developed to support Tamil and English languages. The application is designed with effective search methods of Kural with a user friendly Graphical User Interface.

**Index Terms:** Bilingual, Framework, Unicode

## 1. INTRODUCTION

In Tamil, there are plenty of literature which consists of rich culture and greater values. To expose the values of Tamil literatures there is a need to develop software applications which supports bilingual or multilingual, so that any of the language users can taste the values and the virtues of Tamil culture. At present in the field of Tamil computing very few desktop and web based applications are available on Tamil literature. The proposed application is developed for Thirukkural which belongs to the Sangam age of Tamil literary. This literary has the rich values and it has been translated into many other languages all over the world. It is one of the most famous Tamil literatures and most readable book in the world.

The aim of this article is to give readers a comprehensive overview of bilingual database and to develop a framework for a bilingual database application. An application is developed adapting to the framework and further the application is also evaluated. This article intends to describe the structure of the bilingual database framework. Database systems need to be efficient with respect to multilingual data. Databases can be classified according to the types of it contents: bibliographic, full-text, numeric, and images. In computing, databases are sometimes classified according to their organizational approach. The most prevalent approach is the relational database, a tabular database in which data are defined so that it can be reorganized and accessed in a number of different ways. The database which is implemented to support two languages is called bilingual database and the database that supports more than two languages is known as multilingual database.

The article is further organized as follows. In section 2 related works on multilingual database are narrated in a nutshell. In section 3 the software framework developed for a bilingual database application is presented. In Section 4 the software framework is validated by implementing a desktop application adopting the framework. The conclusions are proposed in section 5.

## 2. RELATED WORKS

A database is a collection of information that is organized so that it can easily be accessed, managed, and updated. But it is quite difficult to store and manipulate more than one

language in database. This section attempts to review several research works related to the bilingual and multilingual information retrieval system.

Saraswathi.S et.al.,[1] have developed a generic platform for bilingual information retrieval which can be extended to any foreign or Indian language. Search for the solution of the query is not performed in a specific predefined set of standard languages but is chosen dynamically on processing the user's query. This system is tested for information retrieval using the keywords alone and with the use of concept words obtained from the ontology. Isao Goto et.al.,[2] have developed the database that is composed of news texts used for international broadcasting services. The multilingual database is compiled from the news texts belonging to twenty two languages. The research work describes the features of the database and the process of compiling the database and also demonstrates a multilingual translation aid system intended to support news translation. Jeffrey Sorensen et.al.,[3] have proposed a new architecture that supports all types of database such as MSSQL, MySQL, Sybase, MSAccess etc., This architecture also supports Unicode and full-text indexing. Two techniques are used to retrieve the information namely string comparison and N-gram indexing. This system uses Unstructured Information Management Architecture (UIMA) and many of the components to provide access to a multilingual database documents.

Shafi S.M et.al.,[4] have presented the design of an interface for developing a database of 'medieval manuscripts' for accommodating data elements in multilingual and multiscript medium using Unicode character sets. The design of the multilingual interface for medieval manuscripts exhibits the exploitation of the opportunities offered by the information technology without any constraints for the users. Victor Zue et.at.,[5] have developed multilingual conversational systems that support human-computer interactions. It is based on the premise that a common semantic representation can be extracted from the input for all languages, at least within the context of restricted domains. In design of such systems, language dependent information is separated from the system kernel as much as possible, and encoded in external data structures. Helmat Berger et.al.,[6] have proposed an approach for a multilingual natural language query interface that allows the formulation of queries on tourism information. The interface is based on n-gram language identification and a keyword-based query interpretation where natural language analysis is performed for identification of the requested objects. The web-based interface is designed to allow for easy addition of alternative languages and for easy adaptation to other application domains.

Martin Andreson et.al.,[7] have proposed a framework for building a FEderated MUltilingual database System(FEMUS). The term federated meant the global system that provides the functionalities to include as components, different heterogeneous database systems cooperating together. This system is responsible for transforming the global queries and updates into statements for the component schema. In a multidatabase system, local components are kept separate, such that no global federated schema exists. Petraki E et.al.,[8] have proposed the utilization of a priori conceptual relations between terms that exist independently of any documents through a controlled vocabulary known as thesaurus, which incorporates both terms and the conceptual relations among them. The research work also discusses the integration of multilingual thesauri in the set-theoretic FDB (Frame DataBase) data model, which offers a universal schema for all applications. European Statisticians Sharing Advisory Board and Uniter Nation Economic commission for Europe(UNECE) Secretariat[9], with input and peer review from participants in the 2011 joint UNECE/Eurostat/ OECD meeting on management of Statistical Information Systems (MSIS) declared some principles to develop multilingual applications.

Swpna.N et.al.,[10] described some of the most important areas of information retrieval, in particular, Cross-lingua Information Retrieval (CLIR) and Multilingual Information Retrieval (MLIR) where CLIR deals with asking questions in one language and retrieving documents in different language and MLIR deals with asking questions in one or more languages and retrieving documents in one or more different languages. It also explains a description on cross-lingual and multilingual information retrieval, its challenges and current methods, techniques and evaluation tracks to overcome problems for efficient and resourceful searching. Thenmozhi D et.al.,[11] have developed a Cross Lingual Information Retrieval (CLIR) system that helps the users to pose the query in one language and retrieve the documents in another language. It addresses the issue of translating the given query in Tamil to English using Machine Translation approach. It also uses a Morphological Analyzer to obtain the root terms of source query. The system exhibits a dynamic learning approach wherein any new word that is encountered in the translation process could be updated to the bilingual dictionary. Jialun Qin et.al.,[12] have developed and evaluated a multilingual English-Chinese Web portal in the business domain. A dictionary-based approach has been adopted that combines phrasal translation, co-occurrence analysis, and pre- and post-translation query expansion. The proposed approach can be applied in other web based applications or digital libraries.

Abu Sayed Md. Et.al.,[13] have proposed a translator-based approach for handling multilingual data that stores data in theoretical information way with minimum redundancy. In this research work, the algorithms are developed for inserting the multilingual data into a single non-redundant database and querying and updating the database. The algorithms have been evaluated by syntactic data sets generated by a data generation program. The system is implemented for two languages: English and Bangla. In this system, data has been stored in a central server and clients can perform different operations in the database dynamically in a distributed environment. A Thirukkural application called DailyKural is developed by Guru Kathiresan[14]. It was developed as a desktop application to support Tamil and English languages. The application is implemented with few search methods. The application allows the user to view one Kural at a time. There is no feature to view the whole Kural under the category of Chapter, Chapter Group and Section.

## 3. BILINGUAL SOFTWARE FRAMEWORK

The main aim of this section is to present the overview of bilingual software framework. The proposed framework is developed for the Tamil literary, Thirukkural. The application is developed with few reusable components such as: Database structure, Graphical User Interface design and programming code. The objectives of the proposed system are: to present a comprehensive overview of bilingual database applications, develop a software framework for Tamil literary, and develop a desktop application for Thirukkural based on framework and to validate the framework using bilingual database.




Figure 3.1 Bilingual Software Framework

The software framework is depicted in figure 3.1. In the figure, bilingual interface represents the graphical user interface of the proposed software. Process model includes the process involved in retrieving the data from database based on the user's query. The framework provides user services which means user can install the application in their system wherever they want to use. It allows the user to maintain the framework in the end system. The framework utilizes the bilingual database to retrieve data that is developed with this application.

## 4. IMPLEMENTATION AND EVALUATION

The aim of this section is to describe the development phases involved in implementing the software framework for Thirukkural. The system is implemented as a desktop application using C#.Net Windows Forms as front end and MSSQL database as backend. To support Tamil fonts in MSSQL, Unicode UTF-8 is used. The proposed framework is developed with four modules. They are: 1) Selection of language, 2) Searching methods of Kural, 3) Exporting to MSWord and MSExcel and 4) Facts about Thirukkural and Thiruvalluvar. Selection of language is the first module that is used to select the language either Tamil or English. The list of Kural is categorized under chapter and the list of chapters is structured in hierarchy form using treeview control. By selecting the specific chapter from the treeview, user can view the Kural.

The second module of this application is searching methods of Kural, which provides seven different methods to search Kural efficiently. They are: search kural by kural's number, chapter's number, name of the chapter, and name of the section, name of the chapter group, starting and ending word of the Kural. The third module is exporting Kural from application to MSWord and MSExcel. This module allows the user to export the Kural that they have selected into word format or excel sheet. The system also contains the interesting facts about Thirukkural and Thiruvalluvar. The source of Thirukkural in English is taken from G.U.Popes Thirukkural Translation and commentary[15] and the source of Thirukkural in Tamil is taken from M.Karunanithi's commentary[16].

The system is evaluated using two assessment method. They are: Criteria-based assessment and Tutorial-based assessment. In criteria-based assessment method, the usability and maintainability of the application is evaluated. The installation process of the application is clearly defined and the end user's expectations are evaluated in this assessment. In tutorial-based assessment method, the software is evaluated by the experience of the user with the application. The application is also tested with the Visual Studio Test Professional which is used to identify the bugs and assures the quality of the application. The application is evaluated by the Ph.D Scholars of Department of Tamil, Sacred Heart College. The feedback given by the scholars are analyzed and the application is revised.

## 5. CONCLUSION

A software framework for a bilingual database application is presented in detail. The framework is evaluated by developing a bilingual desktop application for Thirukkural using C#.Net Windows Forms as front end and MSSQL database as backend. The application is portable and the user can install and access the application in any system. The Graphical User Interface designed in the application is simple and user friendly. Effective search methods are incorporated in the application to search the bilingual database based on a criteria.
The application has several reusable components so that it can be adopted for any other Tamil literary by replacing Thirukkural. The bilingual database used by the application can be

redesigned as a multilingual database by adding other languages like Malayalam, Hindi etc., To perform the semantic-based search, the framework can be further implemented by using ontology as backend and C#.Net or Java as front end.

## REFERENCES


[1] Saraswathi.S, Asma. Siddhiqaa.M. Kalaimagal.K and Kalaiyarasi.M, "Bilingual Information Retrieval System for English and Tamil", Journal of Computing, Vol 2 issue 4, April 2010 ISSN 2151-9617.

[2] Isao Goto, Naoto Kato and Terumasa Ehara, "A Multilingual news database and its application to a translation memory system", In proceeding of: 6th Natural Language Processing Pacific Rim Symposium Post-Conference Workshop on Language Resources in Asia, 11/2001

[3] Jeffrey Sorensen and Salim Roukos, "Rethinking Full-Text Search for Multilingual Databases", IEEE, Computer Society Technical Committee on Data Engineering, 2007.

[4] Shafi S.M and Nadim Akhtar Khan, "Designing an Interface for Multilingual and Multiscript Database of Medieval Manuscripts", TRIM V2(2) July-Dec, 2006.

[5] Victor Zue, Stephanie Seneff, Joseph Polifroni, Helen Meng, and James Glass, "Multilingual human-computer interactions: from information access to language learning", DARPA, N66001-94-C-6040, 1996.

[6] Helmat Berger, Michael Dittenbach, Dieter Merkl and Werner Winiwarter, "Providing multilingual natural language access to tourism information", 2011.

[7] Martin Andreson, Yann Dupont, Markus Tresch and Haiyan Ye, " FEMUS: a FEderated MUltilingual Database System", 1991

[8] Petraki E, Kapetis C, and Yennakoudakis E.J, "Conceptual database retrieval through multilingual thesauri", Computer Science and Information Technology 1(1):1932, 2013, DOI:10.13189/ csit.2013.010103.

[9] The principles and guidelines on Building Multilingual Application for official statistics, United Nations Economic Commision for Europe.

[10] Swpna.N, Padmaja Rani, Kiran Kumar, "A survey on the cross and multilingual information retrieval", National Conference on Research Trends in Computer Science and Technology-2012, Vol 3, Issue (1) NCRICST, ISSN 224 -071X.

[11] Thenmozhi D. and Aravindan C, "Tamil-English Cross Lingual Information Retrieval System", 2009.

[12] Jialun Qin, Yilu Zhou, Michael Chau and Hsinchun Chen, "Supporting Multilingual Information Retrieval in Web Applications: An English-Chinese Web Portal Experiment," IIS-9817473, 1999/4 – 2002/3.

[13] Abu Sayed Md. Latiful Hoque and Mohammad Shamsul Arefin," Multilingual Data Management In Database Environment", Malaysian Journal of Computer Science, Vol. 22(1), 2009.

[14] DailyKural Software developed by Guru Kathiresan, Murugappan P, [Online]. (URL:http://www.dailykural.com/). (Accessed 12 May 2010).

[15] Dr. K. Kalyanasundaram, "மதுரைத் தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம், Project Madurai, 2002.

[16] Gokulnath Murugesan, [Online]. (URL: www.gokulnath.com/thirukkurals/). (Accessed 21, November 2005).

## இணையவழிச் சங்க இலக்கியம் கற்பித்தலில் சிக்கல்களும் தீர்வுகளும்

**முனைவர் தி. செல்வம்**

*தமிழ்த்துறைத் தலைவர், தாகூர் கலைக் கல்லூரி, புதுச்சேரி*

தமிழ் நீண்ட காலமாகப் பேசுவதன்மூலமும் கரும்பலகையில் எழுதுவதன்மூலமும் வகுப்பறையில் கற்பிக்கப்படுகிறது. இவை இன்றுவரை பின்பற்றப்பட்டாலும் இவற்றால் தமிழ்க் கல்வி வெற்றிகரமாக மாணவர்களுக்குச் சென்றுசேர்கின்றது என்று சொல்ல இயலவில்லை. கணினி, இணையம் ஆகியவற்றால் தரப்படும் கல்வி, மாணவர்களிடையே சலிப்பைப் போக்கி மனத்தில் பதியவைக்கும் என்பதை நடைமுறையில் உணரமுடிகிறது.

### இணையமும் சங்க இலக்கியமும்

ஏறக்குறைய 2000 ஆண்டுகள் பழமையான சங்க இலக்கியக் கல்வி இன்றைய நிலையில் மாணவர்களுக்குச் செவ்வனே சென்றுசேர்வதற்கு இணையம் முக்கிய பங்காற்றுகிறது. தற்போது இணையத்தில் சங்க இலக்கியங்களின் மூலமும் உரையும் எழுத்து (text) என்ற நிலையில் கிடைக்கின்றன. இது முதற்கட்ட நன்முயற்சி என்பதில் ஐயமில்லை.

### சங்க இலக்கியம் கற்பித்தலில் காணொளியின் பயன்

சங்க இலக்கியம் தொடர்பான சில படங்களும் (image) கிடைக்கின்றன. ஆனால் சங்க இலக்கியம்பற்றிய காணொளி (video) மிக அரிதாக இணையத்தில் காணப்படுகிறது. ஆனால் காணொளி உலகத்தில் நிகழும் காட்சிகளை மனக்கண்ணில் தோற்றுவிப்பதில் பெரும்பங்கு ஆற்றுகிறது. எனவே, சங்க இலக்கியத்தைக் காணொளி என்ற வடிவத்தில் இணையத்தில் தருவது சங்க இலக்கியம் கற்பித்தலுக்கு - மாணவர்களுக்கு அக்கல்வி உண்மையாகச் சென்று சேர்வதற்கு - மிகவும் பயன்படுவதாகும். இணையத்தில் யூடியூப் முதலிய காணொளி வழங்கும் தளங்களில் சங்க இலக்கியம் ஏற்றப்படும்பொழுது சங்க இலக்கியக் கல்வி வளரும். கற்பித்தல் சிறப்பாக அமையும். மாணவர்கள் ஆசிரியர்களை மட்டும் நம்பி இருக்கவேண்டிய தேவை இராது.

### சங்க இலக்கியக் காணொளிகள் இணையத்தில் நிறைந்த அளவில் காணப்படாச் சிக்கல்

சங்க இலக்கியக் காணொளிகளை யூடியூப் முதலிய தளங்களில் பார்வைக்கு வைத்தால், சங்க இலக்கியம் கற்பித்தலும் மாணவர்கள் கற்றலும் எளிதாகும் என்றாலும்

அதனைச் செய்பவருக்கு அது மிகுந்த பொருட்செலவையும் பேருழைப்பையும் தருவதாக அமைவது சிக்கலுக்கு உரியதாகும். ஏனென்றால் சங்க இலக்கியக் காணொளிகளை உருவாக்குவதற்கு முப்பரிமாண வடிவப்பொருட்களை (3D objects) உருவாக்கிக் கொள்வதற்கும் அவற்றிற்கு அசைவு (animation) தருவதற்கும் 3டிமேக்சு, மாயா முதலிய மென்பொருள்களில் நல்ல பயிற்சியும் பயன்படுத்தும் திறனும் தேவைப்படுகின்றன. இவற்றை நன்கு அறிந்திருப்போர் பெரும்பாலும் திரைப்படத்துறைக்குச் சென்று பெருந்தொகை ஈட்டுகின்றனர். இனாமாக இவர்கள் உதவி கிட்டுவதில்லை.

**இலக்கியப் பகுதிகளுக்குக் காணொளி**

இந்நிலையில் இலக்கியப் பகுதிகளுக்குக் காணொளி ஆக்கும் முயற்சி சிலரால் மேற்கொள்ளப்பட்டமை பாராட்டிற்கு உரியதாகும். இவை விரைவான தேவைகளை முன்னிறுத்திச் செய்யப்பட்ட முன்முயற்சிகளாக அமைவதால் குறைகளும் உண்டு. மார்கழித்திங்களில் பாடப்படும் திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் காணொளி ஆக்கப் பட்டுள்ளமையை இணையத்தில் காணலாம். அவ்வகையில் ஆதியும் அந்தமும் எனத் தொடங்கும் திருவெம்பாவைப் பாடலும், மார்கழித் திங்கள் எனத் தொடங்கும் திருப்பாவைப் பாடலும் பல்வேறு வடிவங்களில் இணையத்தில் காணொளிகளாகக் கிடைக்கின்றன.

இவ்வாறே தேவாரம் ,

அவ்வினைக் கிவ்வினை ஆமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம். (சம்பந்தர், பாடல்)
(https://www.youtube.com/ watch?v=jtYcmvC0rdU), எனவும்,

திருவாசகப் பாடல்கள்,

“பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான் மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றுதாய் கோத்தும்பீ” 215
(https://www.youtube.com/watch?v=fr8mTh6jEwU) எனவும் அமையும்.

மேலும் சில பன்னிரு திருமுறைப் பாடல்களும் காணொளி ஆக்கப்பட்டுள்ளன. பல காணொளிகளில் சிவபெருமான் படத்தைமட்டும் வைத்துப் பாட்டுப் பாடப்பட்டுள்ளது. ஒருசிலவற்றில் படத்திற்குச் சிறு அசைவு கொடுத்துள்ளனர். படத்திற்குள் உள்ள பாத்திரத்திற்குக் கை, கால் அசைவு முதலியன தரப்படவில்லை.

இதற்கு மாற்றாக உண்மை மனிதர்களைக் கொண்டு, சங்க இலக்கியத்திற்கு நடிக்கச் செய்தும், காணொளிகளை உருவாக்கலாம். ஆனால் அதிலும் சிக்கல் உள்ளது. ஆண் மாந்தர்கள் மனத்தோடு பேசிக் கொள்வதையோ பிற ஆண் மாந்தர்களோடு பேசிக்கொள்வதையோ காணொளிஆக்க முயற்சி செய்வதானால் பெரும்பாலும் சேவை மனப்பான்மை கொண்டவர்களால் நிறைவேறிவிடும் (https://www.youtube.com/watch?v=05lUaZOEbeM).

பின்வரும்

“இரு நிலம் குறையக் கொட்டிப்பரிந்தின்று
ஆதி போகிய அசைவு இல் நோன் தாள்,
மன்னர் மதிக்கும் மாண் வினைப் புரவி
கொய்ம் மயிர் எருத்தில் பெய்ம் மணி ஆர்ப்ப,

பூண்கதில்-பாக!-நின் தேரே: பூண் தாழ்
ஆக வன முலைக் கரைவலம் தெறிப்ப
அழுதனள் உறையும் அம் மா அரிவை
விருந்து அயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய
முறுவல் இன் நகை காண்கம்!-
உறு பகை தணித்தனன், உரவு வாள் வேந்தே”( நற்றிணை 81)
(வினை முற்றிய தலைவன்தேர்ப்பாகற்கு உரைத்தது.
பாடியவர்: அகம்பன்மாலாதனார்)

நற்றிணைப்பாடல் காணொளி ஆக்கப்பட்டுள்ளது.

ஆனால் பெண்மாந்தர்கள் மனத்தோடு பேசிக் கொள்வதையோ பிற பெண் மாந்தர்களோடு பேசிக்கொள்வதையோ காணொளி ஆக்க முயற்சிசெய்வதானாலும் எளிதில் கைகூடுவதில்லை. ஏனென்றால், தமிழ் பேசும் தமிழ்ப் பெண்கள் பெரும்பாலும்

யூடியூப் முதலிய இணையதளங்களில் தங்கள் காணொளி வருவதை விரும்புவதில்லை அல்லது அவர்களின் பெற்றோர்களும் பிறரும் அதற்கு வழிவிடுவதில்லை.

### சிக்கலுக்குத் தீர்வு

சங்க இலக்கியங்களில் ஒன்றிரண்டு காணொளிகள் மட்டுமே யூடியூபில் காணப்படுகின்றன. பல்லாயிரக் கணக்கில் உள்ள சங்கப் பாடல்களுக்கு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான ஊக்கமும் உழைப்பும் தேவை. முதல் கட்டமாக, சங்க இலக்கியங்களில் ஆண் மாந்தர்கள் மனத்தோடு பேசிக் கொள்வதையும் பிற ஆண் மாந்தர்களோடு கூற்று நிகழ்த்துவதையும் காணொளி ஆக்கலாம்.

காலப் போக்கில் மக்கள் மனநிலையும் மாறும். மேலும், 3டிமேக்சு, மாயா முதலிய மென்பொருள்களில் பயிற்சியும் பயன்படுத்தும் திறனும் பெற்றுவிட்டால், தொண்டு நிறுவனங்கள்மூலமோ அரசாங்கம்மூலமோ முப்பரிமாண வடிவப் பொருட்களை உருவாக்கியும், அசைவு கொடுத்தும் சங்க இலக்கியம் முழுமைக்கும் காணொளி உருவாக்கிவிட முடியும்.

### தொகுப்புரை

இலக்கியத்திற்குச் - சங்கப் பாடல்களுக்குக் - காணொளி வழங்குவதில் உள்ள சிக்கல் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. தீர்வும் பேசப்பட்டுள்ளது. சிறப்பான காணொளிகள் தோன்ற வேண்டிய காலத்தின் தேவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

# தமிழ் மின்னூல்கள் உருவாக்கம், உள்ளடக்கம், பயன்பாடு – ஒரு மதிப்பீடு

முனைவர் சி. சிதம்பரம், M.A., M.Phil., Ph.D.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம் – 624 302. திண்டுக்கல் மாவட்டம்.
இணைய முகவரி: www.muthalvan.in மின் அஞ்சல் முகவரி: mudalvaa@gmail.com

'புத்தகங்கள் இல்லாத இல்லம் சன்னல்கள் இல்லாத வீட்டைப் போன்றது' என்பது ஆங்கிலத்தில் புகழ்பெற்ற பழமொழியாகும். இன்று கணினி இல்லாத இல்லம் விளக்கில்லாத வீட்டைப் போன்றது என்று சொல்லும் அளவிற்கு அதன் தேவை விரிந்து கிடக்கிறது. வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்தில் கணினி மிக இன்றியமையாத கருவியாக மாறிவிட்டது. தமிழன் பழங்காலத்தில் இமயத்தில் கொடியை நட்டான். ஆனால் இன்று கணினியுடன் நெருங்கிய தொடர்புடைய இணையத்தில் தமிழைப் புகுத்தி அதனை எட்டாத உயரத்தில் ஏற்றிவிட்டான். இணையப் பயன்பாட்டில் தமிழ்மொழி இரண்டாவது இடத்தைப் பெற்று வளர்ந்து வருகிறது. ஆங்கில மொழி இணையதளங்களுக்கு இணையாகத் தமிழ் இணையதளங்களும் நாளுக்கு நாள் தோன்றி தழைத்து வளர்ந்து வருகின்றன. அந்த வகையில் தமிழ் மொழியில் இதுவரை இணையம், திறன்பேசிகளில் வெளிவந்துள்ள மின்னூல்களின் உருவாக்கம், உள்ளடக்கம், பயன்பாடு ஆகிய நிலைகளில் ஒரு மதிப்பீடாக இக்கட்டுரை அமைகிறது.

**மின் புத்தகங்கள்**

நாம் இன்று அதிக அளவில் பயன்படுத்தும் புத்தகங்கள் தாளில் அச்சிட்டு, கட்டுமானம் (Binding) செய்து தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளைக் கணினி உதவியுடன் தட்டச்சு செய்து இணையத்தில் (அ) திறன்பேசியில் வெளியிடுவதே 'மின் புத்தகம்' (E-Book) என்று அழைக்கப்படுகின்றன. இதனைப் பதிவிறக்கம்(Download) செய்து குறுந்தட்டு (Compact Disk) வடிவில் சேமித்து வைப்பதையும் மின்புத்தகங்களாக கருதப்படுகின்றன. 2004 –ஆம் ஆண்டு தனியொரு மனிதனாக ஒரு மின்புத்தகத்தை (முதல்வன்) உருவாக்கியதன் வாயிலாக எனக்கு ஏற்பட்ட சில சிக்கல்களை மையமிட்டும் இன்றளவில் மின்புத்தகம் தோன்றி வளர்ந்த வரலாற்றையும் இதனால் தமிழன்னை பெற்ற புதிய அணிகலன் குறித்த ஒட்டுமொத்த மதிபீடாகவும் இக்கட்டுரை அமைகிறது.

**மின்னூல்கள் - உருவாக்கம்**

நாம் வெளியிட விரும்பும் ஆழ்ந்த, உட்பொதிந்த கருத்துக்கள் அடங்கிய பொருட்கூறுகளை (அ) பகுதிகளைக் (Content) கணினி தமிழ் எழுத்துருக்களைப் (Tamil Font) பயன்படுத்தி தட்டச்சு செய்து கொள்ள வேண்டும். தட்டச்சு செய்து கொண்ட பகுதிகளை (Document) ஒரு கோப்பாகச் (File) சேமித்து வைக்க வேண்டும். நாம் தட்டச்சு செய்து கொண்ட கோப்பு எந்த மென்பொருளைப் பயன்படுத்தித் தயார் செய்தோமோ அந்த மென்பொருளின் மூலம் இணையத்தில் பயன்படுத்தும் வகையில் HTML (or) ASP, JSP, PHP கோப்புகளாகப் பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

இணையத்தில் உள்ள அனைத்துத் தகவல்களும் இரண்டு வகைக் கோப்பகங்களாகவே வடிவமைக்கப்பட்டு வருகின்றன. அவை, 1. HTML 2. ASP முதலில் குறிப்பிட்ட வகை கோப்பு நாம் எவ்வாறு தயார் செய்து ஏற்றுமதி செய்தோமோ அவ்வாறே இணையத்தில் ஏற்றுமதி செய்யமுடியும். இரண்டாவதாக குறிப்பிடும் முறை, நாம் தயார் செய்து ஏற்றுமதி செய்த கோப்புகள் இணையத்தின் சேமிப்புக் கிடங்கில் (Server) சென்று தேங்கிக் கிடக்கும். பிறகு நாம் அந்தக் கோப்பை பயன்படுத்த முயற்சிக்கும்போது சேமிப்புக் கிடங்கில் உள்ள அந்தக் குறிப்பிட்ட கோப்பு செயல்படும் பக்கங்களாக (Active Page) மாறி கண்முன்னே தோன்றும்.

ஒவ்வொரு நாளும் ஏற்றுமதி செய்யப்படும் கோப்புகள் இணை சேமிப்புக் கிடங்கில் ஆவணமாக (Archives) பாதுகாக்கப்படும். இவ்வாறு வெளியிடப்படும் மின் புத்தகங்களை இணையத்தின் உதவியோடு மென்தட்டுகள் (CD) மூலம் பதிவிறக்கம் செய்தும் பயன்படுத்த முடியும். இவ்வாறு இணையத்தில் நமது நூல்களை வெளியிட்ட பிறகும் இணைய சேமிப்புக் கிடங்கை முறையாகப் பராமரிக்க வேண்டும். குறிப்பிட்ட இணைப் பக்கத்திற்கு ஒதுக்கிய இடத்தை (Web Space (or) Web Server Space) ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் நாம் வெளியிட்ட மின் புத்தகங்கள் காலாவதியாகிவிடும். திறன் பேசிகளுக்கான மின் நூல்களும், நூலகங்களும் தற்பொழுது புதிய முறையில் வடிவமைக்கப்படுகின்றன.

சங்கப்பலகை, NHM Reader, தமிழ்ச்சிறுகதைகள் தொகுப்பு, என தொல்காப்பியம் முதல் கையடக்கத்தமிழ் வரையிலான அனைத்து வகைத்தமிழ் நூல்களும் இன்று திறன்பேசி சந்தைகளில் கிடைக்கின்றன.

**மின் நூல்கள், மின் இதழ்கள் – உள்ளடக்கம்**

இலங்கையில் திட்டமிட்டு அழிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் விளைவால் பிறந்ததே நூலகம் (www.noolaham.net) என்ற மின் நூலகம் ஆகும். இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை மட்டுமின்றி தற்பொழுது அனைத்து தமிழ்ச்சமூகங்களின் படைப்புகளை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு, தகவல் வளங்களையும் அறிவுச்சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்துவரும் இலாப நோக்கற்ற தன்னார்வ

முயற்சியின் பயனாக இந்த அரிய நூலகம் செயல்பட்டு வருகிறது. இவை தவிர தமிழ் இணையக்கல்விக்கழகம், மதுரைத்திட்டம், தமிழம்.நெட், தமிழ் மரபு அறக்கட்டளை, ரோஜா முத்தையா ஆய்வு நூலகம் போன்ற பல மின் நூலகங்கள் இணையத்தின் வாயிலாகக் கிடைக்கின்றன. இன்று அனைத்து அச்சு ஊடகங்களும் மின்மயமாக மாற்றம் பெற்றுள்ளன. இதன் விளைவால் இன்று அனைத்துத் தகவல்களும் எளிதில் மக்களைச் சென்றடையும் வகையில் உள்ளன. அதுமட்டுமின்றி பல்வேறு வகையான ஆய்வு இதழ்களும் (கீற்று, தலித் முரசு, காலச்சுவடு, திண்ணை, பதிவுகள், பெண்ணியம்) மின் இதழ்களாகக் கிடைக்கின்றன.

**திறன்பேசிகளில் மின் நூலாக்க முயற்சிகள்**

மின்புத்தக வடிவில் பல்வேறு செயலிகள் உள்ளன. இவை இலக்கியம், ஆன்மீகம், கலைக்களஞ்சியம் ஆகிய பகுப்புகளில் செயலிகளாக இடம்பெற்றுள்ளன. பல்வேறு மின்புத்தகங்களையும் உள்ளடக்கிய தமிழ் நூலகம் என்ற செயலியில் ஆயிரக்கணக்கனான மின்புத்தகங்களும் இடம்பெற்றுள்ளன.

இலக்கியம் > பொன்னியின் செல்வன், ஜெயகாந்தன் கதைகள், திருக்குறள், புத்தகப் பூங்கா-1.2.3. ஆன்மீகம் > தமிழ் குர் ஆன், தமிழ் பைபிள், பகவத் கீதை, இந்து மந்திரங்கள், தேவாரம், சுவாமி விவேகானந்தர், புகாரீ ஹதீஸ்.

**மின் இதழ்கள்**

இன்று அனைத்து நாளிதள்களும், வார, மாத இதழ்களும் மின் இதழ் வடிவில் வரத் தொடங்கிவிட்டன. இவற்றுள் குறிபிடத்தக்கன; விகடன் குழு இதழ்கள், பிரிமியம் தமிழ், இந்தியா டுடே, நக்கீரன், பெமினா தமிழ், தி சண்டே இந்தியன் தமிழ், சக்தி, பெரியார் - பிஞ்சு, சத்தியம், மயன். செய்திகள் வரிசையில் தினமலர், தினகரன், மாலைமலர், ஒன் இந்தியா தமிழ், காலைக்கதிர், தமிழ் தினசரி செய்திகள், தமிழ் செய்திகள், நீயூஸ் ஹண்ட் முதலியவை குறிப்பிடத்தக்கன. நாளிதழ்கள் பெரும்பாலும் விலையில்லா வசதியுடன் கிடைக்கிறது. ஆனால் பெரும்பாலான வார, மாத இதழ்கள் தொகை செலுத்திப்படிக்கும் நிலையில் அமைந்துள்ளது.

**சிக்கல்களும், தீர்வுகளும்**

இணையப் பயன்பாட்டில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ள தமிழ்மொழியில் பல்வேறு வகையான எழுத்துருக்கள் (Font) உள்ளன. ஒவ்வொரு இணையதளமும் ஒவ்வொரு தமிழ் எழுத்துருக்களைக் கொண்டு அமைந்துள்ளது. எனவே, நாம் வெளியிடும் இணையதளத்தில் உள்ள எழுத்துருக்களைக் கொண்டே நமது நூல் உள்ளடக்கங்களைக் கணினியில் தட்டச்சு செய்ய வேண்டும். இல்லையேல் நமது நூற்பகுதிகள் இணையப்பக்கத்தில் தாறுமாறாக (Junk) தெரியும். ஆங்கில மொழியில் இந்தச் சிக்கல் இல்லை. எந்தவகை ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு மின்நூல் தயாரித்தாலும் அவை இணைப் பக்கங்களாக ஏற்றுமதி செய்யும் பொழுது தெளிவாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் ஆங்கில மொழியில் அமைந்த

விசைப்பலகைகள் (English Key Boards) ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டவை. எனவே, ஒவ்வொரு வகை ஆங்கில எழுத்துருக்களும் மற்ற வகை ஆங்கில எழுத்துருக்களுடன் இயைந்து கொள்ளும் வகையில் ஒன்றை ஒன்று சார்ந்தும், ஒன்றையயான்று துணை செய்வதுமாக (Supporting) வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்மொழியின் எழுத்துருக்கள் பலவிதமான விசைப்பலகைகள் கொண்டு வடிவமைக்கப்படுவதால் தமிழில் மின்னூல்கள் தயாரிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டன. ஆனால் இந்த எழுத்துருச் சிக்கல்கள் இன்று களையப்பட்டு ஒருங்குறி (Unicode) எழுத்துருக்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

திறன்பேசிகளில் தமிழ் மின் நூல்களை உருவாக்கும்பொழுது அந்தந்த நிறுவனங்களில் பதிவுசெய்யும் நடைமுறைகள், பதிவுத்தொகை மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (IOS, Windows-99 99/year, Android- 40/year), சரிபார்த்தல், ஒப்புதல் பெற காத்திருக்கும் காலம்(15 நாட்கள்) முதலிய நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. தமிழில் ஒரு குறுஞ்செயலியை உருவாக்க மூன்று மாத கால எல்லையும், 30,000 ரூபாய் முதல் 2 இலட்சம் ரூபாய் வரை பொருட்செலவும் தேவைப்படுகிறது.

**மின்னூல்களின் பயன்பாடுகள்**

அதிகப் பக்கங்கள் கொண்ட நூல் பகுதிகளைக் கையடக்க வடிவில் சுருக்கிவிட முடியும். எளிதில் எங்கும் எடுத்துச்சென்று பயன்படுத்த முடியும். கட்டுமான நூல்களில் வண்ணப் புகைப்படங்களைக் கொண்டு அதிகப் பக்கங்களை இணைக்க முடியாது. ஏனெனில் அதிக பொருட்செலவு ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் மின்நூல்களில் அதிக அளவில் வண்ணப் புகைப்படங்களை இணைத்து வெளியிடமுடியும். மின்நூல்களில் உள்ள பக்கங்களைத் தேவைக்கு ஏற்ப பெரிதாக்கி அதனைப் பயன்படுத்த முடியும். ஆனால் சாராதண நூல்களை இவ்வாறு பயன்படுத்த முடியாது. எந்த நேரத்திலும் நமக்குத் தேவையான பகுதிகளை இணையத்தில் தேடுபொறிகளைக் கொண்டு எளிதாகத் தேடிப் பார்த்துப் பயன்படுத்த முடியும்.

இருந்த இடத்தில் இருந்தே நமக்குத் தேவையான மின்நூல்களை மின்வணிகம் (E-Commerce) மூலம் வாங்கிப் பயன்படுத்த முடியும். சாதாரண நூல்கள் அச்சுப் பிரதிகள் இல்லாத சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் மின் நூல்களைத் தேவையான நேரங்களில் உடனே பதிவு செய்ய (Write) முடியும். மின்நூல்களில் உள்ள தகவல்களை ஆவணமாக நீண்ட காலம் வைத்துப் பயன்படுத்த முடியும். சாதாரண நூல்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சிதைந்து விடுகின்றன. ஆனால் மின்நூல்களின் ஆயுள் காலம் பன்மடங்கு நீடிக்கக்கூடியது.

அச்சு ஊடகம் என்பது ஒரு குறிப்பிட்ட வாசகரை முன்வைத்தே செயல்படுகின்றன. ஆனால் மின் ஊடகங்கள் வாசகரின் எல்லையை விரிவைடையச் செய்கின்றன. ஒரு படைப்பாளியின் படைப்பு நாடு, மொழி, இனம் என பல்வேறு

தளங்களைக் கடந்து இன்றும் தமிழர் மனதில் நிலைத்து நிற்கக்கூடிய நிலையை மின் ஊடகங்கள் ஏற்படுத்துகிறன என்றால் அது மிகையாகாது.

தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டு, சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் முதண்மைத்திட்டங்களில் இணைய வழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல், பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் உருவாக்குதல், பழந்தமிழ் நூல்களுக்கான தரவகம் ஏற்படுத்துதல், பழந்தமிழ் காட்சிக்குறும்படங்கள் தயாரித்தல் போன்றவை குறிப்பிடத்தக்கன. தற்பொழுது இந்தப் பணிகள் முழுவீச்சில் நடைபெறவேண்டும். செம்மொழி இலக்கியங்கள் வரிசையில் முத்தொள்ளாயிரம் என்ற நூலுக்கு மட்டுமே கையடக்க வடிவில் திறன்பேசிகளில் மின் நூலாக்கம் நடைபெற்றுள்ளது. இதேபோல் இதர நாற்பது நூல்களுக்கும் மின்னூலாக்கப் பணிகள் நடைபெற ஊக்கமளிக்க வேண்டும்.

இன்று பல்கலைக்கழகங்களில் நடைபெறும் மாணவர்களின் ஆய்வுத்திட்டங்களுக்குத் தமிழ் மற்றும் பிறதுறைகளுடன் இணைந்து தமிழில் பல மின்நூல்களையும், மின் நூலகங்களையும் உருவாக்க உத்தமம் போன்ற அமைப்புகளுடன் சேர்ந்து பிற ஆய்வு நிதி உதவி நல்கும் நிறுவனங்களும் ஊக்கப்படுத்த வேண்டும்.

கடந்த ஆண்டு சிங்கப்பூர் அரசு தனது நாட்டில் உள்ள தமிழ்ப்படைப்புகள் அனைத்தையும் மின்மயமாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இதற்காகச் சிங்கப்பூர் அரசு நிதி ஒதுக்கி, அப்பணிகளை அடுத்த ஆண்டிற்குள் (2015) முடிக்கத் திட்டமிட்டுள்ளது. இதேபோல் தமிழக அரசும், இந்திய அரசும் நிதி ஒதுக்கி தமிழ்ப் படைப்புகள் அனைத்தையும் மின்மயமாக்கும் பணியில் ஈடுபடவேண்டும்.

இணையத்தளங்களுக்காக உருவாக்கப்படும் மின்னூல்களைப் போன்றே திறன்பேசிகளுக்காக (Smartphone) மின்நூல்களை உருவாக்கும் நிறுவனங்களையும், அதில் ஆர்வமுடையவர்களையும் இணைத்து ஒரு அமைப்பினை ஏற்படுத்த வேண்டும். தமிழில் இதுவரை வெளிவராத மின் நூல்களை விரைவில் மின் நூல்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

## தமிழ் மின்னூலகம்: பயனர்நேயக் கருவிகளும் அணுகுமுறைகளும்

**மா. தமிழ்ப்பரிதி**
துணைப் பேராசிரியர், இதழியல், மக்கள் தொடர்பாடல் துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011.

### அறிமுகம்

நூலகங்களின் உலகளாவிய வளர்ச்சி என்பது ஒவ்வொரு இனத்தின் பண்பாட்டுடன் தொடர்புடைய ஒன்றாக விளங்கி வருகின்றது. மெசொப்பொத்தேமியர்கள் களி மண் தகடுகளில் எழுதி அதனைச் சூளைகளில் சுட்டு கோயில், அரண்மனைகளில் பாதுகாத்தனர். இவை தனித்தனி ஏடுகளாகத் துறை வாரியாகப் பாதுகாக்கப் பெற்றன. இச்செயற்பாட்டை நூலகத்தின் முன்னோடி செயற்பாடு எனலாம். எகிப்தியர்கள் பாப்பிரசுத் தாளில் எழுதத் தொடங்கிய பின்னர், கி.மு 300 ஆம் ஆண்டளவில் அலக்சாண்டிரியாவில் ஏழு இலட்சம் பாப்பிரசு உருளைகளைக் கொண்ட கருவூலம் ஒன்று அமைக்கப்பட்டது. இது இன்றைய புதுமை நூலகங்களுக்கு முன் மாதிரியாக உள்ளது. உருமானியர்களின் காலத்தில் யூலியஸ் சீசர் பொது நூலகங்களை அமைத்தார். பிரான்சு, எடின்பேக், பிரோனிசு பல்கலைக்கழகங்கள் நூலகங்களை நிறுவத் தொடங்கின. தமிழக் கோயில்களில் காணப்பெறும் கல்வெட்டுகளும் ஒரு நூலகமே. ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் நூலகத்தில் 11 மில்லியனுக்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. பொது நூலகங்களை நிறுவுவதற்கான சட்டம் வாயிலாக ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில் 1850 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதிலிருந்து பல்கலைக்கழகங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின.

நூல்கள், பருவ இதழ்கள், செய்தித்தாள்கள், கையெழுத்துப்படிகள், திரைப்படங்கள், நில வரைபடங்கள், ஆவணங்கள், நுண்படச்சுருள்கள், நுண்வடிவங்கள், குறுவட்டுகள், ஒலிப்பேழைகள், காணொளிப் பேழைகள், இறுவட்டுகள், நீல அலை வட்டுகள், மின்னூல்கள், ஒலி நூல்கள், ஓவியங்கள், தரவுத்தொகுப்புகள் மற்றும் பிற வடிவிலான பொருட்களைக் கொண்டவையே நூலகம் ஆகும். இப்பட்டியலில் உள்ள அனைத்து வகை ஆவணங்களும் மின்னணு வடிவில் சேகரிக்கப்பெற்று வகைப்படுத்தப்பெற்று இணையம் வாயிலாகச் செயல்படும் நூலகமே மின்னூலகம் ஆகும். மின்னூலகங்கள் 24/7 என்னும் நேரத்தன்மை கொண்டதாக உள்ளன. பெர்சியசு திட்டம், குட்டென்பர்க் திட்டம், கூகுள் நூல்கள், இணைய ஆவணக்காப்பகம், கார்னெல் பல்கலைக்கழகம், காங்கிரசு நூலகத்தின் உலக மின்னூலகம், மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் உள்ள மின்னூலகம், கார்னெகி மெலன் பல்கலைக்கழகத்தின் பத்து இலக்கம் நூல் திட்டம் ஆகியவை மின்னூலக வரலாற்றில் முன்னோடி பணிகள் ஆகும்.

### ஆய்வு நோக்கம்

உலகளாவிய மின்னூலகங்களில் காணப்பெறும் பயனர் நேயக் கருவிகளையும், அணுகுமுறைகளையும் தமிழ் மின்னூலகங்களுடன் ஒப்பாய்வு மேற்கொண்டு, அதன் தற்போதைய நிலையையும், இடைவெளிகளையும், வலிமையும், தமிழ் மின்னூலகங்கள் எதிர்காலத்தில் உள்வாங்க வேண்டிய மாற்றங்களையும், ஆராய்வதே இவ்வாய்வு கட்டுரையின் முதன்மை நோக்காகும்.

**பயனர் நேயக்கருவிகளும் அணுகுமுறைகளும்**

உலகளாவிய மின்னூலகங்களில் பின்வரும் பயனர் நேயக் கருவிகளையும், அணுகுமுறைகளையும் காணமுடிகிறது. மொழி உள்ளீட்டு கருவிகள், தேடு பொறி நுட்பங்கள் அவற்றின் தன்மைகள், ஒத்திசைவுகள், ஒலி உணரிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவு, மின் ஆவணங்களின் பல்வகைக் கோப்பு வடிவங்கள், அச்சுப்பொறி ஒத்திசைவு, காப்புரிமைத் தன்மைகள், பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள், மின் ஆவணங்களின் பகிர்வு முறைகள் ஆகிய பன்னாட்டு மின்னூலகங்களில் உள்ள பயனர் நேயக்கருவிகளின் பொருண்மைகள் தமிழ் மின்னூலகங்களுடன் ஒப்பாய்வு செய்யப்பெற்றுள்ளது.

**ஆய்வு முறையும் எல்லையும்**

இவ்வாய்வுக்கட்டுரை ஒப்பாய்வு மற்றும் விளக்கவகை ஆய்வு அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பெற்ற ஆய்வாகும். ஆங்கில மின்னூலகங்களில் உள்ள பயனர் நேயக்கருவிகளும் அணுகுமுறைகளும் ஆராயப்பெற்று அத்தன்மைகள் தமிழ் மின்னூலகங்களில் பொருத்தி ஆராயப்பெற்றுள்ளது. இவ்வாய்வுக்கட்டுரை ஆய்வுக்கட்டுரையின் சுருக்கம் கருதித் தமிழில் செயல்படும் ஒரு சில மின்னூலகங்களை மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தியுள்ளது.

**தமிழ் மின்னூலகங்களின் வரலாறும் வளர்ச்சியும்**

தமிழ் மின்னூலகங்களை அரசு சார்ந்தவை, தனியார் பங்களிப்புகள் என இரு வகையாகப் பிரிக்கலாம். தமிழ் மின்னூலகங்களில்  மதுரை திட்டமே முன்னோடியாகும், மதுரை திட்டம் 1998 இல் தொடங்கப்பட்ட ஒரு தன்னார்வ முயற்சியாகும்.  தமிழ் இணையக் கல்விக் கழகம் 2001ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. நூலகம் வலைத்தளம் 2004 இல் தொடங்கப்பெற்றது. சென்னை நூலகம் தளம் 2006 இல் இருந்து செயற்பட்டு வருகின்றது. இத்தளம் பயனர்களிடம் பெறப்பெறும் கட்டண அடிப்படையிலும், கட்டணமின்றியும் நூல்களை வழங்கி வருகின்றது. தமிழகம்.வலை 2007 இல் தொடங்கப்பெற்ற மின்னூலக வலைத்தளமாகும். ஓபன் ரீடிங் ரூம் என்னும் தளம் 2011 இல் இருந்து செயல்பட்டு வருகின்றது. படிப்பகம் என்னும் மின்னூலகம் 2012 இல் இருந்து செயல்பட்டு வருகின்றது.

**மதுரை திட்டம்**

இம்மின்னூலகமே தமிழின் முதல் மின்னூலகமாகும். இம்மின்னூலகத்தில் 473 நூல்கள் உள்ளன. இத்தளத்தில் தமிழ் ஒருங்குகுறி பயன்பாட்டுடன்கூடிய தேடல், உள்ளீட்டிற்கான தனித்த விசைப்பலகை அளிக்கப்பெறவில்லை. ஆனால் நூல் தேடலுக்கு உதவும் வகையில் தேடுபொறி அளிக்கப்பெற்றுள்ளது. ஒலி உணரிகள் வகையிலான தேடல் பொறி தரப்பெறவில்லை. இத்தளம் மாற்றுத்திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவைக் கொண்டிருக்கவில்லை. இம்மின்னூலகத்தின் உள்ள ஆவணங்கள் தகு ஆவண வடிவம் (PDF) , ஒருங்குகுறி (Unicode), தகுதரம் (TSCII), இணையக் கோப்பு ஆகிய கோப்பு வடிவங்களில் உள்ளது.

இத்தளத்தில் உள்ள மின்னூல்கள் அச்சுப்பொறி ஒத்திசைவைக் கொண்டுள்ளன. இத்தளத்தின் நூல்களின் காப்புரிமைத் தன்மைகள் குறித்த செய்திகள் அளிக்கப்பெற்றுள்ளன. படிப்போருக்கு ஏதுவாக அடிக்கடி கேட்கப்பெறும் வினாக்கள் என்னும் பிரிவு உள்ளது. பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள் இத்தளத்தில் அளிக்கப்பெறவில்லை. மின்னூல்களை பகிர்வு செய்யப்பெறுவதற்கான கருவிகள், இணைப்புகள், செய்தி ஓட்டங்கள் (RSS feed) இத்தளத்தில் இல்லை.

**தமிழ் இணையக் கல்விக் கழக மின்னூலகம்**

இம்மின்னூலகம் தமிழின் இரண்டாவது மின்னூலகமாகும். இம்மின்னூலகத்தில் சொல்லடைவு, தமிழ் எண் சுவடி, இலக்கணம், சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு, காப்பியங்கள், சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், நெறி நூல்கள், சித்தர் இலக்கியம், இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் (கவிதைகள்), இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் (உரைநடைகள்), நாட்டுப்புற இலக்கியங்கள், சிறுவர் இலக்கியங்கள், ரோமன் வடிவம் / Literature (Roman), அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியம், கலைச்சொல் தொகுப்புகள், சுவடிக்காட்சியகம், பண்பாட்டு காட்சியகம், தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்ட அறிஞர்களின் நூல்கள் ஆகியன உள்ளன. இத்தளத்தில் தமிழ் ஒருங்குகுறி உள்ளீட்டிற்கான தனித்த விசைப்பலகை அகரமுதலி தேடலுக்காக அளிக்கப்பெற்றுள்ளது. நூல் தேடலுக்கு உதவும் வகையில் தேடுபொறி அளிக்கப்பெற்றுள்ளது. ஒலி உணரிகள் வகையிலான தேடல் பொறி தரப்பெறவில்லை. இத்தளம் மாற்றுத்திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவைக் கொண்டிருக்கவில்லை. இம்மின்னூலகத்தின் உள்ள ஆவணங்கள் தகு ஆவண வடிவம் (PDF) , ஒருங்குகுறி (Unicode), தகுதரம் (TSCII), இணையக் கோப்பு ஆகிய கோப்பு வடிவங்களில் உள்ளன. இத்தளத்தில் உள்ள மின்னூல்கள் அச்சுப்பொறி ஒத்திசைவைக் கொண்டுள்ளன. இத்தளத்தின் நூல்களின் காப்புரிமைத் தன்மைகள் குறித்த செய்திகள் அளிக்கப்பெற்றுள்ளன. படிப்போருக்கு ஏதுவாக அடிக்கடி கேட்கப்பெறும் வினாக்கள் என்னும் பிரிவு உள்ளது. பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள் இத்தளத்தில் உள்ளது. மின்னூல்களை பகிர்வு செய்யப்பெறுவதற்கான கருவிகள், இணைப்புகள் இத்தளத்தில் வழங்கப்பெற்றுள்ளது.

**நூலகம்**

நூலகம் தளத்தில் 4,001 நூல்கள், 5,805 நாளிதழ்கள், 1,987 பருவ இதழ்கள், 1,504 துண்டறிக்கைகள் ஆகியன உள்ளன. இத்தளத்தில் தமிழ் ஒருங்குகுறி உள்ளீட்டிற்கான தனித்த விசைப்பலகை அளிக்கப்பெறவில்லை. நூல் தேடலை எளிதாக்கும் வகையில் பாடவகை, பதிப்பக வகை, ஆசிரிய வகை தேடலுக்கான தேடுபொறி அளிக்கப்பெற்றுள்ளது. ஒலி உணரிகள் வகையிலான தேடல் பொறி தரப்பெறவில்லை. இத்தளம் மாற்றுத்திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவைக் கொண்டிருக்கவில்லை. இம்மின்னூலகத்தின் உள்ள ஆவணங்கள் தகு ஆவண வடிவம் (PDF) வடிவத்தில் உள்ளது. இத்தளத்தில் உள்ள மின்னூல்கள் அச்சுப்பொறி

ஒத்திசைவைக் கொண்டுள்ளன. இத்தளத்தின் நூல்களின் காப்புரிமைத் தன்மைகள் குறித்த செய்திகள் அளிக்கப்பெற்றுள்ளன. பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள் இத்தளத்தில் உள்ளது. மின்னூல்களை பகிர்வு செய்யப்பெறுவதற்கான கருவிகள், இணைப்புகள் இத்தளத்தில் உள்ளது.

**தமிழகம்.வலை**

தமிழகம்.வலை மின்னூலகத்தில் 3300க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இத்தளத்தில் தமிழ் ஒருங்குகுறி உள்ளீட்டிற்கான தனித்த விசைப்பலகை அளிக்கப்பெறவில்லை. நூல் தேடலுக்கு உதவும் வகையில் தேடுபொறி அளிக்கப்பெற்றுள்ளது. ஒலி உணரிகள் வகையிலான தேடல் பொறி தரப்பெறவில்லை. இத்தளம் மாற்றுத்திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவைக் கொண்டிருக்கவில்லை. இம்மின்னூலகத்தின் உள்ள ஆவணங்கள் தகு ஆவண வடிவம் (PDF) , ஒருங்குகுறி (Unicode), தகுதரம் (TSCII), இணையக் கோப்பு ஆகிய கோப்பு வடிவங்களில் உள்ளன. இத்தள மின்னூல்கள் அச்சுப்பொறி ஒத்திசைவைக் கொண்டுள்ளன. இத்தளத்தின் நூல்களின் காப்புரிமைத் தன்மைகள் குறித்த செய்திகள் அளிக்கப்பெற்றுள்ளன. பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள் இத்தளத்தில் உள்ளது. மின்னூல்களை பகிர்வு செய்யப்பெறுவதற்கான கருவிகள், இணைப்புகள் இத்தளத்தில் உள்ளது.

**படிப்பகம்**

இம்மின்னூலகத்தில் 1000க்கும் மேற்பட்ட மின்னூல்களும், பருவ இதழ்களும், ஒலிக்கோப்புகளும் உள்ளன. இத்தளத்தில் தமிழ் ஒருங்குகுறி உள்ளீட்டிற்கான தனித்த விசைப்பலகை அளிக்கப்பெறவில்லை. நூல் தேடலுக்கு உதவும் வகையில் தேடுபொறி இல்லை. ஒலி உணரிகள் வகையிலான தேடல் பொறி தரப்பெறவில்லை. இத்தளம் மாற்றுத் திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவைக் கொண்டிருக்கவில்லை. இம்மின்னூலகத்தின் உள்ள ஆவணங்கள் தகு ஆவண வடிவம் (PDF) வடிவத்தில் மட்டுமே உள்ளது. இத்தளத்தில் உள்ள மின்னூல்கள் அச்சுப்பொறி ஒத்திசைவைக் கொண்டுள்ளன. இத்தளத்தின் நூல்களின் காப்புரிமைத் தன்மைகள் குறித்த செய்திகள் அளிக்கப்பெறவில்லை. பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள் இத்தளத்தில் அளிக்கப்பெற்றுள்ளது. மின்னூல்களை பகிர்வு செய்யப்பெறுவதற்கான கருவிகள், இணைப்புகள் இத்தளத்தில் உள்ளன.

**ஓபன் ரீடிங் ரூம்**

இம்மின்னூலகத்தில் 2000க்கும் மேற்பட்ட மின்னூல்கள் உள்ளன. இத்தளத்தில் தமிழ் ஒருங்குகுறி உள்ளீட்டிற்கான தனித்த விசைப்பலகை அளிக்கப்பெறவில்லை. நூல் தேடலுக்கு உதவும் வகையில் தேடுபொறி அளிக்கப்பெற்றுள்ளது. மின்னூல்கள் தரவேற்றம் செய்யப்பெற்ற அடிப்படையிலான காலத்தின் அடிப்படையில் தேடுவதற்கான தேடல் பகுப்பு அளிக்கப்பெற்றுள்ளது. ஒலி உணரிகள் வகையிலான தேடல்பொறி தரப்பெறவில்லை. இத்தளம் மாற்றுத்திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவைக் கொண்டிருக்கவில்லை.

இம்மின்னூலகத்தில் உள்ள ஆவணங்கள் தகு ஆவண வடிவம் (PDF) வடிவத்தில் மட்டும் உள்ளது. இத்தளத்தில் உள்ள மின்னூல்கள் அச்சுப்பொறி ஒத்திசைவைக்கொண்டுள்ளன. இத்தளத்தின் நூல்களின் காப்புரிமைத் தன்மைகள் குறித்த செய்திகள் தெளிவாக அளிக்கப்பெற்றுள்ளன. பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள் இத்தளத்தில் உள்ளன. மின்னூல்களை பகிர்வு செய்யப்பெறுவதற்கான கருவிகள், இணைப்புகள் இத்தளத்தில் இல்லை.

**சென்னை நூலகம்**

இம்மின்னூலகம் வணிக வகைப்பட்டதாகும். இத்தளத்தில் தமிழ் ஒருங்குகுறி உள்ளீட்டிற்கான தனித்த விசைப்பலகை அளிக்கப்பெறவில்லை. நூல் தேடலுக்கு உதவும் வகையில் தேடுபொறி அளிக்கப்பெற்றுள்ளது. ஒலி உணரிகள் வகையிலான தேடல் பொறி தரப்பெறவில்லை. இத்தளம் மாற்றுத்திறனாளிகளுக்கான வலைத்தள ஒத்திசைவைக் கொண்டிருக்கவில்லை. இம்மின்னூலகத்தின் உள்ள ஆவணங்கள் தகு ஆவண வடிவம் (PDF), ஒருங்குகுறி (Unicode) ஆகிய கோப்பு வடிவங்களில் உள்ளது. பயனர் ஊடாட்டம், பின்னூட்டத்திற்கான வாய்ப்புகள் இத்தளத்தில் அளிக்கப்பெறவில்லை. மின்னூல்களைப் பகிர்வு செய்யப்பெறுவதற்கான கருவிகள், இணைப்புகள் இத்தளத்தில் இல்லை.

**ஆய்வு முடிவு**

தமிழில் மின்னூலகங்களின் தரவு மிகக்குறைவாகவே உள்ளது. எனவே அரசு பொது நூலகத்துறைக்கு நூல்களை அளிக்க விரும்புவோரிடம் நூல்களின் மென்படிகளைப் பெற்று அவை அரசால் மின்னூலகத்தில் வெளியிடப்பட வேண்டும். தமிழகத்தில் விற்கப்பெறும் அலைபேசிகளிலும், அட்டைக் கணினிகளிலும் தமிழ் ஒருங்குகுறிக்கான ஒத்திசைவு குறைவாக உள்ளதால் தமிழ் ஒருங்குகுறிக்கான ஒத்திசைவு இல்லாத யாதொரு மின்னணுக்கருவியும் தமிழகத்தில் விற்கத் தடைவிதிக்க வேண்டும்.

**பரிந்துரைகளும்**

(1) தமிழ் மின்னூலகக் கோப்புகள், மின்பதிப்பு (படத்துடன்) EPUB, மின்பதிப்பு (படமில்லாமல்), EPUB (படத்துடன்), கிண்டில், எளிய உரை, உரை, சுருக்க வடிவம் (ZIP) ஆகிய கோப்புகளாகவும் தமிழ் மின்னூல்கள் அளிக்கப்பெற வேண்டும். தமிழ் மின்னூலகங்கள் மாற்றப்படவேண்டும், (2) தமிழ் மின்னூலகக் குறுஞ்செயலிகள் உருவாக்கப்பெற்றால் அது இன்னும் பலரை அடையும், (3) மாற்றுத்திறனாளிகளுக்கு இசைவாக மின்னூலகங்கள் மாற்றப்பெற வேண்டும், (4) ஒலி நூல்கள் பெருக வேண்டும், (5) நூல்களை மிக எளிதாகப் பகுத்துத் தேட உரிய தேடுபொறிகள் உருவாக்கப்பெற வேண்டும்.

**கருவித்தரவுகள்** global.oup.com/?cc=us, gutenberg.org, noolaham.org, noolaham.org, openreadingroom.com, padippakam.com, ta.wikipedia.org, tamilvu.org, thamizhgam.net

**குறிச்சொற்கள்:** மின்னூலகம், தமிழ் இணையம், நூலகப் பயனர் நேயக்கருவி, தமிழ் நூலகம், தமிழ், தமிழ்க்கணிமை.

# தமிழ் இலக்கிய ஆய்வுகளுக்குக் கணினியின் பயன்பாடு

தா. ஜெயந்தி[1] & முனைவர் வ. தனலட்சுமி[2],

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், jayaa7555@gmail.com

[2]தமிழ்த்துறைத் தலைவர், dhanagiri@gmail.com

எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர் - 603203

## முன்னுரை

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக அச்சுப்பொறி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதனாலேயே நாம் இன்று ஒப்பற்ற இலக்கண இலக்கிய நூல்களைக் காணமுடிகிறது. அவ்வளர்ச்சிப் படிநிலையின் உச்சமாகத் திகழும் கணினி, நம் இலக்கிய இலக்கண ஆய்வுகளை எளிய முறையில் மேற்கொள்ள உறுதுணையாக உள்ளது. சான்றாக, இலக்கியத்தில் நாம் ஒரே ஒரு வார்த்தையைக் குறித்து ஆய்வு மேற்கொள்கின்றோம் எனில் அவ்வார்த்தை எங்கெல்லாம் பயின்று வருகின்றது என்பதை அவ்விலக்கியம் முழுவதையும் நாம் படித்துப் பார்த்தே கண்டெடுக்க வேண்டும். மாறாக கணினியின் பயனால் அவ்விலக்கியத்தில் அவ்வார்த்தை எங்கெல்லாம் இடம்பெற்று வருகிறது என்று ஒரே நொடியில் கண்டுபிடித்து விடமுடியும். இதன் பயனால் நேரம் குறைவது மட்டுமில்லாமல் அந்நேரத்தில் அதன் தொடர்பான பல இலக்கியங்களையும் நம்மால் ஒப்பிட்டு அறிய இயலும்.

இலக்கியம் என்றாலே விளக்கமுறை, ஒப்பீட்டுமுறை என்ற ஆய்வுகளாகவே இருந்த நிலை மாறி இன்று புள்ளிவிவர ஆய்வுகளாகவும் இலக்கிய ஆய்வுகள் நடைபெறுவதற்குக் கணினி பெரும்பங்கு ஆற்றி வருகிறது. உதாரணமாக, சங்க காலம் முதல் தற்காலம் வரையுள்ள **"தமிழகத்தின் வருவாய்"** குறித்த தகவல்களை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளதை ஆராய்கிறோம் எனில் பல்கிப் பெருகியுள்ள இலக்கியங்கள் முழுமையையும் நாம் படித்து முடிப்பதற்கே மூன்று ஆண்டுகள் முடிந்துவிடும். எனவே வருவாயின் ஒரு பகுதியான **வரியைக் குறிக்கும் திறை, உல்கு, புரவு** முதலிய சொற்கள் இலக்கியங்களில் எங்கெல்லாம் பயின்று வருகின்றன என்பதைக் கணினியின்வழி தேடினோம் எனில் அவ்விலக்கியத்தில் அவ்வார்த்தைகள் எவ்விடத்தில் உள்ளது என்பது குறித்தும் எத்தனை முறை பயின்று வந்துள்ளது என்பதும் அவ்வார்த்தை அப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள பக்கத்துடனும் ஒரே நொடியில் கண்டுபிடித்துக் காட்டிவிடுவதனால் அவ்வாய்வு எளிய முறையில் நடைபெறப் பெரும்பகுதி கணினி உதவுகிறது.

இவ்வாறாக, தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுகள் எளிய முறையில் நடைபெறுவதற்குக் கணினி எவ்வாறு பெரும்பங்கு ஆற்றிவருகிறது என்பது குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

## தமிழ் ஆய்வில் கணினி

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்னும் நன்னூலாரின் கூற்றின்படி கணினியின்வழி இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்வதனால் பல்வேறு நன்மைகளை நம்மால் அடையமுடிகிறது. காலத்திற்கும் நேரத்திற்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றவிதமாகத் தொழில்நுட்ப வளர்ச்சி நமக்கு உதவுகிறது. தமிழ்மொழி கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் இணையவழிக் கல்வி பெரிதும் உதவுகிறது.

அச்சு ஊடகங்களின் மூலம் இலக்கிய இலக்கணங்களைப் பதிவு செய்துள்ளதால் அடைந்த பலனைக் காட்டிலும் கணினி வழியில் இணைய நுட்பங்களின் மூலம் தமிழ் மொழியின் வளர்ச்சியை உலகமெங்கிலும் பரப்ப இயலும். காரணம் நூல்களைத் தேடிப் படிக்கும் நிலை மாறி இன்று கணினிவழிக் கல்வியின் மூலமே பயிலுவதற்கு மாணவர்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவ்வாறு பல வகையில் கணினி பயன்படுகிறது. தமிழ் இலக்கண இலக்கியங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு மிகத் துல்லியமான தரவுகளைச் சேகரிப்பதற்குக் கணினியின் பயன்பாடு பெரும்பங்கு ஆற்றிவருகிறது.

கணினியின் செயலாக்கம் பல்வேறு துறைகளில் அதன் தேவைக் களங்களில் நுணுக்கமாகச் செயல்படுவதுபோல் தமிழ் ஆய்வுக் களத்திலும் எளிய முறையில் பயன்பட்டு வருகின்றது. இன்று தமிழ்மொழி தொழில்நுட்பத் துறையிலும் பல அரிய செயல்பாடுகளைக் கணினித்தமிழ் வழியில் செய்துவருகிறது.

சங்க காலத் தமிழர்களின் வளமான பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் முதலியவற்றை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்துகொள்ளுவதற்குத் தமிழ் இலக்கியங்களை நாம் கட்டிக்காக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதன் அடிப்படையில் இணையமும் தகவல் தொழில்நுட்பங்களும் பெரும் பங்காற்றி வருகின்றன.

தமிழ் மொழிக்கு நிகர் தமிழ் மொழிதான் என்பதை நாம் அறிந்ததோடு பலரும் அறியச்செய்ய வேண்டுமெனில் அத்தமிழ் மொழியினைக் கணினி வழியில் பயிற்றுவிப்பதன் மூலமாகவே முடியும். காரணம் இக்காலகட்டத்தில் யாரும் அரிய நூல்களைத் தேடிப் படிப்பதில்லை மாறாக வளர்ந்து வரும் இளைய சமுதாயம் கணினியின் முன்னே தம் காலத்தைக் கழித்து வருகின்றனர். இதனால் தமிழைக் கணினிமயமாக்குவதால் தமிழ் மொழியின் சிறப்பை வளரும் எதிர்காலத் தலைமுறையினர் பலரையும் அறியச் செய்ய இயலும்.

உலகளாவிய இணையதளங்களின் மூலம் தமிழ் மொழியின் சிறப்பைப் பலரும் அறியச் செய்ய இயலும். கணினியின் பயன்பாட்டில் தமிழ் இலக்கண இலக்கியங்களை நுணுக்கமான முறையில் சொல்லாய்வு செய்யவும், வேர்ச்சொற்களைக் கண்டெடுக்கவும் முடிகிறது. இலக்கிய ஆய்விற்கு, நாம் இருந்த இடத்தில்

இருந்தபடியே தேவையான பல தரவுகளைச் சேகரித்துக்கொள்ள கணினி பெரும் உதவி செய்து வருகிறது. ஆய்வாளருக்குத் தேவையான தகவல்களை மிக விரைவில் உடனுக்குடன் தெரியப்படுத்துகின்றது.

## தகவல் களங்கள்

இன்று தமிழ்மொழியில் பலாயிரக் கணக்கான இணையதளங்கள் மொழிப் பயன்பாட்டிற்கு உள்ளன. அவற்றுள், Tamil virtual library[1]என்னும் இணையதளத்தில் சங்க இலக்கியம் தொடங்கி அனைத்து இலக்கண இலக்கியங்களும், நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களையும் ஒருங்கே தொகுத்துக் கொடுத்துள்ளனர். அதில் நாம் தேடும் தரவுகளை உடனுக்குடன் எடுத்தாள முடிகிறது.

சான்றாக வரியைக் குறிக்கும் திறை, உல்கு, புரவு முதலிய சொற்கள் இலக்கியங்களில் எங்கெல்லாம் பயின்று வந்துள்ளது என்பதைக் கணினியின் தரவுகள் தேடல் வழியாக எளிதில் இனங்காணப்பட்டது.




மேலும் இலக்கியத்தில் வரியைக் குறிப்பதற்கு “வரி” என்னும் சொல் முதன் முதலில் “முக்கூடற்பள்ளு” என்னும் இலக்கியத்தில்தான் எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்வதற்குக் கணினிவழி தேடல் அதிக அளவில் உதவிபுரிந்துள்ளது.

வரியைக்(Tax) குறிக்கும் வெவ்வேறு சொற்களுக்குண்டான அட்டவணையைத் தயாரிக்க Digital dictionaries of South Asia[2] என்னும் தளம் பெரிதும் உதவியது. அவற்றுள் வரியைக் குறிக்கும் பிற சொற்களைக் கண்டெடுப்பதற்கு “Tax” என்று

---

[1]http://www.tamilvu.org/library/libindex.htm

[2] http://dsal.uchicago.edu/dictionaries/list.html#tamil

ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து தேடுதலைக் கொடுத்தால் வரியைக் குறிக்கும் பலநூறு தமிழ்ச்சொற்களை அடுத்த விநாடியிலேயே எடுத்துக் கொடுத்துவிடுகின்றது.




இத்தேடல் வழியாக, வரியைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் (tax) சுமார் 481 இடங்களில் பயின்றுவந்துள்ளது என்பதைச் சுட்டிகாட்டியுள்ளது.

அவற்றுள் சங்க இலக்கியங்களில் வரியைக் குறிக்கும் சொற்களைத் தேடும் நிலையில் திறை, உல்கு, புரவு முதலிய சொற்கள் மட்டுமே வரியைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இவை போன்று பல இணையதளங்கள் தமிழ்வழி ஆய்விற்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

**புள்ளிவிவர ஆய்வுக்குக் கணினியின் பயன்பாடு**

இலக்கிய ஆய்வுகள் பெரும்பாலும் விளக்க முறை ஆய்வாகவும், ஒப்பாய்வாகவும் இருந்த நிலைமாறி இன்று புள்ளிவிவர ஆய்வுகளாகவும் பெருகி வருவதற்குக் கணினி பெரும்பங்கு ஆற்றிவருகிறது. சான்றாகத் தமிழகத்தின் வருவாய் எனும் தலைப்பின்கீழ் ஆய்வு மேற்கொள்ளும்பொழுது வருவாயினுள் முக்கியப் பங்கு வகிக்கும் வரி குறித்த தகவல்களைக் கணினிவழியாகத் தேடும்பொழுது வரியானது எப்பெயர்களில் வாங்கப்பட்டுள்ளது என்பதனை அகராதிகள் எங்ஙனம் குறிப்பிட்டுள்ளன என்று ஆராயும் பொழுது பல நூற்றுக்கணக்கான பெயர்களில் வரியைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன என்பதை எண்ணிக்கையுடன் ஒரு நொடிப் பொழுதில் எடுத்துக் காட்டிவிடுகிறது. எனவே நாம் ஆய்வில் அதனைப் புள்ளிவிவர அட்டவணையாகவே சான்றுடன் அளிக்க முடியும் .

இவ்வாறு பல இணையதளங்கள் தமிழ் இலக்கிய ஆய்வுகள் எளிய முறையில் நடைபெற பெரும்பங்காற்றிவருகிறது. மேலும் பல அகராதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரி குறித்த சொற்களை எடுத்தாளக் கணினி எளிய வழியில் உதவி புரிகின்றது. நாம் தேடும் தகவல்களைக் குறைந்த நேரத்தில் உடனுக்குடன் எடுத்துக்கொடுப்பதனால் ஆய்வாளருக்கு ஆய்வின் மேலான ஆர்வமும் அதிகரிக்க உறுதுணையாக உள்ளது.




வரலாற்று முறை ஆய்வில் கள ஆய்வு மேற்கொள்வோர் இடம், வழி ஏதும் தெரியாமல் அலைந்து திரிந்த நிலைமாறி கணினி முன் அமர்ந்துகொண்டே கள ஆய்வு மேற்கொள்ள இருக்கும் இடம்குறித்துத் தேவையான பல தகவல்களை அறிந்துகொள்ள ஏதுவாக இன்று தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது. எனவே கள ஆய்வு மேற்கொள்வதும் எளிய முறையில் அமைந்துவிடுகிறது.

ஒப்பாய்வினை மேற்கொள்வோர் பல நூல்களைப் படித்து ஆய்வு மேற்கொள்வதற்கு ஏதுவாகப் பல இணையதளங்கள் இன்று நூல்கள் முழுமையும் தொகுத்து வழங்கியுள்ளது. ஆய்வுக்கட்டுரைகள் பலரும் இணையதளத்தில் வெளிவந்துள்ள வண்ணம் இருப்பதனால் ஆய்வாளர்கள் தம் ஆய்வுத் தலைப்பிற்குப் போதிய சான்றாதாரங்களில் பெரும்பகுதியைக் கணினி வழியில் எடுத்துக்கொள்ளும் நிலை இன்று உருவாகியுள்ளது.

## முடிவுரை

இவ்வாறு தேடித் தொகுத்து எழுதிய ஆய்வுக்கட்டுரையைத் தகுந்த முறையில் கணினியில் தட்டச்சு செய்து பிரதி எடுக்கவும் கணினி பயன்படுகிறது. அங்ஙனம் தமிழில் தட்டச்சு செய்யும்பொழுது உருவாகும் இலக்கணப் பிழையையும் எழுத்துப் பிழையையும் கண்டெடுக்கும் மென்பொருள்களும் இன்று அதிக அளவில் உள்ளன. இதனால் இலக்கிய ஆய்வினை விரைவாகவும் புதிய கோணத்திலும் மேற்கொள்ள இயலுகிறது.

பிற்சேர்க்கை :

தமிழ் இலக்கிய ஆய்விற்கு உதவும் சில வலைதளங்கள்:

http://www.projectmadurai.org/index.utf8.html
http://www.tamilvu.org/library/libindex.htm
http://learnsangamtamil.com
http://www.tamilkalanjiyam.com/literatures/sangam_literatures.html
http://ilakkiyam.com/
http://www.valaitamil.com/literature
http://tamilnation.co/literature/anthologies.html
http://www.srmuniv.ac.in/tamilperayam/tamil_kalvi.html
http://www.cict.in/
http://www.tamilkalanjiyam.com/literatures/

## மின் ஊடகங்களில்
## சங்க இலக்கியச் சொல்லடைவுகளும், அகராதி தொகுத்தலும்.

Dr. Durai. Manikandan* & Dr. Sathiyamoorthi**

*Dept, of Tamil, BDU, college, Navalurkuttapttu. Tiruchirappalli.

<Email: mkduraimani@gmail.com>

** Asst. Professor, Dept. of Tamilology,

Madurai Kamaraj University, Madurai.

மனித இனம் கடந்து வந்த பாதை வியக்கதக்கது. மனித நாகரிகம் மெல்ல மெல்ல வளர்ச்சிடைந்து வந்துள்ளன. அவற்றில் மொழியும் ஒன்று. கலை, பண்பாடு, கலாச்சாரம் என ஒவ்வொரு துறையிலும் உலக மொழிகள் படிப்படியாக வளர்ந்துவந்துள்ளன. மனித இனம் தோன்றி இன்றைய காலம் வரை கல்வி முறையில் பெரிய மாற்றங்கள் நடைபெற்றுள்ளன.

உலக செவ்வியல் இலக்கியங்களில் தமிழ்மொழியும் ஒன்று. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதான மொழியைக் கண்டதில்லை என்ற பாரதியின் வாக்கு மிகச் சிறந்தது. அத்தகு சிறப்புகொண்ட தமிழ்மொழியில் எண்ணிலடங்கா இலக்கியங்கள் குவிந்து கிடக்கின்றன. இவற்றில் சங்க இலக்கியப் படைப்புகள் தலைமை சான்றதாக விளங்குகின்றன. இன்றைய காலத்திற்கு ஏற்ற நவீன வசதிகளுடன் அறிவியல் முறையில் தமிழ் இலக்கிய, இலக்கணங்களை மாணவர்களுக்குக் கற்றுத்தர வேண்டிய சூழலில் நாம் உள்ளோம். அதற்கு இன்றைய மின் ஊடகங்களை மாணவர்கள், ஆராய்சியாளர்கள், மொழியியல் அறிஞர்கள் பயன்படுத்த வேண்டும். அதற்கு உலகில் இயங்கும் மொழிகளில் பெரும்பான்மையானவை மின் ஊடகங்களைப் பயன்படுத்தத் தொடங்கி அதில் வெற்றியும் கண்டுள்ளனர். அதன் பயனாக அந்த மொழியின் பயன்பாடுகள் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஜெர்மன், இஸ்ரேல்). எனவே இன்று மின் ஊடகங்களில் தமிழ்மொழிக்கான அடிப்படை இடம் கிடைத்தாலும் இன்னும் நாம் முழுமையாகவும், தமிழை அடுத்தக் கட்ட வளர்ச்சிக்குக் கொண்டு செல்லவேண்டும்.

இயந்திரத்தின் (மின் ஊடகம்) வழி பேச்சுரையிலிருந்து எழுத்துரைக்கும், எழுத்துரையிலிருந்து பேச்சுரைக்கும், உலக மொழிகளிலிருந்து தமிழ்மொழிக்கும், தமிழ் மொழியிலிருந்து பிற உலகமொழிகளுக்கும் மொழிபெயர்க்கும் பணியை நாம்

மேற்கொள்ள வேண்டும். அதற்கு மின் ஊடகங்களில் நமது சங்க இலக்கியச் சொல்லடைவுகளையும், அகராதிகள் தொகுத்தலையும் நாம் தீவிரப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மின் ஊடகங்களின் வளர்ச்சியில் நாம் முன்னேற்றம் அடையமுடியும்.

முதலில் தமிழ்மொழியில் உள்ள அனைத்து நூல்களின் சொல்லடைவுகளையும் கணினி புரிந்துகொள்ளும் விதமாக உருவாக்க வேண்டும். இப்பணி மிகப்பெரியது. இருந்தாலும் முதலில் சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகையினது நூல்களின் சொல்லடைவுகளையும் அகராதிகளையும் தொகுத்து வெளியிட வேண்டும்.

சங்க இலக்கிய நூல்களுக்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திலும், கேரளப் பல்கலைக்கழகமும் சொல்லடைவுகளையும் அகராதிகளையும் தொகுத்து வைத்துள்ளனர். ஒரு சிலவற்றை வெளியிட்டுள்ளனர். இவை மட்டுமன்றி வெளியிடாமல் இருக்கும் பிற இலக்கியப் படைப்புகளையும் மின் ஊடங்கங்களில் பதிவு செய்தல் வேண்டும். அது நமது தமிழ்மொழிக்கும் மின் ஊடகத்திற்கான இடைவெளியைக் குறைத்து ஒற்றுமையை ஏற்படுத்தும்.

**சொல்லடைவு**

ஒரு சொல் ஒரு நூலில் எந்தெந்த இடங்களில் வருகிறது என்பதையும் முக்கிய கலைச்சொற்களும் நூலின் பின்பகுதியில் கொடுக்கப்படும். வெறும் சொல்லும் அது வருமிடமும் கொடுக்கப்பட்டால் அது சொல்லடைவு என்பதாகும்.

**ஆய்வுக் கருத்துரை**

1. இதுவரை உலக அளவில் சங்க இலக்கியச் சொல்லடைவுகள் தொகுப்பு நடைபெற்று உள்ளதா என்பதை ஆராய்தல்.

   சங்க இலக்கியச் சொல்லடைவுகள் மின் ஊடகங்களில் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன. அவற்றில் தமிழ் இணையக் கல்விக்கழக இணையப் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன. (http://www.tamilvu.org/library/libcontnt.htm) இவற்றில் சொல்லடைவுகளாக நூல்களில் இருந்தவற்றை ஒளிப்படம் எடுத்துத் தமது இணையப்பக்கத்தில் வெளியிட்டுள்ளனர். இது முதல் முயற்சி. ஆனால் சங்க இலக்கியச் சொல்லடைவுகள் முழுவதும் வெளியிடவில்லை.

2. சங்க இலக்கிய நூல்களான 36 நூல்களுல் என்னென்ன நூல்களின் சொல்லடைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன?

   பதினெண் மேற்கணக்கு நூல்களில் ஒன்பது நூல்கள் ( திருமுருகாற்றுபடை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெறும்பாணாற்றுப்படை,

மலைபடுங்கடாம் மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு) (கலித்தொகை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு)

பதினெண் கீழ்க்கணக்கு நூலகளுள் (திருக்குறள், சிறுபஞ்சமூலம், களவழி நாற்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது, பழமொழி நானூறு)

116 பக்கத்திற்குக் கோப்பாக சங்க இலக்கியச் சொல்லடைவுகளைப் பரமசிவம் பாண்டியராஜன் என்பவர் வெளியிட்டுள்ளார்.(http://sangamthoughts.blogspot.in/2012/10/blog-post_782.html) இதேபோன்று இவர் தொடரடைவுகளையும் கணினியில் உருவாக்கியுள்ளார். இதுவும் முதன்முயற்சி. (தொல்காப்பியம், சங்க இலக்கியம் முழுமையும், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம்) (http://sangamconcordance.in/index.html)

3. அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பெற்ற சொல்லடைவுகள், அகராதிகள் பயன்பாட்டில் உள்ளனவா?

சங்க இலக்கியச் சொல்லடைவுகள் நூல் வழியில் அதிகம் உள்ளன. அவற்றை மின் ஊடகங்களுக்கு நாம் கொண்டுவரவேண்டும். மேலே குறிப்பிட்ட பாண்டியராஜன் மற்றும் முனைவர் க. உமாராஜ் போன்றோர்கள் சொல்லடைவுகளை உருவாக்கி கணினியில் கொடுத்து வருகின்றனர். இது மேலும் பலர் செய்ய வேண்டும். தனியாக வலைப்பக்கத்திலோ அல்லது வலைப்பதிவுகளிலோ சொல்லடைவுகளை வெளியிட முன்வரவேண்டும்.

அகராதிகள் பல இன்று மின் ஊடகங்களில் வெளிவந்துள்ளன. அவற்றில் தமிழ் இணையக் கலிவிக்கழகம் இணையப்பக்கத்தில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, பால்ஸ் அகராதி, சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம்- தமிழ் அகராதி, தமிழ் – தமிழ் அகர முதலி, த.இ.க வின் உச்சரிப்புடன் கூடிய மின் அகராதி, செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி என்ற ஆறு அகராதிகளை வெளியிட்டுள்ளது. (http://www.tamilvu.org/library/dicIndex.htm)

இதனைப் போன்று தமிழ் விக்கிப்பீடியாவிலும் அகராதிகள் உள்ளன. அதேபோன்று தமிழ் விக்கிப்பீடியாவில் பலரின் கூட்டுமுயற்சியால் பன்மொழி அகரமுதலி ஒன்றைத் தொகுத்து வருகின்றனர். இதில் தகவல் உழவன் என்பவர் பல லட்சம் சொற்களைத் தொகுத்து வெளியிட்டுவருகிரார்.(http://ta.wiktionary.org/wiki/).

தெற்காசிய மின்னியல் நூலகத்திலும் தமிழ் அகராதி வெளிவந்துகொண்டிருக்கிறது. (http://dsal.uchicago.edu/dictionaries/kadirvelu/) சங்க இலக்கியத்தில் மின் அகராதிகள் என்ற தலைப்பில் முனைவர் க. உமராஜ் இணையத்தில் வெளியிட்டுவருகிறார். (http://umarajk.in/) சென்னை அண்ணா பல்கலைக்கழகம் சார்பாக ஒரு லட்சம் சொற்களுக்கான சொல்லடைவு தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. இதில் ஒரு சொல்லுக்கான முழு விபரமும் தமிழ், ஆங்கிலம் எனக் கொடுக்கப்பட்டிருக்கும்.( http://agarathi.com/).

சிக்காகோ பல்கலைக்கழகத்தின் தென்னாசிய மொழிகள் கல்வி மையம், கொலம்பியா பல்கலைக்கழகம், வட கரோலினாவில் உள்ள டிரையாங்கில் சவுத் ஆசியா கன்சோர்டியம் ஆகிய மூன்று அமெரிக்க நிறுவனங்களும் இணைந்து அகராதிகளை இணையத்தில் தந்து வருகின்றனர். தெற்காசியாவில் உள்ள 26 தற்கால மொழிகளில் உள்ள ஒரு மொழி அகராதிகளையும் இரு மொழி அல்லது பன்மொழி அகராதிகளும் இணையத்தில் உள்ளன. (http://dsal.uchicago.edu/dictionaries/)

இந்தத் திட்டத்தில் தமிழ்மொழிக்காக ஃபெப்ரீஷியல் தமிழ்-ஆங்கில அகராதி, கதிரைவேல்பிள்ளை தமிழ் மொழி அகராதி, மகல்பின் அகராதி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, வின்ஸ்லோ தமிழ் ஆங்கில அகராதி ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இவற்றைப்போன்றே கொலோன் தளத்தில் பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகத்தின் பால்ஸ் அகராதியும் கொடுக்கப்பட்டுள்ளது.

4. இல்லையெனில் ஏன் இவை பயன்பாட்டிற்கு வரவில்லை?

ஒருசிலர் தரமான சொல்லடைவுகளை உருவாக்கி வைத்துள்ளனர். அவர்கள் மின் ஊடகங்களில் வெளியிட மறுக்கின்றனர். காரணம், இது என்னுடைய உழைப்பு அதை ஏன் நான் பிறருக்கு இலவசமாகத் தரவேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர்.

அடுத்து சொல்லடைவுகளைத் தயாரித்து வைத்திருப்பவர்களுக்குக் கணினி அறிவு போதுமானதாக இல்லையென்று கூறலாம். அதனால் இவை கணினியில் பதிவேற்றம் செய்வதில் சிக்கல் உள்ளன.

5. மின் ஊடகங்களில் தமிழ் நூல்களின் சொல்லடைவுகளை மின் பதிப்புச் செய்வது எவ்வாறு?

இதற்கு ஓரளவேனும் கணினியை இயக்கும் அறிமுக அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அடுத்து தமிழ்ச் சொல்லடைவுகளை உருவாக்கும்போது அது எதற்காக உருவாக்கிறோம் என்ற தெளிவான எண்ணம் வரவேண்டும். இந்தப் பணியில்

ஈடுபடுபவர்களுக்குத் கணிப்பொறி மற்றும் தமிழ் அறிவு கட்டாயம் தேவைப்படுகிறது.

6. மின் ஊடகங்களில் சொல்லடைவுகள், அகராதி தொகுத்தல் பணியை விரிவாக்கம் செய்வது.

இப்பணியை விரைந்து முடிக்க தனியார் நிறுவனங்கள், பல அயல்நாட்டு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் முனவந்து நிதி உதவி செய்ய முன் வரவேண்டும். பலர் விருப்பத்தோடு இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

7. தமிழ்+மொழியியல்+கணினியியல் துறைசார்ந்த மாணவர்கள், மாணவிகள், பேராசிரியர்கள், ஆராய்சியாளர்கள், ஆசிரியர்கள் அகாராதி தொகுத்தலில் பங்களிப்பு என்ன?

இன்றைய தமிழ் ஆராய்ச்சி புதிய தடத்தில் சென்றுகொண்டிருக்கிறது. சங்க இலக்கியம் குறித்த ஆய்வுகள் மிக நுணுக்கமாக ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் இன்றைய ஆய்வாளர்கள் பலர் இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். அதுவும் குறிப்பாகச் சங்க இலக்கியத்தைக் கணினியோடு இணைத்து ஆய்வு செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அவர்களை வழிநடத்த போதுமான ஆசிரியர்கள் இல்லை. மேலும் இன்று மொழியியல் துறை மிக வேகமாக வளர்ந்துவருகிறது. ஒருகாலத்தில் தமிழ்மொழியாளரும் மொழியிலாளரும் ஒருவருக்கொருவர் இணையாமல் இருந்தனர். இன்றைய காலகட்டத்தில் இவர்கள் இருவரோடும் கணினிமொழியியல் அறிஞர்களும் இணைந்து செயல்படத் தொடங்கிவிட்டனர். இது தமிழ் இலக்கியங்கள் கணினிமொழியிலும் மொழியியலிலும் நல்ல வளர்ச்சி நிலையை அடையும்.

இன்று பல அகராதிகள் மின் ஊடகங்களில் வெளிவருகின்றன. அவற்றை ஒன்றுதிரட்டி அவற்றிலிருந்து ஒரு நிரந்தரமான அகராதியைத் தொகுத்து அதனைக் கணினி புரிந்துகொள்ளும் விதத்தில் வெளியிட முன்வரவேண்டும். இதனை ஒருசிலர் சேர்ந்துகூட செய்யலாம். அப்பொழுதுதான் நாம் மின் ஊடகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்குச் செல்லமுடியும்.

இது போன்று சங்க இலக்கியச் சொல்லடைவுகள் மற்றும் அகராதி தொகுத்தல் பணிகளை மின் ஊடகங்களில் செய்வோமானால் நாம் நினைத்த மின் ஊடகத்தில் மொழிபெயர்ப்பு சாத்தியம் ஆகும். இவை மட்டுமின்றி பேச்சை எழுத்தாக மாற்றவும், எழுத்துருவைப் பேச்சாக மாற்றவும் இது பயன்படும்.

நான் பார்த்த வரையில் அகராதிக்கென அதிகமான இணையதளங்கள், வலைப்பதிவுகள் இருக்கின்றன. ஆனால், சொல்லடைவுகள், மரபுத்தொடர்கள்

இவற்றிற்குப் போதுமான வலைப்பக்கங்கள் இல்லையென்று கூறவேண்டும். இதனைப் போக்கவேண்டும்.

அடுத்து பல்வேறு இணையதளங்களில் இருக்கும் மின் அகராதிகளை ஒரு தலைமை சான்ற இணையதளத்தில் தொகுத்து வெளியிடவேண்டும். அப்பொழுதுதான் பிற தேவைகளுக்கு உடனக்குடன் பயன்பாட்டாளர்கள் பயன்படுத்த முடியும். இதேபோன்று சொல்லடைவுகளையும் அனைத்துச் சங்க இலக்கியம் மற்றும் இன்றைய பேச்சு வழக்குச் சொற்களையும் இணையத்தில் வெளியிடவேண்டும். அவற்றையும் ஒரே இணையதளத்தில் வெளியிட வேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் செய்தோமானால் கணினியில் பிற மொழிகள் வளர்ந்துள்ள அத்தனை கூறுகளையும் நாமும் மிக எளிதாக அடைந்துவிடுவோம். தமிழ்ச் சொல்லடைவுகள், அகராதிகள் கணினி புரிந்துகொள்ளும் வகையில் கணினி வல்லுனர்கள் மாற்றம் செய்ய மேற்சொன்ன கருத்துகள் உதவிபுரியும்.

**ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள்**


1. டாக்டர் இராதா செல்லப்பன், தமிழும் கணினியும், கவிதை அமுதம் வெளியீடு, திருச்சி.
2. முனைவர் துரை.மணிகண்டன், வானதி, தமிழ்க் கணினி இணையப்பயன்பாடுகள், கமலினி பதிப்பகம், தஞ்சாவூர்.
3. முனைவர் மு. பொன்னவைக்கோ, இணையத் தமிழ் வரலாறு, பாரதிதாசன் பல்கலைக்கழக வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

பிற இணையதளங்கள்

1. https://www.google.co.in
2. http://ta.wiktionary.org/wiki/
3. http://www.tamilvu.org/library/libcontnt.htm
4. http://sangamthoughts.blogspot.in/2012/10/blog-post_782.html

# “Contribution to the early history of algorithmics in Tamil: the ஆறு தெளிவுகள் in the யாப்பருங்கல விருத்தி, the வீரசோழியம் and the வீரசோழியம் commentary.”

**Jean-Luc Chevillard,**
CNRS, University Paris-Diderot, Histoire des Théories Linguistiques (UMR 7597)
https://univ-paris-diderot.academia.edu/JeanLucChevillard

With the advent of computers, the use of algorithmic techniques which require special training and concentration has potentially become the property of everyone, because we can often simply ask a computer to “do the job”, provided we are capable of “explaining” to it in details the procedures which are to be followed. As consequence, some ancient difficult technical texts are potentially available, for active reading, to a greater public than they were in earlier periods, when those technical texts were considered as closed books for most people. This can certainly heighten the interest of the general public in the domain called “History of Science” (and History of Scientific Literature).

The present paper is dedicated to an illustration of such a situation, being an attempt at a modernized short presentation of a topic traditionally known as ஆறு தெளிவுகள் (“the six clarifications”) which is dealt with in detail inside two ancient Tamil texts,[1] the யாப்பருங்கல விருத்தி (YV) and the வீரசோழியம் (VC) commentary, these six topics being called:

1. உறழ்ச்சி (alias பிரத்தாரம்)
2. கேடு (alias நட்டம்)
3. சுட்டு (alias உத்திட்டம்)
4. ஒன்றிரண்டுமூன்றென்னுமுறைமையானேறச்சொன்ன இலகு குருச் செய்கை
5. விருத்தத் தொகை
6. நில அளவு

The ancient scholars who made use of those technical devices were engaged in an attempt (inside a domain on the border of combinatorics and metrics [யாப்பு]) at mastering the complexity involved in describing the bewildering variety of the metres used by poets in certain types of stanzaic composition, with a fixed rigid pattern, where the four lines of a stanza are metrically totally similar, and which fall under what the YV calls அளவியற்சந்தம்

[1] It should be stated at the beginning of this article that Tamil is not the only language for which calculations of the type described here have been performed. The reader of Knuth [2006: 49-51] is already made partly aware of the importance of Indian sources for the history of combinatorics, but a reading of Alsdorf [1933] and of Van Nooten [1993], who both build on the seminal 1863 work of Albrecht Weber, makes one fully aware of the sophistication of some Sanskrit treatises. Alsdorf 1933 article (in German) about the “pratyaya-s” has appeared in English translation in 1991 in *the Indian Journal of History of Science*. It is therefore all the more important to also draw the attention of historians of Science on the mathematical elements buried inside ancient Tamil śāstric texts, since very few people are trying to read them nowadays.

(see YV_1998, p. 507-516) and the VC calls சந்தம்[2] (see VC_1942, p. 177 and VC_2005, p.477). Those meters[3] are different from the meters which were discussed in my INFITT 2009 presentation.[4]

A striking example of the use of those rigid meters is found inside the *Tēvāram* hymn (having twelve stanzas) which is referred to as வழிமொழித் திருவிராகம் (Tēv. 3-67)[5] and in which Campantar devotes one stanza to each of the twelve names of சீர்காழி, modelling each stanza on the particular phonic form of the name which it contains. More precisely, if we adopt, from earlier writers, the convention that "**L**" represents a "light" syllable and "**G**" a heavy syllable:

- Each line in stanza 1, which contains the first name, Pi-ra-ma-pu-ra(m), contains five groups **LLLLL** of five syllables in which the first four are almost always[6] unambiguously "light" (i.e. short): சுரருலகு நர(ர்)க(ள்)பயில் தரணிதல முறணழிய அரணமதில் முப் / புரமெரிய விரிவுவகை சரவிசைகொள் கரமுடைய ….. Those five groups are followed by a heavy syllable, as a coda.
- Each line in stanza 2, which contains the second name, Vē-ṇu-pu-ra(m), contains five groups **GLLL** of four syllables, plus a heavy coda. In each of the five groups the first syllable is always "heavy" and the following three are "light": காணைமிகு ஆணிசைகொ டாணைவியர் பேணைமகு காணைமள வில் // கோணுநுதல் நீணயனி கோணி(ல்)பிடி மாணிமது நாணு(ம்)வகை[7] யே ….
- Etc.[8]

Space being limited, I shall now make the hypothesis that the reader has accepted the idea that rigid metrical patterns exist in some Tamil poetical compositions, and that we have three examples inside Tēvāram 3-67, which are:

- LLLLL LLLLL LLLLL LLLLL LLLLL G (in stanzas 1, 3, 7, 8 and 12)
- GLLL GLLL GLLL GLLL GLLL G (in stanzas 2, 4, 5, 9, 10 and 11)
- LGLL LGLL LGLL LGLL LGLL G (in stanza 6)

---

[2] For instance, the commentary to the VC announces, just before VC133: "iṉic **cantaṅkaḷukkup** pirattāramutal āṟuteḷivukaḷuñ collukiṉṟāṉ." It should however be noted that the 2011 "reprint" of VC_1942 has strangely changed the numbering of VC133 to VC131 (which is VERY surprising for a reprint!)

[3] The interested reader can gain more insight into the technicalities of that type of poetry by reading the second part (starting on p.242) of Pacupati[2010]. One episode in the history of the description of those meters is presented in Maṇikaṇṭaṉ[2014].

[4] More elements are discussed in Chevillard[2014].

[5] See pp. 345-346 in the edition cited in bibliography.

[6] The exceptions seem to caused only by the occasional presence of the liquids "r" and "l". One might postulate, as a working hypothesis, that those liquids are not sufficient for making those syllables (see for instance "nararkaḷpayil") heavy. The fifth syllable in each group is somehow less precisely specified and we might want to say, as a working hypothesis, that the line contains LLLLX LLLLX LLLLX LLLLX LLLLX G, where X is unspecified, because of a short pause.

[7] Concerning this apparent exception, one can note that ம் followed by வ is called மகரக்குறுக்கம் "reduced m" in grammars, which might in fact indicate a nasalized pronunciation of the preceding vowel.

[8] Space being limited, I shall here simply briefly indicate the patterns repeated five times in the other stanzas, and the names which they imitate. They are: 3. LLLLL (**pukalinaka**_rē); 4. GLLL (**veṅkuru-v-a**_tē); 5. GLLL (**tōṇipura**_mē); 6. LGLL (**tarāymoḻi**_….); 7. LLLLL (**cirapuram-a**_tē); 8. LLLLL (**puṟavam-atu**_vē); 9. GLLL (**caṇpainaka**_r-ē); 10. GLLL (**kāḻinaka**_r-ē); 11. GLLL (**koccainaka**_r-ē); 12. LLLLL (**kaḻumala-na**_kar)

The first pattern contains 26 syllables and the other two patterns contain 21 syllables each. We are now in a position to make use of those examples for explaining that:

- The technical devices known as ஆறு தெளிவுகள் are useful for conceiving individual patterns as part of ordered sets, which would be in that case (A) the set of all patterns made of 26 syllables and (B) the set of all patterns made of 21 syllables.
- This is obtained by associating with each pattern a number, which is its RANK inside the ordered set.

More precisely, the application of the techniques referred to by the designation ஆறு தெளிவுகள், allow us:

1. to build step by step a (virtual) chart containing many lines, illustrating the உறழ்ச்சி, i.e. all the possible N-tuples, i.e. sequences of N symbols, each symbol being taken from {L,G}
2. to find out the unknown N-tuple which sits on a line of a given rank R inside that virtual chart (This is the second clarifying device, called கேடு[9], alias நட்டம்).
3. to determine the unknown rank inside the chart of a given N-tuple.[10] (This is the third clarifying device, called சுட்டு, alias உத்திட்டம்)
4. to find out how many of the lines in the chart contain P times **G** and (N-P) times **L**, which amounts to a knowledge of Pascal's triangle.
5. to understand how many lines global charts contain
6. to calculate how much space it would take to explicitely write down the chart.

None of those tasks is easy to carry out by hand, and anyone who has tried to read the corresponding sections in the YV (see the 1998 edition of YV, pp. 535-547] or in the VC (see the 1942 edition, pp.177-194] will be aware of the complexity involved in understanding ancient scholars' explanations.

Luckily, a great Tamil scholar, the late T.V. Gopal Iyer (1926-2007), in his 2005 edition of the Vīracōḻiyam (see VC_2005) has provided us with very lucid explanations, which allow us to easily grasp the meaning of (slightly) cryptic veṇpā-s, such as:

> குருக்கீழ் இலகுவாம் ஏனைய தொக்குங்
> குருத்தொகையு மாதிக்கட் கூட்டு

Thanks to his help (see VC_2005, pp. 479-481), and thanks also to the explanations contained in Alsdorf[1933/1991] and Van Nooten[1993], it is however possible to a modern reader to understand how this veṇpā can be expanded into an algorithm generating the sequence of all N-tuples, because, after an initialisation phase, the algorithm explains how to go from line n to line n+1.

---

9 YV says "இனைத்தாவது என்று அறிவதன் அலகு நிலை அறியேன்" ("I do not know the disposition of the tokens for that of which I know the rank") (YV1998, p.536).

10 YV says "அலகிருக்கை அறிவேன்; எனைத்தாவது என்று அதன் எண் அறியேன்" ("I know the disposition of tokens; but I do not know its number, which tells which rank the disposition has") (YV1998, p.536).

- START with line 1 containing N times the symbol G
- LOOP: look for the first G on line n {if it is found call “p” its position; if not go to END}
- place a L at position p on line (n+1)
- place a G at all positions before position p on line (n+1)
- for all positions after before position p on line (n+1), make them similar to what they were on line n
- go back to LOOP
- END: terminate.

There is of course much more to explain concerning the ஆறு தெளிவுகள் and we are just at the beginning. I hope nevertheless have given, through this short presentation, the desire to the young generations to explore the explanations hidden in ancient books, which they can rejuvenate with their young energies. They might thus become aware of the fact that, very often, as we say in French, “L’ancien est toujours neuf!”[11]

## Bibliography:

Alsdorf, Ludwig, “The Pratyayas: Indian Contribution to Combinatorics”, pp. 17-61, *Indian Journal of History of Science*, 26 (1), New Delhi, 1991. [English translation by Sreeramula Rajeswar Sarma, of Alsdorf’s original version in German (“Die Pratyayas. Ein Beitrag zur indischen Mathematik”, *Zeitschrift für Indologie und Iranistik*, 9 (1933), pp. 97-157; reprinted in Albrecht Wezler (ed.), *Ludwig Alsdorf: Kleine Schriften*, Wiesbaden, 1974, pp. 600-660.

Chevillard, Jean-Luc, 2009, “Critical editions of Tamil works: exploratory survey and future perspectives”, presentation given on 25th october 2009, at the INFITT 2009 conference in Köln.

Chevillard, Jean-Luc, 2014, Metres in Tamil Bhakti Literature and the Problem of their (occasional) Description in Treatises (Studies in Tamil Metrics-2), pp.39-96, in Gillet, Valérie (Ed.), Mapping the Chronology of Bhakti: Milestones, Stepping Stones, and Stumbling Stones. Proceedings of a Workshop Held in Honour of Pandit R. Varadadesikan, Collection Indologie n° 124, Institut Français de Pondichéry / Ecole française d’Extrême-Orient.

Knuth, Donald E., *The Art of Computer Programming, Volume 4, Fascicle 4: Generating All Trees--History of Combinatorial Generation*, Addison-Wesley Professional, 2006 [this fascicle, which has now been republished as part of a bigger book, is also available in its prepublication format at “www-cs-faculty.stanford.edu/~uno/fasc4b.ps.gz”]

Maṇikaṇṭaṉ, Y. (Editor and compiler), 2014, Thanikachala Mudaliar E.N., *Early Studies in Tamil Prosody. The evolution of Tamil Viruttams*, Indian Universities Press, 2014.

Tēvāram: *Hymnes Śivaïtes du Pays Tamoul*, தேவாரம் பண்முறை, édition établie par T.V. Gopal Iyer. Volume I. ஞானசம்பந்தர், Institut Français d’Indologie. Pondichéry. 1984.

பசுபதி, சு., கவிதை இயற்றிக் கலக்கு, எல் கே எம் பப்ளிகேஷன், சென்னை, 2010.

[11] What is old can still be new/young/relevant !

Van Nooten, B., “Binary Numbers in Indian Antiquity”, *Journal of Indian Philosophy*, 21, 31-50, Kluwer Academic Publishers, Netherlands, 1993.

VC_1942 (Vīracōḻiyam): பொன்பற்றி காவலர் புத்தமித்திரனார் இயற்றிய வீரசோழியம் மூலமும் பெருந்தேவனார் இயற்றிய உரையும். பதிப்பாசிரியர்: கா. ர. கோவிந்தராஜ முதலியார், பவானந்தர் கழகம், வேப்பேரி, சென்னை, 1942. [reprinted in 2011 by New Century Book House, Chennai]

VC_2005 (Vīracōḻiyam): புத்தமித்திரனார் இயற்றிய வீரசோழியமும் பெருந்தேவனார் இயற்றிய உரையும் விளக்கங்களுடன். பதிப்பாசிரியர்: தி. வே. கோபாலையர், ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்சிரமம், ஸ்ரீரங்கம், 2005.

YV_1998 (Yāpparuṅkala Virutti): அமிதசாகரனார் இயற்றிய யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்). பதிப்பாசிரியர்: வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1998.

# தமிழ் பாரம்பரிய மருத்துவத்தின் நோய்க்கான மருந்து அறிதலுக்கான இணைய தளம்

## ( WEB SITE FOR TAMIL TRADITIONAL MEDICINE'S REPERTORY )

**பேராசிரியர் முனைவர்.ஜெ. இந்துமதி[1] & த. இராஜா[2],**

அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

மின்னஞ்சல் முகவரிகள் – indumathi@annauniv.edu[1] , raaja_as@yahoo.co.in[2]

தொகுப்புரை

தமிழ் மண்ணுக்குரிய மூலிகை மருத்துவமானது பல்வேறு சித்தர்களால் நமக்கு அளிக்கப்பட்ட சிறந்த மருத்துவமாகும். பெரும்பாலும் எளிதில் கிடைக்கக்கூடிய மூலிகைகளை உள்ளடக்கிய இம் மருந்துகளானது பக்க விளைவுகள் அற்றது. நம் மருத்துவமானது நோயையும், நோய்க்கான வேரையும் முழுமையாக குணப்படுத்த வல்லது. இருப்பினும் நமது மருத்துவம் அனைவரையும் சென்றடையவில்லை. இதற்கு மருத்துவத்தை இரகசியமாக பேணியதும் ஒரு காரணம். இதுவே நாளடைவில் இம் மருத்துவ பயன்பாடு குறைந்ததற்கு மிக முக்கிய காரணமாகும். இதற்கான இணைய தளங்கள் அரிதாக உள்ளன. எனவே இம்மருத்துவம் அனைவரும் பயன்படும் வகையில் இணைய தளம் நிறுவுதல் அவசியமாகிறது. மேலும் துல்லியமாக மருந்துகளை அறியும் வகையில் (Repertory) இணைய தளத்தை வடிவமைப்பது முக்கியமாகும். இதுவரை நிறுவப்பட்டுள்ள சில இணைய தளங்களில், பொதுவான நோய்க்கான மருந்துகள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. சரியான நோய் அறிகுறிகளை தெரிவு செய்ய ஏதுவான இணைய தளங்கள் இல்லை. இது சில பொதுவான நோய்களுக்கு மட்டுமே பொருந்தும். அனைத்து நோய்களுக்கும் பொருந்தாது. எனவே நோய்க்கான பொதுவான அறிகுறியுடன் அதற்கு காரணமான நோயையும் கண்டறிந்து , அதற்கான மருந்தை தெரிவு செய்வதன் மூலம் முழுமையாகவும், விரைவாகவும் குணமடையலாம். மேலும் இணைய தள பயன்பாட்டாளர்கள் புதிய செய்திகளை, வலைப்பூக்களை உருவாக்கி, அதில் பதியவைப்பதன் மூலம் தமிழ் மருத்துவம் தொடர்பாக அதிக தகவல்களை தெரிந்துக் கொள்ளமுடியும். இது தமிழ் மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும்.

**முக்கிய வார்த்தைகள் – தமிழ் மருத்துவம், சித்த மருத்துவம், மூலிகை மருத்துவம், உணவே மருந்து.**

1. முன்னுரை

சித்தர்களும் நமது முன்னோர்களும் நமக்கு உயரிய பாரம்பரிய மருத்துவத்தை அளித்து சென்றுள்ளனர் இம் மருத்துவத்தை அனைவரும் பயன்படுத்தும் வகையில், அனைவர்க்கும் கொண்டு சென்றால் மிகுந்த பயனளிக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. பக்க விளைவுகள் அற்ற மருத்துவம் என்பதால் (2), மருத்துவத்தில் நிபுணத்துவம் பெறாத , சாதாரணமானவர்களும் பயமின்றி பயன்படுத்தலாம். எனவே இம் மருத்துவத்தை நேரடியாக அனைவருக்கும் பயன்படுத்தும் வகையில் கொண்டு செல்வதில் எந்த தயக்கமும் தேவையில்லை. இப்போதுள்ள நவீன காலத்தில் அனைவருக்கும் ஒரு தகவலை கொண்டு செல்வதில் இணையம் அரும்பங்காற்றி வருகிறது. எல்லா மருத்துவங்களுக்கும் நோய்க்கான மருந்து அறிதலுக்கான நூல்கள் உள்ளன. மேலும் நோய்க்கான மருந்து அறிதலுக்கான இணைய தளங்களும் அதிக அளவில் உள்ளன. ஆனால் தமிழ் மருத்துவத்தில், நோய்க்கான மருந்து அறிதலுக்கான இணைய தளங்கள் மிக குறைவாகவே உள்ளன (1). இருக்கின்ற அரிதான தமிழ் மருத்துவத்திற்கான, நோய்க்கான மருந்து அறிதலுக்கான இணைய தளங்களிலும் , விரிவான,முழுமையான தகவல்கள் இல்லை. இத்தகைய சூழலில், தமிழ் மருத்துவத்திற்கான நோய்க்கான மருந்து அறிதலுக்கான இணைய தளத்தை உருவாக்குவது அவசியமாகிறது.

2. நோயை வகைபடுத்துதல்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின். (942) - திருக்குறள்

உண்ட உணவானது செரித்ததை அறிந்து அதன் பிறகு உணவு உண்டால் மருந்து என்பது தேவையில்லை. என்று வள்ளுவர் கூறுகிறார். எனினும், எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தாலும் நோய் வருவதை தவிர்ப்பது இயலாத ஒன்று. அவ்வாறு வருகின்ற நோயை வகைப்படுத்துவது இன்றியமையாது. பொதுவாக சித்தர்கள் வாதம்,பித்தம்,சிலேத்துமம் என நோய்களை பிரித்துள்ளார்கள்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று. ( 941 ) - திருக்குறள்

மேற்கூறிய வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றில் எது அளவு முறை மீறினாலும் நோய்கள் வரும் என்று வள்ளுவ பெருமகன் கூறியுள்ளார்.

சித்தர்கள் 4448 நோய்கள் இருப்பதாக கூறியுள்ளார்கள்(5). நோய் உண்டாகும் உறுப்புகளை பத்தொன்பதாக பிரித்துள்ளனர். ஒவ்வொரு உறுப்புக்கும் எத்தனை நோய்கள் வரும், என்ன நோய்கள் வரும் என்பதை வகுத்துள்ளார்கள். உதாரணமாக,

தலையில் 307 நோய்களும், கண்ணில் 96 நோய்களும், காதில் 56 நோய்களும் வருமென சித்தர்கள் கூறியுள்ளார்கள். நோயை வகைபடுத்துவதால் நோய் குறிகளை அறிந்து அதற்கான மருந்துகளை தெரிவு செய்வது எளிதாக இருக்கும்.

## 3. நோய் அறிகுறிகளைத் தெரிவு செய்தல்

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல். (948)

- திருவள்ளுவர்.

நோயை கண்டறிந்து, அதற்கான காரணத்தை அறிந்து , அதை தீர்க்கும் வழியை கண்டறிந்து சிகிச்சை அளிக்கவேண்டும் என்பது வள்ளுவரின் வாக்கு. நோய்க்கான அறிகுறிகளை சரியாக தேர்ந்தெடுத்து , அதற்கான மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு நோயானது, பல்வேறு காரணங்களால் உருவாகும். உதாரணத்திற்கு, மூல நோயை மட்டும் யூகிமுனி அவர்கள் சிந்தாமணி[7] என்னும் நூலில் இருபத்தொரு வகைகளாக பிரிக்கின்றார். இதில் பன்னிரண்டு மூலங்கள் எளிதில் தீரக்கூடியதாகவும், மற்ற ஒன்பது மூலங்களுக்கு சற்று அதிக நாட்கள் மருந்து எடுத்துக்கொள்ளவேண்டும் என கூறியுள்ளார். சித்தர்கள் அனைவரும் அவரவர் அனுபவத்திற்கேற்ப நோய்களை வகைபடுத்தியுள்ளார்கள். தேரர் மூல நோயை பத்து வகைகளாக பிரித்துள்ளார். எல்லா வகை மூலத்திற்கும் பொதுவான மருந்துகள் இருந்தாலும், எந்த வகை மூலம் என்றறிந்து, அதற்கான குறிப்பிட்ட மருந்துகளை எடுத்துக் கொண்டால், விரைந்து நலன் பயக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. மூல நோய்க்கு மலச்சிக்கலும் ஒரு காரணம். ஆக, நோய்க்கான காரணத்தையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.மேலும் அதற்கேற்ற உணவுக்கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும்.

## 4. இணைய தளத்திற்கான முன்வரைவு

இம்மருத்துவத்திற்க்கான இணைய தளம் வடிவமைக்கும்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது (படம் -1). முதலில் நோய்க்கான பொது அறிகுறியை தெரிவு செய்ய வேண்டும். பின்னர் கூடுதலாக தெரிகின்ற அறிகுறிகளை தெரிவு செய்ய வேண்டும். அதன் பின்னர் நோய்க்கான மருந்து, மருந்து செய்முறை, எடுத்துக்கொள்ளும் முறை, தவிர்க்க வேண்டியவைகள், கொள்ள வேண்டியவைகள் ஆகியவை தெரிந்துக்கொள்ளுமாறு வடிவமைக்கப்படும்.




படம்-1. மருந்துகளை தெரிவு செய்வதற்கான முறை

உதாரணத்திற்கு தலைவலி என்பது பொதுவான அறிகுறி. தலைவலியில் ஒற்றை தலைவலியும் உண்டு. தலைவலி வருவதற்கு சளியும் ஒரு காரணம். ஆக, சளிக்கும் மருந்து எடுதுக்கொண்டால்தான் முழுமையான தீர்வு கிடைக்கும். மேலும் வயிற்றுப்புண் ( Ulcer ) இருந்தாலும் தலைவலி வரலாம். வயிற்றில் பூச்சிகள் இருந்தாலும் தலைவலி வரலாம். கீழே காணப்படும் மாதிரி இணையப்பக்கத்தில், முதலில், நோய் அறிகுறியில் தலைவலி தெரிவு செய்யப்படுகிறது.




மாதிரி இணையப்பக்கம்-1

பின்னர் கூடுதல் விவரங்கள் காணப்படுகின்றன. அதில் தலைவலியுடன் கூடுதலாகக் காணப்படும் நோய் அறிகுறிகள் தெரிவு செய்யப்படுகிறது.அதற்குப்பின் நோய்க்கான

மருந்து (செய்முறையுடன்), மருந்து எடுத்துக்கொள்ளும் முறை, தவிர்க்கவேண்டியவைகள், கொள்ளவேண்டியவைகள் அனைத்தும் தெரிவிக்கப்படுகின்றது.




மாதிரி இணையப்பக்கம்-2

## 5. நிறைவுரை

இதுவரை நிறுவப்பட்டுள்ள சில இணைய தளங்களில், பொதுவான நோய்க்கான மருந்துகள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. சரியான நோய் அறிகுறிகளை தெரிவு செய்ய ஏதுவான இணைய தளங்கள் இல்லை. இது சில பொதுவான நோய்களுக்கு மட்டுமே பொருந்தும். அனைத்து நோய்களுக்கும் பொருந்தாது. எனவே நோய்க்கான பொதுவான அறிகுறியுடன் அதற்கு காரணமான நோயையும் கண்டறிந்து , அதற்கான மருந்தை தெரிவு செய்வதன் மூலம் முழுமையாகவும், விரைவாகவும் குணமடையலாம். மேலும் இணைய தள பயன்பாட்டாளர்கள் புதிய செய்திகளை, வலைப்பூக்களை உருவாக்கி, அதில் பதியவைப்பதன் மூலம் தமிழ் மருத்துவம் தொடர்பாக அதிக தகவல்களை தெரிந்துக் கொள்ளமுடியும். இது தமிழ் மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும்.

## REFERENCES


1. Antony, J. Betina, and G. S. Mahalakshmi. "Patti Vaithiyam—An Information Extraction System for Traditional Tamil Medicines." *In Proceedings of " 12th International Tamil Internet Conference 2013"* , pp. 125-131.
2. http://atozthagavalkalangiyam.blogspot.in/
3. http://www.thamizhkkuil.net/
4. http://tamil4health.blogspot.in/2014/04/hemorrhoids-types.html

# தமிழ் மொழியியல் கலைச் சொல் மின்னகராதி

**முனைவர் அ. பரிமளகாந்தம்**

இணைப்பேராசிரியர், அகராதியியல்

பி. எஸ். தெலுங்குப் பல்கலைக் கழகம். ஐதராபாத் – 500 004

**முன்னுரை**

வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில் நுட்ப யுகத்தில் மனிதன் எந்தப் பொருளாக இருந்தாலும் மிகச் சுலபமான வழியில் குறுகிய நேரத்தில் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையுடன் அலைகிறான். முதலில் வாய்மொழியாக வந்த செய்திகளை ஓலை சுவடிகளில் பத்திரப்படுத்த ஆரம்பித்தான். பிறகு அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அச்சடித்துப் புத்தகங்களாக செய்திகளை அதற்கென்று நூலகம் ஒன்று ஏற்படுத்தி பத்திரப்படுத்தப்படுத்தினான். ஆனால் தற்போது ஏற்பட்ட விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியால் நூலகம் சென்று படிககக் கூட நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறான். அதற்கு ஏற்றாற் போல இக்காலமும் தொழில் நுட்பக் காலமாகி கம்யூட்டர், இணையம், செல்ஃபோன் என்னும் மாய ஜாலங்கள் மனிதனிடம் வந்து எங்கும் கம்யூட்டர் எதிலும் கம்யூட்டர் என்ற பழமொழியே வந்து விட்டது.

புத்தக வடிவில் தயாரிக்கப்பட்ட செய்திகளை இன்று கம்யூட்டரில் ஏற்றி இபுத்தகம், இஅகராதி, மின்னகராதி என்று எல்லாவற்றையும் கம்யூட்டரில் பத்திரப்படுத்த ஆரம்பித்து விட்டான். மேலும் பயன்பாட்டைச் சுலபமாக்க டேபுலெட், சுமார்ட் போன் போன்ற கையடக்கக் கருவிகளிலும் செய்திகளை ஏற்றி பாக்கெட்டில் வைத்து ஓடிக் கொண்டே பயன்படுத்தும் காலமும் வந்து விட்டது.

**நோக்கம்**

இக்கட்டுரையின் நோக்கம் மொழியியலில் உள்ள ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு தமிழில் இணையான சொல்லும் கொடுத்து அதற்கு சிறுவிளக்கமும் கொடுக்கப்பட்டதை மின்னகராதியாக தயாரிக்க எடுத்துக் கொண்ட முதல் சிறு முயற்சியாகும்.

**கலைச் சொல்லின் வரைவிலக்கணம்**

கலைச் சொல்லை ஆங்கிலத்தில் டெக்னிக்கல் டேம் என்பார்கள். இதை ஒரு தனியான கலை, விஞ்ஞானம் அல்லது புத்தகங்களில் அல்லது பாடப் புத்தங்களில் பயன்படுத்தப்படும் சிறப்பான குணமுடைய சொல் என்று வெப்ஸ்டர் அகராதி வரைவிலக்கணம் செய்கிறது.

ஆக்ஸ்போர்டு அகராதி கலைச் சொல்லை இறைவனுக்குகந்த சொல் அதாவது சாதாரண சொற்களால் விவிரிக்க முடியாத முக்கியத்துவம் வாய்ந்த சொல் கலைச் சொல் விவரிக்கிறது.

சிறப்புப் பிரிவில் உள்ள சிறப்பு பாவங்களை சுலபமான குறைந்த சொற்கள் மூலம் சூட்சுமாக விவரிக்கும் சொற்களை கலைச் சொற்கள் என்கிறார் எம். தேன்மொழி 2001.

முதன்முதலில் தெலுங்கைத் தெளிவாக விவரித்த பாலவியாகரணத்தின் உரையாசிரியரான மகாதேவ சாஸ்திரி 1987 என்பவர் எந்த சாஸ்திரமாக இருந்தாலும் சொல்லவேண்டிய வேண்டிய விரிவான பொருளை தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லி சொற் பொருளை ஏற்படுத்தக் கூடிய சுருக்கமான சொற்கோவையை கலைச்சொற்கோவை என்று சொல்லலாம் என்கிறார்.

**மொழியியல்**

மொழியியல் என்பது மொழியை விஞ்ஞான முறைப்படி படிக்கும் இயலாகும். இதுவும் மற்ற பாடப் புத்தகங்களைப் போல கலைச் சொற்கள் நிரம்பியது. இது மொழியை விஞ்ஞான முறைப்படி கற்பிப்பதுடன் மற்ற துறைகளான மானிடவியல், மனோதத்தவ இயல், சமூக வியல், கணிதவியல், கணினியியல், அகராதியியல், மொழிபெயர்ப்பியல் போன்றவற்றுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டு inter disciplinary தத்தவம் உடையதாகவும் இருக்கிறது. ஆங்கிலத்தில் உள்ல மொழியியல் பாடத்திற்கு glossaryகள் பல தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் கூட கணினியில் ஏற்றப்படவில்லை. இந்தக் கட்டுரையில் சொல்லப்போகும் மொழியியல் கலைச் சொல் glossary போலல்லாமல் சிறு விளக்கத்துடன் இருக்கும். புத்தகங்களாகக் கூட அதிகம் வராத இந்தக் கலைச் சொற்களை மின்னகராதியாகச் செய்தால் உலகளவில் பயனுள்ளதாக இருக்கும்.

**மொழியியல் கலைச் சொல்**

பொதுவாக மொழியியல் பாடப்புத்தகங்கள் எல்லாம் மேலை நாட்டாரால் எழுதப்பட்டவைகளே. அவற்றில் உள்ள கலைச் சொற்களும் ஆங்கிலத்தில் உள்ளவையே. தாய்ப் பால் மழலைக்கு நல்லது. தமிழ்மொழி கல்விக்குச் சிறந்தது. ஆகையால் ஆங்கிலத்தில் உள்ள மொழியியல் கலைச் சொற்கள் தமிழில் இருந்தால் மொழியியல் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகையால் தமிழில் அத்தகைய அகராதி தயாரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

**மொழியியல் கலைச் சொல் சேகரிக்கப்பட்ட முறை**

மொழியியல் பாடப் புத்தகங்களிலிருந்து David Cristal என்பவரின் A Dictionary of Linguistics & Phonetics என்ற நூலிலிருந்தும் கலைச் சொற்கள் சேகரிக்கப்பட்டன. சுமார் 3000 கலைச் சொற்களைத் தயாரிக்கத் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது.

**ஏற்கனவே உள்ள மின்னகராதிகள்.**

தமிழில் ஏற்கனவே மின்னகராதிகள் என்று தமிழ் விக்சனரி, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் கலைச்சொற்கள், பழனியப்பா மின்னகராதி, தமிழ் கணிமை கலைச்சொற்கள் (மின்னகராதி), ஆங்கிலம் தமிழ் யேர்மன் மின்னகராதி, கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,ஆங்கிலம் தமிழ் சிங்களம் மின்னகராதி போன்ற பல அகராதிகள் வந்துள்ளன. ஆனால் மொழியியல் கலைச் சொல் மின்னகராதி என்று எதுவும் இல்லாத காரணத்தால் இம் முயற்சி மேற்க் கொள்ளப்பட்டுள்ளது.

மொழியியல் கலைச்சொற்களை இரண்டு விதமாக மின்னகராதியாகத் தயாரிக்கலாம். ஒன்று ஏற்கனவே தமிழில் உள்ள மொழியியல், ஒலியனியில், உருபனியல், தொடரியல் போன்ற கலைச் சொற்களை கீழே உள்ள தேடல் பகுதியில் கீழ்கண்டவிதமாக ஏற்றவேண்டும். அப்போது இதன் தேடல் பகுதி

| மொழியியல் | தேடுக |
|---|---|

எந்தக் கலைச் சொல் வேண்டுமோ அந்த எழுத்தைக் கட்டத்தில் எழுதி தேடுக என்று கிளிக் செய்தால் அதற்குரிய சிறு குறிப்புடன் அந்தக கலைச் சொல் “மொழியியல்: மொழியை விஞ்ஞான முறைபடி விவரிக்கும் /கற்பிக்கும் பாடம் மொழியியல்” என்று கம்யூட்டர் திரையில் ஒளிரும்.

இன்னொரு முறை மேற்கூறியவாறு

| Linguistics | தேடுக |
|---|---|

ஆங்கிலத்தில் Linguistics என்று கட்டத்தில் எழுதி தேடுக என்று கிளிக் செய்தால் முதலிலேயே கம்பயூட்டரில் ஏற்றப்பட்ட “Linguistics” அதன் மொழிபெயர்ப்பான “மொழியியல்” என்பது “மொழியியல்: மொழியை விஞ்ஞான முறைபடி விவரிக்கும் /கற்பிக்கும் பாடம் மொழியியல்” என்று அதற்குரிய சிறு குறிப்பும் திரையில் மிளிர ஆரம்பிக்கும்.

**எடுத்துக் காட்டு மொழியியல் கலைச்சொல் தரவுகள்**

மொழியியலுக்காக ஆங்கிலத்திலும் தமிழிலும் தயாரிக்கப்பட்ட மாதிரிக் கலைச் சொல் தரவுகள் கீழ்க்கண்டவிதமாக உள்ளன

**ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட மொழியியல் கலைச் சொல் தரவுகள்**

Accent: Accent is the one which identify the person regionally and socially with the help of pronunciation. It differentiates the person from one region to another region. The social status of the person revealed due to his pronunciation.

Acoustic phonetics: when the sounds of the language are pronounced, the way they create the different sound waves are recorded in the speech machine and examine the difference between them through the machine is called acoustic phonetics.

Active articulator: In the process of pronunciation the constituents which are touched the passive articulator or reached near the passive articulator is called active articulator.

Articulatory phonetics: Articulatory phonetics describes how the constituents of sound machine are helped and tried to produce the sounds when the sounds of languages are pronounced.

Auditory phonetics: Auditory phonetics describes the waves of the wind produced due to the pronounced sounds enter into the ear and what are changes that create in the ear drum and the bones related to it.

Comparative grammar: comparative grammar is the one which compared and examine all languages in one family and reestablished the proto languages then it describes the changes that took place in each language.

Comparative linguistics: This part of the linguistics compared two or more languages and describes the relation between them. This comparison can be done between languages which have same proto form. This part described how the languages are developed. It also describes the commonness and variations between the languages.

Linguistics: Linguistics is the scientific study of language

Manner of articulation: The air which is stuck either in the throat or mouth is called the manner of articulation.

Merger: in the old language or the language which has diglossic nature two or more than two phonemes are pronounced as one phoneme in modern language may be called as merger. Exx in Tamil the phonemes l, L, zha are pronounced as l, L. The words like pal 'teeth', paLLam 'pit', pazham 'fruit' are pronounced as pal, paLLam, paLam.

Phonetics: Phonetics is the study of sounds which are produced by the Human vocal apparatus

Phonology: Phonology is the study of phonemes and its sequences

Morphology: Morphology is the study of morphemes and the sequence of morphemes. ***தமிழில் தயாரிக்கப்பட்ட மொழியியல் கலைச் சொற்கள்***

***ஒலியழுத்தம்***: ஒலியழுத்ததின் மூலம் ஒரு மனிதன் எந்த வட்டாரத்தைச் சேர்ந்தவன் எந்தக் குலத்தைச் சேர்ந்தவன் என்று கண்டுபிடிக்க உதவுகிறது. ஒருவனின் உச்சரிப்பு ஒரு வட்டாரத்தைச் சேர்ந்தவனை இன்னொரு வட்டாரத்தைச் சேர்ந்தவனிடம் இருந்து வேறு படுத்திக் காட்டுகிறது. ஒரு மனிதனின் சமூக அந்தஸ்தைக் கூட அவனின் ஒலியழுத்தம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைத் தருகிறது.

***ஒலியியக்கவியல்***: மொழியின் ஒலிகளை உச்சரிக்கும் போது அவை காற்றில் ஏற்படுத்தும் வித விதமான ஒலி அலைகளை எந்திரம் மூலமாக பதிவு செய்து அவற்றில் உள்ள வேறுபாடுகளை பரிசோதனை செய்யும் இயல் ஒலியியக்க வியலாகும்

***இயங்கொலிப்பி***: ஒலிகளை உச்சரிக்கும் போது அசைவற்ற ஒலிப்பிகளை தொடும் அல்லது நெருங்கும் உறுப்பே இயங்கொலிப்பி.

***அடைப்புரசொலிகள்***: அடைப்புரசொலிகளான ca, cha, ja, jha போன்றவற்றை உச்சரிக்கும் போது அடைக்கப்பட்ட காற்று திடீரென்று இல்லாமல் மெதுவாக வெளிவிடப்படுகிறது. ஆகையால் இவை அடைப்புரசொலிகள் என்று அழைக்கப்படுகின்றன.

***ஒட்டு நிலை மொழிகள்***: ஒட்டுக்களைச் சொற்களில் சேர்த்தாலும் அந்தச் சேர்க்கையில் ஒட்டு காணக் கூடியதாக இருந்து சுலபமாக பிரிக்கக் கூடிய விதமாக இருக்கும். ஆகையால் இவை ஒட்டு நிலை மொழிகள் என்று அழைக்கப்படும். உதா. தமிழ், தெலுங்கு.

***இயைபு***: முற்று வினை எழுவாயுடனும் ஆண்பாலுடனும் எண்ணுடனும் இயைபுடன் இருக்கவேண்டும். உதா. நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். குரங்கு வெளியே வருகிறது. அவர்கள் விளையாடுகிறார்கள். சில அஃறிணைப் பெயர்கள் கூட்டமாக வரும்போது பன்மைக்குப் பதில் ஒருமை வரலாம். உதா அவருக்கு நூறு ஏக்கர் இருக்கிறது.

***ஒலியுணர்வியல்***: உச்சரிக்கப்பட்ட ஒலிகளின் காற்று அலைகளானது காதுக்குள் புகுந்து செவிப்பறை மற்றும் அதற்குச் சம்பந்தமான எலும்புகளில் எத்தகைய மாறுதல்களை ஏற்படுத்துகின்றன என்பதை விவரிக்கும் இயல் ஒலியுணர்வியலாகும்

***மாற்றுருபன்***: ஒரு உருபனுக்குரிய மாற்றுருவை மாற்றுருபன் என்று சொல்லலாம்.

***மாற்றொலி***: மாற்றொலி பொருள் வேறுபாடு காட்டக் கூடிய ஒலியனில் ஒரு பாகம். பொருள் வேறுபாடு காட்ட முடியாத அண்மை ஒலிகளை ஒரு ஒலியனைச் சேர்ந்த மாற்றொலியன்

# இணையமும் நவீன தமிழ் இலக்கியமும்


ஜே.ஆர். வி. எட்வர்ட்

jrve@rediffmail.com ,    jrvedward@gmail.com


வாழ்வியல் சார்ந்த அறங்கள், நெறிகள், அனுபவங்கள், தத்துவங்கள், உணர்வுகள் முதலானவற்றைப் பதிவுசெய்து பாதுகாப்பது, பரவலாக்குவது, அடுத்த தலைமுறைகளுக்குப் பரிமாறுவது உள்ளிட்டவற்றை இலக்காகக் கொண்டு உருவான கலைவடிவங்களில் முக்கியமானது இலக்கியம். பல முகங்கள் பெற்று, பல நிலைகளைக் கடந்து, பல பரிணாம மாற்றங்களுக்குட்பட்டு தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்கிற ஒன்று அது. இலக்கியம் பல்வேறு படிநிலைகளைக் கடந்து வளர்ந்துகொண்டிருப்பது போலவே இலக்கியத்தைப் பதிவுசெய்யும் முறைகளிலும் பரிமாற்றம் செய்யும் முறைகளிலும்கூட மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

ஆரம்பத்தில் வாய்மொழிக் கதைகளாகவும் இசைப் பாடல்களாகவும் மனித மனங்களில் பதிவுசெய்யப்பட்டும் பரிமாற்றம் செய்யப்பட்டும் தன் பயணத்தைத் தொடங்கிய இலக்கியமானது தோல் சுருள்களிலும் ஓலைச் சுவடிகளிலும் பதிவு செய்யப்படும் நிலையை எட்டியபோது காவியங்களை ஈன்றெடுத்தது. ஆனால், அப்போது இலக்கியம் பண்டிதர்களின் சொத்தாகிப்போனது. இலக்கிய உருவாக்கம், இலக்கியப் பதிவு மற்றும் பரிமாற்றம் ஆகிய பணிகளை காகிதத்தின் அறிமுகம் எளிமையாக்கியது. பண்டிதர்களிடம் சிறைப்பட்டிருந்த இலக்கியத்தை மீண்டும் மக்கள் சொத்தாய் மாற்றியது அது. இலக்கிய உலகில் ஒரு புரட்சியை உருவாக்கியது அச்சு எந்திரம். இலக்கியத்தைப் பதிவுசெய்தல், பரவலாக்கல் மற்றும் பரிமாற்றம் செய்தல் ஆகிய பணிகளை ஜனநாயகப்படுத்தியது அது. அழிந்துகொண்டிருந்த பல இலக்கியப் படைப்புகளை அழிவினின்று மீட்டதும் அதுதான். இன்றைய இணைய யுகத்தில் இப்பணிகள் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்திருக்கின்றன. நவீன தமிழ் இலக்கியப் படைப்புகளைப் பதிவுசெய்து பாதுகாப்பதிலும் பரிமாற்றம் செய்வதிலும் இணையத்தின் பங்களிப்பு என்னென்ன என்பதைச் சுருக்கமாய் இக்கட்டுரையில் அலசலாம்.

தகவல் பரிமாற்றத்துக்காய் அறிமுகம் செய்யப்பட்ட அறிவியல் கண்டுபிடிப்பான இணையமானது பல பரிமாணங்களில் வளர்ச்சி பெற்று பல்வேறு வகையான பயன்பாட்டு நிலையை எட்டியுள்ளது. கலை-இலக்கியப் பரிமாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும்

பயன்படுவதுடன் இலக்கிய உருமாற்றத்திற்கும் கூட இணையம் காரணமாயிருக்கிறது. இணையத்தின் தாக்கம் இலக்கியத்திலும் இலக்கியத்தின் தாக்கம் இணையத்திலும் பலவகைகளில் காணப்படுகின்றன. தமிழில் இணையத்துக்கும் இலக்கியத்துக்கும் இடையேயான பிணைப்பும் வீச்சும் ஆங்கிலத்துடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது. ஆனாலும் பொருட்படுத்தக்கூடிய அளவில் இருக்கிறது. தவிர, இப்பிணைப்பும் வீச்சும் வளர்ச்சிப்பாதையில் தொடர்கிறது. கணினிக்குள் முடங்கிக்கிடக்கும் ஒரு பிரிவு இளம் தலைமுறையினருக்கு இணையத்தால் மட்டுமே இலக்கிய வாசிப்புக்கு உதவ இயலும். எனவே, தமிழ் இலக்கியத் துறையினர் இணையத்தை அலட்சியம் செய்யலாகாது. இணைய இலக்கியத்தை நெறிப்படுத்துவதிலும் வளர்த்தெடுப்பதிலும் நவீன தமிழ் இலக்கியப் புரவலர்களும் ஈடபடவேண்டியது அவசியமானது.

நவீன தமிழ் இலக்கியத் தளத்தில் பின்வரும் வகைகளில் இணையத்தின் தாக்கம் மற்றும் பங்களிப்பு உள்ளது :

**இலக்கியப் படைப்புகளைப் பாதுகாத்தல்**

ஓலைச் சுவடிகளில் பதிவுசெய்யப்பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியப் படைப்புகளில் பல அழிந்துள்ளன. கண்டெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்ட சுவடிகளைவிட அழிந்துபோனவை அதிகம். அருமை தெரியாத பலர் சுவடிகளை அடுப்பு எரிப்பதற்குப் பயன்படுத்தியுள்ளனர். படைப்பாளிகள் மரணமடைகிறபோது சுவடிகளில் அவர்கள் உருவாக்கி வைத்திருந்த இலக்கியப் பிரதிகளையும் அவர்களுடன் சேர்த்தே புதைத்ததும் நடந்திருக்கிறது. இப்படியாக, பழந்தமிழ் இலக்கியப் படைப்புகள் கரியாகியும் மண்ணோடு மட்கியும் அழிந்துள்ளன. தொகுக்கபபட்ட சுவடிகளிலும் பல இன்னும் நூல்வடிவம் பெறாமல் உள்ளன. கரையானுக்கு இரையாகவும் சிதிலமடைந்தும் அழிந்து கொண்டிருக்கின்றன பல சுவடிகள். நூல்வடிவம் பெற்ற இலக்கியப் படைப்புகளிலும் மறுபதிப்பு காணாமல் முடங்கிப்போயுள்ளவை பல. அப்படைப்புகளை இன்றைய வாசகர் எவரேனும் நுகர விரும்பினால் அது அபத்தமான ஆசையாகிவிடுகிறது.

இப்பின்னணியில் யோசித்துப் பார்த்தால் இணையமானது இலக்கியப் படைப்புகளைப் பாதுகாப்பதற்கான அரிய பெட்டகம் என்பது புரியும். இலக்கியப் படைப்புகளை இணையத்தில் பதிவேற்றம் செய்து அவற்றுக்கு அழியாவரம் அளிக்கலாம்.

## இலக்கியப் படைப்புகளைப் பரிமாற்றம் செய்தல்

நவின தமிழ் இலக்கியப் படைப்புகளில் பெரும்பாலானவை தமிழகத்தில் அச்சுப் பிரதிகளாகக் கிடைப்பதால் தமிழகத்தில் வசிக்கும் தமிழிலக்கிய ஆர்வலர்களின் இலக்கிய

வாசிப்புக்கு இணையத்தின் பங்களிப்பு குறைந்த அளவிலேயே உள்ளது. ஆனால், அயலகத் தமிழர்களுக்கு அப்படியில்லை. படைப்பாளர்களும் பதிப்பகங்களும் தம்தம் நூல்களை இணையத்தில் பதிவேற்றம் செய்தால், உலகின் எந்த மூலையில் இருப்பவரும் தாம் விரும்பியும் படைப்புகளை (உரிய கட்டணம் செலுத்தி) பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். ஆனால், இப்பணி தமிழில் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதே சரி. சில பிரபலங்களின் சில நூல்கள் தவிர ஏனையவை மின்நூல் வடிவம் பெறவில்லை.

இணையத்தில் நுனிப்புல் வாசிப்புதான் சாத்தியம் என வாதிடுவோர் உண்டு. அந்த வாதத்தில் நியாயம் இல்லாமலில்லை. பெரு நாவல்களை முழுமையாய் இணையத்தில் வாசிப்பது இன்றைய சூழலில், அலுப்பானதுதான். அதற்காக, நாவல்களை இணையத்தில் பதிவேற்றம் செய்வது வீண்வேலை எனக் கருதுவது நியாயமல்ல. வேறொரு நாட்டில் வசிக்கும் ஆர்வலர்கள் தாம் விரும்பும் நாவல்களை வாசிப்பதற்கு என்ன வழி? இந்தியாவில்கூட தமிழகம் தவிர்த்த பிற மாநிலங்களில் வசிக்கும் தமிழிலக்கிய ஆர்வலர்கள் தாம் விரும்பும் நூல்களைப் பெறுவது சிரமமாய் உள்ளது.

முழு நாவலையும் மொத்தமாய் வாசிப்பது ஒருவகை அனுபவம். நாவல் பகுதிகளை ஆங்காங்கு வாசித்துச்செல்வதும்கூட ஒருவகை அனுபவம்தான். தவிர, இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட நாவல்களை விரும்புவோர் பதிவிறக்கம் செய்து சாவகாகமாச வாசிக்கலாம்.

சிறுகதை, கவிதை போன்ற படைப்புகள் இணைய வாசிப்புக்கு உகந்தவை. ஆனால் தமிழில் சிறுகதை மற்றும் கவிதை நூல்களில்கூட மின் நூல்களாய் உருமாற்றம் பெற்றவை மிகச் சில மட்டுமே. தமிழிலக்கியத் தளத்தில் இணைய அலை இன்னும் எழுச்சி பெறவில்லை என்பதற்கு இவை சான்றுகள்.

சுவடிகளைப் பதிப்பிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிபோல் நவீன தமிழ் இலக்கிய நூல்களை மின்நூல்களாக மாற்றும் முயற்சியை அரசும் புரவலர்களும் மேற்கொள்வது காலத்தின் கட்டாயம் ஆகும்.

இலக்கிய நூல்களை மின் நூல்களாக்கி இணையத்தில் பதிவேற்றம் செய்வது தமிழைப் பொறுத்தவரை வணிகரீதியில் இலாபகரமாய் அமையாது என்ற வாதமும் சரியானதே. ஆனால், வேண்டுவோருக்கு மின்நூல் வடிவத்தில் மின்னஞ்சலில் அனுப்பிக் கொடுக்கலாம். தற்போது நூல்கள் கணினி தட்டச்சு செய்யப்பட்டே அச்சாக்கம் பெறுகின்றன. எனவே,மின்னஞ்சலில் அந்நூல்களை அனுப்பவதில் சிரமம் இருக்க வாய்ப்பில்லை.

ஒரு மொழியின் வளம் அதன் இலக்கிய வளத்தையும் பொறுத்தே அளவிடப்படுகிறது. தமிழின் இலக்கிய வளத்தைப் பேணிப் பாதுகாக்க இவையெல்லாம் உதவக்கூடியவை.

## இலக்கிய இதழ்களைப் பதிவேற்றம் செய்தல் மற்றும் மின்னிதழ்கள் நடத்துதல்

முக்கியமான தமிழ் நாளிதழ்கள் மற்றும் வெகுஜன இதழ்கள் மட்டுமல்லாது காலச்சுவடு, உயிர்மை போன்ற இலக்கியம் சார்ந்த பல இதழ்களும்கூட இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. ஆனால், இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படாத சிற்றிதழ்களும் இலக்கிய இதழ்களும் பல இருக்கின்றன.இவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்வது இலக்கியம் சார்ந்ததும் சமூகம் சார்ந்தும் அதிகம் பயன்தரக்கூடிய செயல்.

அச்சு வடிவம் பெறாத இணைய இதழ்கள் பல நடத்தப்படுகின்றன.நவீன வாகர்களுக்குத் தீனிபோடும் இவ்விதழ்களில் பல போதிய பொருளாதார ஆதரவின்மையால் தேக்கநிலையில் உள்ளன. தேக்கநிலை உடைந்து இவ்விதழ்கள் புதுப் பாய்ச்சல் காணும் காலம் விரைவில் கனியலாம். வணிகரீதியில் வெற்றியடையாவிடினும் பயன்பாடு அளவில் இவ்விதழ்களின் பங்களிப்பு புறக்கணிக்கமுடியாதது. தவிர, பல படைப்பாளிகளும் சிந்தனையாளர்களும் தமக்கென வைத்திருக்கும் இணையப் பக்கங்களிலும் சமூக இணைய ஊடகங்களிலும் தம் கருத்துக்களையும் படைப்புகளையும் வெளியிடும் சூழல் வாய்த்திருக்கிறது. இப்புரட்சியை உருவாக்கியது இணையம் அன்றி வேறென்ன? இதில் ஒரு எதிர்மறை விளைவும் இருக்கிறது. அதாவது, பல வேளைகளில் தரம் பலியாகிறது. சிலர், போதிய பயிற்சியோ, முயற்சியோ இன்றி அறைக்குள் அமர்ந்தவாறே தோன்றியதையெல்லாம் எழுதும் போக்கும் இருக்கிறது. நச்சுக் கருத்துக்களைப் பரப்பும் வேலையும் நடக்கிறது. இது சமூக எதார்த்தங்களில் ஒன்றுதான். பயிருடன் சேர்ந்து களையும் வளர்வதுதானே சமூக எதார்த்தம் !

## இலக்கிய விவாதங்கள் முன்னெடுத்துச் செல்லுதல்

அறிவியல் மற்றும் தத்துவங்களை வளர்த்தெடுப்பதில் விவாதங்களும் கலந்துரையாடல்களும் முக்கிய பங்காற்றுகின்றன. நவின இலக்கியக் கருத்தாக்கங்களின் வளர்ச்சியிலும் விவாதம் மற்றும் கலந்துரையாடல்களின் பங்களிப்பு புறக்கணிக்க முடியாதது. முறையான அல்லது முறைசாரா கருத்தரங்குகளில் மட்டுமே நேரடி விவாதம் மற்றும் கலந்துரையாடலுக்கான வாய்ப்பு உள்ளது தற்போது. இத்தகு கருத்தரங்குகளிலும்

ஆர்வமுடைய அனைவரும் பங்கேற்க இயலாது. அதற்கு பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

அச்சு இதழ்களில் பல தீவிரமான இலக்கிய விவாதங்கள் நடப்பதுண்டு. அவ்விவாதங்கள் முழுமை பெறுவது அரிது. சிற்றிதழ்கள் வெளிவரும் கால இடைவெளி, பக்க வரையறை போன்ற எல்லைகளையும் கடந்து விவாதங்களை முழுமைப்படுத்துவது எளிதன்று. தவிர, இதழ் குழுவினரின் சார்பு நிலைகளும் விவாதங்களுக்கு தடங்கலாய் அமைவதுண்டு. மேலும், எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கும் ஜனநாயகப் பண்பை நிலைநாட்டுவதிலும் நடைமுறைச் சிக்கல்கள் உண்டு.

இச்சூழலில் இணையமானது இலக்கிய விவாதங்களுக்கும் ஓர் சிறந்த களமாக இருப்பது கவனிக்கத்தக்கது. எவ்வித மனத்தடையும் இன்றி எல்லோரும் பங்கேற்கும் சுதந்திரமும் ஜனநாயகமும் இணையத்தில் இருக்கிறது. தவிர, இதழ்களில் நடப்பதைப் போல் ஒற்றைப் பரிமாணத்தில் அல்லாது பன்முகத்தன்மையுடன் விவாதங்களை முன்னெடுத்துச் செல்லமுடியும் இங்கு.

## இலக்கியவாதிகளுடன் உரையாடல்

சமூகப் பிரச்சினைகள் தொடர்பான இலக்கியப் படைப்பாளிகள் மற்றும் கலைஞர்களின் கருத்துக்களுக்கு மரியாதை இருக்கிறது. சமூகப் பிரச்சினைகள் குறித்து மௌனம் சாதிக்கின்றனர் என்பது பல இலக்கியவாதிகள் மீதான குற்றச்சாட்டாக இருக்கிறது. மறுபுறம், சமூகப் பிரச்சினைகள் குறித்து கருத்துரைக்க விரும்பும் படைப்பாளிகளுக்கு உரிய வாய்ப்புகள் இல்லை. வெகுஜன அச்சு ஊடகங்கள் பல சுதந்தரமான கருத்துக்களை முரண்விவாதத்துக்குள்ளாகிவிடும் எனக் கருதி பிரசுரிப்பதில்லை. சிற்றேடுகளிடம் வேறு பல போதாமைகள். இச்சூழலில், இணையத்தில் அதற்கான வாசல்கள் திறந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தவிர, தாம் மதிக்கும் இலக்கியவாதிகளுடன் அளவளாவுவதில் மாணவர்கள் மற்றும் இளம் வாசகர்கள் பரவசம் கொள்கின்றனர். ஆனால், நேரடியாக இலக்கியவாதிகளுடன் அளவளாவுவதற்கான வாய்ப்பு எப்போதாவது தான் கிடைக்கிறது. பலருக்கு அவ்வாய்ப்பு கடைசிவரை கிடைக்காமலே போய்விடுகிறது. இணையம் அதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கிறது. இவ்வகையில், எழுத்தாளர்-வாசகர் உறவை மேம்படுத்தும் ஒன்றாகவும் இணையம் இருக்கிறது.

இறுதியாக, இணையத்தின் தாக்கத்தில் புதுவகை இலக்கியங்களும் உருவாகத் தொடங்கியுள்ளன என்பதையும் குறிப்பிட்டு நிறைவு செய்கிறேன்.

என்று சொல்லலாம். இது பேசும் போது துணைநிலை வருகை முறையிலோ அல்லது தனி வேறுபாடாகவோ வரும். ஒரு ஒலி மாற்றொலியாக இருக்க வேண்டுமானால் அது ஒரே விதமான ஒலி ஒற்றுமை பெற்று இருக்கவேண்டும். துணைநிலை வருகை முறையில் வருவதாக இருக்கவேண்டும். மற்ற ஒலிகளுடன் ஒற்றுமை காட்டக் கூடியதாக இருக்கவேண்டும்.

**ஒலி பிறப்பியல்**: மொழியில் உள்ள ஒலிகளை உச்சரிக்கும் போது ஒலி எந்திரத்தில் உள்ள உறுப்புகள் என்னென்ன முயற்சிகளால் ஒலி பிறப்பதற்குத் துணை புரிகின்றன என்று விவரிக்கும் இயல் ஒலி பிறப்பியலாகும்.

**ஒப்பீட்டு இலக்கணம்**: ஒப்பீட்டு இலக்கணம் என்பது ஒரு மொழிக் குடும்பத்தில் உள்ள அனைத்து மொழிகளையும் ஒப்பிட்டு பரிசோதித்துப் பார்த்து அவைகளின் மூல மொழியை கூடுமானவரை மறுபடியும் ஏற்படுத்தி ஒவ்வொரு மொழியிலும் ஏற்பட்ட மாறுதல்களை விவரிக்கிறது.

**ஒப்பீட்டு மொழியியல்**: இந்தப் பகுதி இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்து அவைகளிடையே உள்ள உறவை தெரியப்படுத்துகிறது. இந்த ஒற்றுமைகள் சாதாரணமாக பிறப்புறவு அதாவது ஒரே மூலம் உடைய மொழிகளின் இடையில் மட்டுமே பார்க்க முடியும். மொழிகள் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றன என்ற விவரங்களைக் கூட தெரியப்படுத்துகிறது. அந்த மொழிகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் போன்ற விவரங்களையும் தெரியப்படுத்துகிறது.

**வரலாற்று மொழியியல்**: இந்தப் பகுதி மொழியின் வரலாற்று மாறுபாட்டில் காலத்திற்கேற்றாற் போல எப்படிப்பட்ட மாறுதலை அடைகிறது என்று விவரிக்கிறது. மொழியில் வரும் மாறுதல்கள் அந்த மாறுதல்களுக்கு உரிய காரணங்கள் அந்த மாறுதலால் ஏற்பட்ட விளைவுகளை விவரிக்கிறது. உதா. இத்தாலிய மொழி, பிரஞ்சு மொழி எவ்வாறு இலத்தீன் மொழியிலிருந்து வந்தன என்று விவரிப்பது. மூல திராவிடத்திலிருந்து திராவிட மொழிகள் தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலியவை எவ்வாறு ஏற்பட்டன என்று விவரிப்பது

**மொழியியல்**: மொழியை விஞ்ஞான முறைப்படி விவரிக்கும் துறை மொழியியல் துறை

**ஒலிப்பு முறை**: தொண்டையிலாவது வாயிலாவது காற்றைத் தடுக்கும் முறையை ஒலிப்பு முறை என்பார்கள்.

**இணக்கம்**: பண்டை மொழிகளில் அல்லது தமிழ் போன்ற இரட்டை வழக்கு மொழிகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒலியன்கள் இப்போது உள்ள வழக்கில் ஒரு ஒலியனாக

மாறுவதை இணக்கம் என்று சொல்லலாம். உதா. தமிழில் உள்ள ல ள ழ என்ற மூன்று ஒலியன்களில் ள ழ வும் ஒன்றாகி ளவாக உச்சரிக்கப்படுகிறது. பள்ளம் பழம் எனபவை பள்ளம் பளம் என்று உச்சரிக்கப்படுகின்றன.

**ஒலியியல்**: மனித முக இயந்திரம் உற்பத்தி செய்யும் ஒலிகளை விவரிக்கும் இயல் ஒலியியல்

**ஒலியனியல்**: மொழியில் உள்ள ஒலி ஒழுங்குமுறைகளை விவரிக்கும் இயல் ஒலியனியல்.

**உருபனியல்**: உருபன்களையும் உருபன்களின் தொடர்ச்சியையும் விவரிக்கும் இயல் உருபனியல்.

மேற்கூறிய மொழியியல் கலைச் சொற்களை மின்னகராதியாகத் தயாரித்தால் உலகில் உள்ள தமிழ் மொழி பேசும் அனைத்து மக்களுக்கும் பயன்படக் கூடிய வகையில் அமையும் என்பதில் ஐயமில்லை.

## தமிழில் ஆய்விதழ்களும் ஆய்வுக்கட்டுரைகளை மேற்கோள் காட்டுதலும்- ஒரு பார்வை

**சீதா லட்சுமி**

ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள் துறை,

தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

**முன்னுரை: ஆய்வாளர், ஆய்வு, ஆய்வுக்கட்டுரை**

ஆய்வு என்பது ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது இலக்கு நோக்கித் தேடுவது, தொடர்ந்து தேடுவது, தொடர்ந்து தொடர்ந்து தேடுவது என்று பொருள்படும். பெரும்பாலும் ஆய்வை மேற்கொண்டு அது தொடர்பான பணியில் உள்ள பட்டத்தொழிலர்கள் இத்தகு ஆய்வில் தொடர்ந்து ஈடுபடுவர். அவ்வாறில்லாது ஆசிரியர் பணி, பிற பணிகளில் உள்ளவர்களும் விருப்பத்தின்பேரில் ஆய்வில் ஈடுபடுவர். எனினும் முன்னையவர்போன்று பின்னையவர்தம் ஆய்வுப்பணியில் தொடர்ச்சி, உயர்ச்சி ஆகியன இருப்பது சிறிது கடினம். அதற்குக்காரணம் ஆய்வு தொடர்பான படிநிலைகளும் விளைபொருளும்தாம்(Process and Product) எனலாம். டுங்கு ஆய்வாளர்கள் பெரும்பாலும் தமக்கு முன்பு இடம்பெற்றுள்ள ஆய்வுகள், ஆய்வு முடிவுகள், அவற்றின் தற்காலப் பயன், எதிர்கால நோக்கு ஆகியன குறித்து ஆராய்வர். மேலும் குறிப்பிட்ட ஆய்வு தொடர்பாக இடம்பெற்றுள்ள இங்கு தமிழ்க்கல்வி, தமிழ் இலக்கியம், தமிழ்வழி ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் தம் ஆய்வு, ஆய்வுக்கருத்துகள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வுநூல்கள், முன்னேற்றம் ஆகியன குறித்த சில கருத்துகள் குறிப்புக் கட்டுரை நோக்குகிறது. கட்டுரையின் அளவு கருதிக் கட்டுரை மேலோட்டமாகப் பரந்துபட்ட நோக்கில் கருத்துகளை முன்வைக்கிறது எனலாம்.

தமிழில் ஆய்வுக்கட்டுரைகள் தொடர்ந்து எழுதப்படுகின்றன. அவை தொடர்ந்து பல ஆய்விதழ்களில் வெளியிடப்படுகின்றன. எல்லா ஆய்விதழ்களிலும் ஓர் ஆசிரியர் முதன்மைத் தொகுப்பாசிரியராகவும்(Chief Editor), தொகுப்பாசிரியர்களாகப் பலரும் இணைந்து ஒரு குழுவாகவும்(Editorial Committee) பொறுப்பேற்று வரக்கூடிய கட்டுரைகளை வாசித்துச் சரி செய்து அல்லது வாசித்து மேம்படுத்தும்வகையில் ஆலோசனைகள் கூறி அனுப்பிப் பின் பெற்று வெளியிடுவர். இங்கு இந்தப் படிநிலை எந்த அளவுக்கு ஆய்விதழ்களில் இடம்பெறுகின்றது என்பது குறிப்பிட்டத்தக்கது. முறைசாரா நிலையில் தொகுப்பாசிரியர்கள் சிலரிடம் கேட்டபோது, அவர்கள் கட்டுரைகளைத் தெரிவு செய்து செம்மை செய்து வெளியிடுவதைத் தெரிவித்தனர். அச்சில் வருவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் ஏதேனும் தகவலுக்காக எழுதிய ஆய்வாளரைத் தொடர்புகொள்ளும் நிலை இருப்பதையும் தெரிவித்தனர். எனினும் சில ஆய்விதழ்களில் அவ்வாறு இல்லை என்பதும் அவை அனைத்துலக ஆய்விதழ்களாகப்

பெயர்களைப் போட்டுக்கொண்டிருப்பதையும் உள்ளுணர முடிந்தது. கட்டுரையாளரிடம் ஆசிரியர் குழுவில் இருக்குமாறு வந்த கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து எழுதியவர் பெயர் இல்லாமல் அனுப்புவர். அதைப் பார்த்திடும் கட்டுரையாசிரியர் அல்லது ஆய்வாளர் தாம் விரும்பினால் தரப்பட்ட ஆலோசனைகளைப் பயன்படுத்திக் கட்டுரையைச் செம்மைப்படுத்தி அதே இதழுக்கு அனுப்புவார். அல்லது வேறு இதழுக்குச் செம்மைப்படுத்தி செய்து அனுப்புவார். இங்கு அவ்வாறு அவர்கள் கூறும் ஆலோசனைகள் அரிய பல நன்மைகளைத் தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகு ஆய்வுகள் குறிப்பிட்ட ஆய்விதழில் வரும்போது அவரது பெயர் பல்கலைக்கழக நூலகங்களின் அரிய நூல்களைக் கொண்ட இணையத்தளங்களில் இடம்பெற்றிருக்கும். அந்தக் கட்டுரையைப் பல ஆய்வாளர்கள் வாசித்துத் தம் கட்டுரைகளில் மேற்கோள் காட்டுவர். இந்நிலையில் அவர்களது கட்டுரைகள் புகழ்பெற்ற ஆய்விதழ்களில் வெளிவரும்போது அவர்கள்தம் கட்டுரையும் பலரால் மேற்கோள் தரப்பட்டு பயன்படுத்தப்படும். இதனால் ஆய்விதழ்கள் யார் யாருடைய கட்டுரைகள் எத்தனை முறை மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன என்று தொடர்ந்து குறிப்புகளைக் கட்டுரைக்கருகில் துல்லியமாகத் தரும். இந்தத் துல்லியமும் மேற்கோள் தரப்படும் நிலையும் கட்டுரை எழுதியவருக்குத் தொழில்ரீதியாகப் புகழையும் பெருமையையும் அறிவுலகில் தனித்து நிற்கும் நிலையையும் தரும். மேலும் அவரது கட்டுரையைப் படைத்த ஆய்விதழுக்கும் அவர் பணிபுரியும் நிறுவனத்திற்கும் தரநோக்கில் மேலும் முன்னேறும் வாய்ப்புக் கிடைக்கும். தொடர்ந்து அத்தகு பல்கலைக்கழகங்களுக்குக் கிடைக்கும் மானியமும் நன்கொடையும் அதிகரிக்கும். ஆக, இது ஒன்றிலிருந்து ஒன்று முன்னேறுவதற்கு வழி வகுக்கும் சங்கிலித்தொடர் போன்று அமைகிறது.

தமிழில் அதிகமாக இந்தியாவில் ஆய்வுகள் நடைபெறுகின்றன. ஆங்கிலத்தில் இந்தியாவில் ஆய்வுகட்டுரைகள் எழுதுவதில் போதிய பயிற்சிகள் அதிகம் இல்லை என்றும் தொடர்ந்து அதை மேம்படுத்தவேண்டும் என்றும் கூறப்படுகிறது(Renu Gupta, 2010). பல்கலைக்கழகங்களின் எதிர்பார்ப்பும் அதிகமாக இல்லை என்று கூறப்படுகிறது. அண்மையில் திருச்சியில் நடந்த ஒரு மாநாட்டில் சிகாகோ பல்கலைக்கழகம் பல நோபெல் பரிசுக்குரியவர்களை உருவாக்கிய நிலையில் இந்தியாவில் ஏன் இவ்வாறு இல்லை என்று கேட்கப்பட்டது(Karpaga Kumaravel, 2014). இங்கு தரம், ஆய்வில் செம்மை, ஆய்வுக்கட்டுரைகள் படைப்பதில் அரிய முயற்சி, ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவருக்கு மதிப்பு, அவர்தம் நிறுவனத்திற்கு கிடைக்கும் புகழ் புதிய ஆய்வாளர்கள் அவ்வாறு எழுத விரும்புதல் என பலவகைத் தாக்கங்கள் இடம்பெறுகின்றன.

அயல்நாடுகளில் பணிபுரியும் தமிழ்க்கல்வியாளர்கள் சில சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அவை நன்மைக்குரிய சிக்கல்கள் என்றும் நம்மை மேலும் உயர்த்தக்கூடிய சிக்கல்கள் என்றும் குறிப்பிடவேண்டும். அவ்வகையில் தமிழ்

இணைய மாநாட்டில் இது குறித்த சிந்தனைகள் எதையேனும் எழுப்பமுடியுமா அவ்வாறு எழுப்புவது ஏதேனும் பயன்மிக்க விளைவைத்தருமா? என்ற ஆதங்கத்திலும் தமிழ்க்கல்வியாளர்கள், தமிழ் இணைய இதழ்கள் என ஆங்காங்கு இருக்கும் அனைத்தும் ஒன்றிணைய வழி உண்டா என்ற சிந்தனையிலும் வினாநிரல் ஒன்றைக் கல்வியாளர்கள் பலருக்கும் அனுப்பினேன். அவர்களில் சிலர் தங்கள் மேலான கருத்துகளைத் தந்துள்ளனர். அவற்றில் குறிப்பிடத்தக்க இருவர் பதில்களை இங்கு மேற்கோள்களாகவும் மேற்கோள்களைக் கருத்துவடிவில் மாற்றியும் சிலவற்றைச் சுருக்கமாகவும் தருகிறேன். அவர்களில் அயல் நாட்டைச் சேர்ந்தவரும் தமிழகத்தைச் சேர்ந்தவரும் இருந்தனர். தரப்பட்ட வினாக்களுக்கு அவர்கள் வழங்கிய சில பதில்கள் வருமாறு:

**தாங்கள் தமிழில் ஆய்வுக்கட்டுரை எழுதுவதில் முன்னணி ஆய்விதழ்கள் என்று தலைசிறந்த ஐந்தைக் கூற இயலுமா? (ஐந்து இதழ்களைக் குறிப்பிட இயலாவிடில் தாங்கள் அறிந்த தலைசிறந்த இதழ்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம்).** 1.தமிழியல், அரிமாநோக்கு, நவீனத் தமிழாய்வு, 2. இயலாது

**தங்களது பெயர்கள் இல்லாத நிலையில் தங்களது ஆய்வுக்கட்டுரையை இருவர் மறுஆய்வு(blind peer review) செய்திடும் ஆங்கில ஆய்விதழ்களின் படிநிலை(process) குறித்துத் தாங்கள் அறிவீரா?**

1.அறிவேன் 2. தமிழிலக்கிய ஆய்வுகள் பெரும்பாலும் கண்டுபிடிப்பது, உருவாக்குவது என்பதைவிட அதிகமானவை விமர்சன நிலையில் இருக்கின்றன. அதனால் பதிலளிப்பது கடினம் என்று தாம் நினைப்பதாகத் தெரிவிக்கும் இவர், அறிவியலில் துறைசார்ந்து ஆய்வுகள் இருப்பதால் துறை சார்ந்தவர்களுக்குள் அது இருப்பதாகத் தெரிவிக்கும் இவர், மொழி ஆய்வுகள் அனைவருக்குமானவையாக இருப்பதால் ஓரளவுக்கு அனைவரும் அறியமுடியும். எனவே, வினாவுக்கான விடையைப் பற்றித் தாம் படித்தறிந்ததில்லை என்றும் ஆய்வாளர்கள் கூறக் கேட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**Hirsh Index, Google Scholar, Ulrichsweb, EBSCO, ProQuest, Scopus, Science Direct , Cabell's Directories போன்ற ஆய்வு / ஆய்விதழ்த் தாக்கக்காரணிகள் (Research/ Journal Impact Factors) பற்றித் தாங்கள் அறிவீர்களா? தாங்கள் அத்தகு தாக்கக்காரணிகளில் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைத் தங்கள் ஆய்வுக் கட்டுரைக்காகப் பெற்றிருக்கிறீர்களா? ஆம் எனில் தயவு செய்து எழுதுக.**

1."மேற்கண்டவற்றில் சிலவற்றை அறிவேன்". 2. தமக்கு நேரடியாகப் பதில் கூற இயலாது. அறிவியல் ஆய்வுகளுக்கும் மொழி ஆய்வுகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு என்று கருத்தைத் தெரிவித்தவர் குறிப்பிட்டுள்ளார். தமிழிலக்கிய ஆய்வுகளில் இது சாத்தியமில்லை. மேலும் கட்டுரையாளரைப்போன்று அயல்நாட்டுப்

பேராசிரியர்கள் ஆண்டுக்கு இரு ஆய்வுகளை மேற்கொள்வது என்பது போன்று தமிழகத்துக்கு, அதுவும் வசதி குறைந்த மாணவர்களுக்கு ஆய்வு வழிகாட்டுவதுடன் குறைந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் மணிநேர வகுப்புகள் எடுக்கும் பின்னணியில் இத்தகு நிலையை எதிர்பார்ப்பது கடினம் என்ற கருத்துத்தொனிக்க அவர் தம் ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார். இதனால் வினாவுக்கு நேரடியாகப் பதில் கூற இயலாது என்று குறிப்பிட்டுள்ளார்.

**தமிழில் ஒரு கட்டுரை எழுதப்பட்டாலும் அது தமிழ் படித்தவரை மட்டுமன்றிப் பிற மொழியினரையும் பிற துறையினரையும் சென்று அடையும்வகையில் ஏதேனும்/ எவையேனும் வழியை / வழிகளை நாம் மேற்கொள்ளலாம் என்று தாங்கள் எண்ணுகிறீர்களா? ஆம் எனில் தயவு செய்து குறிப்பிடுங்கள்.**

1."தமிழ் ஆய்விதழ்களுக்குப் பொதுவான ஓர் இணையப்பக்கத்தை உருவாக்கி அதில் ஆய்விதழ்களைப் பதிப்பித்தால் பரவாலாகக் கருத்துகள் போய்ச் சேரும்".

2. "ஆம், இணையத்தளம், மின்னஞ்சல், தொலைக்காட்சி, அச்சிதழ்கள் என அனைத்து ஊடகங்களையும் ஒரே நேரத்தில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் கட்டுரை எழுதப்பட்ட மொழியிலும் ஆங்கிலத்த்திலும் இது ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும்" என்பதும் இவரது பதிலாக அமைந்துள்ளது.

**தமிழில் ஆய்வுக்கட்டுரை எழுதும் ஆய்வாளர்களுக்குத் தமிழில் இத்தகு இதழ்கள், வாய்ப்புகள் தேவை என்று நினைக்கிறீர்களா? ஆம் எனில் ஏன் என்றும் இல்லை எனில் ஏன் தேவையில்லை என்றும் அதிகபட்சம் மூன்று கருத்துகள் வரை தயவு செய்வு குறிப்பிடுங்கள்.**

1."தேவை என்று நினைக்கிறேன். அப்பொழுதுதான் ஒருவர் தான் எழுதுவது சரியா என்று அவரால் மிகச்சரியாக உணர முடியும். மேலும் ஒருவர் எழுதுவதை அத்துறையைச்சார்ந்த இன்னொருவர் சரிபார்ப்பதும் கருத்துகள் கூறுவதும் கட்டுரை மேலும் மேம்பட வழி வகுக்கும்". 2. 'கண்டிப்பாகத் தேவை. ஆய்வு செய்வதற்கு என்ற நிலையைக் கடந்து ஆய்வைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் ஆய்விதழ்கள் உண்டு என்பதை அறிந்து கொள்ளவும் ஒருவர் எழுதும் ஆய்வுக்கட்டுரை பலரையும் சென்றடையவேண்டும் என்ற தன்மைக்காகவும், ஆய்வு சரி அல்லது தவறு என்று அறியும் நிலைக்காகவும் இத்தகு நிலை தேவை'.

**தங்களது கல்வி நிறுவனத்தில் தங்களது துறையில் அனைத்துலக நிலையில் ஆய்வுக்கட்டுரைகளைப் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் எழுதி வெளியிடுவது குறித்த எதிர்பார்ப்பு எந்த அளவுக்குத் தங்களைத் தொடர்ந்து ஆய்வுலகில் உயர்த்தி வருகிறது எனத் தயவு செய்து குறிப்பிடுங்கள்.**

1."ஆய்விதழ்களில் வெளியிட்டாலே வேலை நிரந்தரம் என்னும் அளவிற்கு எங்களது நிறுவனத்தில் ஆய்விதழ்களுக்கு மதிப்பளிக்கப்படுகிறது". 2. "உங்களுடைய அனுபவம்

என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய அனுபவம் என்பது எந்த எதிர்பார்ப்புமில்லை” என்று கூறித் தொடர்ந்து கருத்துரைத்திருக்கிறார்.

பங்கேற்றுக் கருத்துரைத்தவர்கள் அரிய பல கருத்துகளைத் தெரிவித்திருந்தனர். அயல்நாட்டவர் ஆங்கில ஆய்விதழ்களின் அபரிதமான தரம் நோக்கிய வளர்ச்சி, தமிழில் அத்தகு நிலை இல்லாமை, அதேநேரம் அதன் அரிய தேவை, கல்வியாளர்தம் பணி வாழ்வில் அது பெறும் உயர் இடம் குறித்து நன்கு அறிந்திருந்ததால். தமிழகத்தவர் ஓரளவுக்கு இவை குறித்துத் தெரிந்திருந்தாலும் கல்வியாளர்தம் பணி வாழ்வில் அது முக்கிய இடம் பெறுவதில்லை என்ற நிலையைக் கொண்டிருந்தமையையும் அவர்தம் பதில்கள் வாயிலாக அறியமுடிந்தது. எனினும் இது குறித்து ஏதேனும் செய்யவேண்டும் என்ற சிந்தனை ஆழமாக மேலோங்கியிருந்ததை முன்னவரிடம் அதிகமாகவும் இரண்டாமவரிடம் ஓரளவும் கட்டுரையாளரிடம் மிக அதிகமாக இருப்பதையும் இங்கு எடுத்துரைப்பது இன்றியமையாதது. இங்கு இடம் கருதி அதிகம் இடம் பெற இயலாவிடினும், கூடுதல் மற்றும் விரிவான செய்திகள் மாநாட்டுப் படைப்பில் இடம்பெறும்.

முடிவுரை

ஆக இந்தச் சிறிய முயற்சியில் இன்னும் பலரது ஈடுபாடும் கருத்துகளும் தேவைப்படுகிறது. இது குறித்த விழிப்புணர்வு அதிகம் இல்லை என்பதும் உலக அளவில் ஆய்வுத்துறையில் எதிர்பார்க்கப்டும் குறிப்பிட்ட சில இன்றியமையாக்கூறுகள் குறித்த ஆழமான பார்வையும் கருத்துரைப்பும் தமிழில் தேவைப்படுகிறது. தமிழ் ஆய்வுத்துறையில் இதுவரை இடம்பெற்றவை குறித்தும் தற்போதைய நிலை குறித்தும் பிறமொழியினர் தமிழ் ஆய்வுத்துறையில் ஈடுபடுட்டுச் செயல்படும் பாங்கும் வேகமும் குறித்தும் தமிழ் ஆய்வாளர்களில் பெரும்பாலானோர் இன்னும் ஆழமாக ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பு தொனித்து நிற்பதையும் உணரமுடிகிறது.

ஒவ்வொரு நாட்டிலும் கல்வியாளர்களுக்கான எதிர்பார்ப்புகள் வேறுபடுவதும், ஒன்றை வைத்துக்கொண்டு மற்றொன்றை அளக்க இயலாது என்பதும் கட்டுரையாளருக்குத் தெரிந்தாலும் அறிவுலக வழமை குறித்த சிந்தனையை விதைப்பது இக்கட்டுரையின் நோக்கம். அத்துடன் தமிழ் இணையவுலகம் ஆண்டுதோறும் மாநாடுகளை எடுத்துவரும் நிலையில் இது குறித்து ஏதேனும் சிந்தனையை மேற்கொண்டு தம் பங்களிப்பை அல்லது முனைப்பை வழங்கமுடியுமா என்ற விருப்பத்தை வெளியிடுவதும் இக்கட்டுரையின் அடுத்த நோக்கமாகும். உலக அளவில் சிறந்த கட்டுரைகளை எழுதுவது கல்வி ஆய்வாளரின் வாழ்வியல் மற்றும் பட்டத்தொழில் உயர்வுக்கு அடிப்படையான ஒரு காரணமாக அமைவதை இங்கு அனைவரும் புரிந்துகொள்வது தமிழகத்துக்கு வெளியே உள்ள நிலையை எடுத்துக்காட்ட வழி வகுக்கும் என்பது கட்டுரையாளரின் நம்பிக்கை.

நன்றி:
இக்கட்டுரைக்காக நான் வினாநிரல்களை அனுப்பியபோது தம் ஒப்புதல்களையும் தம் கருத்துகளையும் அனுப்பிய கல்வியாளர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

**References:**

David J Solomon. 2007. The Role of Peer Review for Scholarly Journals in the Information Age. *The Journal of Electronic Publishing.* 10:1. Accessed at website http://quod.lib.umich.edu/j/jep/3336451.0010.107?view=text;rgn=main on 29 June 2014.

Renu Gupta, 2010. *A Course in Academic Writing*. New Delhi: Orient BlackSwan.

Karpaga Kumaravel, 2014. Opening and Welcome Address. Inagural Ceremony of the International Conference on Recent Advances in Educational Technology: Implications and Future Directions (23& 24, August 2014). Department of Educational Technology. Trichi: Bharathidasan University (Khajamalai Campus).

# தமிழ் மின்இதழ்களில் தமிழின் நிலை

முனைவர் இரா. சுப்பிரமணி
உதவிப்பேராசிரியர், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636011, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் : erasubramani@gmail.com

**முன்னுரை**

அச்சு ஊடகங்களின் வணிக, கருத்து மேலாதிக்கத்தைத் தகர்த்து எளியவர்களும் கருத்துகளைப் பகிரலாம், கருத்தாடலில் பங்கேற்கலாம், படைப்புகளை வெளியிடலாம் என்ற நிலையை உருவாக்கியது மின் ஊடகங்களாகும். மக்கள்தொடர்பு துணைக்கருவிகளான ஊடகங்கள் அன்றாட நிகழ்வுகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதுடன் கருத்துகளை உருவாக்கவும், கட்டமைக்கவும் செய்கின்றன. கலை, கல்வி, சமூகம், கலாச்சாரம், அரசியல், விளையாட்டு, வணிகம், நுகர்வுக்கலாச்சாரம், உணவு, உடை, சமூக உறவாடல், தனிநபர் ஒழுக்கம், விழுமியங்கள், மதிப்பீடுகள், நம்பிக்கைகள், போன்ற அத்தனை கூறுகளையும் செய்தி வடிவில் மக்களிடம் கொண்டு செல்லும் ஊடகங்கள் கருத்துகளை உருவாக்குவதுடன், திணிக்கவும் செய்கின்றன. ஊடகங்கள் செய்திகளைத் தருவதுடன் மக்களின் மனங்களைத் தகவமைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இவைதவிர ஊடகங்கள் மக்களுக்கு மொழி அறிவையும், மொழிவளத்தையும், மொழியின் போக்குகளையும் கற்பிக்கும் ஆசானாகவும் திகழ்கின்றன. அவ்வகையில் மையநீரோட்ட அச்சு ஊடகங்களின் மொழி நடை, மொழி ஆளுமை, மொழிக் கட்டமைப்பு போன்றவை பரவலான திறனாய்வுகளை எதிர்கொண்டு வருகின்றன. கணிக்க இயலாத தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகப் பரந்து விரியும் இணையம் மற்றும் மின் இதழ்கள் திசைகளெங்கும் பரவி வாழும் தமிழ் மக்களை மொழியால் ஒன்றிணைக்கின்றன. அவ்வாறான தமிழ் மின் இதழ்களில் தமிழ்மொழியின் கட்டமைப்பு, மொழி நடை, மொழிக்கலப்பு போன்ற கூறுகள் எங்ஙனம் ஆளப்படுகின்றன என்பதை ஆய்விற்கு உட்படுத்துவது காலத்தேவையாகும். மின் ஊடகங்களில் புதிய புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துதல் எங்ஙனம் அவசியமானதோ, அதேபோலத் தமிழ் கணினி, மின் ஊடகங்களில் தமிழ்மொழியின் பயன்பாட்டை அதிகரித்தல், சமூக ஊடகங்களில் தமிழ்மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல் போன்றவையும் அவசியமானதாகும்.

தமிழ்மொழிப் பரப்பல், கற்பித்தலில் மக்கள்திரள் ஊடகங்களின் பங்கு மிக மிக இன்றியமையாததாகும். எனவே செய்தியை மையப்படுத்தி தமிழகத்திலிருந்து தமிழில் வலையேற்றப்படும் சில மின் இதழ்களில் தமிழ் மொழியின் கட்டமைப்பு, மொழிநடை, வேற்றுமொழிச் சொற்களின் ஆதிக்கம் போன்ற கூறுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**மக்கள்திரள் ஊடகங்களில் தமிழின் நிலை**

வெகுஜன ஊடகங்கள் எனப்படும் மக்கள்திரள் ஊடகங்கள் மனித மனங்களை மாற்றும் வல்லமை கொண்ட கருவியாகும். அந்த ஊடகங்கள் அன்றாட நிகழ்வுகளை எடுத்துரைத்தல் என்ற நிலையைத்தாண்டி கருத்துருவாக்கும் பணிகளை முனைந்து மேற்கொண்டு வருகின்றன. எது தமிழ், எது பிறமொழி என்று பகுத்து உணர முடியாத வண்ணம் ஊடகச்செய்திகளில் மொழிக்கலப்பு மலிந்து காணப்படுகிறது. செய்தித்தாள்களைப் புரட்டினால் செய்திகளில் ஏராளமான வடமொழிச்சொற்களும் ஆங்கிலச்சொற்களும் மலிந்து கிடப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், ஜனநாயகம், அதிபர், ராஜினாமா, உத்தரவு, வாபஸ், ஆர்ஜிதம், நஷ்ட ஈடு, கோஷ்டி, பந்த், அமல், ஜோடி, தலா, ஜாமீன், விஸ்வரூபம், சித்ரவதை, ரோந்து, உஷார் நிலை, தர்ணா, விஷம். ஜப்தி, சிபாரிசு, பூஜை, பிரேதம், விநியோகம், பல்டி போன்ற சில சொற்களைச் சுட்டலாம். இவை தமிழ்போலவே ஊடகங்களால் மிக மிகச் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

உலகம் முழுவதும் மொழிப்பாதுகாப்புக்காக உள்ள அமைப்புகள் தமது தாய்மொழியில் பிற மொழிகள் கலப்பதைத் தடுக்கும் நோக்கில் பணியாற்றி வருகின்றன. அதற்கு உதாரணமாக மக்கள்திரள் ஊடகங்களில் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதற்குச் சீன அரசு தடை விதித்துள்ளதைச் சுட்டலாம். செய்தித்தாள்கள், இணையத்தளங்களில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது எனவும், குறிப்பாக ஆங்கில மொழிச்சொற்களைப் பயன்படுத்தப்படக் கூடாது எனவும் சீன அரசு ஆணையிட்டுள்ளது. பிறமொழி செற்களைப் பயன்படுத்துவதால் சீன மொழியின் தனித்தன்மைக்குக் குந்தகம் ஏற்படுவதாகவும், வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதனை ஊடகங்கள் தவிர்க்க வேண்டுமெனவும் ஊடகங்களுக்குச் சீன அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தொலைக்காட்சி மற்றும் மின் ஊடகங்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தமிழகத்தில் அத்தகைய முனைப்பு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் இதழாளர் மயிலை பாலு. அவர் தனது கட்டுரையில் ‘ நாடாளுமன்றம் என்ற நல்ல தமிழாக்கம் வந்த பிறகும் தினத்தந்தி குழும ஏடுகள் பாராளுமன்றம் என்பதும், தினமலர் பார்லிமெண்ட் என்பதும் விளங்காப் புதிராகும். இதேபோல் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் என்பது பலராலும் அறியப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்த பின்பும் ஐகோர்ட்டு, சுப்ரீம் கோர்ட்டு என்பதும், ஆணையர், ஆய்வாளர், ஆளுநர், மேல் முறையீடு போன்ற தமிழ்ச் சொற்களை விலக்கிக் கமிஷனர், இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், கலெக்டர், ரிசர்வேஷன், ஆஸ்பத்திரி, கவர்னர், அப்பீல் என்று தொடர்வதும் பொறியாளர், பொறியியல், விடுதி, பதவி நீக்கம், இடைநீக்கம், பிடி ஆணை, கலந்தாய்வு, நடத்துநர், ஓட்டுநர் என்ற தமிழ்ச்

சொற்கள் உள்ளபோதும் இன்ஜினியர், இன்ஜினியரிங், லாட்ஜ், டிஸ்மிஸ், சஸ்பெண்ட், பிடிவாரண்ட், கவுன்சிலிங், கண்டக்டர், டிரைவர் என்ற ஆங்கிலச் சொற்களே ஆளப்படுவதும் தமிழுக்குத் தடைக்கற்களே' எனச் சுட்டிக்காட்டுகிறார்.

**தமிழ் மின் இதழ்களில் தமிழின் நிலை**

மொழி நடை, வாக்கியக் கட்டமைப்பு, பயன்படுத்தப்படும் சொற்கள், வேற்று மொழிச்சொற்களின் விழுக்காடு போன்றவை மையநீரோட்ட இதழ்களில் இருந்து வேறுபட்டு மின் இதழ்களில் தனித்துவம் கொண்டதாக உள்ளனவா? என்பதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை உருவாகி உள்ளது. ஏனென்றால் வேற்றுமொழிச் சொற்கள் தமிழ்போலவே, தமிழாகவே வாசகர்களால் கருதப்படும் கடினமான சூழல் உருவாகி உள்ளது. அச்சூழல் அண்மைக்காலமாகப் பரவலாகக் காணப்படுவதுடன், மின்இதழ்களில் மிக அதிக ஆளப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

அச்சு ஊடகங்களின் வாசகர்களுக்கும், மின் ஊடகங்களின் வாசகர்களுக்கும் இடையில் அடிப்படையில் சில வேறுபாடுகளைக் காணமுடியும். மின் ஊடகப் பயனர்கள் பாரம்பரிய ஊடகங்களிலிருந்து சற்றுக் கூடுதலான சமூகத் தெளிவும், அறிவு நிலையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே மின் ஊடகங்களில் மொழிக் கட்டமைப்பு, மொழி நடை, மொழி ஆளுமை, மொழிக்கலப்பு போன்றவை மையநீரோட்ட ஊடகங்களிலிருந்து மாறுபட்டு, மேம்பட்டு இருக்க வேண்டும். ஆனால் தமிழில் வெளிவரும் செய்தி மின் இதழ்களிலும் மையநீரோட்டச் செய்தி ஊடகங்களைப் போலவே தமிழின் நிலை குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு மோசமாகவே உள்ளது. எடுத்துக்காட்டாகத் தமிழகத்தில் இருந்து வலையேற்றப்படும் மின் இதழ்களின் செய்தித் தளங்களின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள கருவிப் பட்டை (Menu) மற்றும் துணைக் கருவிப் பட்டை (Sub Menu) ஆகியவற்றில் சினிமா, வீடியோ, லைப்ஸ்டைல், கேலரி, ரீசார்ஜ், ரியல் எஸ்டேட், பிசினஸ், ஆட்டோ, மொபைல், கார்ட்டூன், ஹெல்த் சாய்ஸ், வெ டி.வி, போன்ற ஆங்கிலச்சொற்களே காணப்படுகின்றன. செய்தித்தலைப்பு மற்றும் உள்ளடக்கங்களை ஆய்வுக்கு உட்படுத்தினாலும் விவகாரம், வாபஸ், மோசடி, ஜப்தி, சிபாரிசு, விநியோகம், பல்டி, போன்ற வேற்றுமொழிச் சொற்களே மலிந்து காணப்படுகின்றன. அதேபோல ஆங்கிலச் சொற்களான ஜஸ்ட் டயல், ஐபிஓ, ரெய்டு, பட்ஜெட், பாஸ்போர்ட், செல்போன், கம்ப்யூட்டர், பிளாஸ்டிக், பஸ், லாரி, கார், டேங்கர் லாரி, ரயில், கிரிக்கெட், விவிஐபி, பவுலிங், பேட்டிங், டூப்ளிகேட், ஓனர், ரிலீஸ், சிபிஐ, டான்ஸ், செஞ்சுரி, சுப்ரீம் கோர்ட், டாக்டர்கள், ரேடியோ ஜாக்கி போன்ற ஆங்கிலச் சொற்களுடன் விந்தையாகக் குரூப் - 1, நம்பர்-1, நம்பர் ஒன் போன்ற எண்ணும் எழுத்தும் கலந்த சொற்களும் கலந்து காணப்படுகின்றன. இதனால் மின்பரப்பு முழுவதும் பிற மொழிக்கலப்பு என்பது இயல்பை விட மிகக் கூடுதலாகவே

காணப்படுகிறது.

தட்ஸ் தமிழ் செய்தி இணையத் தளத்தில் கருவிப்பட்டையாக அமைக்கப்பட்டுள்ள ஒன்பது மெனுவில் சினிமா,வீடியோ, லைப் ஸடைல், கேலரி, சர்வே எனப்படும் ஐந்து மெனுக்கள் ஆங்கிலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. இதன் துணைக் கருவிப்பட்டைகளான சப் மெனுக்கள் Heroine, Hero, Shooting Spot, specials, Cricket என நீள்கிறது. செய்தித்தலைப்புகளை எடுத்துக்கொண்டால் *தேங்க்ஸ் சொல்லும் மகள்! சமூக வலைத்தளங்களில் உலவும் போட்டோ, பலாத்காரம் செய்த டாக்டர் தலைமறைவு போலி, பெண் கலெக்டர் கைது, போலி போலீஸ் அதிகாரி கைது , சுதந்திரத் தினத்தன்னைக்கு டாஸ்மாக்குக்குப் பூட்டு... கள்ளத்தனமாக விற்றால் ஜெயிலு!! ஒரு நிமிடம் செலவழித்து இந்தச் சர்வேயில் கலந்துக்கோங்க.. இலவச டீல்களையும், கூப்பன்களையும் அள்ளுங்க!, செல்போன்கள், ஜீன்ஸ் பயன்படுத்தப் பெண்களுக்குத் தடை* எனச் செய்தித்தலைப்புகளில் தங்கு தடையற்ற மொழிக்கலப்பு காணப்படுகிறது. செய்தியின் உள்ளடக்கத்தில் கையாளப்படும் மொழிநடையும், வாக்கியக் கட்டமைப்பும் கவலைக்குறியதாகவே உள்ளது.அவற்றை உற்று நோக்குகையில் மொழி குறித்த கவலை சிறிதுமற்றவர்கள் திட்டமிட்டே இத்தகைய மொழிக்கலப்பை மேற்கொள்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சென்னை ஆன்லைன் எனப்படும் செய்திக்கான இணையதளத்தின் பதினோரு கருவிப்பட்டைகளில் சினிமா, கேலரி, ரியல் எஸ்டேட் போன்ற ஆங்கிலத் தலைப்புகளே இடம்பெற்றுள்ளன. இந்தக் கருவிப்பட்டைகளில் பல துணைக்கருவிப்பட்டைகள் நேரடி ஆங்கிலத்திலேயே இருப்பதையும் காண முடிகிறது. செய்திகளுக்கான தலைப்புகளில் *வி.ஏ.ஓ-க்களுக்கு சலுகைகள், கண்டெய்னர் லாரிகள் 3– வது நாளாக வேலை நிறுத்தம், பெண்கள் ஜீன் பேண்ட் அணியத் தடை!* போன்ற மொழிக்கலப்புடன் கூடிய தலைப்பே காணப்படுகிறது. உள்ளடக்கங்களை நோக்கினால் பிற மொழிச்சொற்களை கையாள்வது குறைவாக இருப்பதைக் காண முடிகிறது. முந்தைய இணையதளத்தை விட இந்த இணையதளத்தில் பிற மொழி சொற்களின் அளவும், ஆங்கிலத்தின் பயன்பாடும் குறைவாக இருப்பதை அறிய முடிகிறது.

நக்கீரன் இணைய இதழில் தமிழின் நிலை குறித்து ஆய்ந்ததில் அவ் இணைய இதழ் தனது கருவிப்பட்டைகளில் வெப் டி.வி, கேலரி, health choice போன்ற கருவிப்பட்டைகளை ஆங்கிலக் கலப்புடன் அமைத்திருப்பதைக் காணமுடிகிறது. செய்தித்தலைப்புகளில் *சுப்ரீம்கோர்ட் வக்கீல்கள் கேள்வி, மக்களவை தேர்தலில் ராஜ்நா சிங் கேப்டன்: அமி ஷா மேன் ஆப் த மேட்ச்: நரேந்திர மோடி புகழாரம், மாணவிகளுக்குப் பெண் சப்இன்ஸ்பெக்டர் ஆலோசனை, போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ' பிடிவாரண்டு,' இன்று மாலை அல்லது நாளை டிஸ்சார்ஜ்* போன்ற ஆங்கில மொழிக்கலப்புடன் கூடிய வாக்கியக் கட்டமைப்புகளையே காண முடிகிறது.

குமுதம் இணையதளத்தின் மொழிக்கட்டமைப்பை ஆய்வுக்குட்படுத்தியதில்

கருவிப்பட்டைகள் அனைத்தும் நேரடி ஆங்கிலத்தில் மட்டுமே இருப்பதைக் காண முடிந்தது. கருவிப்பட்டைகள் அனைத்தும் Home, Magazine, Dotcom special, Web tv, Downloads, Tamil classic, Price plan, Cine news, Gallery, Games, Horoscope, Tourism, Cartoon, Schedule என ஆங்கிலத்தில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. இந்த இணையதளத்தில் ஆங்கிலச்சொற்கள் கலப்பின் ஊடாக வடமொழிச்சொற்களின் கலப்பும் இயல்பை விடக் கூடுதலாகவும், வலிந்து திணிக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றது.

*விகடன் இணையதளத்தின் கருவிப்பட்டைகள் அனைத்தும் குமுதத்தைப் போலவே நேரடி ஆங்கிலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. கருவிப்பட்டைகளில் News, Time pass, Astrology, Videos, Finance, Motor, Exclusive, Publications, E-books என்னும் ஆங்கிலக் கருவிப்பட்டைகளே காணப்படுகின்றன. செய்திக்கான பக்கத்தில் வெப் டி.வி, டைம் பாஸ், சினிமா போன்ற கருவிப்பட்டைக்கான தலைப்புகளுடன் எடிட்டர் சாய்ஸ் , மளிகை கடை to சூப்பர் மார்க்கெட், இன்றைய கேலரி,சினிமா, வீடியோ போன்ற துணைத் தலைப்புகளும் காணப்படுகின்றன. செய்திகளின் உள்ளடக்கத்தில் ஆங்கிலம் மற்றும் வடமொழியின் அளவு குறைவாகவே காணப்படுகிறது.*

முடிவுரை

தமிழின் மீதான மொழிப் படையெடுப்புகள் காலங்காலமாக முறியடிக்கப்பட்டு வருகின்றன. அடுக்கடுக்கான பல மொழிகளின் படையெடுப்புகளால் தமிழின் சல்லி வேர்களைக்கூட அசைக்க முடியவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்ற நிகழ்காலத் தலைமுறை தமிழைப் படிக்காமலேயே, ஏன் தமிழில் எழுதப் படிக்கத் தெரியாமலேயே உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இப்பின்னணியில் ஊடகங்களில், குறிப்பாக மின் ஊடகங்களில் நிகழ்ந்தேறி வரும் தமிழ் மொழி மீதான இப்படுகொலை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஊடகங்களில் பயன்படுத்தப்படும் தமிழ்மொழி குறித்த விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மொழியின் பயன்பாடு குறித்த வழிகாட்டு நெறிமுறைகளும், கட்டுப்பாடுகளும் வகுக்கப்பட வேண்டும். தமிழ்மொழியே அறியாமல் வளரும் இளைய தலைமுறைக்கு இந்த மின்ஊடகங்கள் அறிமுகப்படுத்தும் தமிழ் போன்றதொரு மொழி வளரும் தலைமுறையினரிடையே மிகக் கூடுதலான பாதிப்பை உருவாக்கக்கூடும். எனவே தொழில்நுட்பப் பயன்பாட்டில் உள்ளக் கட்டுப்பாடுகள் போலவே மொழிப் பயன்பாடு குறித்த கட்டுப்பாடும் அவசியமாகும். அதேபோல தமிழ் மொழியை மூலதனமாக வைத்து வருவாய் ஈட்டும் மின் ஊடகங்கள் கலப்படம் இல்லாத வணிகம் செய்ய வேண்டிய சுயக்கட்டுப்பாடு அவசியமாகும். தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை! எனப் பாவேந்தன் பாடிய பொழுதை விடச் சூழ்நிலை இன்றைக்கு மிக மோசமாகிக்கொண்டுள்ளதை வாசகர்களாகிய பொதுமக்கள் உணர வேண்டும். வாசகர்களாகிய நாம் தமிழ் அல்லாத ஊடகங்களைப் புறக்கணிக்க வேண்டும் .

# E-Governance Activities in Tamil Nadu

**E. Iniya Nehru**
**National Informatics Centre, Chennai**
nehru@nic.in

## Introduction

E-governance is what many countries are looking forward to establish a citizen centric government. The essence of e-governance is to reach the common man and accomplish the laid governance objectives through integration of people, processes along with information and technology. In India many e-Governance initiatives are in progress and aims to transform conventional government-citizen relationship by transparency, efficiency, accountability. E-governance is by the governed, for the governed and of the governed. With the changing ICT world, NIC is constantly meeting the various demands of the Government and the public at large. Few of the e-Governance projects where NIC is actively involved are listed below.

1. **Tamil Nadu eDistrict – Scholarship System (http://escholarship.tn.gov.in/)**

This Web based system provides a facility for students to file applications for scholarship online through their respective Institutions and it is operational since 2009




**Features**

- Facilitates transparency in the processing of application for scholarship
- Work flow based file tracking the process at every level
- The status of the scholarship is made available to Students and Institutions over the net.
- Role based Privileges to access the system
- Handles fresh and renewal cases
- SMS alert to student during registration and cheque preparation
- Dashboard & drilldown chart facility for monitoring purposes

The same has been replicated for Adi Dravidar Dept and it is implemented since 2010

2. **Pre-Examination Portal for the Directorate of Government Examinations (http://www.tndte.gov.in/)**

A pre examination portal has been developed and launched to manage the Nomination Rolls of candidates for +2 and SSLC public examination. There are 71 Educational Districts consisting of 6005 HSC schools and around 12000 High Schools in Tamil Nadu. Roughly 8 lakh candidates for HSC and 10 Lakh candidates for SSLC appear for Examination every year. The Software helps the School authorities to login directly into the Portal and feed candidates information including uploading photograph of the candidate. This helps the Government Data Centre to quicken the process of validation of candidate's details including photograph quickly.

## 3. Mobile Based Road Monitoring System

This mobile application helps to monitor Road Works effectively. This application is integrated with Online Scheme Monitoring System. The users are Engineers at Block level who are provided with Mobile devices with AGPS facility. They can capture the status of Ongoing Road works and can upload the captured photo along with GPS Co-ordinates. The photos can be viewed on Google maps. The mobile application has been developed on Android platform.






## 4. Pre-Examination Monitoring System for O/o CoE, Anna University.

This web application enables the Controller of Examinations to effectively monitor the Non-Confidential examination related activities involving the O/o CoE and about 550+ Engg. Colleges




Following 'Pre-Examination' activities have been developed and implemented:

- Registering the Students for the semester examinations
- Capturing the periodical Course attendance details
- Capturing the periodical Internal Assessment marks
- Generating the Examination Hall Tickets for the eligible students
- Capturing the Examination Absentees Details

## 5. eDistrict – Revenue (http://edistrict.tn.gov.in/)




**SERVICES COVERED**

- No Graduate Certificate
- Deserted Women Certificate
- Income Certificate
- Community Certificate
- Nativity Certificate

**Implementation Status**

- Launched in Oct 2010
- 11.75+ lakh certificates applications have been filed till date.
- 10.36+ lakh certificates have been digitally signed and issued online.

### 6. e-Services for Transport (transport.tn.nic.in/transport/)




- An average of 80,000 Learner's License applications being filed online every Month
- An average of 21.000 Heavy Vehicle Driver's Training course attended certificates being issued online every month
- An average of 3,200 Hypothecation endorsement applications being filed online every Month.
- More than Rs. 120 Crores is collected through ePayment every month.

An average of 1.40 Lakhs New Vehicle Registration applications are being filed online every month out of which, 1.20 Lakhs New Vehicle's registration fee and Taxes are being paid every month through this facility. Provision has been made in the Portal to automatic reconciliation of payment transaction with Bank scrolls.

### 7. Government e-Procurement System (http://tntenders.gov.in)

GePNIC has been implemented in 26 States and Organisations across the country. Central Public Procurement Portal is being used for the last one year for ePublishing and eProcurement activities by various Central Govt Depts and PSU's. Periodical training programmes have been conducted at the Centre and in the States through the respective State NIC units for the officials of various Ministries / Departments/PSUs. The system has been customized to meet the requirement of DGS&D eProcurement. During the year, Govt of Sikkim, Defence PSUs such as Hindustan Ship Yard, Goa Shipyard and Midhani started adopting GePNIC System.

### 8. Tamil Nadu Textbooks Online (www.textbooksonline.tn.nic.in)

The entire textbooks for the school students of class 1 to Class 12 published by the School Education Department, Government of Tamilnadu are available in pdf format for the General public.




9. **Anytime/ Anywhere services of Government of Tamil Nadu (Land records)**

தமிழ் நாட்டிலுள்ள விவசாய நிலங்களின் நில உரிமை (பட்டா / சிட்டா) விவரங்கள் மற்றும் அ-பதிவேட்டின் படி நில விவரங்களை இங்கு காணலாம்.






**10. TN Government State Portal & CMS ([www.tn.gov.in](http://www.tn.gov.in))**

| | |
|---|---|
|  | • **Any Time, Any Where'** access to the information and services of the State Government at all levels from State Government to District Administration or Panchayat level for the Citizens and Business.<br><br>• **Consolidation of all the information** presently available at existing departmental websites & portals |

11. **SMS based monitoring system for Fair Price Shops of the Cooperative Department ([http://www.tncsc.tn.gov.in/html/pds.htm](http://www.tncsc.tn.gov.in/html/pds.htm))**

A web based system for collecting stock details and receipt details of PDS Commodities from the Fair Price Shops and godowns on a daily basis, for planning timely movement of stocks of PDS commodities.

An SMS based system has been developed for collecting stock details from FPSs & Godowns on a daily basis, for planning timely movement of stocks of PDS commodities. The online system will make the process of data collection, compilation & collation more efficient.

## Awards:

1. Web Ratna Award for the TN Govt. web site for comprehensive presence.
2. Excellence Award for Application of Geospatial Technology in e-Governance for the GIS project titled, 'Mainstreaming GIS in e-Governance through Web Services in Tamil Nadu'
3. Ministry of Minority Affairs received the SKOCH Gold award for Online Scholarship Management System on 18th September'2012 at New Delhi.

**Conclusion**

Various ICT support is being provided in the States / UTs by NIC. Citizen centric services are also being rendered electronically at the district level, such as Income Certificate, Caste Certificate, and Residence Certificate etc. along with other services like Scholarship portals, permits, passes, licenses to name a few. In executing all these activities, NIC has been given recognition in terms of awards and accolades in International as well as National levels.

Thus, NIC, a small program started by the external stimulus of an UNDP project, in the early 1970s, became fully functional in 1977 and since then has grown with tremendous momentum to become one of India's major S&T; organizations promoting informatics led development. This has helped to usher in the required transformation in government to ably meet the challenges of the new millennium.

# உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கணினி வழி வேளாண் விரிவாக்கம்

**முனைவர்.ந. ஆனந்தராஜா, முனைவர். இரா.பாவேந்தன், முனைவர். ச.கார்த்திகேயன், முனைவர்.கா. அ. பொன்னுசாமி**

இ-விரிவாக்க மையம், விரிவாக்க கல்வி இயக்ககம்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641 003

portal@tnau.ac.in

முன்னுரை

வளர்ந்து வரும் தற்போதைய தகவல் தொழில் நுட்ப துறையில், கணினி வழி சேவை முறை மூலம் இந்திய அரசும், மாநில அரசுகளும் பல துறைகளில், வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும், வேளாண்மை துறையில் நம்முடைய உழவர்களுக்கு தேவையான வேளாண் தொழில் நுட்பங்களும், வேளாண்சந்தைகள் பற்றிய தகவல்களும் கிடைக்கப் பெறுவது மிக அறிதாக உள்ளது. வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பத்தை இரண்டு வகையில் மதிப்பீடு செய்யலாம்;;; வேளாண் உற்பத்திக்கான நேரடி பங்களிப்புக்கு ஒரு கருவியாகவும் மற்றும் விவசாயிகள் தகவல் மற்றும் தரம் பற்றிய முடிவெடுக்க மேம்படுத்தப்பட்ட ஒரு மறைமுக கருவியாகவும் பயன்படுத்தலாம்;;. நம்பகமான ஆதாரங்கள் கொண்ட தகவல் உள்ளீடுகள் உழவர்களுக்கு சாpயான நேரத்தில்; தகுந்த முடிவுகள் எடுக்க தேவைப்படுகின்றன. தொலையுணர்தல் மற்றும் வலைதளங்கள் போன்ற தகவல் தொழில்நுட்பங்கள் வேளாண்மையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன. அதன் அடிப்படையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் இ-விறிவாக்க மையம் பல்வேறு வேளாண்சார்ந்த தகவல் தொழில்நுட்ப திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது, அவை பின்வருமாறு :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் இணையதளம்ஃ
(http://agritech.tnau.ac.in/index.html)

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் இணையதள சேவை 2009- ஆம் ஆண்டு அக்டோபர் 27-ம் தேதியன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த இணையதளம் வழியாக பயிர் சார்ந்த தொழில்நுட்பங்கள் மட்டுமல்லாது அனைத்து வகைத் தகவல்களையும் ஒரே இணையத்தளத்தில் கிடைக்குமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் கிட்டத்தட்ட 6.5 லட்சம்; பக்கங்கள் அடங்கிய தகவல்கள் உள்ளன. இந்த இணையதளத்தில் அனைத்து தகவல்களும், தமிழ், ஆங்கில மொழிகளில் வழங்கப்படுகின்றன.




சிறப்பம்சங்கள்

- வேளாண் விறிவாக்க பணியாளர்களுக்காக முதன் முறையாக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய வேளாண் வலைதளமாகும்.
- அனைத்து பயிர்களுக்கான சாகுபடி நுட்பங்கள், அறுவடை பின்சார் நுட்பங்கள், வேளாண் விற்பனை சார்ந்த தகவல்களைத் தொகுத்து தரப்பட்டுள்ளன.
- சிறப்பு தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி, துல்லியப் பண்ணையம், செம்மை கரும்பு சாகுபடி, நன்னெறி வேளாண் முறைகள், வல்லுநர் அமைப்பு, மாணவர் தொழில்நுட்பங்கள் பற்றிய விரிவான தகவல்களை காணொலி படங்களாகக் காணலாம்.
- வேளாண்சார்பு தொழில்களான பட்டுப்புழு வளர்ப்பு, கால்நடைப் பராமாpப்பு, மீன்வளம், தேனீ வளர்ப்பு பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- வேளாண், தோட்டக்கலைப் பயிர்களுக்கான விதை உற்பத்தி, விதை சுத்திகரிப்பு, விதை சேமிப்பு பற்றிய நுட்பங்கள், விதை கிராமத்திட்டம், மெகா விதைத்திட்டம், விதை இருப்பு விவரம் பற்றிய விரிவான தகவல்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

• தினசரி பத்திரிக்கைகளில் வரும் வேளாண் சார்ந்த செய்திகள், அரசு நலத்திட்டங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானிலை அறிக்கை ஆகியவை தினந்தோறும் சேகரிக்கப்பட்டு பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

• உழவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் உழவர்களின் வெற்றிக்கதைகள், மாறுபட்ட அனுபவங்கள் புகைப்படம், குறும்படங்களாக இந்த இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

• விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் அனைத்து விவசாய கூட்டமைப்புகள் பற்றிய தகவல்களும் இந்த இணையதளத்தில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

• வேளாண் சார் சுயதொழில் முனைவோர்களுக்கான புதிய முனைப்புத் திட்டங்கள், ஆலோசனைகள் தொகுத்து தரப்பட்டுள்ளன.

• வேளாண் தொடர்புடைய இதர சேவைகள் புரியும் மற்ற இணைய தளங்களுக்கான தொடர்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பங்களின் தொகுப்பாக உள்ள இந்த இணையதளத்தை நாள்தோறும், ஏறத்தாழ 1000 நபர்கள் 240 -290 இணையதள பக்கங்களை பார்வையிடுகின்றனர். தினமும் 400-500 நபர்கள் மின்னஞ்சல், குறுஞ்செய்தி மூலம் தொடர்பு கொண்டு தங்களுக்கு தேவையான தகவல்களையும், சந்தேகங்களையும் கேட்டறிகின்றனர். அவர்களுக்கு உடனடியாக தீர்வும் வேளாண் விஞ்ஞானிகள் மூலம் தரப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தொலைபேசி மூலமும் தங்களுக்கு தேவையான தகவல்களை பெறுகின்றனர்.

காணொலி கருத்தரங்கு தொழில்நுட்பம் (Video- Conferencing)

வீடியோ கான்பெரன்சிங் என்பது ஒருவருக்கொருவர் நோPடையாக முகம் பார்த்து பேசுவது போல் தகவல்களைப் பாPமாறிக்கொள்ளும் ஒரு புதிய தொழில்நுட்ப முறையாகும். இந்த தொழில்நுட்பம் இ-விறிவாக்க மையத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு அக்டோபர் 27ம் தேதியன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த வீடியோ கான்பெரன்சிங் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 14 வேளாண் அறிவியல் நிலையங்கள், 37 வேளாண், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லு}hpகள் என 60 மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதன் வழியாக பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களுடனும், விஞ்ஞானிகளுடனும் விவசாயிகள், விறிவாக்க பணியாளர்கள் அந்தந்த மையங்கள் மூலமாக தொடர்பு கொண்டு தங்களுக்கு எழும் அறிவியல் பூர்வமான சந்தேகங்களை பகிர்ந்து கொள்ளலாம். http://vcon.tnau.ac.in என்ற இணையதள முகவரிக்கு சென்று வீடியோ கான்பெரன்சிங் பக்கத்திற்கு செல்லலாம்.



ஒவ்வொரு மையத்திலும் உயர்தர கணினிகள் இ-விறிவாக்க மையத்தால் வழங்கப்பட்டு 512 kbps என்ற வேகத்தில் வலைதள வசதி மூலம் இணைக்கப்-பட்டுள்ளன. இதன் வழியாக 60 மையங்களை ஒரே நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும். மேலும் இதன் மூலம் அனைத்து நிலையங்களுடன் இருவழி தகவல்களைப் படத்தொகுப்பின் (Power point) வழியாக பரிமாறிக்கொள்ளலாம். இந்த காணொலி கருத்தரங்கின்; பொழுது 24 வகை இணைப்படத் தொகுப்பு செய்யலாம். இவை அனைத்தையும் இ-விறிவாக்க வேளாண்மை மையம் ஒருங்கிணைத்து வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு வேளாண் வானிலை வலைதளம்



வேளாண் காலநிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பயிர் மேலாண்மை இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைத் துறையுடன் இணைந்து இத்திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழகத்தின் 31 மாவட்டங்களில் உள்ள 385 வட்டங்களில் தானியங்கி வானிலை நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் பத்திற்கும் மேற்பட்ட காலநிலை காரணிகளின் தகவல்கள் ஒரு மணிநேர இடைவெளியில் சேகரிக்கபட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் இந்த வானிலைக் காரணிகளை சிறிய, நடுத்தர, நீண்ட அளவிலான வானிலை முன்னறிவிப்பும் இந்த இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இத்தகவல்களைக் கொண்டு வேளாண் அலுவலர்கள் விவசாயிகளுக்கு வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகளை வழங்க முடியும்.

தினசரி சந்தை நிலவர சேவை

வேளாண் விளைபொருட்களில் குறிப்பாக காய்கறிகள்; பழங்களை உரிய நேரத்தில் விற்பனை செய்வது மிகவும் அவசியமானதாகும். இடைதரகர்களின் இடர்பாட்டினால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களைத் தகுந்த விலைக்கு விற்பனை செய்ய முடிவதில்லை. ஏனெனில், விவசாயிகளுக்கு ச ரியான சந்தை நிலவரம் பற்றிய விபரம் தெரியாததே காரணமாகும். சரியான சந்தை நிலத்திரத்தினை அறிவதன் மூலம் அறுவடை செய்த விளைபொருட்களை ஏற்ற சந்தைகளுக்கு அனுப்பி அதிக லாபத்தினை ஈட்ட முடியும். தற்பொழுது உள்ள தகவல் தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் தேவையான விவரங்களை உரிய நேரத்தில் பெறலாம்.

திருச்சி வேளாண் விற்பனை புலனாய்வு, வணிக மேம்பாட்டு மையத்தின் இ - வள பி ரிவு மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமும் இணைந்து எளிதில் அழுகி விடும் தன்மையுடைய விளைபொருட்களின் தினசரி சந்தை நிலவரத்தினை உ ரிய நேரத்தில் விவசாயிகளுக்கு இணையத்தளம் மூலம் தகவல்களை அளித்து வருகின்றன. எனவே விவசாயிகள் அறுவடை செய்த விளைபொருட்களை தக்க சந்தைகளுக்கு அனுப்பி அதிக லாபத்தினை ஈட்டமுடியும்.

முடிவுரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இ-விறிவாக்க மையம் பல்வேறு தகவல் தொடர்பான சாதனங்கள,;; தொழல்நுட்பங்களைப் பயன்படுத்தி, உழவர்களுக்கும,; விறிவாக்க அலுவலர்களுக்கும் இடையே உள்ள தகவல் ப ரிமாற்ற இடையூறுகளைக் களைந்து உழவர்களுக்கு தேவையான காலத்திற்கேற்ப தகவல்களை தாங்களாகவே நோரிடையாக பெற துணை புரிந்து, தகவல் தொழில்நுட்ப உலகத்தில் சாதனையை ஏற்படுத்தி கொண்டிருக்கிறது.

குறிப்புதவி


1. Emerging Issues in e-Agriculture. Policy Brief-March 2008, http://www.e-agriculture.org/fileadmin/uploads/documents/e-agr_PolicyBriefmarch 2008.pdf

2. Gelb,E and C.Parker ,2005. Is ICT Adoption for Agriculture Still an Important Issue? E-Book: ICT in Agriculture

3. Bernant , 2009. e- Agriculture an emerging field to help women fight poverty. http://bernant.wordpress.com/2009/09/12/%E2%80%98e-agriculture-an-emerging-field-to-help-women-fight-poverty%E2%80%99/. Accessed on 25 October, 2009

4. http://www.digitalgreen.org/ Accessed on 25 October, 2009

5. http://en.wikipedia.org/wiki/ICT_in_agriculture

# முகநூல் வருகையும் வலைப்பதிவு வளர்ச்சியில் தேக்கமும்

முனைவர் மு. இளங்கோவன், புதுச்சேரி
muelangovn@gmail.com

தமிழ் வளர்ச்சிக்கு இணையம் பல்வேறு வகைகளில் உதவியுள்ளது. இணைய அறிமுகத்தால் தமிழ் ஆர்வலர்கள் மிகுதியான படைப்புகளையும், நிகழ்ச்சிக் குறிப்புகளையும் வலைப்பதிவுகளில் பதிவுசெய்தனர். உலக அளவில் தமிழ்ச் செய்திகளின் பரவல் எளிதானது. இதனால் கூகுள் உள்ளிட்ட தேடுபொறிகளில் தமிழில் தேடுவோருக்குச் செய்திகள், படங்கள் உடனுக்குடன் கிடைத்துவருகின்றன. முகநூல் வருகைக்குப்பிறகு வலைப்பதிவு வளர்ச்சியில் ஒரு தேக்கநிலை இன்று காணப்படுகின்றது. முகநூல் வருகை வலைப்பதிவு வளர்ச்சியைப் பாதித்துள்ளது என்று இணைய ஆர்வலர்கள் சிலர் மதிப்பிடுகின்றனர். ஆனால் முகநூல் வளர்ந்துள்ளதே தவிர வலைப்பதிவு உருவாக்கி எழுதுபவர்கள் தொடர்ந்து எழுதியவண்ணம் உள்ளனர் என்று மறுப்புரை கூறுபவரும் உண்டு. இவ்விரண்டு கருத்துகளில் உள்ள வன்மை மென்மைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ் வலைப்பதிவுகளின் வளர்ச்சியால் தமிழ்ச்சமூகத்திற்கு அமைந்த பயன்கள், வலைப்பதிவு உலகில் தொடர்ந்து எழுதும் படைப்பாளிகளின் படைப்பு உள்ளடக்கம், அதற்கு அமையும் வரவேற்பு குறித்தும் இக்கட்டுரை ஆராய்கின்றது. அதுபோல் முகநூல் வளர்ச்சி, தமிழில் முகநூல் எழுதுவோரின் நோக்கம், முகநூல் படைப்புகளின் உள்ளடக்கம், முகநூலைச் சரியாகப் பயன்படுத்தும் படைப்பாளிகள், முகநூலில் உள்ள செய்திகளின் உள்ளடக்கம், மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் முகநூலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த செய்திகளையும் இக்கட்டுரை அறிமுகம் செய்கின்றது.

## முகநூல் வருகையும் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றமையும்

பேசுபுக்கை(Face Book) முகநூல் எனத் தமிழ்ப்படுத்தி வழங்குவர். இதனை உருவாக்கியவர் மார்க் சுக்கர்பெர்க் (Mark Zuckerberg). அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ஒயிட் பிளைன்சில் பிறந்தவர் (14.05.1984). பள்ளிப்பருவத்து மாணவராக இருக்கும்பொழுதே இவர் கணினி நிரல்களை உருவாக்குவதில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் ஹார்வர்டு பல்கலைக்கழக மாணவராக இருந்தபொழுது, தம் இருபது வயது மாணவப்பருவத்தில் இதனை உருவாக்கினார். பல்வேறு வளர்ச்சிகளையும், வசதிகளையும் பெற்றுள்ள முகநூல் இணையதளம் பல்வேறு எதிர்ப்புகளையும், வழக்குகளையும் சந்தித்து வளர்ந்துள்ளது.

இன்று உலகில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இணையதளங்களில் முகநூல் இரண்டாம் இடத்தில் இருப்பதை அலெக்சாவின் பட்டியல் உறுதிப்படுத்துகின்றது (31.08.2014). இந்தத் தளத்தின் இன்றைய சந்தை மதிப்புப் பல்லாயிரம் கோடியாகும். இந்த இணையதளத்தை உலகின் பெரும்பாலான மக்கள் பயன்படுத்துகின்றனர். 18 வயதுக்கு உட்பட்டவர்கள் முகநூலைப் பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடுகள் இருந்தன. இன்று இந்தக் கட்டுப்பாடுகள் நீங்கியதால் முகநூலை மாணவர்களும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர்.

சீனா, வியட்நாம், ஈரான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான், சிரியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் முகநூல் இணையதளம் இசுலாமிய மதத்துக்கு எதிரானது எனவும் மத வேற்றுமையை ஏற்படுத்தக்கூடியது எனவும் குறிப்பிட்டுத் தடை செய்துள்ளனர். இங்கிலாந்து நாட்டின் நிறுவனங்களில் வேலை நேரத்தில் முகநூல் இணையதளம் பார்ப்பதற்குப் பாதிக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தடை விதித்துள்ளன. முகநூல் பயன்படுத்துபவர்களில் எட்டுக்கோடிப் பேர் போலியான பெயர்களைக் கொடுத்துப் பயன்படுத்துகின்றனர் என்று ஒரு புள்ளிவிவரம் குறிப்பிடுகின்றது.

பொழுதுபோக்கு என்ற நிலையைக் கடந்து செய்திகளைப் பரிமாறிக்கொள்வதற்கும், பிரிந்தவர்கள் இணைவதற்கும், ஒத்த கருத்துடையவர்கள் இணைந்து செயல்படுவதற்கும், வணிகத்தை வளப்படுத்தவும், தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், அன்றைய நடப்புகளை நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் உடனுக்குடன் தெரிவிப்பதிற்கும் மிக எளிதாக இருப்பதால் அனைத்துத்தரப்பு மக்களாலும் முகநூல் இணையதளம் சிறப்பாகக் பயன்படுத்தப்படுகின்றது. “த சோசியல் நெட்வொர்க்” என்ற பெயரில் முகநூல் குறித்த திரைப்படம் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

முகநூலில் கட்டுரையாகச் செய்திகளை விளக்குவதைவிட ஒரு படத்தின் வழியாகவும், ஒலி, ஒளிக் காட்சிகள் வழியாகவும் எளிதில் விளக்கமுடியும். முகநூலைப் பயன்படுத்துவதற்கு எளிதாக இருப்பதாலும், இதில் இணைந்துள்ளவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதாலும் முகநூல் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. முகநூலில் செய்திகள் வெளிவருவதால் நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள் உடனுக்குடன் காண்பதற்கும், கருத்துத் தெரிவிப்பதற்கும், பரப்புவதற்கும் வாய்ப்பாக இருப்பதால் முகநூல் இணையதளம் எல்லோராலும் விரும்பப்படுகின்றது. முகநூலில் உரையாடுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. முகநூலில் பல்வேறு குழுக்கள் உள்ளன. சிம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்கள் முகநூல் குழுவினை உருவாக்கிச் சிறப்பாகச் செயல்படுகின்றனர்.

**தமிழ் முகநூல் உள்ளடக்கங்கள்**

தமிழ் முகநூல் உள்ளடக்கங்களைப் பார்க்கும்பொழுது ஒரு சிலர் தரமான கட்டுரைகளை இத்தளத்தில் வழங்கினாலும் பெரும்பாலும் நடந்த – நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றனர். நூல்வெளியீடுகள், சந்திப்புகள், கண்ட காட்சிகள், பயண அனுபவங்கள், அறிக்கைகள் வெளியிடுவது, பொழுதுபோக்குச் செய்திகளைத் தருவது மிகுதியாக உள்ளன. பிறந்தநாள் செய்திகள், இலக்கிய நிகழ்வுகள், புத்தகக் கண்காட்சிகள் பற்றிய செய்திகளும், படங்களும் முகநூலில் இடம்பிடிக்கின்றன.

தங்களுக்குப் பிடித்தவர்களைப் பாராட்டுவதும், பிடிக்காதவர்களைப் பற்றியும் அவர்களின் அந்தரங்கங்களைப் பற்றியும் எழுதும் போக்கும் முகநூலில் உள்ளன. குழந்தைகளின் காதுகுத்திப் படங்கள், பிள்ளைகளின் பிறந்தநாள் கொண்டாட்டப் படங்களைப் பதிவதில் பெரும்பாலனவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். மனைவி மக்களுடன் சுற்றுலா செல்வது, அருவிகளில் நீராடுவது ஆகியவற்றை ஆர்வமுடன் சிலர் பதிகின்றனர். கண்ட காட்சிகள், வியப்புக்குரிய வீடியோ பதிவுகள் உடனுக்குடன் முகநூலின் வழியாகப் பரவிச் செல்வாக்குப் பெற்றுவிடுகின்றன. அரசியல் துறையில் இருப்பவர்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை முகநூலில் பதிந்து தங்கள் இருப்பை உறுதிப்படுத்துகின்றனர். ஆன்மீகச் செய்திகள், பகுத்தறிவுச்செய்திகள் தமிழ் முகநூல் உள்ளடக்கங்களாக அமைகின்றன. பெண்களின் படங்கள், குழந்தைகளின் படங்களை முகநூலில் பதிவதைத் தவிர்க்கும்படி பலர் கூறினாலும் அதனைப் பொருட்படுத்தாமல் வெளியிட்டு வருவதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காவல்துறையினர் முகநூல் வழியாக முறையீடுகளைக் கவனித்து உரிய நடவடிக்கை எடுப்பதும் நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு அரசியல் தலைவரும், எழுத்தாளர்களும் தங்களுக்கு என முகநூல் பக்கங்களைத் திறந்து தங்கள் பணிகளை மக்களுடன் பகிர்ந்துகொள்கின்றனர். தேர்தல் காலங்களில் முகநூல் பெரும் செல்வாக்குப் பெற்றுவிடுகின்றது. தங்கள் எண்ணங்களை முகநூலில் பகிர்ந்துகொள்வதை உயர்வாக நினைக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் முகநூலில் செய்திகளைப் பகிர்ந்துகொண்டு அரசின் - நீதிமன்றத்தின் கவனத்தை இழுத்து உரிய நிவாரணம் பெறுவது முகநூலில் நிகழ்கின்றது. இவ்வாறு அன்றாட நடப்புச் செய்திகள் முதல் பன்னாட்டு அரசியல் வரை முகநூலில் உரையாடலுக்கு உட்படுவதால் பல தரப்பு மக்களும் முகநூலில் ஊடாடி வாழ்கின்றனர்.

**தமிழ் வலைப்பதிவுகள்**

வலைப்பதிவு என்பது அடிகடிப் புதுப்பிக்கவும், கடைசியாக வெளியிட்ட செய்தி முதலில் தெரிவதற்குமான இணையதளமாகும். இதனைப் பிளாக் என்று குறிப்பர். தொடக்கத்தில் வெப்லாக் என்றே இதனைக் குறித்தனர். WebLog என்ற பெயர் முதன் முதலில் 17-12-1997 இல் Jorn Barger' என்பவரால் பயன்படுத்தப்பட்டது. அதன் பிறகு இந்தப் பெயர் பிரிக்கப்பட்டு We bLog என்று பயன்படுத்தியவர் Peter Merholz ஆவார்(1999). ஆனால் 1994 முதல் பலரும் வலைப்பதிவை எழுதத்தொடங்கிவிட்டனர்.

1996 இல் 'Xanga என்ற இணையதளம் வலைப்பதிவுச் சேவையைத் தொடங்கியது. இதே காலப்பகுதியில் bloger.com என்ற நிறுவனம் இந்தச் சேவையைச் சிறப்பாகச் செய்துவந்தது. இந்த நிறுவனத்தைக் கூகுள் நிறுவனம் 2003 இல் விலைக்கு வாங்கியது. தமிழில் முதல் வலைப்பதிவு செய்தவர் கார்த்திகேயன் இராமசாமி எனவும் இவர் 2003 சனவரி 1 இல் முதல் வலைப்பதிவு செய்தார் எனவும் அறியமுடிகின்றது. இவ்வாறு வலைப்பதிவு செய்தவர்களின் பதிவுகளை ஒன்றிணைத்துக்காட்டத் தமிழ்மணம் என்ற திரட்டியை முதலில் உருவாக்கியவர் காசி ஆறுமுகம். தமிழ்மணம் திரட்டி 2004 ஆகத்து மாதம் பயன்பாட்டுக்கு வந்தது. இவர் உருவாக்கிய தமிழ்மணத்தில் 11777 பேர் (31.08.2014) இணைந்து வலைப்பதிவுகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்கின்றனர். தமிழ் வலைப்பதிவுகளைத் திரட்டிக்காட்டும் முயற்சியில் தேன்கூடு, தமிழ்வெளி, திரட்டி உள்ளிட்ட திரட்டிகள் தோன்றின.

தமிழ் வலைப்பதிவுகள் தொடக்கத்தில் தொழில்நுட்ப ஆர்வமும் தமிழ் ஆர்வமும் உடையவர்களால் தொடங்கப்பட்டன. இணையதளங்களுக்கு நிகரான சேவையை வலைப்பதிவுகளால் வழங்கமுடிந்ததால் வலைப்பதிவு தொடங்குவது ஓர் இயக்கமாகவே தமிழகத்தில் நிகழ்த்தப்பட்டது. தமிழ் இணையப்பயிலரங்குகள் வழியாக வலைப்பதிவுகள் மக்களுக்கும் மாணவர்களுக்கும் அறிமுகமாயின. இதனால் தங்கள் பங்களிப்புகளை வழங்கத் தன்னார்வலர்கள் முன்வந்தனர்.

தமிழ் வலைப்பதிவு செய்தவர்கள் தங்கள் பதிவுகளை உடனுக்குடன் இற்றைப்படுத்தினர். இலக்கியம், அரசியல், மொழிபெயர்ப்பு, சமூகச் செயல்பாடுகளை விளக்கும் வகையில் தமிழ் வலைப்பதிவுகள் இருந்தன. அந்த அந்தத் துறை சார்ந்தவர்கள் தத்தம் துறைசார்ந்த வலைப்பதிவுகளை விரும்பிப்படிப்பதில் நாட்டம் செலுத்தினர். அதேபோல் தமிழ் வலைப்பதிவர்களிடையே நட்பும் தொடர்பும் பெருகி வலைப்பதிவு வழியாகத் தமிழ் மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தனர். வலைப்பதிவுத் தொழில்நுட்பம் அறிய நினைத்தவர்களுக்குச் சிறப்பாக அறிமுகம் அமைந்தால் அவர்கள் தொடர்ந்து பங்களிப்புகளைச் செய்ய முன்வந்துவிடுகின்றனர். அவ்வாறு

வந்தவர்களுள் பத்ரி. யுவகிருஷ்ணா, மதிமாறன், புதுக்கோட்டை முத்துநிலவன், கரந்தை ஜெயகுமார். முனைவர் ஜம்புலிங்கம், மானிடள் என்ற பெயரில் எழுதும் பேராசிரியர் மு. பழனியப்பன் முதலியவர்கள் தொடர்ந்து தமிழுக்கும் சமூகத்திற்கும் ஆக்கமான பதிவுகளை வழங்கிவருகின்றனர்.

சிலரின் வலைப்பதிவுகள் தொழில் நுட்பத்துக்கு முதன்மையளித்து உள்ளடக்கங்களுக்கு இரண்டாம் இடம் தரும் போக்கையும் தமிழ் வலைப்பதிவுலகில் பார்க்கமுடிகின்றது. தமிழ் வலைப்பதிவர்களில் சிலர் தொடர்ச்சியாகவும், சிலர் இடைவெளியிட்டும் பங்களிப்புகளை வழங்கிவருகின்றனர்.

வலைப்பதிவுகளில் கட்டுரை அமைப்பில் செய்திகள் படங்களுடன் வெளிவந்தசூழலில் முகநூல் தமிழ் மக்களுக்கு அறிமுகமானதும் மிக எளிய நுட்பங்களைப் பயன்படுத்தி நடப்பியலைத் தர முடிவதால் வலைப்பதிவர்கள் தங்கள் செய்திகளை முகநூலிலும் வெளியிட முனைந்தனர். நீண்ட நேரம் தமிழ்த்தட்டச்சுச் செய்வது பலருக்குத் தெரியாததால் ஆங்கிலத்தில் தட்டச்சிட்டோ ஓரிரு சொற்களைத் தமிழில் தட்டச்சிட்டோ படங்களின் துணையுடன் முகநூலில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. விருப்ப வசதி, பகிரும் வசதி, கருத்துரைக்கும் வசதி, இணைப்பு வசதி, தடுக்கும் வசதி, குழுவாக இணைந்து இயங்கும் வசதி, செய்தி அனுப்பும் வசதி என்று பலவகையான வசதிகள் முகநூலில் இருப்பதால் அனைவரும் முகநூலில் இணைவதை ஒரு சமூக மரியாதையாக நினைக்கின்றனர்.

செய்திகள் என்பவை கட்டுரைகள் மட்டுமல்ல. கட்டுரைகளில் சொல்லும் செய்திகளைப் படங்களாலும், ஒலி, ஒளிக்காட்சிகளாலும் விளக்கமுடியும், வேகமாக மக்களுக்குக் கொண்டுசெல்லமுடியும் என்ற நிலை ஏற்பட்டதால் முகநூல் வளர்ச்சி தொய்வில்லாமல் வேகமாகச் செல்கின்றது. வலைப்பதிவு என்பது செய்திகளைத் திரட்டுவது அல்லது சிந்தித்து எழுதுவது, தட்டச்சிடுவது, படங்களை இணைத்து வெளியிடுவது என்று பல பணிகள் அடங்கிய கூட்டுப்பணியாக இருக்கும். எழுதுவதற்கும், தேவையான அளவில் படம் வழங்குவதற்கும், முழுச்செய்தியையும் விரிவாகப் படிப்பதற்கும் காலத் தேவை மிகுதியாக எடுத்துக்கொள்ளும். எனவே வலைப்பதிவு செய்வதைவிட முகநூலில் எழுதுவது செல்வாக்குப் பெற்று வருகின்றது.

முகநூலில் பதிவிடும் செய்திகள் கூகுள் உள்ளிட்ட தேடுபொறிகளில் தேடும்பொழுது தெரிவதைக் காட்டிலும் வலைப்பதிவில் வெளியிடப்படும் செய்திகளே தேடுவோருக்கு முதலில் தெரியும். இந்த நுட்பங்களை உணர்ந்தவர்கள் தொடர்ந்து வலைப்பதிவில் எழுதுவதை இடைவிடாமல் செய்துவருகின்றனர். ஆற்று வெள்ளமாகப் பாய்ந்துசெல்லும் வளர்ச்சி முகநூலில் தெரிகின்றது. அமைதியான நதியின் போக்கு வலைப்பதிவுகளில் காணப்படுகின்றது.

# தமிழ் இணையம், தமிழ்வலைப்பூக்கள், விக்கிபீடியா, சமூக இணையதளங்கள்

**இராஜ. தியாகராஜன்**

எண்:26 நேரு நகர்,புதுச்சேரி – 605 011.

WWW.TYAGAS.BLOGSPOT.COM. WWW.TYAGAS.WORDPRESS.COM

WWW.PUDHUCHERRY.COM, WWW.FACEBOOK.COM/RAJA.TYAGARAJAN

புதுவை அரசில் நானொரு அரசிதழ் அலுவலன் (Gazetted Officer). தமிழிலக்கியத்தில் எல்லாமே எனக்குப் பிடித்தது என்றாலும் என்னை இழுத்து அரவணைத்தது செய்யுளோத்துகள் என்கிற மரபியற் கவிதைதான். கூடவே நானாகத் தேடிக் கொண்ட ஒரு பொழுதுபோக்கு கணினி ஆர்வம். எனவேதான் இணையத்தில் தமிழென்பது என்னை மிகவும் இழுத்தணைத்துக் கொண்டது. தேமதுரத் தமிழ்மொழியில், இணையத்தமிழ், தனித்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், செந்தமிழ், ஒண்டமிழ், தூயதமிழ், கொடுந்தமிழ், பழந்தமிழென தனித்தனியாகப் பிரித்துச் சொல்ல ஏதுவாக பிரிவுகள் ஏதுமில்லை. எல்லாமே செம்மொழியாம் நம்மொழிதான். வழக்கிலே பலவாறாக பயன்பாட்டாளர்கள் பிரித்துப் பேசுகின்றனர்; வாழ்த்தி மகிழ்கின்றனர் அவ்வளவே! தனித்தமிழ், தூயதமிழ், கொடுந்தமிழ், பழந்தமிழ் இவ்வனைத்தும் தமிழன்பர்கள் அனைவரும், பலநிலைகளில் இலக்கண, இலக்கியத் தூய்மையாக அறிந்திருக்கக் கூடியவையே. ஆனால் இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் இணையத் தமிழென்று புதிதாக கிளம்பியிருப்பது எது?

இதன் விளக்கமாக முதலில் ஒரு முன்னுரை: இதுவரை நாம் எழுதுகோல், தீந்தா (எழுது மசி), தாள், அச்சு இவற்றின் துணையோடு, நாள்/ வார/ திங்கள்/ ஆண்டு இதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும் தான் கன்னல் தமிழைச் சுவைத்தோம். இன்றோ கணினியும், இணையத் தொடர்பும், இணையதளங்களும், ஒருங்குறி எழுத்துச் சீர்மையும் (யூனிகோடு), வலைப் பூக்கள் எனப்படும் வலைப் பதிவுகளும் கோலோச்சும் காலகட்டத்தில், இணையத்திலும் நமது தங்கத் தமிழ் கைவீசி, வெற்றிநடை போடுகிறதென்றால் அது மிகையான சொல்லல்ல!

கிட்டத்தட்ட 1998 தொடங்கி, 2003 வரையில் தமிழ் ஒருங்குறி எழுத்துரு கொண்டு உருவாக்கப்பட்ட வலை தளங்கள், வலைப் பூக்கள், சமூக இணைய தளங்கள் இவை கையளவே இருந்த கால கட்டத்தில், திரு **முகுந்தராஜ்** அவர்களின் ஏகலப்பை கொண்டு இணையத்தில் உழுது கொண்டிருந்தவர்கள் கையளவே இருந்தனர். யாகூ, முதலான அமைப்புகளில் கூட தமிழ் ஒருங்குறி எழுத்துருக்களை கையாள்வதில் நிறைய சிக்கல்கள் வந்தன. ஒன்று எண்களாக வரும் அல்லது குறியீடுகளாக வந்து தொல்லைப்படுத்தும். எனவே திஸ்கி எழுத்துச் சீர்மையை முதலில் யாகூவில் பயன்படுத்தினோம்.

மரத்தடி, சந்தவசந்தம், மரபிலக்கியம், ராயர் காபி கிளப், அகத்தியர் முதலான யாகூ மின்மடற் குழுமங்களில் அன்றைக்கு திஸ்கி எழுத்துருவே கோலோச்சியது. ஆனால் நம் செந்தமிழை எந்தவிதமான துன்பமும் இன்றி, எழுத்துருக்களை இணையிறக்கம் செய்து கணினியில் பதிந்து கொள்ளாமல் வலையுலாவும் தமிழர் ஒருவர் எளிதாக ஒரு நாளிதழ், வார இதழைப் போல படிப்பதென்பது கடினமானதாகவே இருந்தது. எனவே தான் 2003இல் என்னுடைய தளமான www.pudhucherry.com என்ற தளத்தில் தமிழ் ஒருங்குறி தானியங்கி எழுத்துருத் தொழில் நுட்பத்தினை மைக்ரோசாஃப்ட் வழங்கிய இலவய மென்பொருள் ஒன்றினைப் பயன்படுத்தி உருவாக்கினேன். ஆனால், அதையும் இணைய நாடோடி (Internet-Explorer), நெட்ஸ்கேப் நாவிகேட்டர்-8 (Netscape Navigator-8) போன்ற வலையுலாவிகளே ஒப்புக் கொண்டன. மற்ற வலையுலாவிகளில் தானியங்கி தமிழ் ஒருங்குறி எழுத்துருவால் உருவாக்கப்பட்ட என்னுடைய இணைய தளத்தினைக் காண்பதற்கு எழுத்துருவை பதிவிறக்கத் தான் வேண்டியிருந்தது.

2003ஆம் ஆண்டில் உருவான www.pudhucherry.com என்ற தளத்தில் பயன்படுத்தப்பட்ட தானியங்கு எழுத்துரு தொழில் நுட்பம், இன்றைய காலகட்டத்தில் அவசியமில்லாத ஒன்றாக இருப்பினும், முதன்முதலில் 2003ஆம் ஆண்டிலேயே தமிழ் ஒருங்குறி எழுத்துருவை வலையுலாவும் அன்பர்க்குக் காட்டியதால், அந்தத் தளத்திலிருந்து அதனை எடுக்கவில்லை. மேலும் கணினி, மடிக்கணினி ஆகியவற்றில் மட்டுமே வலையுலவிய தமிழன்பர்கள், இற்றைக்குச் செல்லிடப்பேசி, ஐ-பேட், குறிப்பேடு முதலான மின்னணுக் கருவிகளின் வாயிலாகவும் வலைவலம் வருகிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய தளம் செந்தமிழில் ஒளிர வேண்டுமென்ற பேரவாவும் இதற்கு ஒரு கரணீயம்.

இன்றைய செல்லிடபேசிகளின் ஆந்திராயிட் இயங்குதளத்தில் தமிழை காட்டுதற்கு, தானியங்கு எழுத்துருக்களால் என்னுடைய இணையதளம் ஒரு வெள்ளாட்ட தளமாகவும் இருக்கின்றது ஆனால் இற்றைக்கு கூகுள் தொடங்கி, யாகூ, மைக்ரோசாஃப்ட், வரிசையில், எத்தனைத் தமிழ் ஒருங்குறித் இணைய தளங்கள்! ஒருங்குறி பயன்பாட்டுக்கு வந்த பின்னர் தேடல் கூட தேமதுரத் தமிழில்! அன்றைக்குத் தமிழார்வலர்கள் பட்ட துன்பங்கள் இல்லாமல், இருக்கின்ற எல்லா வலையுலாவிகளும், தேடு பொறிகளும், குழுமங்களும், மின்மடல்களும், இயங்குதளங்களும் (Operating Systems), தமிழ் ஒருங்குறி எழுத்துருவை எந்தவித துன்பமும் இன்றி இயல்பாக கண்முன்னர் கொண்டு வருகின்றன. காணவே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஆனால் இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகமே. ஏனெனில் தமிழார்வல முன்னோடிகள் கூடி ஏற்படுத்திய இன்றைய தமிழ் ஒருங்குறித் தரமென்பது (Unicode Standard) 1988ஆம் ஆண்டில் பயனான, அதிகம் வளைக்கவியலாத, கட்டுபாடுள்ள எட்டு பிட்டு இஸ்கி தரத்தை (8 Bit ISCII Standard) அடிப்படையாகக் கொண்டது. கிட்டத்தட்ட ஆயிரக் கணக்கில் எழுத்துருக்கள் கொண்ட எளிதாக்கப்பட்ட சீனமொழிக்கு கூட (Simplified

Chinese) ஒருங்குறி அமைப்பை அணுகி அதிக இடங்கள் கிடைத்திருக்கும் போதில், தமிழுக்கு இன்னும் கூடுதலாக இடங்களை பெறுவதற்கு நம்முடைய அரசுகள் அவசியம் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். தற்போது பல தன்னார்வல அமைப்புகள், இலக்கிய கழகங்கள், தமிழார்வலர்கள் ஆகியோர், உகர, உகார தமிழ் உயிர்மெய்களைப் பற்றி பல்வேறு கருத்தாடல்களில் ஈடுபடுவதைக் காண்கிறேன்.

இன்றிருக்கும் இடவரிசை, குறியீடு, அமைப்பு இவை மாறாமல், உகர, ஊகார மெய்களைக் கூட எளிதில் தமிழ் குறியீட்டு அட்டவணையில் இடம் பெற வைக்க முடியும். இது பற்றிய என்னுடைய கருத்தினை இங்கே உங்கள் முன்னர் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். ஒருங்குறி அமைப்பானது (Unicode Consortium), ஒருங்குறி குறியீட்டு அட்டவணையில் (Unicode Code Chart), எதிர்காலத்திற்கான தற்போதைய 56 வெற்றிடங்களையும் சேர்த்து, தமிழ் எழுத்துருக்களுக்கு அளித்த இடங்கள் U+0B80 முதல் U+0BFF வரை மொத்தம் 128. இதில் ஒருங்குறி அமைப்பின் கோட்பாடுகளின்படி வகைப்படுத்தும் வரிசையென்பது குறியீட்டு அட்டவணையில் எழுத்துரு அமைவுறுதலால் கையாளப்படுவதில்லை (Sorting order cannot be handled by character placement in a code chart) என்பதால், இற்றைக்குப் பல்வேறு தமிழார்வல அமைப்புகள் தங்களிடையே கருத்தாடுகின்ற, தமிழின் மொத்த உகர(18), ஊகார(18) உயிர்மெய்களுடன் (கு,கூ முதல் னு,னூ வரை), மாறுபட்ட அமைப்புடைய ,டிகர டீகார (டி, டீ ஆகிய 2) உயிர்மெய்கள் சேர்த்து, 38 (18+18+2) எழுத்துருக்களை மேற்சொன்ன 56 வெற்றிடங்களில், இருக்கின்ற குறியீடு வரிசை, அமைப்பு மாறாமல் இணைப்பதால், உகர ஊகார உயிர்மெய்களை அப்படியே பயன்படுத்த இயலும்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், தமிழின் உயிர்மெய் எழுத்துகளின் குறியீடுகளுக்கான பயனை, தனிப் பயன் எழுத்துரு (Private use Characters) இடங்களைப் பெறுவதன் வாயிலாகவும் பெறலாம் என்றிருப்பினும், உள்ளீட்டுச் செயல்முறைக்கு (internal processing) இஃது அதிகம் உதவுமேயன்றி, பொதுப் பயன் நிரலிகள் (General Purpose Programmes) அவற்றை அப்படியே உள்வாங்கி வெளிக்காட்டுமா என்பது கேள்விக்குறியே!

தமிழில் இணையதளங்களும், வலைக்குடில்கள் என்று கலைநயத்தோடு அழைக்கப்படும் தமிழ் வலைப் பூக்களும்(Tamil Web-blogs), செய்திப் பலகைகளும், பல்லாயிரக் கணக்கில் உருவாக்கப் பட்டு, உலகின் பல மூலைகளிலும் உள்ளவர்கள் தமது தமிழாக்கத் திறமைகளை வெளிக் கொணரத் தலைப்பட்டுள்ளனர். இதழ்ச் சுற்றும், புத்தக வெளியீடும், ஒருவரது ஆக்கங்களை ஒரு குறிப்பிட்ட எல்லை வரையிலும் தான் வாசகர்களின் பார்வைக்குக் கொண்டு சொல்ல முடியும். ஆனால் இணைய இணைப்பும், தரமான கணினியும் வைத்திருந்தால் போதும், எவரும் தனி/குழும மின்மடல்கள் வழியாக இருக்கின்ற இருக்கையிலிருந்து கொண்டே, தமது படைப்புகளை இணைய தளங்களுக்கு அனுப்பி

பன்னாட்டவரும் காணச் செய்ய இயலும். அது போலவே அனைத்து நாட்டின் இணையத் தமிழ் அன்பர்களின் ஆக்கங்களை படித்து இன்புறவும் இயலும்.

வெறும் நூறாண்டுக்கு முன்னர் பதிப்பித்த படைப்புகள் கூட இன்று படி கிடைக்காமல் அல்லாடுகிறோம். நானே இன்று ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் யாப்பருங்கலக் காரிகை உரையின் 1940 ஆம் ஆண்டின் பதிப்பினைத் தேடித்தேடி அலுத்துப் போனேன். தேசிகமாலையெனும் நூல் போன இடந் தெரியவில்லை. யாப்பருங்கலக் காரிகை விருத்தியின் பதிப்போ மிகக் குறைந்த அளவிலேயே நூலகங்களில் இருப்பதாகக் கேள்வி. ஆனால் இணையத்தில் வெளியாகும் படைப்புகள் காலத்தால் அழியாத காவியமாக நிற்கக் கூடியவை, ஏனெனில் இணைய இதழ்களின் பின்னோக்கிய பதிப்புகள் சேமிக்கப்படுவது குறுவட்டுகளில் (Compact Disc), வன்தட்டுகளில் (Hard Disc).

மதுரைத் திட்டம் (Madurai Project), தமிழ் இணைய கல்விக் கழக இணையதளம் (Tamil Virtual University), தமிழ் மரபு அறக்கட்டளை (Tamil Virtual Foundation) ஆகியவற்றில் இன்றிருக்கும் அனைத்து சங்க இலக்கியங்களும், 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தோன்றிய பல இலக்கியங்களும், 15 ஆம் நூற்றாண்டிற்கு பின் வந்த பெரும்பான்மை இலக்கியங்களும், இன்னும் இன்றைய 20ஆம் நூற்றாண்டு வெளியான நிறைய இலக்கியங்களும் வலையேற்றம் செய்யப்பட்டு, கடற்கோள், நெருப்பு, நிலநடுக்கம், ஆழிப் பேரலை இவையேதும் அண்ட முடியாத வடிவத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளன.

ஆனால் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பல நூல்கள், அச்சிலே வெளிவந்து பல ஆண்டுகள் கடந்த நூல்கள், ஆகியவற்றை இணையத் தமிழார்வலர்கள் அனைவரும் ஒர் அமைப்பாக ஒன்று கூடி, தட்டச்சு செய்து எண்ணியல் வடிவிலே வலையேற்றம் செய்தல், இன்றைக்கு நம்மனைவரின், குறிப்பாக இளையோரின், இன்றியமையாத கடமை என்று இங்கே உங்கள் முன்னர் பதிவு செய்ய விரும்புகிறேன். நானும் சில நூல்களைத் தட்டச்சு செய்து, **மதுரைத் திட்டம்** (Madurai Project), **தமிழ் மரபியல் தளம்** (Tamil Heritage) முதலான தளங்களில் வலையேற்றி இருக்கிறேன்.

மேலும் இன்று ஒவ்வோரு இணைய தளமும் ஒவ்வோரு எழுத்துருவினை பயன்படுத்தி தளத்தினை உருவாக்கும் நிலை மாறி, அனைவரும் ஒரே வகையில் யூனிகோட் எழுத்துருக்களைப் பயன்படுத்தும் நிலைக்கு வந்துவிட்ட படியால், இன்று தேடு தளங்களில் தமிழ் எழுத்துக்களை உள்ளீடு செய்தே பக்கங்களை, விவரங்களை, தளங்களை தேடும் வசதியினை அடைந்திருக்கிறோம். இத்துடன் கூடுதல் விவரமாக, இன்று மரபிலக்கியத்தினை போற்றி வளர்க்கும், யாகூ குழுமங்களும், கூகுள் குழுமங்களும், கிறீச்சான் (Twitter), முகநூல் (Facebook) முதலான இணையதளங்களும், கிறீச்சான், சமூக அமைப்புகளும் தமிழை அழகுற எடுத்துக் காட்டுகின்றன. எனவே தமிழன்பர்கள் முகநூல், கிறீச்சான் தாண்டி, தமிழின்

மேன்மைக்காக, தமிழ் விக்கிபீடியா, மதுரைத் திட்டம், தமிழ் மரபியல் தளங்களிலும் மிகுந்த அளவில் பங்கு பற்றுதல் வேண்டும்.

இணையத்தில் வளர்வது வெறும் உரைநடை, புதுக்கவிதை, கட்டுரைகள், கதைகள் மட்டுமல்ல, மரபிலக்கியப்படி எழுதப்படும் தமிழ்ப்பாக்களும்தான். கடைசியாக, இன்றைய காலகட்டத்தில், சுற்றுசூழலைப் பாதுக்காக்க ஏதுவாக மரங்களின் பாதுகாவலனாகவும் இணைய இலக்கியம் செயல்படுகிறது. எப்படியெனில், மடலுக்கும், நாளிதழ்களுக்கும், தாளுக்கும், தீந்தாவுக்கும் வேலையில்லாமலேயே தமிழ் வளர்கிறதே!

## Comparison of the Internet usage patterns, E – Book reading habit in Tamil and Perceived barriers for it among Arts and Science College Students in a Rural and an Urban City in Tamilnadu during 2014


**Dr. Semmal**,
Associate Professor, Physiology, Sri Ramachandra University, Chennai
**Dr. Apitha Sabapathy**,
Head - Department of Tamil, MGR Janaki Arts & Science College, Chennai
**S. Kathirvel**,
Corporate trainer, past zonal President (JCI Manapaarai, India)


### Introduction:

Internet usage has witnessed a steep increase in the recent years; this significant expansion of the Internet at the eve of the twenty first century has allowed the Internet to occupy a central part of human life. Expertise in computer usage and intelligent handling of the Internet allows humans to communicate freely across an international electronic computer network with its inherent extraordinary potential for expansion. The Internet, with its huge resources, acts as an essential purposeful tool to cater the rapidly increasing population of youngsters who wish to align with the modern times. The scope of information technology in developing countries should not be slowed down due to limited accessibility to computers and the internet, at home and at educational institutions. Internet allows to reduce social isolation; it also has additional psychosocial benefits like communication with friends and family, and exploration of hobbies which can be realized with greater ease.

### Aim:

To assess and compare the Internet usage patterns, E – Book reading habits in Tamil and the perceived barriers for it among arts and science college students in a rural and an urban city in Tamilnadu during 2014.

### Materials and Methods:

The study was conducted among college students enrolled in various arts and Science College in a rural (Manappaarai, Trichy District) and an urban city (Chennai) in Tamilnadu; the timeline of the conduction of the study was during July 2014. The carefully designed questionnaire which contains four separate parts was administered; [1] To assess the Demographic Data; [2] To assess the Internet Usage pattern; [3] To assess the E - Book reading Pattern in Tamil; [4] To assess the Perceived Barriers in Internet Usage.

The demographic data allowed the retrieval of information related to name; age; gender; curse of study; year of Study; marital status; and E- mail ID; pin code of the current area of residence; pin code of the area of schooling. The responses obtained were noted in a Likert Scale Format (*SD – Strongly Disagree; D – Disagree; N – Neutral; A – Agree; SA – Strongly Agree; NR - Not Responding*). All the data were entered into Microsoft Excel sheets and the appropriate statistical analysis was accomplished to arrive at the results.

### Results and Discussion:

As a response to the query regarding expertise in handling the Internet, 58 % of students from urban and 39 % of students from rural areas expressed that they are well expertise with Internet usage whereas,34 % of students from urban and 55 % of students from rural areas expressed that they are not expertise in handling the Internet. As a response to the query regarding the user friendliness of the Internet and its effectiveness in providing

useful information about the Tamil Diaspora, 29 % of students from urban and 22 % of students from rural areas express that they are user friendly and effective whereas, 40 % of students from urban and 49 % of students from rural areas express that it is not user friendly and effective.

Katz J et al (1997) opined that social and work networks are important in the uptake of the Internet among the greater population; similarly we were able to observe that the rural students express greater difficulty to locate the relevant websites related to Tamil research (31%) than the urban students (26%). As a response to the query regarding the awareness of Internet address of authentic Tamil related websites, 52 % of students from Urban and 34 % of students from rural areas express that they are well aware; whereas 40% of students from Urban and 49 % of students from rural areas accepted their overwhelming levels of difficulty in this domain.

As a response to the query regarding the pattern of browsing the internet, 36 % of students from urban and 13 % of students from rural areas accept that they remain always online; whereas only 19% of students from urban and 07 % of students from rural areas inform that they browse the Internet for more than 3 hours everyday.16% of students from urban and 12% of students from rural areas opine that they browse the Internet only half an hour every day. 18 % of students from urban and 33 % of students from rural areas express that they only occasionally browse the Internet. Interestingly, 7% of students from urban and 18% of students from rural areas declare that they have never browsed the Internet. Google and Facebook turn out to be the most frequented sites by the students in both the rural and the urban populations; whereas the site that was most frequently visited in particular reference to Tamil research was Tamil Wikipedia.

Based on the response to the query regarding the behavior of browsing the web to read Tamil E books, it was learned that it is less among the rural students (14%) when compared to the urban students (26%). Moreover, 38% % of students from urban area feel that the subject materials used in the classroom were also readily available over the internet as well; whereas this belief does exist only among 18% of rural students. 31% of students from urban and 39% of students from rural areas feel that the currently available E - books in regional languages on the Internet were unreliable resources to procure authentic information for research purposes. 23% of students from urban and 41% of students from rural areas expressed their willingness to reconfirm the facts furnished in the E – books, with the information in the printed books. Similar to our findings, Trocchia P et al (2000) also found that social support influences the efficacy and perception of usefulness of technology.

As a response to the query regarding the routes frequented to arrive at the E books, Google search engine stands first, next comes the sources as E mail attachments from known fellow researchers, references linked in wikipedia pages and the various E books stores follow the thin segments of resource providers; there is a conspicuous absence of awareness about Google Scholar and Google Books among both the populations.

Regarding the comparison between the behavior of spending time in the college central library among the digital section and the printed book section, more students from urban (34%) than from rural (30%) areas prefer the digital section while less students from urban (41%) than from rural (48%) areas prefer to spend more time in the printed books sections. In line with this specific finding, we were able to observe that when questioned about experiencing pleasantness to read Tamil books in paper format and as E book format, more rural students vote for printed books (28%) than the E books (13%), whereas more urban students (35%) than the rural students (29%) support the E books than the printed books, probably this is due to the fact that E books invade the viewer ship platform only after the initial exposure; this finding can be explained based on a similar observation by Cody JM et al (1999) that training reduces anxiety and increases efficacy in using technology.

From the questionnaire to assess the perceived barriers in Internet usage, it was observed that, unreliable technical availability (low bandwidth and low signal) were cited as the main reason for avoidance of internet use among the urban students (54%) whereas a staggering 83% of rural students declare it to be the prime reason for distancing them from the technical revolution unraveling in the modern world. Unreliable technical availability (Electrical Failure) was cited as the reason for avoiding Internet use by 32% of urban and 66 % of rural students reflecting the general impact of interrupted availability of electricity in a growing economy as that of India.

interaction network; [b] selective approach in choosing interaction partners; and [c] reciprocating initiated contacts. The probabilistic approach to the network analysis allows reporting the results with statistical precision. The identified tendencies may suggest that users, over time, may prefer to narrow their interaction to selected participants. Yet, the learners consistently exhibit a tendency to respond to initiated communication. Hence, the practitioners who intend to expose learners to the wider community may want to integrate designs that encourage learners to initiate communication with others. Furthermore, this study extends to identifying possible interrelation between network dynamics and learner achievement. Issue-Based Information Systems are used as a means of encouraging a greater degree of participation, particularly in group context process. Hence using IBIS the various interaction patterns among INFITT

## VI. REFERENCES:

1.T. A. B. Snijders, "The Statistical Evaluation of Social Network Dynamics," Sociological Methodology, vol. 31, pp. 361-395, 2001.

2.T. Snijders, C. Steglich, and M. Schweinberger, "Modeling the coevolution of networks and behavior," Longitudinal models in the behavioral and related sciences, pp. 41–71, 2007.

3.Conklin, J., & Begeman, M. L. (1988). “IBIS: A hypertext tool for exploratory policy discussion. ACM Transactions on Office Information Systems”, 6, 303–331.

4.Veermans, M., & Cesareni, D. (2005).” The nature of the discourse in web-based collaborative learning environments: Case studies from four different countries’, Computers & Education, 45, 316–336.

5.Christina prell.(2012),”Social network analysis, history , theory, methodology “,sage publication Inc.

## Comparison of the E- Learning behavior in Tamil between Medical and Dental students in Tamilnadu during 2014

**Dr. Lalitha Shanmugam,**
Assistant Professor, Physiology, MAPIMS, Tamilnadu

**Dr. Semmal,**
Associate Professor, Physiology, Sri Ramachandra University, Chennai

### Introduction:

In the present modern era, instantaneous access to information possible at lightning speed with availability of Internet, which is a vehicle for World Wide Communication. Expertise in efficient handling of the internet has become an essential requirement among the medical professionals. Doctors without computer knowledge could not get connected to the modern world and they are expected to get trained to communicate via the internet. Their expert knowledge which is useful to general public is shared through powerful and cost effective medium of internet.

Telemedicine is the outcome of Internet access, Broadband communicating facility combined with availability of Specialized Doctors to the needy people crossing beyond the geographical barriers. It facilitates to get the experts advice and service at reasonable cost. It reduces many costs such as Establishment and Transportation also increases the serviceable people. Since cost is reduced, it makes much affordable to the economical weaker segment people.

The behavior of learning through the internet is prevalent among the students of different profession in urban areas. That too among the medical and dental students is great and it becomes the part and parcel of the course itself. But E- Learning behavior in Tamil is questionable among the medical and dental students. Hence this study was undertaken to compare the E- Learning behavior in Tamil between medical and dental students in Tamilnadu during 2014.

### Materials and methods:

It is a cross sectional study conducted among MBBS & BDS students of different year of study of various medical colleges in Tamilnadu. 500 students were included in the study, among them 300 were Medical and 200 were Dental students. After getting an informed consent from all, a detailed questionnaire about the use of internet in Tamil is distributed to

them, explained its need then their answers was collected. All of the students who were included in this study had submitted the answered questionnaires. These data were compiled in an Excel sheet to arrive the statistical data analysis.

**Result**:

Among the 500 students, 300 were MBBS students & 200 were BDS students.

| **YEAR** | **MBBS** | | **BDS** | |
|---|---|---|---|---|
| | *Male* | *Female* | *Male* | *Female* |
| I | 50 | 50 | 0 | 50 |
| II | 0 | 50 | 50 | 0 |
| III | 25 | 25 | 25 | 25 |
| IV | 25 | 75 | 25 | 25 |

| | | MBBS | BDS |
|---|---|---|---|
| Accessing Computer | Yes | 300 | 200 |
| | No | 0 | 0 |
| | | | |
| Place of Access | at College | 5 | 0 |
| | at Home | 5 | 2 |
| | at both, home & Internet Cafe | 290 | 198 |
| | | | |
| Desktop Availability | Yes | 300 | 200 |
| | No | 0 | 0 |
| | | | |
| Laptop Availability | Yes | 300 | 200 |
| | No | 0 | 0 |
| | | | |
| Trained in Internet | Yes | 241 | 173 |
| | No | 59 | 26 |
| | | | |
| Tamil Communication thru Internet | Yes | 0 | 0 |
| | No | 300 | 200 |




Inference from the above chart is that the trend of using the internet in tamil has commenced recently. i.e Year ago. Before this period no people were used tamil in internet communication.




**Discussion:**

Barriers to use the internet in Tamil for students among different years of the courses are lack of time to use the Internet and inaccessibility to the Internet, Slow Internet speed and High

cost. Students have familiarized with computers in Tamil is only through personal study and experience. There is no special course for internet usage in Tamil in the college.

**Conclusion:**

Since MBBS Students spend less amount of time than the BDS students based on the Duration of usages of internet and spending the time for Tamil communication through internet is less. Also Based on Pearson Chi-square it is more than 0.5, we conclude that MBBS STUDENTS USING LESSER RESOURCES FOR LEARNING IN TAMIL THROUGH NET.

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்த சேலம் மாவட்ட கல்லூரி மாணவர்களிடையே மொழி இடையூறா – ஆய்வு

Language Hindrance in Information and Communication Technology (ICT) usage and perception among the university students in Salem district

**வெ. இராஜமுனிசேகரன்* & முனைவர் சு. நந்தகுமார்****

Ph.D. Research Scholar & University Research Fellow,

Department of Journalism and Mass Communication,

Periyar University, Salem – 636011. <rajamunisekaran@yahoo.co.in>

**Associate Professor, Department of Journalism and Mass Communication,

Periyar University, Salem – 636011. nandakumar.su@gmail.com

## முன்னுரை

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப்(ICT) பயன்பாடு, மனிதர்களிடையே அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகத் தற்போது மாறிவிட்டது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதனைப் பயன்படுத்தாதவர்கள் எவரும் இல்லை. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் கூட அறிந்தோ அறியாமலோ இதனைப் பயன்படுத்துகின்றனர், உதாரணத்திற்குத் தொலைக்காட்சி(T.V.), செல்பேசி(Cell Phone) முதலியன. சீனா (க்சுன் கே & ஜியேனிங் ருவான், 2010) ஜப்பான், கம்போடியா (ஜேம்ஸ் எட்வுட் & ஜார்ஜ் மெக்லீன், 2009) போன்ற நாடுகள் தங்களுடைய தாய்மொழியினைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி உபயோகப்படுத்துவதுபோல், நமது தமிழ் மொழியை அனைத்துத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களிலும் பயன்படுத்த வழிவகைகளைப் பல நிறுவனங்கள் செயல்படுத்தியுள்ளன.

இந்தக் கருத்தை முன்னிறுத்தியே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான தொழில்நுட்பங்கள் இளைய சமூகத்தினரையே அதிலும் குறிப்பாக மாணவர்களை முதலில் சென்றடைகிறது(வேங்கடலட்சுமி & அம்புஜம் 2012). ஆங்கில மொழி ஆதிக்கம் அதிகரித்துள்ள நேரத்தில் தமிழினைத் தொழில்நுட்பங்களில் பயன்படுத்துவதால் அதனைப் பயன்படுத்துபவர்கள் அதிகரித்தே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய இணையம் மற்றும் செல்பேசி சங்கத்தின் குறிப்பு என்னவென்றால் உலகில் 40.4% சதவிகிதம் பேர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர் அதிலும் குறிப்பாக நமது இந்தியாவில் இரண்டு கோடியே நாற்பத்தி மூன்று லட்சம் (243 மில்லியன்) மக்கள் ஜூன் வரை பயன்படுத்தியதாகச் சொல்கிறது (2014, Jan 29, Times of India & PTI). செல்பேசி, கணினி, இணையம் உள்ளிட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளில் மாநில மொழியான தமிழைப் புகுத்தியதால் இவைகளின் பயன்பாடு அதிகரித்தே உள்ளது (வேங்கடலட்சுமி & அம்புஜம் 2012).

## ஆய்வின் முன் வரலாறு (Review of related literature)

இணையம் பயன்படுத்துவதால் இந்த உலகமே ஒரு கிராமம் போல் சுருங்கிவிட்டது என்று மார்ஷல் மக்ளுஹன் சொன்னது தற்போது உறுதியாகிவிட்டது. அவி கோல்ட்பார்ப் & ஜெப் பிரின்ஸ் (2008) அமெரிக்காவில் இணையப் பயன்பாடு அதை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தகவல் பரவல்களின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் ‘எழுதப்படிக்கத் தெரியாவிட்டாலும் அடித்தட்டு மக்களே இணையத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர், மேல் வர்க்கத்தினர் பணம் சம்பாதிக்க அதிக நேரம் செலவிடுவதால் இணையத்தை அதிகம் பயன்படுத்துவதில்லை. மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் (ICT) பயன்பாடுகள் குறித்து பர்ஹத் பஷீர் & முஜிபுல் ஹாசன் சித்திக் (2012) மேற்கொண்ட ஆய்வில் அனைத்து வாய்ப்புகள் இருந்தும் பெண்கள் இணையத்தை அதிக முறை மற்றும் நேரத்தில் பயன்படுத்துவதில்லை. ஆங்கிலம் தெரியாவிட்டாலும் ஆண்கள் இணையத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. ராஜி & கோட்ஸி (2008), வாழும் இடமும், மொழியும், சமுதாய அந்தஸ்தும் ICT கருவிகளைப் பயன்படுத்துவோரிடையே வேற்றுமையை உருவாக்குகிறது என்று தனது ஆய்வின் மூலம் குறிப்பிடுகிறார். கேரளாவில் பட்டப்படிப்பு கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாணவிகள் குறைவாகவே ICT கருவிகளைப் பயன்படுத்துகின்றனர் என்றும், மொழி ஒரு தடையாக உள்ளதாகவும், ஆனால் மாணவர்கள் குறைந்தது 4 லிருந்து 5 மணி நேரம் வரை செல்பேசி மற்றும் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பதைத் தனது ஆய்வில் கண்டறிந்தார். கிட்டுயி – க்வாகே எ. & அடிகன் எம்.ஓ. (2008) கென்யாவில் பெண்கள் ICT கருவிகளைப் பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சியில் ICT கருவிகளைப் பயன்படுத்த கல்வியும், மொழிப் புலமையும், தகவல்களைத் தேடும் எண்ணமும் மற்றும் நல்ல சமூக சூழ்நிலையும் தேவை என்று கூறியுள்ளார்.

முஹம்மது அக்ஸாபி, ஜாவத் கலத்பாரி & முஸ்தபா அக்ஸாபி (2011), மாணவர்களின் செல்பேசியில் எந்த அளவுக்குப் பயன்படுத்துகின்றனர் மற்றும் அவர்களின் சுய திறன் மேம்பாடு எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதைப் பற்றி ஆய்வு மேற்கொண்டனர். மாணவர்கள் உற்சாகத்தோடும், முனைப்போடும் இந்தத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்(ICT) கருவிகளைப் பயன்படுத்த எண்ணுகின்றனர் என்றும், அதே நேரத்தில் மொழி அவர்களுக்கு ஒரு தடையாக இருந்தாலும் அதைப் பயன்படுத்துவதால் சந்தோஷமடைகின்றனர் என்பதைக் கண்டறிந்துள்ளார். ஜோஹன்னஸ் க்ரோஞ் (2009) ICT கருவிகளைப் பயன்படுத்துவதில் மொழியினால் உண்டாகும் தடைகள் என்பது பற்றிய தனது ஆய்வில், என்னதான் அனிமேஷன் கிராபிக்ஸ் உள்ளிட்ட விஷயங்களை மக்களுக்கு எளிதாகப் புரியும்படி அளித்தாலும் அராபிய மொழியை உபயோகிக்க ஏதுவாக வழங்குவதற்கு ஈடாகாது என்கிறார்.

நோக்கங்கள் (Objectives)

1. மாணவர்கள் பெற்றிருக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகள் நிலையினை கண்டறிதல்.

2. மாணவர்களிடையே ICT கருவிகளின் விழிப்புணர்வு மற்றும் பயன்பாட்டினை அறிதல்.

3. ICT கருவிகளைத் தமிழ் மூலம் பயன்படுத்துவதால் அவர்கள் பெறும் நன்மைகள் மற்றும் எண்ணங்களைத்(பார்வையை) தொழில்நுட்ப ஏற்பு முறையின் (Technology Acceptance Model) துணைகொண்டு விவரித்தல்.

ஆய்வுக் கேள்விகள் (Research Questions)

1. மாணவர்கள் ICT கருவிகளைப் பெற்றுள்ளனரா?

2. மாணவர்களிடையே ICT கருவிகளின் விழிப்புணர்வு மற்றும் பயன்பாடுகள் எவ்வாறு உள்ளன?

3. ICT கருவிகளைப் பயன்படுத்த மாநில மொழி (தமிழ்) தடையாக உள்ளதா?

ஆய்வு திட்ட அமைப்பு (Research methodology)

மேலே குறிப்பிட்டுள்ள இந்த ஆய்வுக் கட்டுரைகள் உறுதுணையோடு வழிக்காட்டுதலோடு மேற்கூறிய ஆய்வு இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவற்றின் தன்மைகளை உறுதிப்படுத்த அளந்தரிக்கை ஆய்வு முறை (Survey Method) பயன்படுத்தப்பட்டது. இம்முறை நிகழ்காலத்தோடு பெரிதும் தொடர்புடையது என்பதால் இது தெரிவுசெய்யப்பட்டது. இந்த முறையில் 100 வினாப்பட்டியல்களை 5 கல்லூரி மாணவர்களிடையே பகிர்ந்து வழங்கி அதன் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட ஐந்து கல்லூரிகளை இயைபில்லா மாதிரி முறையில் (ரேண்டம் முறை) தேர்வு செய்து, பின்னர் நேரிடையாக அக் கல்லூரிகளுக்குச் சென்று வசதி முறையில் (convenience sample method) மாணவர்களிடம் வினாப்பட்டியல்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் சமூக அறிவியலுக்கான SPSS மென்பொருள் மூலம் கணக்கீடு செய்து பகுப்பாய்வு செய்யப்பட்டது.

கோட்பாடுகள் (Theory)

பிரெட் டேவிஸ் (1991) ஆம் ஆண்டு தனது ஆய்வுக் கட்டுரை மூலம் ஒரு தனி நபரின் கணினிப் பயன்பாடும், செயல்பாடுகளும் மற்றும் அவர்களுடைய மனோபாவத்தைப் புரிந்துக்கொள்ள ஏதுவாக தொழில்நுட்ப ஏற்பு முறையினைத் (Technology Acceptance Model) தந்துள்ளார். இந்த முறை அஜ்சன் (Ajzen) மற்றும் பிஷ்பீன் (Fishbein) ஆகியோருடைய 'தியரி ஆப் ரீசன்ட் அக்சன்' (Theory of Reasoned Action) மற்றும் 'தியரி ஆப் ப்ளேன்ட் பிகேவியர்' (Theory of Planned

Behaviour) ஆகியோரின் கோட்பாடுகளை முன் மாதிரியாக வைத்து, மாணவர்களின் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் அவர்களின் மனோபாவம் போன்ற மாறிகள்(variables) இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**தகவல் பகுப்பாய்வு மற்றும் விவரித்தல் (Data analysis and interpretation)**

100 மாணவர்களிடம் பெறப்பட்ட 100 தரவுகள் (54 மாணவர்கள் மற்றும் 46 மாணவியர்கள்) சமூக அறிவியலுக்கான புள்ளியியல் (SPSS) மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவர்களில் 28% பேர் முதுகலைப் பயிலும் மாணவர்கள் மற்றும் 72% பேர் பட்டதாரி மாணவர்கள். 96% பேர் திருமணம் ஆகாதவர்கள் 4% பேர் மட்டும் திருமணமானவர்கள்.

1. மாணவர்கள் அனைவரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பெற்றுள்ளனரா? என்ற ஆய்வுக் கருதுகோளுக்கு மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்தததில், அனைத்து மாணவர்களும் ICT கருவிகளில் ஒன்றை தன் வசம் வைத்துள்ளனர் அவர்களில் 84% (சதவிகிதம்) பேர் தம் வசம் செல்பேசியையும், கணினியையும் வைத்துள்ளனர். இவர்களில் 82 சதவிகிதம் பேர் தமிழக அரசின் மடிக்கணினி திட்டம் மூலம் பயன்பெற்றுள்ளனர், 6 சதவிகிதம் பேர் சுயமாக வாங்கியுள்ளனர், ஆனால் 12 சதவிகிதம் பேரிடம் மடிக்கணினியோ, கணினியோ எதுவும் இல்லை என்பது குறிப்படத்தக்கது.

2. மாணவர்களிடையே ICT கருவிகளின் விழிப்புணர்வு மற்றும் பயன்பாடுகள் எவ்வாறு உள்ளது? என்ற கேள்விக்கு முதல் கேள்வியின் பதில் உறுதுணையாக எடுத்து ஆராய்ந்ததில். இவர்களில் 84% சதவிகிதம் பேர் ஏனைய ICT கருவிகளைப் பெற்றிருந்தாலும், பெரும்பாலானோர் (72%) இணையத்தை மட்டும் பயன்படுத்துகின்றனர். இவர்கள் தினமும் சராசரியாக 7 மணி நேரம் வரை இணையத்தைப் பயன்படுத்த நேரத்தைச் செலவழிக்கின்றனர். 14 சதவிகிதம் பேர் மட்டுமே 8 முதல் 12 மணி நேரம் வரை இணையத்தில் செலவழிக்கின்றனர். ICT கருவிகளான தனிநபர் மேசைக்கணினி, மடிக்கணினி, செல்பேசி, டேப்லேட் போன்ற ஒன்றிற்கு மேற்பட்ட கருவிகளில் 68 சதவிகிதம் பேர் மூன்று வருடங்களுக்கு மேல் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். எட்டு சதவிகிதம் மாணவர்கள் மட்டுமே மூன்று மாதங்களிலிருந்து 1 வருடம் வரை பயன்படுத்துபவர்கள்.

3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகளை பயன்படுத்த மொழி இடையூறா என்பது குறித்து ஆராய்ந்ததில், 82 சதவிகிதம் பேர் தமிழில் பயன்படுத்துவதுதான் எளிது என்றும், ICT கருவிகளைத் தனித்திரனோடு பயன்படுத்த தமிழ்தான் சிறந்த வழி என்று 62 சதவிகிதம் பேரும், தமிழில்

இருந்தால் மட்டுமே எந்த விதமான ICT கருவிகளையும் பயன்படுத்தக் கற்றுகொள்ளலாம் என்று 72 சதவிகிதம் பேரும் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் எத்தகைய தொழில்நுட்பங்கலானாலும் தாய்மொழியில் இருந்தால் அவற்றை எளிதாகப் பயன்படுத்த முடியும்.

## முடிவுரை (conclusion)

மாணவர்களுடைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்(ICT) கருவிகளைப் பயன்படுத்தும் திறன்கள், ஆங்கிலத்தைத் தவிர, தமிழ்மொழியில் பயன்படுத்துவது எளிதாக உள்ளதாகப் பெரும்பான்மையானவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இவர்கள் இத் தொழில்நுட்பங்களைத் தினந்தோறும் பயன்படுத்திவருகின்றனர். தமிழே அவர்களின் பிரதான தேர்வாக உள்ளது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பாமரன் முதல் பணக்காரன் வரை, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, படித்தவன் முதல் படிக்காதவன் வரை அனைத்துத் தரப்பினரிடமும் சென்று சேர தாய்மொழி மூலம் அவை இயக்கப்பட வேண்டுமென இவ்வாய்வு தெரிவிக்கிறது.

## References:


- Avi Goldfarb, & Jeff Prince (2008). Information Economics and Policy 20 (2008) 2–15. Retrieved from www. elsevier.com/locate/iep. 30/09/2013, 5.55 pm
- Cronje, J. C. (2009). Qualitative assessment across language barriers: An action research study. Educational Technology & Society, 12 (2), 69–85.
- Davis, F.D. (1991) User acceptance of information technology: system characteristics, user perceptions and behavioural impacts. International journal of Man-Machine Studies, 1993, 38, 475 – 487.
- Farhat Bashir, Dr. Mujibul Hassan Siddiqui (2012). Usage of ICT by the Students in Higher Secondary Schools of Jammu and Kashmir. IOSR Journal of Humanities and Social Science (JHSS). Volume 4, Issue 2 (Nov. - Dec. 2012), PP 37-41 www.Iosrjournals.Org
- Internet and Mobile Association of India (2014, Jan 29). India to have 243 million internet users by June 2014:
- IAMAI, PTI. Retrieved from http://timesofindia.indiatimes.com/tech /tech-news/India-to-have-243-million-
- internet-users-by-June-2014-IAMAI/articleshow/29563698.cms
- James Edwood & George MacLean (2009). International Journal of Emerging Technologies and Society (IJETS), Vol. 7, No. 2, 2009, pp: 65 – 82. Retrieved from http://unpan1.un.org/intradoc/groups/ public/documents /unpan/unpan046135.pdf
- Kituyi-Kwake, A. and Adigun, M.O. (2008). Analyzing ICT use and access amongst rural women in Kenya.

- International Journal of Education and Development using Information and Communication Technology
- (IJEDICT), 2008, Vol. 4, Issue 4, pp. 127-147.
- Mohammad Akhshabi, A. , Javad Khalatbari, B., Mostafa Akhshabi (2011). An experiment on conducting mobile learning activities on the virtual university. Procedia - Social and Behavioral Sciences 28 (2011) pp. 384 – 389 1877-0428 doi:10.1016/j.sbspro. 2011.11. 073
- Raji & Godsy (2010). Society for the Promotion of Alternative Computing and Employment (SPACE) report, Thiruvananthapuram. Retrieved from http:/www.space-kerala.org.
- Venkatalakshmi & Ambujam (2012). Information and Communication Technology use Frameworks among Self-Help Group Women. European Journal of Social Sciences Vol.27 No.2 (2012), pp.206-212. Retrieved from http://www.shgportal.com/img/content/EJSS_27_2_07.pdf
- Xun Ge & Jiening Ruan (2010). Integrating Information and Communication Technologies in Literacy Education in China. Retrieved from http://www.ou.edu/uschina/ICT%20Chinese%20 Literacy.pdf

# இணைய கணினி வழி தமிழ் நூல்கள் ஆய்வு

**முனைவர் சீ. விஜயபாலாஜி*, முனைவர் ப. சீனுவாசன் மற்றும் த. முகேஷ்#**

*உதவி பேராசிரியர் கணிதவியல் துறை,
பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, பண்ருட்டி.
+உதவி பேராசிரியர் இயற்பியல் துறை மற்றும் துறை தலைவர்,
பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, பண்ருட்டி.
#பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மாணவர்,
கணிப்பொறியியல் இரண்டாம் ஆண்டு ,பண்ருட்டி

**குறிப்புச்சட்டகம்**

- முன்னுரை
- பொருளுரை
- இணையத்தளத்தில் தமிழ்
- தமிழ்நூல் ஆராய்ச்சியாளர்கள்
- வாய்மொழி கட்டளை
- முடிவுரை

**முன்னுரை:**

தமிழர்களின்பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல்முறை, ஒழுக்கநெறி, வீரம், தொலைநோக்கு சிந்தனை ஆகியவற்றின் பிம்பங்களான நமது பொக்கிஷங்களாக விளங்கும் அரிய தமிழ் நூல்களின் தொகுப்பினை தரவுத்தளத்தில் சேமித்து வைக்கும் முறையினைப் பற்றியும்,தமிழ் நூல்களின் ஆராய்ச்சி மேற்கொள்பவர்களும் எளிய முறையில் கையாண்டு பயன்

பெறுவதற்கான முறையை பற்றியும்,கையடக்க மின்மடிப்பான்களில் தமிழ் நூல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்,NLP-யைபயன்படுத்தி நமக்கு தேவையானதை பெறும் முறைக்கான ஒரு மாதிரி வடிவத்தையும் இவ்வாராய்ச்சி இக்கட்டுரையில் காண்போம்.

**பொருளுரை:**

தரவுத்தளம் என்பது கணினியில் சேகரித்து தொகுத்து ஒழுங்கமைப்பட்ட தரவுகள் ஆகும் .நமக்கு தேவையான தரவுகளைதரவுத்தளத்தில் சேமித்து வைத்து நமக்கு தேவையானபோது எடுத்து பயன்படுத்த ஏதுவாக இருப்பது தரவுத்தளம் ஆகும்.

**இணையத்தில் தமிழ்:**

தமிழ் நூல்கள் பலவும் தற்சமயம் அழிந்து வரும் நிலையில் உள்ளது. சில அறிய தமிழ் நூல்கள் அழிந்துவிட்டன.எனவேதமிழ் நூல்களை காக்கும் பொருட்டு இவற்றை தரவுத்தளத்தில் சேமித்து வைத்து அனைவரும் பயன்படுத்துமாறு செய்யலாம்.

வளர்ந்துவரும் இணைய உலகத்திருக்குஏற்றார்போல் தமிழ் நூல்களை இணையதள தரவுத்தளத்தில் சேமிப்பதன் மூலம் தமிழ்வழி இணைய பயன்பாட்டாளர்கள் அனைவரும்எளிதாக பயன்படுத்தலாம்.

தமிழர்களின்பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல்முறை, ஒழுக்கநெறி, வீரம், தொலைநோக்கு சிந்தனை ஆகியவற்றின் பிம்பங்களான நமது பொக்கிஷங்களாக விளங்கும் அரிய தமிழ்நூல்களின் தொகுப்பினை தரவுத்தளத்தில் சேமித்து வைக்கும்போது அதை படிக்கும் பயனாளர்கள் தமிழர்களின் உயரிய நிலையை அறிந்து கொள்ள முடியும்.

இதற்கு முன்பாகவே தமிழ் நூல்கள்பற்றிய தரவுதளங்கள்ஏராளமாக உள்ளன ஆனால் எவையும் முழுமையாக வடிவமைக்கப்பட்டவை அல்ல. எனவே இவ்வாறான தரவுதளங்கள் முழுமையாக பயனாளரின் தேவையை பூர்த்தி செய்யாது. எனவே வடிவமைக்கின்ற தரவுத்தளத்தை முளுமையனதகவும் பயனாளரின் தேவையை பூர்த்தி செய்வதுமாக அமைய வேண்டும்.

இணையம் பயன்படுத்தும் அனைவரும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் அல்ல. இருப்பினும் ஆங்கிலத்திலேயே தேவையானதை தேட முயல்கிறார்கள். இதற்கு காரணம் பயன்பாட்டாளரின் தேடலுக்கான முடிவுகள் துல்லியமாக கிடைப்பதில்லை, கிடைக்கின்ற முடிவுகளும் தெளிவான தொகுப்புகளாக இல்லை.

தரவுத்தளத்தில் உள்ள நூல்களை தேவைக்கேற்றார் போல் தொகுப்புகளாக பிரிப்பதன் மூலம் பயனாளரின் தேவையை பூர்த்தி செய்யலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் இணையதள பக்கங்களின் மீது உள்ள ஆர்வம் அதிகரிக்கும்.

தமிழ் நூல்களைஅதன் காலகட்டத்திற்கு ஏற்ப வகைபடுத்தி அதை அதற்கேற்ற தொகுப்புகளாக பிரித்து வகைபடுத்தி வைத்தால் பயனாளர்கள்தங்களுக்கு தேவையான நூலை எளிதில் கண்டறிந்து பயன்படுத்தலாம் . மேலும்இலக்கியங்களை,நூல்களை, புதினங்களை, அவற்றின் நூலாசிரியாரின் பெயரின் கீழ் வகைபடுத்தி வைப்பது மேலும் பயன்படக்கூடியது.

**தமிழ்நூல் ஆராய்ச்சியாளர்கள்:**

தமிழ் நூல்களில் ஆராய்ச்சி மேற்கொள்பவர்கள் பயன்படுத்தும் வகையில் நூல்களின் தெளிவான தகவல்கள் (ஆசிரியர் பெயர், நூற்குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, பொருளடக்கம்,தெளிவுரை) அனைத்தும் இடம் பெற தரவுத்தளத்தை அமைக்க வேண்டும். இவ்வாறு அமைப்பதன் மூலம் தமிழ் நூல்களில் ஆராய்ச்சி மேற்கொள்பவர்கள் தங்கள் தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

தற்போது தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உருவான உலகத்தோர் அனைவரும் பயன்படுத்தும் கையடக்க மின்மடிப்பான்களில் தமிழ் நூல்களை பயன்படுத்தும் வகையில் அமைப்பதன் மூலம் எவரும் எளிதாக தமிழ் நூல்களை இணையதளத்தில் கையாளலாம்.

நூல்களை பல்வேறு வடிவங்களில் உருபெயர்த்து வைப்பதன் மூலம் எந்த தொழில்நுட்ப சாதனத்திலும் பயன்படுத்துமாறு செய்யலாம் , இது பயன்பாட்டாளர்களுக்கு மேலும் பயன்படக்கூடியது.

**வாய்மொழி கட்டளை:**

நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி(NLP-யை) கையடக்க மின்மடிப்பான்களில் நாம் ஒரு கட்டளையை பேச்சு வழக்கு மொழியில் (Command through speech) பிறப்பித்தால் அக்கருவி அதனை புரிந்து கொண்டு அதற்க்கேற்ப செயல்பட்டு நமக்கு தேவையான நூல்களை திரையில் காண்பிப்பது மேலும் அதன் உட்பிரிவுகளை இவ்வாறான முறையிலேயே பயன்படுத்தி இயக்கி நமக்கு தேவையான செய்யுள்களை பெறலாம்.

இயல்மொழிநிரலாக்கத்தை தமிழ் இணையதலத்தில் பயன்படுத்துவதன் மூலம் தமிழ் எழுத படிக்க தெரியாதபாமரர்களும் தமிழ் இணைய தளங்களில் தங்கள் தேவைகளை வாய்மொழி கட்டளை(voice command) மூலம் உள்ளீடு அளித்துவாய்மொழிகோப்புகளாக பெற்றுகொள்ளலாம்.

இயல்மொழிநிரலாக்க மென்பொருள் ஒன்றை மாதிரியாக வடிவமைத்துள்ளோம் இதன் மூலம் வாய்மொழி கட்டளை(voice command) மூலம் உள்ளீடு அளித்துவெளியீடு பெறுமாறு வடிவமைக்கபட்டுள்ளது.

முடிவுரை:

இயல்மொழிநிரலாக்கத்தைதமிழ் இணையத்தில் பயன்படுத்தி நல்ல முன்னேற்றத்தை கொண்டுவர முடியும் என்ற நோக்கத்தில் மேற்கண்ட மென்பொருளானது சிறிய அளவில் வடிவமைக்கபட்டுள்ளது. இது சிறிய தொடக்கமே ஆகும்.

ஆதாரநூல்கள்:


1.) ருச்லன்மிட்கோவ்,தி ஆக்ஸ்போர்டு ஹேண்டு புக் ஆப் கம்ப்யூடேசனல் லின்குயிஸ்டிக் , ஆக்ஸ்போர்டு பல்கலைகழகபதிப்பு,2003.

2.) ராபர்ட் டேல் ,ஹெர்மனி மொய்சி, ஹரோல்ட் சொமேர்ஸ் , ஹேண்டு புக் ஆப் நேச்சுரல் லேன்குவேஜ் ப்ராசசிங் ,மார்க்செல் டெக்கர் இன்க்.

3.) கிறிஸ்டோபர் டி மன்னிங் &ஹென்றிக் சூட்ஷி , ஃபவுண்டேசன்ஆப் ஸ்டேடிகல் நேச்சுரல் லேன்குவேஜ் ப்ராசசிங் ,தி எம்ஐடி பதிப்பு,2001

4.) டௌக்லஸ் பைபர், சூசன் கான்ராடு, ராண்டி ரீபபேன் , கார்பஸ் லின்குயிஸ்டிக்-இன்வெஸ்ட்டிகேசன் லேன்குவேஜ் ஸ்ட்ரேக்சர் அண்டியூஸ் , கேம்பிரிட்ஜ்பல்கலைகழகபதிப்பு,2000

## PREPARING ERROR TAGGED CORPUS FOR TAMIL LANGUAGE

**Dr. P. Vijaya**
Assistant Professor
CAS in Linguistics
Annamalai University
Cell: 9865483670
E-mail: vijayasakthi2008@gmail.com

### Introduction

The present study is mainly concerned with preparing error tagged corpus for Tamil language. Corpus (Corpora) defined is a large collection of written or spoken texts available in machine readable form accumulated in scientific way to represent a particular variety. It serves as an authentic data for linguistic and other related studies. The aim of this paper is to bring out Tamil tagged corpus for learners of Tamil either as a first language or second language. After analyzing the error data systematically, they would be stored electronically. As far as error analysis is concerned, the corpus linguistics could have a 'vindicating' role. Error Analysis has been largely criticized for both methodological and theoretical reasons.

The idea of trying to tag errors in learners' corpora might come from the notion of Error Analysis in Second Language research in the 1970s. Error-tagging is a specific type of annotation and the corpora on which error-tagging is done is normally associated to second language learners.

The error analysis is a systematic study of language with a view to identify the similarities and dissimilarities. It is quite different one, who wants to learn Tamil either as a first or a second language, will definitely come across or have to face many kinds of learning problems related to the sound systems, orthographic systems, morphological systems, lexical items and their structures, etc in the second language, which are alien to one's own native language. Hence, it is the hour of need for an error analysis and also the development of error corpus related to teaching of Tamil as a first language or as a second language. As the error analysis and error tagged corpora would be of great help to the Tamil teachers to understand and realize the learning problems faced by the learners, this paper aims to bring out learner's corpus, usually known as Computer –Aided Error Analysis (CEA).

Further, it involves the comprehension of error analysis techniques as a means to infer the process of learning a second language. According to this position, error analysis does not provide a complete idea of the learners in terms of their competence and performance. For error analysis to be efficient, it needs to study both erroneous and non-erroneous forms.

### Learner Corpora

Learner corpus error annotation is a highly time-consuming and painstaking task. However, once the corpus is error-tagged, the return on investment is huge. An error-tagged learner corpus represents an unparalleled resource that gives researchers immediate access to detailed error statistics and that lends itself to automated error analysis.

## Computer-aided Error Analysis

Once a very popular enterprise, error analysis (EA) is now out of favor with most second language acquisition. It has gone down in history as a fuzzy, unscientific, and unreliable way of approaching learner language. However, errors are an integral part of interlanguage and are just as worthy of analysis as any other interlanguage aspect. As stated by Ringbom (1987, p. 69) "Although error analysis certainly has its limitations, it must be regarded as an important key to a better understanding of the process underlying L2-learning." Similarly, Ellis (1994, p. 20) notes that although early error analysis studies were unreliable and difficult to interpret, "the study of learner errors can still serve as a useful tool and is still undertaken". In particular, a detailed description of learner errors cannot but contribute to one essential foreign language teaching aim—that of helping learners to achieve a high level of accuracy in the language.

## Objectives

- To develop an error tagged corpus for Tamil Language learners.
- To identify the errors made by Tamil language learners while learning Tamil.
- To study the reason for the errors committed by the language learners.
- To develop tagging tools for Tamil language learners.
- To make tag-set for error terms.
- To frame an exclusive questionnaire to language problems in Tamil.
- Ultimately to set teaching methodology and to bring out a corpus for error analysis.

## Methodology

The data have been collected by questionnaire, class work notes and test papers from the students ( ie 25 male and 25 female students ) who learn Tamil as a first language in Private and government schools, Tamilnadu. In addition to that the data have been collected from about 25 learners ( both male and female ) who learn Tamil as a second language in Southern Regional Language Centre, CIIL, Mysore.

Finally, all the information has been instructed to the computer by using the programming language 'JAVA' for bringing out error corpus for Tamil language learners.

## The Error –Tagged corpus

After having explained some of the main features to have in mind when developing error corpus, attention is focused on corpus mark-up. A term that is related to corpus mark-up is corpus annotation. If the mark-up of a corpus provides great advantages in terms of error tagged corpus research studies, the advantages increase when a corpus is annotated as the information added to the text, e.g. it provides information of the grammatical word classes. Tagging can be automatic (the computer program tags the corpus) or manual (there is human intervention in the tagging with the aid of a computer program). Hunston (2002: 18) points out the level of accuracy achieved depends on the automatic or manual tagging and states that even though in the first case a corpus can be totally tagged, the level of accuracy is lower than the one obtained through manual tagging. However, this is only feasible when the corpus is small.

Error-tagging is a specific type of annotation and the corpora on which error-tagging is done is normally associated to second language learners. May be the best exploitation of an error-annotated corpus is to observe the frequency of errors made by second language learners and their type. More interesting information is obtained when the study of errors is done with an emphasis on a specific language back ground, like in this case, where the purpose is to find about the frequency

of errors and error types made by learners of learning Tamil as a first or second language. Concordance-based linguistic analysis of major error types.

**Scanned Image file**



**For Example குறுவினா**



## Correction-tagged text file குறுவினா

1. நாள் < subst >தொறும் </ subst > *தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் <del>பாதுகப்பவனுடைய </del> *பாதுகாப்பவனுடைய வாழ்க்கை துன்பம் வந்த போதும்கெடு வதில்லை
2. உலகில் முழுமையாகக்கற்று<add>உணார்ந்தவர்</add> *உணர்ந்தவர் எவரும் < subst > இல்வை </subst >*இல்லை கொல்லன் உலைச<add>சசம்மட்டியால் </add>*சம்மட்டியால்<subst >உடைபாத </subst >*உடையாத பெரிய மலையைச் சிறிய< subst >உளியுல் </ subst >*உளியால் தகர்ந்துவிடும்
3. < subst >ஓரே </ subst >*ஒரே கல்லால் ஆன மிகப்பெரிய நந்தி தஞ்சைக் கேயிலில் உள்ளது
4. < subst >மரவு</ subst >*மரபு என்றால் என்ன?

In the sample error-tagged text in Figure 1, five errors have been annotated: five substitution errors—one deletion error and two addition errors.

### Tag Insertion

To speed up the tag insertion process, we have developed a purpose-built menu-driven editor which allows the annotator to insert error tags at the relevant point in the text by clicking on the appropriate tag from the error tag menu. Using the correction box, the analyst can also insert the corrected form with the appropriate formatting symbols.

### Sample Error-tagged Text




1. தமிழ் ஆசிரியர் பாடம் நடத்துவது <SUB><புறிகிறது><SUB>.
2. ஆங்கிலேயர் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் <DEL/Case><இந்தியா> <DEL/Case> விடுதலை அளித்தது.
3. நாம் <DEL/Case ><உண்மையப் ><DEL/Case> பேசி.
4. தை மாதம் முதல் நான் <SUB >பெங்கல்விழாவை <SUB > கொண்ட சூரியன் உதிக்கும்முன் புத்தரிசி.
5. ஆசிரியர் பாடங்களை ஏற்ற இறக்கத்துடன் நடத்தி <SUB><<கான்பார் ><SUB>.

In the sample error-tagged text in Figure 1, five errors have been annotated: three substitution errors—two case deletion errors.

## Advantages

- is growing fast; is an interesting field
- overcomes some of the limitations attributed to error analsysis and has many advantages
- makes many collection and analysis faster
- offers many possibilities: count errors, retrieve lists of specific error types, view errors in context…..
- makes contributions to different fields (SLL, NLP…)

## Conclusion

This study has been devoted to introduce what error analysis is and what sort of relationship it has with language teaching, and what contribution it provides for language teaching and language studies. While error-tagging may not be the be-all and end-all of interlanguage research, it provides highly valuable quantitative and qualitative insights into learner difficulties, which cannot fail to benefit all pedagogical foreign language learning tools, especially CALL programs.

## Reference


Brown, H. D. (2000). *Principles of language learning and teaching*. New York, Longman.

Corder, S. P. 1967. "The significance of learners' errors". *International Review of Applied Linguistics 5*: 161-9.

Dagneaux, E., Denness, S., & Granger, S. (1998). Computer-Aided Error Analysis. System, 26 (2), 163-174.

Ellis, R., (1994). "The Study of Second Language Acquisition", *Oxford University Press*,

Granger, S. (Ed.). (1998). Learner English on computer. London & New York: Addison Wesley

Longman.
James, C. (1998). Errors in language learning and use. Exploring error analysis. London & New York: Longman.
Keshavars, M.H. (1997). *Contrastive analysis and error analysis*. Tehran, Rahmana Pub.
Milton, J., & Chowdhury, N. (1994). Tagging the interlanguage of Chinese learners of English. In L. Flowerdew & A. K. Tong (Eds.), Entering text (pp. 127-143).
Naraj pillai and S.Vimala 1981 "Error Analysis : A new approach in language teaching", CIIL, Mysore.

# இணையத்தில் பரதநாட்டியம்

திருமதி. துஷ்யந்தி ஜூலியன் ஜெயபிரகாஷ், MA, Ph.D
விரிவுரையாளர் (நடனத்துறை)
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கழைக்கழகம், மட்டக்களப்பு, இலங்கை.

முன்னுரை:

மனிதர்கள் ஒவ்வொருவரும் தொடர்பு கொள்ளப் பயன்படுத்துகின்ற தகவல் தொழிநுட்ப சாதனங்களில் இன்றைய சூழலுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், அதி வேகமாகவும், அதிக திறனுடனும். மிகக் குறைந்த நேரத்தில்; பெரும் பயனைப் பெற்றுக் கொள்ளவும் உதவுகின்ற தகவல் தொடர்பு சாதனமே இணையமாகும். இன்றைய சூழலில் சகல துறைகளிலும் இதன் பங்கு பற்றுதல் இன்றியமையாததாகி விட்டது. அந்தந்த துறைகளின் பாரிய முன்னேற்றங்களுக்கும் இதன் பங்களிப்பு பெருமளவு காணப்படுகிறது. எனவே இந்த இணையத்தள பயன்பாட்டின் மூலம் பரத நாட்டிய கற்றல் கற்பித்தல் முறை அதன் வளர்ச்சிப்போக்கு அதன் பயன்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிதலே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

இணையத்தில் பரதநாட்டியத்தின் முக்கியத்துவம்:

நாடுகளின் எல்லைகளைக் கடந்து பல்வேறு இன, மத, மொழி, கோட்பாடு, பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் கொண்ட மக்களை எதுவிதமான வேறுபாடின்றி இணைத்துள்ள ஒரு அமைப்பே இணையமாகும். இன்று இணையம் என்பது மாணவர்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அரச தனியார் வர்த்தக நிலையங்கள் என்பவற்றிற்கு இன்றியமையாத ஒன்றாகும். இணையம் தங்கு தடையின்றி துரித வேகத்தில் பிரயாணம் செய்வதால் தகவல்களை இலகுவில் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இணையத்தில் ஏராளமான விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றில் நாம் விரும்பும் வலைப்பக்கங்களை நமக்கு சொற்ப நேரத்தில் தேடித் தருகின்றன. இணையத்தினூடாக நடனத் தகவல்களை எவ்வாறு வேண்டுமென்றாலும் பரிமாறிக் கொள்ளலாம் என்பதனால் விரும்பிய யாவரும் இணையத்தினுள் தொடர்புபட்டு தமது தகவல்களை உள்ளீடு செய்வதோடு மட்டுமன்றி உலக வலயத்திலுள்ள நடனத் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடிகிறது.

தொலைபேசி (Telephone), பெக்ஸ் (Fax) இயந்திரம் மூலம் நடைபெறுகின்ற தகவல் பரிமாற்றங்களைவிட பரந்த ரீதியிலான தகவல் பரிமாற்றல் முறை இணையம் மூலம் நடைபெறுவதே இதனது வளர்ச்சிக்கும், பிரசித்திக்கும் காரணமாகும். தொலைபேசியில் வாய்மூலத் தகவல் பரிமாற்றமும் பெக்ஸ் மூலம் இயந்திர எழுத்துமூல தகவல் பரிமாற்றமும் நடைபெறுகிறது. எனினும் இணையம் மூலம் வாய்மூல, எழுத்துமூல தகவல் பரிமாற்றம் மாத்திரமல்லாமல் புகைப்படங்கள், உருவங்கள், வீடியோ, ஒலிப்பதிவுகள் போன்றவற்றையும் அனுப்ப முடியும். ஆகையினால் இணையம் இன்று கட்புல – செவிப்புல சாதனங்களுக்கான தகவல் பாதையாக மாறியுள்ளது.

மேலும் பத்திரிகைகளில் வெளிவருகின்ற நடனம் சம்பந்தமான அறிக்கைகள், செய்திகள், நிகழ்வுகளின் தொகுப்புக்கள் போன்றவற்றையும், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்ற நடன நிகழ்ச்சிகள், வீடியோ நிகழ்ச்சிகள், ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றையும் இணையத்தின் வலையமைப்பின் ஊடாக உலகம் பூராகவும் பார்க்கக்கூடியதாகவும், தரவிறக்கம் செய்யக்கூடியவாறும் இருக்கின்றது.

குரு – சிஷ்ய பரம்பரையாக கற்றுவந்த பரதநாட்டியம் தற்போது தகவல் தொழில்நுட்ப புரட்சியினால் ஒன்லைன் (online) மூலம் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. www.onlinebharathanatyam.com என்னும் வெப் தளத்தில் பரதநாட்டியத்தின் வழுவூர், பந்தனை நல்லூர், தஞ்சாவூர், மைசூர், காஞ்சிபுரம் ஆகிய ஐந்து பாணிகளிலும் பரதநாட்டியம் கற்றுத் தருவதோடு, பரதநாட்டியத்திற்கான விமர்சன கட்டுரைகளும் இங்கு இடம்பெறுகின்றன. மேலும் பரதநாட்டியம் பற்றிய கருத்துக்களை வெளியிடும் ஓர் விவாத மேடைத் தளங்களாகவும் இணையம் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். உதாரணமாக பரதநாட்டியம் தமிழருடையதா? அல்லது இரவல் வாங்கியதா? எனும் தலைப்பில் விவாதிப்பதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

பரதநாட்டியம் சம்பந்தமான நூல்கள், புகைப்படங்கள், வீடியோ பதிவுகள், நடனத் தகவல்கள், நடன ஆவணங்கள் போன்ற பல தகவல்களை இணையத்தின் கூகுள் (google) தேடுதலின் மூலமாக நமக்குத் தேவையான விபரங்களை பதிவிறக்கம் செய்யவும், நமது தகவல்களை பதிவேற்றம் செய்யவும் முடிகின்றது. இச் செயற்பாடு உலகின் பல பாகங்களில் இருக்கின்ற மக்களிற்கும் பொதுவானதாக காணப்படுகின்றது. இணையத்தில் காணப்படுகின்ற சில நூல்கள், வீடியோப் பதிவுகள் முழுமையாக இடம்பெறுவதில்லை. அவற்றை முழுமையாக பார்வையிட கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

மேலும் நடனம் சம்பந்தமான தகவல்கள், செய்திகள், புகைப்படங்கள், வீடியோ பதிவுகள் E-mail, Facebook, Twitter போன்ற பல வலைத்தளங்களினூடாகவும் பரிமாற்றம் செய்யப்படுவதைக் காணலாம்.

உலகின் பல இடங்களிலும் வாழ்கின்ற புலம்பெயர்ந்த தமிழர்களில், நடன ஆசிரியர்கள் பலர் பரதநாட்டியத்திற்காக மன்றங்களை ஆரம்பித்து அதற்கான வெப் (web) தளங்களையும் இணையத்தில் பதிவு செய்து வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக அவுஸ்ரேலியாவில் 10ற்கும் மேற்பட்ட நடன நிறுவனங்கள் இயங்கி வருகின்றமையும் அதனைப் பற்றிய தரவுகளையும் இணையத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. இவ்வாறான பல நாடுகளிலும், பல நடன நிறுவனங்கள் இயங்கி வருகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. (web) தளங்களினூடாக வெளிநாடுகளில் பரதநாட்டிய வளர்ச்சியின் செயற்பாடுகளை அவதானிக்க முடிகின்றது. நடனக் கலையினை கற்பதற்கான பிரபல்யமான இந்தியப் பல்கலைக்கழகங்களின் அனுமதிகளை இணையத்தின் மூலமாக பெற்றுக் கொள்ளவும் முடிகின்றது. www.lanakasri.com தளத்தில் எம்மவர் நிகழ்வுகள் பகுதியில் புலம்பெயர் மக்களின் கலை நிகழ்வுகள் பற்றிய செய்திகளையும், நம் நாட்டு மக்களின் கலை நிகழ்வுகள் பற்றிய செய்திகளையும் காணக்கூடியதாயுள்ளது.

பரதநாட்டிய அரங்கேற்றங்கள், நடன நிகழ்வுகளின் வீடியோ பதிவுகள் Youtube ல் பார்க்கக்கூடிய வகையிலும் அதனை அனைவரின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் வாக்களிக்கும் முறைமையையும் கொண்டமைந்துள்ளது. ஒரு நடன நிகழ்வை எத்தனை பேர் பார்வையிட்டுள்ளனர் என்னும் கணக்கெடுப்பையும், அதில் எத்தனை பேர் விரும்பியிருக்கின்றார்கள், எத்தனை பேர் விரும்பவில்லை எனும் தகவல்களையும் அங்கு காணமுடிகின்றது. யாருடைய நடன வீடியோ பதிவை நாம் பார்க்க வேண்டுமென்று நினைக்கின்றோமோ அவர்களின் பெயர்களை அல்லது நிகழ்விற்கு நெருக்கமான சொற்களைத் தேடுதலில் பதிவு செய்யும் போது சில நொடிகளில் இலகுவாக நம் கண்முன் வந்துவிடுகின்றது.

இணையத்தின் வாயிலாக பத்திரிகைகளை மட்டுமன்றி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்க்கக்கூடியவயறு இருக்கின்றது. அந்தவகையில் இந்திய தொலைக்காட்சிகளில் இடம்பெறுகின்ற நடன நிகழ்வுகளை அதிகளவில் காணமுடிகின்ற போதிலும் இலங்கை தொலைக்காட்சியான சக்தி தொலைக்காட்சியில் இடம்பெற்ற 'திமிதகதா', Classical Dance Star Season 1 போன்ற நிகழ்ச்சிகளின் வீடியோ பதிவுகளை காணமுடிந்தது. தற்போது நடைபெறுகின்ற நிகழ்வுகளின் தொகுப்புக்கள் காணப்படவில்லை.

தொலைபேசியில் தகவல்களை பரிமாறிக்கொண்ட நமது சமூகம் தற்போது இணையத்தினூடான Skype, Oovoo போன்ற தளங்களினூடாக நேரடியாக முகம் பார்த்து தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடுமளவிற்கு தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதனை காணலாம். இன்று ஒரு நாட்டிற்கு அல்லது இனத்திற்கு சொந்தமான தகவல் ஊடகமாக இல்லாது பல்வேறு நாடுகளின் பல இலட்சக்கணக்காண நிறுவனங்களை ஒன்றிணைக்கும் ஒரு மகா வலயமாக இணையம் காணப்படுகின்றது.

இணையத்தளத்தில் பரத நாட்டியம் கற்றல், கற்பித்தலின் பயன்பாடுகள்

பரத நாட்டியத்தினை இணையத்தளத்தினூடாக நாம் கற்றுக்கொள்ளப் போவதனால் முதல் எமக்குப் பிடித்த பாணியில் சிறந்ததொரு குருவைத் தேர்தெடுக்க வேண்டும். அவர் வழி அவரைப்பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு ஆசிரியர்களும் தங்களுக்குரிய பாணிகளில் பரத நாட்டியத்தை அறிமுகப்படுத்தியிருப்பார்கள்.

உதாரணமாக பரத நாட்டியத்தின் அறிமுகம், தோற்றம், வளர்ச்சி மறுமலர்ச்சி புராண,லௌகீக வரலாறுகள் என்பன குறிப்பிடப்பட்டிருக்கும். பரத நாட்டிய அறிமுறைகள் (Basic theory) குருவிற்கு குரு மாற்றமடையாது.ஆனால் செயல்முறை (practical) ஒவ்வொரு பாணிகளுக்கும் ஏற்றாற்போல் சற்று மாற்றமடையும்.அந்த வகையில் ஆரம்ப அடவுகளுக்கான ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, சொற்கட்டுப் பிரயோகம்,அடவுகளின் வகைகள்,அதன் தன்மைகள், முதிதிரைப்பிரயோகங்கள் என்பன குறிப்பிடப்பட்டிருக்கும்.இவற்றினை இணையத்தளத்தில் பார்த்து நாம் இலகுவாக கற்றுக்கொள்ளலாம்.

அதே போன்று உருப்படிகளை எடுத்துக்கொண்டால், உருப்படிகளுக்கான பாடல், ஸ்வரங்கள், ஜதிகள் அவை பாடப்படும் விதம், தாளம்போடும் விதம் அவற்றிற்கான செயல் முறைகள் மிகவும் விபரமாக தரப்பட்டிருக்கும்.

அதே போன்று ஆய்வுக்கட்டுரைகள்,அவைதொடர்பான தரவுகள், பொருத்தமான தலைப்பினூடாக தேடுதலின் மூலம் எமக்குத்தேவையான போதுமான தரவுகள் கிடைக்கப்பெறும்.

இவ்வாறு நாம் ஓரிடத்தில் இருந்தவாறே மேற்குறிப்பட்ட பயன்பாடுகளைப் பெற்று இக்கலையை வளர்க்க முடியும்.

முடிவுரை:

உலகெங்கும் பரந்து வாழும் பல தரப்பட்ட மக்களிடம் தகவல்களை கொண்டு சேர்ப்பதில் ஊடகங்களின் பணி மகத்தானது. உலகின் ஒரு இடத்தில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்வை மறு இடத்திலிருப்பவர்கள் உடனுக்குடன் அறியவும், அது குறித்து பேசவும் முடிகின்றதெனில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் ஆகிய ஊடகங்களின் மூலமே சாத்தியமாகின்றது. ஊடகத்துறையால் மனித சமூகம் அடைந்த பயன்கள் கணக்கிலடங்கா. அந்த வகையில் பரதநாட்டியமும் ஓர் ஊடகமாகவே கருத வேண்டியுள்ளது. ஏனெனில் ஒருவர் தனது அங்க அசைவுகள் மூலம் முத்திரைகளை காட்டியும். அபிநயங்கள் செய்தும் மற்றவர்களுக்கும் தகவல்களை தெரிவிக்கின்ற போது அவை ஒருவருக்கும் இன்னொருவருக்கும் இடையே தொடர்புறுவதில் ஊடகமாக தொழிற்படுகின்றது.

பத்திரிகைகள், தொலைக்காட்சி போல் இணையமும் தற்காலத்தில் நடனத் தகவல்களை வெளியிடும் ஊடகமாக காணப்படுகின்றது. இணையத்தின் மூலம் நடனத் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடிகின்றது. உலகின் எந்த மூலையில் நடைபெறுகின்ற நிகழ்வுகளின் வீடியோக்கள், புகைப்படங்கள், நடனத்தரவுகள் போன்றவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்வதனால் உலகெங்கும் நடனக்கலை பரவியிருப்பதனை அறியமுடிகின்றது. இணையம் ஒரு சேமிப்பு ஊடகமாக காணப்படுகிறது. இதுவரை காலத்தில் நூல்கள் காணப்பட்ட காலம் போய் இணையப்புத்தகம் என்னும் அளவில் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது.

இன்றைய காலகட்டமானது தொழில்நுட்ப வளர்ச்சி மேலோங்கிய காலகட்டமாகையால் பரதநாட்டிய வளர்ச்சி நிலைகளை சேமிப்பு ஊடகங்களில் பதிவு செய்ய வேண்டிய தேவை மற்றும் கடமைப்பாடுகளும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. கலைஞன் என்பவனுக்கு புதிய புதிய எண்ணங்கள், சிந்தனைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். அதனை வீண்போகச் செய்யாமல் தான் பெற்றுக் கொண்ட அனுபவத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் அதனை பதிவு செய்வதன் மூலம் கலையை வளர்க்க முடியும். பரதநாட்டியம் தன் சுயத்தை இழக்காமல் தன் அடையாளங்களுடன் புதிய விடயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் நல்லதொரு ஊடகமாகவும், மக்கள் கலையாகவும் இருத்தல் வேண்டும். ஊடகங்கள் கலை மற்றும் பண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாகவும், அவற்றை வளர்ப்பவையாகவும் இருக்க வேண்டும். ஊடகங்களை தீர்மானிக்கும் சக்தியாக மக்கள் உருவாக வேண்டும்.